D
V 11,31(N41)
N41·37·2
144898

| | பக்கங்கள் |
|---|---|
| **5. அறிவிப்புகள் :** | |
| (அ) கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள் 1990-91 (ஆ.இ.) | 249 |
| (ஆ) நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவு, 1991 (ஆ.இ.) .. .. .. | 278 |
| (இ) 1991-92 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையைப் பேரவைக்கு அளிக்கும் நாள் .. .. .. | 386 |
| **6. இரண்டாம் துணை நிதிநிலை அறிக்கை, 1990-91 —பொது விவாத அவ்வாண்டின் கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பும்:** | 249—277 |
| திரு. எல். கணேசன், (முதலமைச்சரின் ஆட்சி மன்றச் செயலர்) ... .. .. | 249, 273—275 |
| திரு. எம். இராமச்சந்திரன் .. .. .. | 250—256 |
| *திருமதி பாப்பா உமாநாத் .. .. .. | 256—262 |
| திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர் .. | 262—271 |
| திருமதி பொ. லட்சுமி .. ... .. | 271—273 |
| **7. சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்) :** | |
| நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவு, 1991 .. | 278 |
| **8. சட்டமுன்வடிவுகள் (ஆய்வுசெய்தல்) :** | |
| (அ) பொது விற்பனை வரி (இரண்டாம் திருத்த) சட்டமுன்வடிவு, 1991 .. | 278—279 |
| (ஆ) கேளிக்கைகள் வரி (இரண்டாம் திருத்த) சட்டமுன்வடிவு, 1991 .. ... | 279—281 |
| (இ) பச்சையப்ப அறக் கட்டளை மற்றும் பட்டியல் பொதுப் பொறுப்பாட்சியமைப்புகள் மற்றும் நிலைக் கட்டளைகள் (மேலாண்மையை மேற்கொள்ளுதல்) திருத்தச் சட்டமுன்வடிவு, 1991 .. | 282—290 |
| (ஈ) பயிரிடு குத்தகையாளர்கள் குத்தகை நிலுவை (நிவாரண) திருத்தச் சட்டமுன்வடிவு, 1991 .. .. .. | 290—294 |
| (உ) இயக்கூர்திகள் வரிவிதிப்பு (திருத்த) சட்ட முன்வடிவு, 1991 .. .. | 294—295 |
| (ஊ) இயக்கூர்திகள் (தனிவகை முறைகள்) நீத்தறவுச் சட்டமுன்வடிவு, 1991 .. | 295 |
| (எ) வேளாண் விளை பொருள் சந்தைகள் சார்ந்த சட்டங்கள் (திருத்த) சட்ட முன்வடிவு, 1991 .. .. .. | 296—297 |
| (ஏ) வேளாண்மைப் பல்கலைக் கழக (திருத்த) சட்டமுன்வடிவு, 1991 .. .. | 298—299 |
| (ஐ) டாக்டர் எம். ஜி. ஆர். மருத்துவப் பல்கலைக் கழகம் தமிழ்நாடு (திருத்த) சட்ட முன்வடிவு, 1991 .. .. | 299—301 |
| **ஆளுநர் பேருரைக்கு நன்றி கூறும் தீர்மானம்—விவாதம்—தொடர்ச்சி.** | 301 |
| திரு. ஜி. பழனிச்சாமி .. .. .. | 302—308 |
| திரு. இரா. மோகன் .. .. .. | 308—324 |
| திரு. எஸ். திருநாவுக்கரசு .. .. .. | 324—355 |
| திரு. மா. மணிமாறன் .. .. .. | 355—364 |
| திரு. எம். அப்துல் லத்தீப் .. .. .. | 364—384 |
| அ.இ.அ.தி.மு.க. உறுப்பினர்களுக்கு அளிக்கப்பட்டுள்ள தண்டனையைக் குறைக்க வேண்டுமென்று பேரவைத் தலைவருக்கு வேண்டுகோள். | 385—386 |
| பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள் .. | 387—389 |


V211,31(N91) 144898
N91.37.2

## உள்ளடக்கம்.

24—1—1991


பக்கங்கள்.

1. வினாக்கள்—விடைகள் :

உடுக்குறியிட்ட வினாக்கள். .. .. 183—225

2. தகவல் கோரல்:

(அ) உறுப்பினர்கள் திருவாளர்கள் எஸ். திருநாவுக்கரசு, கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன், எஸ். டி. உகம்சந்த் ஆகியோரின் அணியை 'அ.இ.அ.தி.மு.க. 2'' கட்சியாக அங்கீகரித்துள்ளது பற்றிய பேரவைத் தலைவரின் தீர்ப்பு குறித்து. .. .. .. 225—238

(ஆ) விவசாயிகள் மின் கட்டண பாக்கிகளைச் செலுத்துவதற்குக் கால அவகாசம் அளிக்க வேண்டியதன் அவசியம் குறித்து .. .. .. 238—240

(இ) பி.அண்ட் சி. ஆலையை மூடிவிடுவதாக நிர்வாகம் அறிவித்துள்ளதால் தொழிலாளர்களுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்பு குறித்து. .. .. .. 240—243

(ஈ) திண்டுக்கல்லில் ஒரு பட்டாசுக் கடையில் ஏற்பட்ட விபத்தினால் இறந்தவர்களின் குடும்பங்களுக்கு நிவாரணம் அளிக்க வேண்டியதன் அவசியம் குறித்து. 243—244

3. கவன ஈர்ப்பு :

மதுரை மற்றும் திண்டுக்கல் காயிதேமில்லத் மாவட்டங்களில் இரசாயன உரங்கள் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் விவசாயிகளுக்கு நியாயவிலையில் கிடைக்கச் செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து .. .. 244—248

அறிக்கைகள் அளித்தல் :

(அ) பொதுக் கணக்குக் குழு .. .. 248

(ஆ) பொது நிறுவனங்கள் குழு .. .. 249

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

தை 11, பிரமோதூத—திருவள்ளுவர் ஆண்டு– 2022
1991, சனவரி 24, வியாழக்கிழமை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் முனைவர் மு. தமிழ்க்குடி மகன் அவர்கள் தலைமையில் 9.00 மணியளவில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

''நன்றாற்ற லுள்ளுந் தவறுண்டு அவரவர்

பண்பறிந் தாற்றாக் கடை''

நாம் நல்லது செய்ய முற்பட்டாலும் அவரவர்கள் பண்புக்குப் பொருந்திவராவிட்டால், அந்த நன்மைகூடத் தவறாக முடிந்து விடும்.

### 1. வினாக்கள்—விடைகள்.

### உடுக்குறியிட்ட வினாக்கள்.

பொது நூலகத் துறைக்குக் கொள்முதல் செய்யப்படும் நூல்கள்

*10590—திரு. சா. கணேசன் :
மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) ஆண்டுதோறும் பொது நூலகத் துறைக்குக் கொள் முதல் செய்யப்படும் நூல்கள் எந்த அடிப்படையில் தேர்வு செய் யப்படுகின்றன ?

(ஆ) நடப்பு ஆண்டில் நூல்கள் கொள்முதல் செய்யப் பட்ட வகையில் செலவிடப்பட்ட தொகை எவ்வளவு?

[1991 சனவரி 24

**மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன்:** தலைவர் அவர்களே,

(அ) மாவட்ட நூலக ஆணைக்குழு நூலகங்களுக்குத் தமிழ் நூல்கள் வாங்க 'பரிசீலனைக்குழு' மற்றும் 'தேர்வுக் குழு' ஆகியவை அமைத்துச் செயல்பட அரசு ஆணைகளை வழங்கியுள்ளது.

அதன்படி நூலகங்களுக்குத் தேவையான நூல்களைத் தேர்வு செய்யும் பணி, முதல் கட்டமாக மாநிலக் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி மையத்தில் பணியாற்றும் பல துறைகளைச் சார்ந்த பேராசிரியர்கள் மற்றும் உதவிப் பேராசிரியர்களைக் கொண்ட பரிசீலனைக் குழு, நூல் தேர்வுக் குழு வகுத்துள்ள நிபந்தனைகளின் அடிப்படையில் நூல்களைப் பரிசீலனை செய்து தேர்வு செய்கிறது. இரண்டாவது கட்டமாக பரிசீலனைக் குழுவால் பரிந்துரைக்கப்பட்ட நூல்களை ''நூல் தேர்வுக்குழு'' மறுபடியும் ஆய்வு செய்து, தேர்ந்தெடுத்து நூலகங்களுக்கு வாங்க பரிந்துரை செய்கிறது. அதன்படி நூல்கள் வாங்க பொது நூலக இயக்குநரால் ஆணை வழங்கப்படுகிறது.

(ஆ) நடப்பு ஆண்டில் நூல்கள் கொள்முதல் செய்யப்பட்ட அளவு, 1022 நூல்கள், 1989-90வது நிதியாண்டில் தேர்வு செய்யப்பட்டு வாங்கப்பட்டது. அவற்றின் மொத்த மதிப்பு ரூ. 71,62,000 ஆகும்.

**திரு. சா. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொது நூலகங்களுக்கு வாங்கப்படுகின்ற நூல்களில் தமிழ்த் தென்றல் திரு. வி. க., தமிழ் அறிஞர் மு.வ., முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர், ஆகியோர்களுடைய நூல்களும் வாங்கப்படுகின்றனவா? இப்போது ஒதுக்கப்படுகின்ற நிதியை மேலும் அதிகப்படுத்தி அதிகமான நூல்களை வாங்க அரசு முன்வருமா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன்:** தலைவர் அவர்களே, அவர்கள் குறிப்பிட்ட தமிழ்ப் பெரியார் திரு. வி. க. அவர்கள், டாக்டர் மு.வ., டாக்டர் கலைஞர், அறிஞர் அண்ணா போன்ற அறிஞர்களுடைய நூல்களை வாங்க எந்தத் தடையும் கிடையாது. ஆனால் அந்த ஆண்டு அச்சிட்டு வெளிவந்த நூல்களை நூலகத்திற்கு அனுப்பி அந்த நூலகத்துறை அந்த ஆண்டு அச்சிட்ட நூல்களுக்கு இடையிலே பரிசீலனை செய்கிற காரணத்தால், அந்தந்த ஆண்டு, அச்சிடப்பட்டு இருந்தால், அப்படி அனுப்பிவைத்த நூல்கள் என்ற முறையில் அவைகள் வாங்கப்படும், மற்றொன்று விலை அதிகமாக உள்ள நூல்களை எளிதாக அதிக எண்ணிக்கையில் வாங்க முடிவதில்லை. மூன்றாவதாக நூலகத் துறை இயங்குவதற்கு அலுவலர்களுடைய ஊதியம் முழுவதும் அரசாங்கத்தால் ஏற்றுக் கொள்ளப்பட்டு இருந்தாலும், நூல்கள் வாங்கு



1991 சனவரி 24]

வதற்கான தொகை 'செஸ் நிதி' மூலம் கிடைக்கிற அளவைப் பொறுத்து, மாவட்டங்களிலே உள்ள நூலகங்களினுடைய எண்ணிக்கையைப் பொறுத்து, பங்கீடு செய்யப்படுகிறது. அந்த அளவுக்குத்தான் வாங்க முடியும்.

**திரு. சா. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்படிப்பட்ட பொது நூலகங்களுக்கு வாங்கப்படுகின்ற நூல்களுக்காக மாநில அரசு நிதி ஒதுக்குவது மட்டுமல்லாமல், மத்திய அரசு ஏதாவது உதவித் தொகையோ அல்லது கடனோ கொடுக்கிறார்களா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன்:** தலைவர் அவர்களே, மாநில அரசு நிர்வாகச் செலவில் பெரும்பகுதியை ஏற்றுக் கொண்டிருக்கிறது. மத்திய அரசிலிருந்து இதற்கு நேரடியாக நிதி ஏதும் இல்லை. ஆனால் சில அமைப்புகள் பெயரில், 'தாகூர் நினைவு நூலக நிதி' போன்ற பெயரில் ஒரு நிதி இருக்கிறது. அது ஓரளவிற்கு நூல்கள் வாங்கப் பயன்படுகிறது.

**திரு. சா. பீட்டர் அல்போன்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னது போல, நூலக செஸ் என்பதை வீட்டு வரி வசூலிக்கின்றபோது வசூலிக்கிறார்கள். அதுபோக, இந்த நூலகத்திற்காக சப்ஸ்கிரிப்ஷன் கட்டணமாக 10 ரூபாய் ஆண்டு ஒன்றுக்கு வசூலிக்கிறார்கள். ஏற்கெனவே கிராமங்களில் மக்கள் மத்தியிலே படிக்கின்ற பழக்கம் ' ரீடிங் ஹேபிட் ' ரொம்பவும் குறைந்து வருகிற நேரத்தில், கிராமத்திலே 10 ரூபாய் கொடுத்து ஒவ்வொருவரும் ஆண்டுதோறும் உறுப்பினர்களாகச் சேருவார்கள் என்று எதிர்பார்க்க முடியாது. ஆகவே அமைச்சர் அவர்களுடைய கஷ்டத்தை நாங்கள் தெரிந்து கொள்கிறோம். இருந்தாலும்கூட நகரத்திலே அவ்வாறு 10 ரூபாய் என்று வைத்துக் கொண்டாலும், கிராமத்திலே இருக்கிற மக்களுக்கு, 'அட்லீஸ்ட் இந்த ரூரல் லைப்ரரீஸ்' அதற்காவது அந்த சப்ஸ்கிரிப்ஷன் தொகை ஆண்டுதோறும் கட்டவேண்டியதில்லை என்ற ஒரு சூழ்நிலையை அரசு உருவாக்க முன்வருமா எனத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன்:** தலைவர் அவர்களே, நூலக வளர்ச்சி எந்த அளவிற்கு அதிகமாக இருக்கிறதோ, அதைப் பொருத்துத்தான் மக்களுடைய சமுதாயத் தகுதியை உயர்த்தமுடியும். இந்த நூலகத்திற்கான நன்கொடை பெறுவதில் பொதுமக்களுடைய ஒத்துழைப்பு நேரடியாக இருந்தால், நூலகங்கள் அதிகமாகக் கண்காணிக்கப்படும். ஒரு 10 ரூபாய் இல்லாவிட்டாலும், 5 ரூபாயாவது சந்தா செலுத்துவது என்ற முறை இருக்குமானால், அந்த உறுப்பினருக்கு அந்த நூலகத்தை நடத்துகிறபோது ஏற்படக்கூடிய குறைகளைக் களைவதற்கும், நூலகம் செம்மையாக நடைபெறுகிறதா என்று கவனிப்பதற்கும் ஒரு நல்ல

வாய்ப்பு ஏற்படும். பொது மக்களுடைய நேரடித் தொடர்பின் மூலமாகத்தான் அந்த நூலக இயக்கம் வளரும் என்ற அடிப்படையிலேதான் அவையெல்லாம் கருதப்பட்டிருக்கிறது. தேவையான மாற்றங்களை, அவ்வப்போது கலந்து, எந்த மாற்றங்களை வேண்டுமானாலும் நாம் செய்து கொள்ளலாம்.

9.05 மணி.

**திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர் :** மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, சர்க்கார் நூலகத்திற்குப் புத்தகங்கள் கொள்முதல் செய்யும்போது மதத் தன்மை புண்படாமல், வகுப்பு வாதத்திற்கு இடம் ஏற்படாமல், அத்தகைய தன்மைகளை உடைய புத்தகங்களைக் கொள்முதல் செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் :** தலைவர் அவர்களே, கூடுமானவரையில் மாறுபட்ட கருத்துக்கள் அதிகம் ஏற்படாத வகையில் பொதுவான கொள்கைகள் என்ற முறையில் எழுதப்பட்ட ஏடுகள் தான் பெரும்பாலும் அவர்களால் தேர்வு செய்யப்படும். ஏதேனும் குறை இருந்தால், அவ்வப்போது சுட்டிக்காட்டப்படுமேயானால், அந்தக் குறை களையப்படும்.

**திரு. சி. கோவிந்தசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நூலகங்களுக்கு வாங்கக் கூடிய தினசரி பத்திரிகைகளில் சில அரசியல் சார்புடைய தினசரி பத்திரிகைகள் மட்டும் வாங்கப்படுகின்றன. சில அரசியல் கட்சிகள் சார்புடைய பத்திரிக்கைகள் வாங்காத நிலை இருக்கிறது. ஆகவே இந்த வேறுபாட்டை நீக்கி எல்லா அரசியல் சார்புடைய தினசரி பத்திரிகைகளையும் வாங்குவதற்கு அரசு, நடவடிக்கை எடுக்குமா என்பதோடு, தினசரி பத்திரிகைகளை நூலகத்திற்கு வாங்குவதற்கு ஏதேனும் விதிமுறைகள் இருக்கிறதா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் :** தலைவர் அவர்களே, எல்லா பத்திரிகைகளையும் வாங்குவதற்கு எந்த நூலகத்திற்கு நிதி வசதி கிடையாது. ஏதேனும் ஒன்றிரண்டு நாள் ஏடுகளைத்தான் வாங்கக் கூடிய நிலைமை இருக்கிறது. அதுபோல் 2, 3 சஞ்சிகைகளைத்தான் வாங்குகிறார்கள். அதுவும் கிளை நூலகங்களுக்கு நிதிப் பற்றாக்குறை அதிகம் இருக்கிறது. தகுந்த நூல்களைக் கூட அவர்களால் வாங்க முடியவில்லை. அதன் காரணமாகத்தான் நூலக இயக்கத்தை மக்களிடத்திலே கொண்டு செல்வதற்காக ரூ. 1,000 வழங்கக் கூடியவர்களை, அந்தந்த கிளை நூலகத்திற்கு யார் வழங்கினாலும், அவர்களைப் புரவலர்களாக ஏற்றுக்கொண்டு,



அந்த ரூ. 1,000-ல் கிடைக்கிற வட்டியிலேயிருந்து எந்தப் பத்திரிகைகளை அவர்கள் விரும்புகிறார்களோ அதை வாங்கிக் கொள்ளலாம் என்ற அளவிற்கு ஒரு பொதுவான கருத்து உருவாக்கப்பட்டிருக்கிறது. நடைமுறையிலேதான் அதனுடைய பயன் தெரியும்.

## தனியார் கல்லூரி ஆட்சிக்குழு.

* 11975—திரு. கு. ரவி அருணன் :
மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தனியார் கல்லூரி ஆட்சிக் குழுவில் (College Committee) அக்கல்லூரிகளில் உள்ள அனுபவம் மிகுந்த பேராசிரியர்கள், பல்கலைக் கழகப்பிரதிநிதிகள், அந்தப் பகுதியைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினர்கள் ஆகியோர் இடம்பெறும் வகையில் அரசு நடவடிக்கை எடுக்குமா ?

**மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் :** தலைவர் அவர்களே,

தனியார் கல்லூரியின் ஆட்சிக் குழுவில் கல்லூரியின் மூத்த இருபேராசியர்கள் மற்றும் அந்தக் கல்லூரி இணைக்கப்பட்டிருக்கிற பல்கலைக் கழக பிரதிநிதி ஒருவரும் அங்கம் வகிக்க, தமிழ்நாடு தனியார் கல்லூரி (ஒழுங்காற்று) விதிகளில் வழிவகைகள் செய்யப்பட்டுள்ளன. அப்பகுதியைச் சார்ந்த சட்டமன்ற உறுப்பினர் அங்கம் வகிக்க மேற்படி விதிகளில் ஏற்கெனவே வழிவகை செய்யப்படவில்லை.

**திரு. கு. ரவி அருணன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனியார் கல்லூரி ஆட்சிமன்றக் குழுவில் அந்தந்தப் பகுதி சட்டமன்ற உறுப்பினர்கள் இடம் பெறுவதன் மூலம் அந்தப் பகுதியில் இருக்கின்ற கல்லூரிகளில் மாணவர்கள் சேர்க்கையின் போதும், நியமனங்களின் போதும் வசூலிக்கப்படுகின்ற நன்கொடையை ஓரளவு கட்டுப்படுத்த இயலும். ஆகவே அமைச்சரவர்கள் இதை மறுபரிசீலனை செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** முழுமையாகக் கட்டுப்படுத்தலாமா, இல்லை ஓரளவிற்குக் கட்டுப்படுத்தலாமா ? (சிரிப்பு).

**மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் :** தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர்களிலே நன்கொடை வாங்கித் தருகிற நல்ல மனப்பான்மை கொண்டவர்களும் இருக்கிறார்கள். ஆகவே அதை அடிப்படையாக வைத்து எதையும் கருத

முடியாது. சில கல்வி நிலையங்களிலே உள்ள நிர்வாகத்திற்கும் சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் மாறுபாடு ஏற்படுமேயானால் பிரச்சினை பெரியதாகும். அது அவ்வளவு அவசியமில்லை. சட்டமன்ற உறுப்பினர்களை எல்லோரும் மதிப்பார்கள் என்று நான் எதிர்பார்க்கிறேன்.

திரு. கு. ரவி அருணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு தனியார் கல்லூரிகளிலே ஆசிரியர்களை நியமனம் செய்யும்போது பல லட்சக் கணக்கில் நன்கொடை வசூல் செய்யப்படுவதாகக் கூறப்படுகிறதே, அதைப் போக்க இந்த அரசு என்ன நடவடிக்கை எடுத்து உள்ளது என்பதை அறிய விரும்புகிறேன்.

*9-10 மணி.*

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : தலைவர் அவர்களே, லட்சக் கணக்கில் நன்கொடை தரக்கூடியவர்கள் வேலைக்கே வர மாட்டார்கள். ஆனால் லஞ்சம் என்பதாக அல்லது குற்றச்சாட்டு என்பதாக யாராவது தகுந்தவர்கள் சான்றுகளோடு தருவார்களேயானால், அது பற்றி நடவடிக்கை எடுக்க முடியுமே தவிர நிர்வாகத்தினருக்கும், தனிப்பட்டவர்களுக்கும் இடையே ஒரு அன்டர்ஸ்டேண்டிங் இருக்குமானால், அந்தச் சூழ்நிலையில் நாம் எதுவும் செய்ய வாய்ப்பு இல்லை.

திரு. கா. அண்ணாதுரை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனியார் கல்லூரிகளிலே இன்றைக்கு இளங்கலை, அறிவியல் போன்ற துறைகளில் சேர்பவர்களிடத்தில் கூட நன்கொடை வசூல் செய்கின்ற, வாங்குகின்ற ஒரு சூழ்நிலை இருக்கிறது. அத்தோடு மட்டுமல்லாமல், 30 விழுக்காடு மகளிருக்கு தனியார் மற்றும் அரசுக் கல்லூரிகளில் ஒதுக்கப்படவேண்டும் என்ற நிலை இருந்தாலும் கூட சில தனியார் கல்லூரிகளிலே அப்படிப்பட்ட அரசு ஆணை அமல்படுத்தப்படுவதில்லை, உதாரணமாக என்னுடைய தொகுதியிலே....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : The question is irrelevant.

THIRU OSCAR C. NEGLI : All of us are aware of the misuse by some of these private Colleges. I feel that there should be representatives from the public, i.e. M.L.As. in the Governing Council. My question is would it be possible to have the MLAs as non-official representatives in the Governing Council of the private Colleges.



மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர்கள் எந்தத் தொகுதியிலேயிருந்து தேர்ந்து எடுக்கப்பட்டாலும் அந்தத் தொகுதியிலே இருக்கிற கல்வி நிலையத்திலே அவர்கள் இடம் பெற வேண்டுமென்றால் சில தொகுதிகளில் 4 கல்லூரிகள் இருக்கும்; சில தொகுதிகளில் ஒரு கல்லூரிகூட இருக்காது. எனவே இதிலிருந்து சட்டமன்ற உறுப்பினர்கள் பெரும்பாலானவர்கள், ஒவ்வொருவர் ஒவ்வொரு இடத்திலே இடம் பெறுவது என்பதுகூட இயலாத காரியம். நடைமுறையில் சாத்தியம் இல்லாதது. அதேபோல நிர்வாகத்தினருக்கும் சட்டமன்ற உறுப்பினர்களுக்குமே ஒரு மாறுபட்ட கருத்து என்று ஏற்பட்டுவிட்டால் அதை எளிதில் தீர்க்க முடியாது. லயோலாக் கல்லூரி போன்ற சிறந்த கல்லூரியாக விளங்கக் கூடிய கல்லூரிகளில் சட்டமன்ற உறுப்பினர்கள் இடம் பெற வேண்டுமா என்பதையும் மாண்புமிகு உறுப்பினர் சிந்திக்க வேண்டும்.

திரு. அ. லெ. சுப்பிரமணியன் : மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவர் அவர்களே, நானும் ஒரு கல்லூரியினுடைய ஆட்சி மன்றக்குழுவில் செயலாளராக இருக்கிறேன். இப்போது அமைச்சர் அவர்கள் கூறுவதிலிருந்து, சட்டப்படி கல்லூரி ஆட்சிக் குழுவில் மூத்த இரு பேராசிரியர்கள் உறுப்பினர்களாக இருக்கிறார்கள். ஆனால் உயர்நிலைப் பள்ளிகளைப் பொறுத்த வரையில், மூத்த இரு ஆசிரியர்கள் இல்லாமல், தேர்தல் முறையில் வரவேண்டும் என்ற விதி இருக்கிறது. அதிலே பல குழப்பங்கள்—ஆசிரியர்களுக்குள்ளே ஏற்பட்டு விடுகின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி கல்லூரி ஆட்சிக் குழுவைப் பற்றியது.

திரு. அ. லெ. சுப்பிரமணியன் : இல்லை இல்லை, அது போலவே உயர்நிலைப் பள்ளிகளிலேயும் மூத்த இரு ஆசிரியர்களை மட்டும் குழுவிலே சேர்த்துக் கொள்வதற்கு சட்டத்திலே திருத்தம் செய்ய அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது குறித்து விவரம் என்னிடத்திலே இல்லை. பரிசீலித்துத்தான் நான் பதில் சொல்ல முடியும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா 8283 இப்போது எடுத்துக்கொள்ளப்படுகிறது. மற்ற வினாக்கள் சற்றுப்பின்னர் எடுத்துக்கொள்ளப்படும்.

[1991 சனவரி 24

**பழங்குடியினருக்குத் தனி வேலைவாய்ப்பு அலுவலகங்கள்.**

*8283—**திரு. வீ. பெ. துரைசாமி** (மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர்)

மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா;

ஊட்டியில் உள்ளதுபோல் கொல்லிமலை, ஏற்காடு மற்றும் கொடைக்கானல் மலைகளிலும் பழங்குடியினருக்கான தனி வேலைவாய்ப்பு அலுவலகங்கள் திறக்கப்படுமா?

**மாண்புமிகு திரு. க. சுந்தரம்** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஊட்டியில் பழங்குடியினருக்கான தனி வேலைவாய்ப்பு அலுவலகம் இல்லை. கொல்லிமலை, ஏற்காடு மற்றும் கொடைக்கானல் மலைகளிலும் பழங்குடியினருக்கான தனி வேலை வாய்ப்பு அலுவலகங்கள் திறந்து வைக்கும் செயற் குறிப்பு தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை. ஊட்டியில் இருப்பது, தொழில் நேர் சிறப்பு வழி காட்டி அலுவலகம் தான் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. வீ. பெ. துரைசாமி** (மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்) : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பதிலில் வேலை வாய்ப்பு அலுவலகம் இல்லை, ஆனால் தொழில் நேர் சிறப்பு வழிகாட்டி அலுவலகம் வழிகாட்டும் மையமாகச் செயல்பட்டு வருகிறது என்று சொன்னார்கள். அதைப்போன்ற மையங்கள் எந்தெந்த மாவட்டங்களில் எத்தனை இருக்கின்றன என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. சுந்தரம்** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தென்னாற்காடு மாவட்டம் சங்கராபுரம் கல்ராயன் மலையிலும் இயங்கி வருகிறது. ஆக இரண்டு இடங்களில்தான் இயங்கி வருகின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. வீ. பெ. துரைசாமி** (மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்) : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் மாவட்டத்தில் தமிழ்நாட்டிலேயே அதிகமான பழங்குடியினர் வாழ்கிறார்கள். சேந்தமங்கலம் மற்றும் ஏற்காடு இந்த இரண்டு தொகுதிகளுமே பழங்குடியினருக்காக ஒதுக்கப்பட்ட தொகுதிகள். அதுமட்டும் அல்லாமல் ஆதிதிராவிட மக்கள் நிரம்ப வாழ்கிறார்கள். மொத்தம் 5 தொகுதிகள் சேலம் மாவட்டத்தில் உள்ளடங்கி இருக்கின்றன. ஆகவே அதனைக் கருத்தில் கொண்டு தொழில் நேர் சிறப்பு வழிகாட்டி அலுவலகம் சேலம் மாவட்டத்தில் ஒன்று அமைப்பதற்கு அந்தத் துறையினர் முன் வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.



1991 சனவரி 24]

**மாண்புமிகு திரு. க. சுந்தரம்** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் மாவட்டம் கொல்லி மலையில் நிறுவுவதற்கான கருத்துக்கள் கொடுக்கப்பெற்றும்கூட நிதி நிலைப் பற்றாக்குறை காரணமாக இத்திட்டங்களுக்கு இப்போது ஒப்புதல் அளிக்கவில்லை. மேலும் சேலம் மாவட்டத்தில் ஏற்காட்டில் திறப்பதற்கு செயற்குறிப்பு ஒன்றும் பரிசீலனையில் இல்லை.

**கிழக்குக் கடற்கரைச் சாலை வழியாக திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகப் பேருந்து விடுதல்.**

* 11150—**திரு. அ. செங்குட்டுவன்** :

மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னையிலிருந்து நாகைக்கும், நாகையிலிருந்து சென்னைக்கும் கிழக்கு கடற்கரைச் சாலை வழியாக மகாபலிபுரம், மரக்காணம், பாண்டி, மயிலாடுதுறை வழியாக திருவள்ளுவர் போக்குவரத்துக்கழகப்பேருந்து விடும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்** : தலைவர் அவர்களே, இல்லை.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

**திரு. அ. செங்குட்டுவன்** : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, முந்தைய நமது அரசு காலத்தில் கடற்கரைச் சாலைத் திட்டம் செயல்பட இருந்து, இடையிலே அது தடைப்பட்டு, தற்போது அது செயல்படும் தருவாயில் இருக்கிற இந்த நேரத்தில், நாளுக்கு நாள் விபத்துக்கள் உருவாகிக் கொண்டிருக்கின்ற இந்த நேரத்தில் கடற்கரையை ஒட்டிய பகுதிகள் வளர்ச்சி அடையவும், விபத்துக்களைத் தவிர்க்கவும், சென்னை-நாகை வரை கடற்கரைச் சாலைத் திட்டத்தை நம்முடைய அரசு துரிதமாகச் செயல்படுத்த முன்வருமா, அதற்கு மத்திய அரசினுடைய அனுமதி கிடைக்கும் என்று சொல்கிறார்களே கிடைத்துவிட்டதா, அது எந்த ஆண்டுக்குள் முடிவடையும் என்று அறிய விரும்புகிறேன்.

9—15 மணி

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்** : துணைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் சொல்லியிருக்கக்கூடிய கருத்துக்களை மையமாக வைத்துத்தான் இந்தப் பாதை ஆசிய அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் சுமார் 52 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்பட உள்ளது. அந்தத் திட்டங்கள் நிறைவேறியதற்குப் பிறகு இந்தப் பாதை வழியாக விரைவுப் பேருந்துகள் நடத்துவதற்கு அரசு முடிவு எடுக்கும்.

**திரு. அ. செங்குட்டுவன் :** துணைத் தலைவர் அவர்களே, தஞ்சையில் நரிமணம் போன்ற கடற்கரைப் பகுதிகளில் கச்சா எண்ணெய் கிடைத்து வருகிறது. அதைச் சென்னை வரை கொண்டு வரவேண்டியிருக்கின்ற காரணத்தால், போக்கு வரத்து நெரிசல் அதிகமாக ஆகின்றது. இந்தக் கடற்கரைச் சாலை வழி ஏற்படுவதன் மூலம், மாற்று வழி ஏற்படுவதன் மூலம், தமிழகத்தில் ஒரு வளர்ச்சியும் கடற்கரைப் பகுதியில் ஒரு முன்னேற்றமும் ஏற்பட வாய்ப்பு உள்ளது. அதை அரசு துரிதமாகச் செயல்படுத்த முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** துணைத் தலைவர் அவர்களே, வேகமாக இந்தப் பணிகள் நடைபெறுவதற்கு நிச்சயமாக நெடுஞ்சாலைத் துறையை விரைவுபடுத்த அறிவுரைகள் வழங்கப்படும்.

**திரு. வ. அன்பழகன் :** துணைத் தலைவர் அவர்களே, சென்னையிலேயிருந்து தமிழகத்தின் தென் பகுதிகளுக்குச் செல்லக்கூடிய பெரும்பாலான திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகப் பேருந்துகள் செங்கற்பட்டு, மதுராந்தகம், திண்டிவனம், விழுப்புரம் வழியாகச் செல்கின்றன. இதனால் பெரும்பாலும் செங்கற்பட்டுக்கு முன்பாகவே பேருந்துகள் பல மணி நேரம், நெரிசல் காரணமாக நின்று, பயணிகளுக்கு இடைஞ்சல் தருவதோடு அதிகமான விபத்துக்கள் நிகழ்கின்றன. ஏற்கெனவே மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்தில் இந்தக் கருத்தைச் சொல்லியிருக்கிறேன். எனவே அதிலே சில பேருந்துகளை, விபத்துக்களை தவிர்க்கும்பொருட்டு காஞ்சிபுரம், செய்யாறு, வந்தவாசி வழியாகவோ அல்லது காஞ்சிபுரம், செய்யாறு, ஆரணி வழியாகவோ மாற்றிக் கொடுத்தால் விபத்துக்களைத் தவிர்க்கலாம். எனவே இந்தக் கருத்தை அரசு பரிசீலித்து......

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** இது மூலக் கேள்விக்குத் தொடர்புடையதா?

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** துணைத் தலைவர் அவர்களே, நீண்ட தூரம் செல்லக்கூடிய பயணிகள் விரைவாக சுற்றுவழித் தடங்களில் செல்லாமல், நேராகச் செல்லக்கூடிய பேருந்துகளில் ஏறிச் செல்வதைத்தான் வழக்கமாகக் கொண்டு இருக்கிறார்கள். நம்முடைய போக்குவரத்துக் கழகங்கள் நடத்தக்கூடிய பேருந்துகள் கொஞ்சம்—1 மணி நேரம், 1½ மணி நேரம்—காலதாமதமாக—அதாவது வேகமாகச் செல்லாமல் குறைவான நேரத்தில் செல்லாமல்—செல்கிறது என்கின்ற காரணத்தினாலேகூட தனியார் பேருந்துகள் வேகமாகச் செல்கின்றன என்ற எண்ணம் பொதுமக்கள் மத்தியிலே இருக்கிறது. அப்படி இருக்கும்போது திருச்சிக்கோ, மதுரைக்கோ செல்லக்கூடிய பேருந்துகள் காஞ்சிபுரம், செய்யாறு, ஆரணி இவைகளையெல்லாம் சுற்றினால் நிச்சயமாக நீண்ட தூரம் செல்லக்கூடிய பயணிகள் அதிலே பயணம் செய்ய மாட்டார்கள்.





**திரு. வீ. தமிழ்மணி :** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சென்னையிலிருந்து மாமல்லபுரம், கல்பாக்கம் வழியாக கோயம்புத்தூர் வரை பேருந்துகளை திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகம் ஏற்கனவே இயக்கி வந்தது. அது கடந்த 6 மாத காலத்திற்கு முன்பாக நிறுத்தப்பட்டு விட்டது. மாமல்லபுரமும், கல்பாக்கமும் சுற்றுலாப் பயணிகளை அதிகமாகக் கவருகின்றபடியால், அவசியம் அந்தப் பேருந்தை மீண்டும் இயக்குவதற்கு அரசு முன்வருமா என்று நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எதனால் இந்தப் பேருந்துகள் நிறுத்தப்பட்டன என்ற விவரம் இப்போது என்னிடத்தில் இல்லை. பரிசீலிக்கலாம்.

9-20 மணி.

**திரு. கே. ஆர். இராமசாமி :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கடற்கரை ஓரமாகச் செல்லக்கூடிய சாலையில் சென்னையிலிருந்து இராமேஸ்வரம் வரையில் இன்னும் அதிகமானப் பேருந்துகளைத் திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகம் இயக்குமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தற்போதுள்ள டீசல் தட்டுப்பாடு காரணமாக இருக்கின்ற பேருந்துகளையே நாம் குறைக்கக் கூடிய நிலைமையில் இருந்து கொண்டிருக்கிறோம். மக்களுடைய தேவை அதிகமாக இருப்பதை அரசு உணர்ந்து இருக்கிறது. டீசல் தட்டுப்பாடு நீங்கியதற்குப் பிறகு இந்தப் பேருந்துகளை மேலும் அதிகப்படுத்தலாம்.

**திரு. இரெ. இராசமாணிக்கம் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சென்னையிலிருந்து தென் பகுதிக்குச் செல்லக்கூடிய பேருந்துகள் அனைத்தும் திண்டிவனம் வரையில் ஒரே சாலையில் செல்லுகிற காரணத்தால், ஏராளமான விபத்துகள் ஏற்படுகின்றன. காலமும் அதன்மூலம் விரயம் ஆகிறது. ஆகவே, கும்பகோணத்திற்குக் கிழக்கே செல்லுகின்ற பேருந்துகள் அனைத்தையும் மாமல்லபுரம், மரக்காணம், பாண்டிச்சேரி வழியாக உடனடியாக விட அரசு ஆவன செய்யுமா என்பதை நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மூலக் கேள்வியே இதுதான். ஏற்கனவே நான் இதற்குப் பதில் சொல்லியிருக்கிறேன்.

[1991 சனவரி 24

திரு. ஜி. பழனிச்சாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சேது சமுத்திரத் திட்டத்தின்மூலமாக சேது பாதையை விரைவாகப் போடுவதற்காக ஒரு திட்டம் மத்திய அரசின் அனுமதியோடு அறிவிக்கப்பட்டு இருந்தது. அந்தத் திட்டம் எந்த அளவுக்கு அரசினுடைய குறிப்பிலே இருக்கிறது. அது செயல்படுமா, இல்லை கைவிடப்பட்டதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அதைப்பற்றியத் தகவல் தற்போது என்னிடத்தில் இல்லை.

கூட்டுறவு வீட்டுவசதி சங்கத்தின் மூலம் தாழ்த்தப்பட்டோருக்குக் கடன்.

* 11535—திரு. கே. வி. இராமசாமி :
மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடை யளிப்பாரா—

கூட்டுறவு வீட்டுவசதிச் சங்கத்தின் மூலம் தற்போது பிற்பட்டோர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் ஆகியோருக்கு வழங்கப்படும் வீட்டுக் கடன் வசதிகளை தாழ்த்தப் பட்டோருக்கும் வழங்குவதற்கு அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

தமிழ்நாட்டில் கிராமப்புற வீட்டுவசதி கூட்டுறவுச் சங்கங்களின் மூலம் கிராமப்புறங்களில் வாழும் பொருளாதாரத்தில் நலிவுற்ற அனைத்துப் பிரிவினர்களுக்கும் ஜாதி வேறுபாடின்றி 1978—79 முதல் 1985-ஆம் ஆண்டு வரையில் வீடு கட்ட கடன் வழங்கப்பட்டு வந்தது. தற்போது அரசாணை எண். 615, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை, நாள் 19—6—1985-ன்படி 1985-ம் ஆண்டு முதல் கிராமப்புற வீட்டுவசதித் திட்டத்தின் கீழ் ஆதி திராவிடர்களுக்குக் கடன் வழங்குவது நிறுத்தப்பட்டு விட்டது. தற்போது மீண்டும் கூட்டுறவு வீட்டுவசதிச் சங்கங்களின் மூலம் ஆதி திராவிடர்களுக்கு வீடுகட்ட கடன் வழங்குவது குறித்து நடவடிக்கை மேற்கொள்வதற்கில்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : தயவுசெய்து மாண்புமிகு உறுப்பினர்கள் அமைதி காக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.



1991 சனவரி 24]

திரு. எம். இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த வீட்டு வசதி கூட்டுறவுச் சங்கத்தின் மூலம் கடன்கள் கொடுக்கப்பட்டு, அதில் பெரிய அளவிலே மானியத் தொகை வழங்கப்பட்டுள்ளது. அதில் எத்தனை லட்ச ரூபாய், எத்தனை கோடி ரூபாய் மானியமாக வழங்கப்பட்டுள்ளது என்பதை இந்த அவைக்குத் தெரிவிக்க இயலுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒட்டு மொத்தமாக எவ்வளவு தொகை என்ற கணக்கு என்னிடத்தில் இல்லை. இருந்தாலும் தற்போது அரசு அறிவித்து இருக்கின்ற ஒரு சலுகை, ஏற்கனவே இந்த வீடுகள் கட்டுவதற்காகக் கடன் வாங்கியிருக்கக்கூடிய நபர்கள் 31—3—1991 ஆம் தேதிக்குள் அவர்கள் செலுத்த வேண்டிய கடன் தொகை எவ்வளவு இருந்தாலும் வட்டி, அசல் உட்பட அதிலே 25 சதவீதத்தை அவர்கள் திருப்பிச் செலுத்துவார்களானால் மீதி இருக்கக்கூடிய அந்த கடன்கள் நிலுவையில் உள்ள வட்டி, அசல் அத்தனையும் தள்ளுபடி செய்யப்படும் என்ற மிகப் பெரிய அறிவிப்பை அரசு செய்திருக்கிறது. அதனுடைய அடிப்படையில் நிறைய தேங்கி இருக்கக் கூடிய தொகை வசூல் ஆகும் என்று அரசு எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறது.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கூட்டுறவு வீடு கட்டும் சங்கத்தின் கீழே அரிசனங்களுக்குக் கடன் இல்லை என்று நிறுத்தப் பட்டுள்ளதாக அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். அவ்வாறு நிறுத்தப்பட்டிருப்பது உண்மைதான். மாநிலம் முழுவதும் 57 ஆயிரம் வீடுகள் இனாமாகக் கட்டிக் கொடுப்பதை நான் வரவேற்கிறேன். விவசாயிகளாக இருக்கக் கூடிய, ஆசிரியர்களாக இருக்கக் கூடிய அரிசனங்களுக்கு, அவர்கள் கடன் வாங்கி வீடு கட்ட வேண்டுமென்றால், அதை அனுமதிப்பதற்கு அரசு ஏன் மறுக்கிறது? சின்னச் சின்ன குடிசைகளிலே இருக்கக் கூடியவர்களுக்காக, இந்தத் திட்டத்தையே மாற்றி அரிசன மக்களில், கடனைத் திருப்பிக் கட்டக்கூடிய சக்தி வாய்ந்தவர்களுக்கு, அந்தக் கடனை வழங்குவதற்கான திட்டத்தை அரசு மறு பரிசீலனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

9.25 மணி

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப் போல, தகுதியுள்ளவர்களுக்கு ஜாதி வேறுபாடின்றி வீடு கட்டுவதற்கான கடன் வழங்குவதற்குரிய ஆலோசனையை அரசு பரிசீலிக்கும்.

திரு. ப. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கிராமப்புற வீடு கட்டும் சங்கத்தின் சார்பில் கடந்த காலத்தில் பல ஊர்களில், கொடுக்கப்பட்ட கடனை வைத்து வீடு கட்ட முடியாமல் பாதி, முக்கால்வாசி கட்டப்பட்ட நிலையில் ஏராளமான வீடுகள் தமிழ்நாடு முழுவதும் இருந்து வருகின்றன. கடனாகக் கொடுக்கப்பட்ட தொகை அவர்களுக்குப் போதாததின் காரணத்தினாலோ அல்லது வேறு காரணத்தினாலோ அப்படியே நின்று இருக்கின்றன. ஆகையால், பாதி, முக்கால்வாசி நிலையில் நிற்கின்ற அந்த வீடுகளை மறுபடியும் கட்டிக் கொடுப்பதற்கு அரசு ஏதாவது முயற்சி எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே கடன் வழங்கப்பட்டு, நின்றுபோய் இருக்கிற வீடுகளைக் கட்டுவதற்கு, அவர்களுக்குக் கூடுதலாகப் பணம் கொடுப்பது என்பது இயலாத காரியம். அவர்கள்தான் அதை எப்படியாவது முடிக்க வேண்டும். ஆனால் ஏறியிருக்கின்ற விலைவாசியைக் கருத்திலே கொண்டு தற்போது 10 ஆயிரம் ரூபாய் வரை கடன் வழங்குவது என்று முடிவு செய்யப்பட்டு இந்த ஆண்டிலேயிருந்து அது நடைமுறையிலே இருக்கிறது.

திரு. மா. மணிமாறன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கடந்த கால அரசு தாழ்த்தப்பட்டவர்களுக்கு 'தாட்கோ' மூலமாகவோ அல்லது உள்ளாட்சித் துறை மூலமாகவோ வீடு கட்டிக் கொடுக்கும் திட்டத்தை நிறுத்தி விட்ட காரணத்தினால், கூட்டுறவுச் சங்கங்களிலேயிருந்து தாழ்த்தப்பட்டவர்களுக்குக் கடன் வழங்குவது இல்லை. இதற்குப் பின்னாலே மத்திய அரசு என்.ஆர்.இ.பி., ஆர்.எல்.இ.ஜி.பி. போன்ற திட்டங்களை அறிமுகப்படுத்தி, மத்திய அரசாங்கத்தின் வற்புறுத்தல் காரணமாக, மாநில அரசு ஆதி திராவிடர்களுக்கு வீடு கட்டத் தொடங்கியதன் காரணமாக, கூட்டுறவுச் சங்கங்களில் கடன் கொடுப்பதை நிறுத்தி வைத்து இருக்கிறார்கள். கடந்த கால அரசினுடைய கொள்கையாக இருந்ததை மறு பரிசீலனை செய்கிறேன் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லியதோடு அதிக பட்சமாக ஒவ்வொரு கூட்டுறவுச் சங்கங்களிலும் 40 ஆயிரம், 60 ஆயிரம் என்று, வீடுகள் கட்டுவதற்கென்று திட்டங்கள் பரிசீலிக்கப்படுகின்றன. அப்படி அதிகத் தொகையை கடனாகக் கொடுக்கக் கூடியதை சக்தியுள்ள தாழ்த்தப்பட்டவர்கள் கட்டுகின்ற நேரத்தில் அதிலே ஒதுக்கீடு செய்து கொடுக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.





மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தப் பகுதியிலே இருக்கின்ற உறுப்பினர்கள் எழுப்புகின்ற சத்தத்தின் காரணமாக உறுப்பினர் அவர்கள் கேட்ட கேள்வியே எனக்குப் புரியவில்லை.

திரு. மா. மணிமாறன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கடந்த கால அரசு தாழ்த்தப்பட்டவர்களுக்கு வீடு கட்டிக் கொடுக்கின்ற திட்டத்தை நிறுத்தியது. மத்திய அரசாங்கம், என்.ஆர்.இ.பி., ஆர்.எல்.இ.ஜி.பி போன்ற திட்டங்களை அறிமுகப்படுத்தி அதை நடைமுறைப் படுத்த வேண்டுமென்று வற்புறுத்தியதன் காரணமாக கடந்த கால அரசு தாழ்த்தப்பட்டவர்களுக்கு வீடு கட்டுகின்ற திட்டத்தை 'அறிமுகம் செய்தது. மத்திய அரசாங்கத்தின் வற்புறுத்தல் காரணமாக வீடு கட்டிக் கொடுக்கின்ற திட்டத்தை அறிமுகப்படுத்தியதன் காரணத்தினால், தாழ்த்தப்பட்டவர்களுக்குக் கடன் கொடுப்பதைக் கூட்டுறவுச் சங்கங்களில் நிறுத்தினார்கள். அதிலே கூட, 4 ஆயிரம் ரூபாயிலே 2 ஆயிரம் ரூபாய் சொசைட்டியிலே கொடுத்து, 2 ஆயிரம் ரூபாய் கொண்டு போனால் செலவுக்குச் சரியாகும் என்ற காரணத்தினால் கூட அந்தத் திட்டம் சரியாக இருந்தது என்று நான் ஏற்றுக் கொண்டேன். ஆனால் தமிழ்நாடு அரசாங்கம் ஆதி திராவிடர்களுக்கு கான்கிரீட் வீடுகள் கட்டிக் கொடுக்கின்ற காரணத்தினாலேயும் இந்தத் திட்டம் பரிசீலிக்கப் படாமல் இருக்கலாம். ஆனால், 40 ஆயிரம், 60 ஆயிரம் போன்று அதிகக் கடன் வழங்குகின்ற ஒரு நிலை அந்தச் சங்கங்களுக்கு இருக்கின்ற காரணத்தினால் அந்த 60 ஆயிரம் 40 ஆயிரம், 30 ஆயிரம் தொகையில் தாழ்த்தப்பட்டவர்கள் வீடு கட்ட முன்வந்தால், அந்தக் கடன் வழங்குவதில் அவர்களுக்குத் தனி ஒதுக்கீடு செய்து கொடுக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே நான் சொல்லும் போது, மத்திய, மாநில அரசுகளின் சார்பில் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்கின்ற திட்டத்தை அரசு செயல்படுத்திக் கொண்டு இருக்கிறது. இருந்தாலும் கூட, தகுதியுள்ள நபர்கள் இன்னும் கூடுதலான அளவில் அவர்கள் முதலீடு செய்து வீடுகளைக் கட்டுவதற்கு மனுச் செய்யும் போது, ஜாதி வித்தியாசம் பாராமல் அந்தக் கடன்களை அனுமதிப்பதற்கு அரசு பரிசீலனை செய்யும் என்பதை நான் ஏற்கெனவே தெரிவித்திருக்கிறேன்.

[1991 சனவரி 24

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வினா எண். 2146 மற்றும் 9381 ஆகியவை மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க தள்ளிவைக்கப்படுகின்றன.

வேகத் தடைகள் அமைத்தல்

*10290—திரு. டி. கே. பழனிச்சாமி :

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

சென்னையிலுள்ள பள்ளிகளுக்கு அருகில் இருந்த வேகத் தடைகள் அகற்றப்பட்ட இடத்தில் ரம்பிளர்ஸ் (Rumblers) அமைக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

ஆம்.

தச்சுப் பயிற்சி, இரும்பு வேலை—கருமார் பயிற்சி, கட்டிட வேலைப் பயிற்சி.

*5809—திரு. எஸ். என். எம். உபயதுல்லா :

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

ஊராட்சி ஒன்றியங்கள்தோறும் தச்சுப்பயிற்சி, இரும்பு வேலை—கருமார் பயிற்சி, கட்டிட வேலைப்பயிற்சி போன்றவற்றை உருவாக்கிட அரசு பரிசீலித்து வருகிறதா ?

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

தமிழ்நாட்டில் டிரைசம் திட்டத்தின்கீழ் கொத்தனார் தொழில் பயிற்சி 5 ஊராட்சி ஒன்றியங்களிலும், தச்சுத்தொழில் பயிற்சி 104 ஊராட்சி ஒன்றியங்களிலும் கருமார் தொழில் பயிற்சி 57 இடங்களிலும் வழங்கப்பட்டு வருகிறது.



1991 சனவரி 24]

திரு. எஸ். என். எம். உபயதுல்லா : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்றைய நாட்களில் ஆசாரியார், கொத்தனார் போன்றவர்களுக்கு நல்ல வேலைவாய்ப்பும், நல்ல ஊதியமும் கிடைக்கிறது. எனவே, இத்தகைய பயிற்சிகளை எல்லா ஊராட்சி ஒன்றியங்களிலும் அரசு அமைக்க முன் வருமா என்றும், கொத்தனார் வேலைகளைப் பெண்கள் ஏற்றுச் செய்யலாம் என்பதால் அத்தகைய முறையிலே பெண்களுக்கு பயிற்சிகளை அளிக்க அரசு முன் வருமா என்றும் அறிய விரும்புகிறேன்.

9-30 மணி

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, எல்லா ஒன்றியங்களிலும் இதை அமல் படுத்துவது என்பதற்கான சாத்தியக் கூறுகள் இல்லை. காரணம், அதிகமான நிதி ஒதுக்கப்பட வேண்டியிருக்கிறது. எனவே, இருக்கிற நிதியை வைத்துக்கொண்டு, எங்கெங்கே அதற்கு உரிய இடங்கள் இருக்கின்றனவோ அவைகளைப் பயன் படுத்தி இந்த ஆண்டு சற்றுக் கூடுதலாகவே அனுமதித்து இருக்கிறோம். அடுத்த ஆண்டு அதைக் கொஞ்சம் அதிகரிப்பதற்கான முன் வடிவைச் செய்யலாம்.

திரு. எஸ். என்.எம். உபயதுல்லா : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, பெண்களுக்குக் கொத்தனார் வேலைகளுக்கான வாய்ப்பைப் பற்றிக் கேட்டேன், அமைச்சரவர்கள் அதைப்பற்றிக் கூற வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு கோ. சி. மணி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, பெண்களைச் சேர்க்கக் கூடாது என்பது அல்ல ; பெண்கள் மனுப் போட்டாலும் அவர்களைச் சேர்த்துக் கொள்ள வேண்டும் என்றுதான் ஆணை வழங்கப் பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினரவர்கள் எங்கெங்கே அப்படிப்பட்ட பெண்கள் அதற்கு முயற்சித்து வருகிறார்களோ அந்தப் பட்டியலைத் தந்தால் அவர்களை இணைத்துக் கொள்வதற்கு இப்பொழுதும் அரசு தயாராக இருக்கிறது.

திரு. சா. கணேசன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஊராட்சி ஒன்றியங்கள் நடத்துகின்ற தச்சுப் பயிற்சி, இரும்பு வேலை பயிற்சி, கருமார் பயிற்சி போன்றவைகளில் ஆண்டுதோறும் தேர்ச்சி பெற்று வெளி வருகின்றவர்கள் எத்தனை பேர்? அவர்களில் ஆண்டுதோறும் எவ்வளவு பேர்களுக்கு வேலை கிடைக்கிறது என்ற தகவலை அரசு தர முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, இதற்குத் தனியாகக் கேள்வி போடவும்.

திரு. வே. தங்கபாண்டியன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, இந்தத் தொழிலுக்கு, கொத்த னாருக்குப் பயிற்சி அளிப்பதைப்போல, கொத்தனாருக்கு வேண்டிய சித்தாள்களாகப் பெண்கள் தேவைப்படுகிறார்கள். எனவே—சித்தாள்களுக்கும் வேண்டிய பயிற்சியை அளிப் பதற்கும் அரசு ஏதாவது பரிசீலிக்குமா என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, இப்பொழுதே செய்யத் தகுதி படைத்தவர்களுக்கே வேலை கிடைக்கவில்லை. எனவே அதற்குப் பயிற்சி அவசியமில்லை.

### வேளாண்மை கூட்டுறவு வங்கிகளின் நிர்வாகக் குழு.

*8041—திரு. வே. இராமசாமி:

மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) 28–9–1985-க்கு முன் தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கிகளின் நிர்வாகக் குழு பணியாளர்களுக்கு வழங்கிய சம்பளம் மற்றும் சலுகைகளை முந்தைய அரசு ஆட்சேபனை செய்ததை எதிர்த்து தொடுக்கப்பட்ட வழக்கில் தொழிலாளர் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பை இந்த அரசு அமுல்படுத்த முன்வருமா?

(ஆ) ஆம் எனில், நிறுத்தி வைத்துள்ள சம்பளம் மற்று சலுகைகளை, தொடர்ந்து வழங்க எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) தொடக்கக் கூட்டுறவு வங்கி ஊழி யர்கள், மாநிலப் பதிவாளரின் ஆணைகளின்படி சம்பள விகிதத்தில் மாற்றம் செய்ய ஒப்புக்கொண்டதால், தொழி லாளர் நீதிமன்றத்தின் தீர்ப்பை அமல்செய்யும் கேள்விக்கு இடமில்லை.



திரு. வே. இராமசாமி : மாண்புமிகு சட்டப் பேரவைத் துணைத் தலைவரவர்களே, 28–9–1985 ஆம் ஆண்டு அன்றிருந்த அரசால் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட கூட்டுறவுச் சங்கப் பிரதிநிதிகள் அமைப்பு கலைக்கப்பட்ட பொழுது—அதற்கு முன்னால் அந்தத் தொழிலாளர்களுக்கு, அந்தப் பணியாளர்களுக்கு உயர்த்தப்பட்ட சம்பளம் மறுக்கப்பட்டது. மறுக்கப்பட்ட பிறகு அது கோர்ட்டுக்குச் சென்று, அவர்களுக்கு உயர்த்தப்பட்ட சம்பளத்தைக் கொடுக்க வேண்டுமென்று அறிவுறுத்தப்பட்டும், அது கொடுக்கப்படாமல் இருப்பதால் தை அரசு இப்பொழுது அமல் நடத்துமா என்று கேட்க விரும்புகிறேன்.

9-35 மணி

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுச் சங்க ஊழியர்களின் சம்பள விகிதம் மற்றும் அதிக பட்சச் சம்பளம் ஆகியவற்றை நிர்ண பித்து தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் சட்டம் 1961—ல் பிரிவு 119 ஏ-ன் கீழ் 20–5–1975இல் மாநிலப் பதிவாளரால் ஆணைகள் வெளியிடப்பட்டன. இந்த ஆணைகளுக்கு மாறாக தொடக்கக் கூட்டுறவுச் சங்கங்களின் ஊழியர்கள் சம்பள விகிதத்தை மாற்றியமைத்து முந்தைய நிர்வாகக் குழுவினர், அரசு நியமித்த தனி அலுவலர்கள் 1985 இல் பொறுப்பு ஏற்பதற்கு முன் 27–9–1985 அன்று ஆணைகள் பிறப்பித் தனர். முந்தைய நிர்வாகக் குழுவினரின் இந்த ஆணைகள் கூட்டுறவு நிறுவனங்களின் நலனைப் பாதிப்பதாக இருந்த தால், இந்தக் கூட்டுறவு நிறுவனங்களின் நலனை முன்னிட்டு முந்தைய நிர்வாகக் குழுவினர் பதவி விலகும்பொழுது மாற்றி யமைத்த சம்பள விகிதங்களைச் செயல்படுத்த வேண்டா மெனத் தொடக்கக் கூட்டுறவு வேளாண்மைச் சங்கங்களின் தனி அலுவலர்கள் மாநிலப் பதிவாளரால் அறிவுறுத்தப் பட்டனர். அதன்படி தமிழ்நாடு வேளாண்மைக் கூட்டுறவுச் ங்கம் (தனி அலுவலர் நியமன) அவசரச் சட்டம் 1985-ன்படி யமிக்கப்பட்ட தனி அலுவலர்கள், முந்தைய நிர்வாகக் குழுவால் மாற்றியமைக்கப்பட்ட சம்பள விதிதங்களைச் செயல் படுத்தவில்லை. இந்த முடிவுக்கு எதிராக சேலம் மாவட்டத்தி லுள்ள 52 தொடக்கக் கூட்டுறவுச் சங்கங்களின் ஊழியர்கள், தொழிற் தகராறுகளை, கோயம்புத்தூர் தொழிலாளர் நீதி மன்றத்தின் முன் கொண்டு சென்றனர். முந்தைய நிர்வாக இயக்குநர் குழுவால் மாற்றியமைக்கப்பட்ட சம்பளம் மற்றும் படிகள் வழங்க தொழிலாளர் நீதிமன்றம் 22–9–1988 இல் ஆணையிட்டது. தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளின் ஊழியர்களுடைய சம்பளங்களின் உச்ச வரம்பு 1975 இல் நிர்ணயிக்கப்பட்டதால், சம்பள விகிதத்தை மாற்றி யமைக்கும்படி மனுக்கள் வரப்பெற்றதால், இதனை ஆயும் பொருட்டு, மாநிலப் பதிவாளரால் ஒரு குழு அமைக்கப்பட்டது.

D
V211,31'N91 144898
N91·37·2

மேற்படி குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில், தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் சட்டம் 1983, பிரிவு 181-ன்கீழ், 1975 இல் வெளியிடப்பட்ட கட்டளைகளை ரத்து செய்து, புதிதாக மாநிலப் பதிவாளரால் 6–6–1988 இல் புதிய சம்பளங்கள் வெளியிடப்பட்டன. தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் சட்டம் 1961, பிரிவு 119ஏ-யின் கீழ், வெளியிடப்பட்ட ஆணைகள் 6–6–1988 வரை செல்லும். இதற்கிடையே, முந்தைய நிர்வாகக் குழுவினால் அவர்கள் பதவியிலிருந்து விலகுவதற்குமுன் சம்பள விகிதங்களை மாற்றியமைத்தது, சங்கங்களின் நலனைப் பாதிப்பதோடு மட்டுமல்லாமல், பதிவாளரால் வெளியிடப்பட்ட கட்டளைகளுக்கு எதிராகவும் இருந்ததால், கோயம்புத்தூர் தொழிலாளர் நீதிமன்றத்தின் ஆணைகளை எதிர்த்து, உயர்நீதிமன்றத்தில் ரிட் மனுக்கள் தாக்கல் செய்யும்படி, சேலம் மாவட்டத்திலுள்ள தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுச் சங்கங்களின் தனி அலுவலர்களை அறிவுறுத்தும்படி, சேலம் மண்டல இணைப் பதிவாளருக்கு அறிவுரை வழங்கப்பட்டது. இருந்தபோதிலும், முந்தைய நிர்வாகக் குழுவினால் சம்பள விகிதத்தில் செய்த மாற்றங்கள் 6–6–1988 இல் மாநிலப் பதிவாளரால் சட்டப்பூர்வமாக வெளியிடப்பட்ட கட்டளைகளின்படி, உள்ள சம்பள விகிதங்களுக்கு உட்பட்டு இருந்தால், ரிட் மனுக்கள் தாக்கல் செய்ய வேண்டாமென்று அறிவுரை வழங்கப்பட்டது. சேலம் மாவட்டத்திலுள்ள எல்லா தொடக்கக் கூட்டுறவு வங்கிகளின் ஊழியர்கள், தங்கள் சம்பள விகிதங்களை மாநிலப் பதிவாளரால் 6–6–1988 இல் வெளியிடப்பட்ட ஆணைகளின்படி நிர்ணயித்துக் கொள்ள ஒப்புக் கொண்டதால் எந்தவித ரிட் மனுவும் உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படவில்லை. அவர்களின் சம்பள விகிதங்களும் பதிவாளரின் ஆணைகளின்படி நிர்ணயிக்கப்பட்டுள்ளன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. வே. இராமசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மதிப்பிற்குரிய அமைச்சர் அவர்கள் பொருத்தமான விளக்கங்களைக் கொடுத்ததை வரவேற்றுக்கொண்டு, அந்தப் பணியாளர்களை அரசு ஊழியர்களாக ஆக்க வேண்டும்; அதே கூட்டுறவில் அதிகாரிகளாக இருக்கக் கூடியவர்களையெல்லாம் அரசு ஊழியர்கள் என்று அறிவித்து, அவர்களுக்கு உயர்ந்த சம்பளமும் கொடுத்து, அவர்களுக்குப் பல சலுகைகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இருந்தாலும், அந்த ஊழியர்கள், களத் தொழிலாளர்களாக—பணியாளர்களாக வரையறுக்கப்பட்டு, வட்டியை வைத்துத்தான் இவர்களுக்குச் சம்பளங்கள் என்று நிர்ணயிக்கப்பட்டதை மாற்றி, அரசு ஊழியர்கள் என்ற தகுதியினை ஆக்க,அரசு நடவடிக்கை எடுக்க முன்வருமா என அறிய விரும்புகிறேன்.





மாண்புமிகு திரு. பொன் முத்துராமலிங்கம் ; மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மூல கேள்விக்கு தொடர்பில்லாத கேள்வியானாலும், அந்த ஊழியர்களுக்கு தொடர்பான செய்திகளை இங்கே சொல்கிறீர்கள். அதற்கான மானியத்திலே, அத்தகைய கருத்துக்களைப் பேசுவீர்களேயானால், அரசு உரிய முறையில் பரிசீலனையை மேற்கொள்ளும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கே. ரமணி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த ஊழியர்களுடைய சம்பளவிகிதங்களை மாற்றியமைக்கும்படியான பல விவரங்களை விளக்கமாக இங்கே அமைச்சர் அவர்கள் முன் வைத்தார்கள். கூட்டுறவு அமைப்பில் இருக்கும்படியான ஊழியர்கள் மத்தியில் ஒரு கடுமையான வெறுப்பு நிலவிக்கொண்டு வருவதை நமது அமைச்சர் அறிவாரா என்பதை நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன். இவர்களுக்கு இருக்கிற அளவுககு, குறைந்த சம்பளம் வேறு எந்த இலாகாவிலும் இன்றைக்குக் கிடையாது. கூட்டுறவுச் சட்டத்தினுடைய பிடியில் — இரும்புப் பிடியில் — அவர்கள் சிக்கியிருக்கிறார்கள். அவர்கள் சொன்னதிலிருந்து நான் சொல்கிறேன்; அவர்களுக்குச் சம்பள முன் ஒப்பந்தம் — அதாவது சம்பள நிர்ணய ஒப்பந்தமே கிடையாது. அவர்களைக் கூப்பிட்டு வைத்து, அதிகாரிகள் ஒரு நியாயமான ஒப்பந்தம் பண்ணுவது என்பது இல்லை. ஏனென்றால், அந்தச் சங்கங்களிலே பணம் இருக்கிறதா என்ற கேள்வியே திரும்பத் திரும்ப வருகிறது. அப்படிச் சம்பளம் கேட்கிற தொழிலாளி, தானே பணத்தைக் கொண்டுபோய் கட்டி, அங்கிருந்துதான் கேட்க வேண்டியதாய் இருக்கிறது. கூட்டுறவுச் சங்கங்களினுடைய பிரச்சினை வந்தவுடனேயே ஒரு கமிட்டியைப் போட்டு, அதனுடைய சிபாரிசை வாங்கி, அந்த சிபாரிசைக் கொண்டு காரியத்தை முடித்து விடுகிறார்கள். அரசு ஊழியர்களுக்குக்கூட அரசாங்கமே நேரில் அவர்களை அழைத்துவைத்துப் பேசி பிரச்சினைகள் தீர்க்கப்படுகின்றன. ஆனால், இங்கே அது தீராத நிலை இருக்கிறது. எனவே, நானும், மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்திலே தெரிந்து கொள்ள விரும்புவது.......

9-40 மணி

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வினாவாகக் கேளுங்கள்.

திரு. கே. ரமணி : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இங்கே விஷயம் கொஞ்சம் கடுமையாக இருக்கிறது. இது உங்களுக்குத் தெரியும். நான் கேட்கிற விவரம் என்னவென்றால் இவ்வளவு குறைந்த சம்பளம் அவர்களுக்கு இருப்பதை நமது அரசாங்கமே ஒத்துக்கொள்கிறதா ? இதை உயர்த்துவதற்கு வேறு ஏதாவது முறையில் அரசு முன்வந்து செய்ய முடியுமா என்று நான் கேட்க விரும்புகிறேன்.

[1991 சனவரி 24

**மாண்புமிகு திரு. பொன் முத்துராமலிங்கம் :** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரு நீண்ட பிரசங்கத்தையே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே நடத்தியிருக்கிறார் கள். இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு இந்தக் கூட்டுறவுத் துறையில் பணியாற்றுகிற, நியாயவிலைக் கடைகளிலே பணியாற்று கிற, அலுவலர்களுக்கு ஊதியம் குறைவாக இருக்கிறது என்பதை நம்முடைய மாண்புமிகு முதலமைச்சரிடம் எடுத்துத் தெரிவித்தவுடன் கடந்த முறை 100 ரூபாய் அதிகமாக உயர்த்தி னார்கள். இந்த முறையில் ஆளுநர் உரையில் அதை, 500 ரூபாயாக உயர்த்தியிருக்கிறார்கள். எனவே, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வது போல் வெறுப்பு நிலவுகிறது என்பது மாறி வெறுப்பு குறைந்து விருப்பு அதிகமாகிக் கொண்டிருக்கிறது என்ற நிலைதான் இன்றைய நிலை என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன். கூட்டுறவுச் சங்கங்களில் அலு வலர்களுக்கு ஊதியத்தை நிர்ணயம் செய்கிறபோது கூட்டுறவுச் சங்கங்களினுடைய வையபிலிட்டி-ஐப் பார்க்க வேண்டும். இந்த அளவுக்கு ஊதியம் கொடுத்து அந்தச் சங்கம் நிலைத்து நிற்க முடியுமா, விவசாயிகளுக்கும், அந்தச் சங்கத்திலே அங்கத்தினர் களாக இருப்பவர்களுக்கும் அது சரியான பணியைச் செய்ய முடியுமா என்பதையும் நாம் கவனத்தில் கொள்ள வேண்டியவர் களாக இருக்கிறோம். இந்த விவரங்கள் எல்லாம் மாண்புமிகு உறுப்பினர்களுக்கு நன்றாகத் தெரியும். இருந்தாலும் அந்த ஊழியர்கள் குறைந்தபட்ச ஊதியத்தில்தான் தொடர்ந்து வேலை செய்ய வேண்டிய அவசியம் இல்லை. காலம் வரும் போது அவைகள் எல்லாம் கவனிக்கப்பட்டு இந்த அரசு உரிய நடவடிக்கை மேற்கொள்ளும் என்பதை மட்டும் இந்தக் கட்டத் தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

**வட்டச்சாலை அமைத்தல்.**

*3199—திரு. இரா. சாமிநாதன்:

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) மதுரை நகரைச் சுற்றி வட்டச்சாலை அமைக்கும் திட்டத்திற்கு நிலம் கையகப்படுத்தும் பணி நிறைவு பெறவில்லை என்பது உண்மையா ?

(ஆ) ஆம் எனில், பணி எப்போது நிறைவுபெறும் ?

**மாண்புமிகு திரு. துரைமுருகன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) ஏனென்றால் நில எடுப்பு வேலைகள் முடிந்தவுடன் சாலை அமைக்கிற பணி ஆரம்பிக்கப்படும்.



1991 சனவரி 24]

**திரு. இரா. சாமிநாதன் :** மாண்புமிகு பேரவைத் துணைத்
தலைவர் அவர்களே, இந்த நிலம் கையகப்படுத்தும் வேலை
எப்போது முடிவடையும்? மதுரை நகரில் வாகனங்களின் எண்
ணிக்கை குறிப்பாகச் சரக்கு லாரிகள், ' ரீ வீலர்ஸ் ' எனப்படும்
இரண்டு சக்கர வண்டிகள் ஆகியவை மிக அதிகமாகப் பெருகி
விட்ட காரணத்தால் திருமங்கலம், செக்காஊரணி, மேலூர்
போன்ற பகுதிகளில் இருந்து வரக்கூடிய மக்கள் போக்குவரத்து
இடைஞ்சல் காரணமாக அத்தியாவசியமான இடங்களுக்கு
அதாவது நீதிமன்றம், அரசு மருத்துவ மனை, பஸ் ஸ்டாண்ட்,
புகைவண்டி நிலையம் ஆகியவற்றுக்குக் குறிப்பிட்ட நேரத்தில்
செல்ல முடியாத நிலையில் தவிக்கிற காரணத்தால், விரைவில்
நிலத்தைக் கையகப்படுத்தி மதுரையைச் சுற்றி வட்டச்சாலை
அமைக்க அரசு முன்வருமா என்பதை நான் அறிந்துகொள்ள
விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன் :** தலைவர் அவர்களே,
1982, 1983-ஆம் ஆண்டிலேயே இதற்கு டெக்னிக்கல் சாங்ஷன்
கிடைத்தும் கூட என்ன காரணத்தாலோ தெரியவில்லை,
இத்தனை ஆண்டு காலம் அப்படியே நின்றுபோய் இருக்கிறது.
நான் கேள்வி நேரத்தில் அவைகளை எல்லாம் தெரிவிக்க விரும்ப
வில்லை. இருந்தாலும் கலைஞர் அவர்களின் அரசு ஏற்பட்ட
பிறகு, நில எடுப்பு சம்பந்தமாக ரெவின்யூ டிப்பார்ட்மென்ட்-
இடத்திலே பேசி அவர்கள் இதிலே துரிதமாக ஈடுபட வேண்டும்
என்று நாங்கள் கேட்டுக்கொண்டிருக்கிறோம். இந்தப் பணி
யைப் பொறுத்தவரையில் சுமார் 24 கிராமங்களில் 53,045
ஹெக்டேர் நிலம் கையகப்படுத்த வேண்டி இருக்கிறது. அப்படி
நிலம் கையகப்படுத்துவதில் சட்டச் சிக்கல்கள் பல உண்டு.
வழக்கு மன்றங்களுக்குப் போக வேண்டும். இரண்டாவதாகப்
பல்வேறு கிராமங்கள் வழியாகவும், அதாவது மதுரை வடக்கு,
மதுரை தெற்கு, திருமங்கலம் ஆகியவற்றைச் சுற்றி 24 கிராமங்
மங்கள் வழியாகவும் இந்தச் சாலையை அமைக்க வேண்டி
இருப்பதால், இதிலே தாமதம் இப்போது ஏற்பட்டாலும் அந்தத்
தாமதத்தைத் தவிர்த்து வேகமாக பணியாற்றும்படி கேட்டுக்
கொண்டு இருக்கிறோம். இப்போது இந்த அரசு ஏற்பட்ட
பிறகு நிலம் கையகப்படுத்தும் பணி வருவாய்த்துறை
யால் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. டிராஃப்ட் டிக்ளரேஷன்
ஸ்டேஜிலே 3 ஐட்டம்ஸ், வேலுயேஷன் ஸ்டேஜிலே 8 ஐட்டம்ஸ்,
அவார்ட் ஸ்டேஜிலே 4 ஐட்டம்ஸ், போஸ்ட் அவார்ட் ஸ்டேஜிலே
13 ஐட்டம்ஸ் இருக்கின்றன. ஆக எப்படியும் விரைவில் 6, 7
மாத காலத்திற்குள்ளாக, இந்தப் பணிகளை முடித்துவிட
வேண்டும். இந்த ஆண்டில் அந்த வட்டச்சாலை அமைகின்ற
பணியைத் துவக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டிருக்கிறோம்.
எனவே எப்படி இருந்தாலும் இந்த ஆண்டு இறுதிக்குள்ளாக
அந்தச் சாலை அமைக்கிற பணி துவங்கப்பட்டுவிடும்.

[1991 சனவரி 24

**9-45 மணி**

திரு. இரா. சாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்கள் இந்த ஆண்டிலேயே எப்படியாவது மதுரையைச் சுற்றி வட்டச் சாலை அமைத்து விடுவோம் என்று கூறி இருப்பதற்கு நன்றி கூறிக் கொள்கிறேன். குறிப்பாக 2, 3 ஆண்டுகளுக்கு முன்பே மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் இந்தப் போக்குவரத்து இடையூரைத் தவிர்ப்பதற்காக திருமங்கலம், திருப்பரங்குன்றம் மத்தியிலே அமைந்திருக்கின்ற தோப்பூர் கிராமத்தில் இன்றைய தினம் மதுரை மத்திய காய் கறிச் சந்தையை மாற்றி அமைத்திடவும், இந்த சரக்கு லாரிகள் அங்கே தங்கவும் அரசு திட்டம் தீட்டியுள்ளதாக அறிவித்துள்ளார். அந்தத் திட்டத்தை நிறைவேற்றிவிடவும், குறிப்பாக திருமங்கலம் தென் பகுதியில் வரக்கூடிய, விமான நிலையம் சென்று பயணம் செய்யக் கூடிய அனைவரும் மதுரை நகரத்திற்கு வந்து அதிக தூரம் செல்வதால், அதைத் தடுத்திடவும் இதை மனதிலே கொண்டு மதுரை மாவட்ட மக்களுடைய பிரச்சினைகளைப் போக்குவதற்கு நம்முடைய மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்கள் இந்த ஆண்டே செய்து கொடுப்பாரா என்பதை உறுதி மொழியாகக் கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நிலம் கையகப்படுத்தும் பணியை வேகமாக்கி இந்த ஆண்டு எப்படியும் சாலையை அமைப்பதற்கு ஆரம்பித்துவிடுவோம் என்றுதான் சொன்னேன். அவர் முடித்து விடுவோம் என்று சொல்லி நன்றியைச் சொல்லிவிட்டார். ஆகவே ஆரம்பிப்பதற்கு வேண்டிய நடவடிக்கையை அரசு மேற்கொள்ளும் என்று ஜாக்கிரதையாகவே நான் சொல்லி இருக்கிறேன்.

திரு. உ. ரா. வரதராசன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இது போன்று பொது உபயோகத்திற்காக நிலம் கையகப்படுத்துவது என்பது பல காரணங்களால் தாதமப்படுத்தப்படுகிறது. மதுரையினுடைய இந்தப் பாதை மட்டுமல்ல. சென்னையில் உள்ள வட்ட சாலையானாலும் சரி, சென்னையில், பீச்—லஸ் இடையிலேயான துரித ரயில் ஆனாலும் சரி, சென்னையிலே அமைக்கப்பட இருக்கிற பாதாள ரயில் திட்டமாக இருந்தாலும் சரி, இரண்டாவது ரயில் முனையம் ஆக இருந்தாலும் சரி, நிலங்களை கையகப்படுத்துவதிலே ஏராளமான சிக்கல்கள் இருக்கின்றன. சட்டங்களிலே இருக்கக் கூடிய சந்து பொந்துகளிலே, இண்டு இடுக்குகளிலே நில உடைமையாளர்கள் எப்படியோ ஒளிந்து கொண்டு வழக்குகள் போட்டு அவை நீதிமன்றத்திலே தேங்கிக் கிடக்கின்றன. பல ஆண்டு காலமாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.



1991 சனவரி 24]

மஹாராஷ்ட்ராவிலே இருக்கக் கூடிய ஒரு சட்டம் இது சம்பந்தமாக மிகத் தெளிவாக இருக்கிறது. இது போன்ற பொதுக் காரணங்களுக்கு நிலம் கையகப்படுத்துகிறபோது நிலம் கையகப்படுத்துவதுபற்றிக் கேள்வி கேட்கமுடியாது. அதற்கு நஷ்டஈடு என்ன என்பதைப் பற்றி வேண்டுமானால் வழக்குத் தொடரலாம் என்ற அளவிலே மிகத் தெளிவாக இருக்கிறது. அதனுடைய அடிப்படையிலே நிலக் கொள்கை சம்பந்தமாக நிலம் எடுப்பது சம்பந்தமாக, ஒரு விரைவான சட்டத் திருத்தம் கொண்டு வந்து, இது போன்ற பொதுப் பணிகளை முடுக்கி விடுவதற்கு அரசு ஆலோசனை செய்து, தகுந்த நடவடிக்கை எடுக்க வலியுறுத்தப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எத்தனையோ சட்டங்கள் கொண்டுவந்தாலும், அதிலேயும் ஒரு இடைவெளியைக் கண்டு பிடித்து அதிலேயே போய் மீண்டும் எப்படியாவது நீதிமன்றத்திலே அதற்கு ஒரு ஸ்டே வாங்கிவிடுகிறார்கள். கோர்ட்டு பற்றி இப்போது சொல்லக் கூடாது என்று சொல்வார்கள். பல்வேறு சிக்கல்கள் வந்து கொண்டிருக்கின்றன. இருந்தாலும் திரு வரதராசன் அவர்களின் அந்த எண்ணம் அரசுக்கும் உண்டு. அதிலேயும் அரசு முனைந்து கொண்டிருக்கிறது.

திரு. சி. கோவிந்தசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, மதுரை நகரத்தைச் சுற்றி வட்ட சாலை அமைப்பதைப் போல, வளர்ந்துவரும் தமிழ்நாட்டில் இருக்கக் கூடிய இதர நகரங்களிலும் அதனுடைய நெருக்கடியை முன் கூட்டியே கணக்கில் எடுத்து அதற்கான நிலம் எடுக்கிற பணிகளைச் செய்து, அந்த வட்டச் சாலைகளை அமைக்க அரசு முன்வருமா? குறிப்பாக, கோவை, திருப்பூர், திருச்சி போன்ற முக்கிய நகரங்கள் மிக வேகமாக வளர்ந்து வருகின்றன. அந்தப் பகுதிகளை எல்லாம் கணக்கில் எடுத்து உரிய நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு அர்பன் டெவலப்மெண்ட் நிறுவனம் மூலம் மிக முக்கியமான நகரங்களிலே இப்படிப்பட்ட சாலைகளை அமைப்பதற்கும் மற்ற மாற்றுச் சாலைகளை அமைப்பதற்கும், பை பாஸ் சாலைகளை அமைப்பதற்கும் ஒரு திட்டம் தீட்டி கோவை, மதுரை, நெல்லை, திருச்சிராப்பள்ளி என்று மிக முக்கியமான நகரங்களை எ, பி, சி, மூன்று பிரிவுகளாகப் பிரித்து எடுத்திருக்கிறார்கள். அந்த வகையிலே அவர்கள் சில நகரங்களை இனம் பிரித்திருக்கிறார்கள். அதற்குத் தக்கபடி வரும். திரு. கோவிந்தசாமிக்கு இப்போது மேம்பாலம் வந்திருக்கிறது.

[1991 சனவரி 24

அரசு நெடுஞ்சாலைகள்.

*7963—திருமதி எஸ். பி. சற்குணம் : மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா;—

கடந்த 10 ஆண்டுகளில் எத்தனை கிலோ மீட்டர்கள் அரசு நெடுஞ்சாலைகள் தேசிய நெடுஞ்சாலைகளாக மாற்றப் பட்டுள்ளன?

மாண்புமிகு திரு. துரைமுருகன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

கடந்த 10 ஆண்டுகளில் 137.14 கி.மீ. நீளம் அரசு நெடுஞ் சாலைகள், தேசிய நெடுஞ்சாலைகளாக மாற்றப்பட்டுள்ளன.

திருமதி எஸ். பி. சற்குணம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சில குறிப்பிட்ட மாநிலச் சாலை களை, தேசிய நெடுஞ்சாலைகளாக மாற்ற வேண்டும் என்று இந்த அரசு மத்திய அரசுக்குத் தெரிவித்திருக்கிறதா? ஆம் எனில், எந்தெந்தச் சாலைகள் நேஷனல் ஹைவேஸ்-க்கு மாற்றப்பட வேண்டுமென்று கோரிக்கை வைக்கப்பட்டிருக்கிறது என்று மாண்புமிகு அமைச்சர் அறிவிக்க முன்வருவாரா?

9-50 மணி

மாண்புமிகு திரு. துரைமுருகன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சுமார் 16 நெடுஞ்சாலைகளை தேசிய நெடுஞ்சாலைகளாக அறிவிக்க வேண்டுமென்று இந்த அரசு மத்திய அரசிடத்திலே கோரிக்கை வைத்திருக்கிறது. 26—12—1989 அன்று கூட முன்னாள் சர்ஃபேஸ் டிரான்ஸ் போர்ட் மினிஸ்டராக இருந்த திரு. உன்னிகிருஷ்ணன் அவர்க ளிடத்தில் இந்தக் கோரிக்கையை நான் நேரில் சென்று கொடுத் திருக்கிறேன். சமீபத்தில் நீர்ப்பாசனத்துறை அமைச்சர்கள் மாநாடு நடைபெற்ற போது, நான் அங்கே சென்றபோது கூட இந்தக் கோரிக்கையை, நீர்ப்பாசனத் துறை அமைச்சரே இப் போது சாலையைப் பராமரிக்கிற அமைச்சராகவும் இருக்கிற காரணத்தினாலே, அவர்களிடத்திலே வலியுறுத்திவிட்டு வந்திருக்கிறேன். எந்தெந்தச் சாலைகளை எப்படி எடுக்க வேண்டுமென்று கேட்டிருக்கிற விவரத்தை இங்கே அம்மையார் அவர்கள் கேட்டார்கள். ஒன்று நாகப்பட்டினம், தஞ்சாவூர், திருச்சி, கோயம்புத்தூர் வழியாக கடலூர் செல்கிற மாநிலச் சாலை 54 கிலோமீட்டர். இரண்டு கடலூர், உளுந்தூர்பேட்டை, சேலம் சாலை 192 கிலோமீட்டர். திருச்சி விராலிமலை, துவரங் குறிச்சி, மதுரை சாலை 122 கிலோமீட்டர். திருச்சி, புதுக் கோட்டை, காரைக்குடி, இராமநாதபுரம் சாலை 185 கிலோ



1991 சனவரி 24]

மீட்டர். திண்டுக்கல், பழனி, உடுமலைப்பேட்டை, பொள்ளாச்சி கோயம்புத்தூர் சாலை 159 கிலோ மீட்டர். கடலூர், வேலூர், சித்தூர் சாலை 203 கிலோமீட்டர். மதுரை, அருப்புக்கோட்டை, தூத்துக்குடி சாலை 133 கிலோமீட்டர். கிழக்குக் கடற்கரை சென்னை, கடலூர், கன்னியாகுமரி சாலை 737 கிலோமீட்டர், பெரமலூர், மானாமதுரை சாலை 228 கிலோமீட்டர். தொண்டி, மதுரை, தேனி, கம்பம், கொச்சி சாலை 268 கிலோமீட்டர். மதுரை, கொச்சி, கொல்லம் சாலை 341 கிலோமீட்டர். திருவண்ணாமலை, கிருஷ்ணகிரி சாலை 130 கிலோ மீட்டர், திருநெல்வேலி செங்கோட்டை சாலை 59 கிலோமீட்டர். மதுரை, அம்மையநாக்கனூர், கங்குவார்பட்டி, கொடைக்கானல் சாலை 140 கிலோ மீட்டர். தோப்பூர், மேட்டூர், பவானி சாலை 81 கிலோமீட்டர். வாணியம்பாடி, திருப்பத்தூர் சாலை 80 கிலோ மீட்டர். ஆக 3,359 கிலோமீட்டர் சாலைகளை எடுக்க வேண்டு மென்று நாங்கள் கேட்டிருக்கிறோம். இதுவரையிலே ஒரு 80 கிலோமீட்டர் சாலைகள்தான் நமக்குக் கிடைத்திருக்கின்றன.

திருமதி எஸ். பி. சற்குணம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 80 கிலோ மீட்டர் அளவுள்ள பாதைக்குத்தான் மத்திய அரசினுடைய அனுமதி நமக்குக் கிடைத் திருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அது எந்தச் சாலை என்று அமைச்சர் அவர்கள் அறிவிக்கவேண்டும். அத்துடன் மாநிலச் சாலைகளை நெடுஞ்சாலைகளாக மாற்று வதற்கு மத்திய அரசு வைத்திருக்கின்ற அளவுகோல் என்ன?

மாண்புமிகு திரு. துரைமுருகன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அளவுகோல் ஒன்றும் இல்லை. (சிரிப்பு) மத்திய அரசினுடைய மனம் இளகுவதுதான் அளவு கோல். பொதுவாக மாநிலச் சாலைகளை தேசிய நெடுஞ்சாலை களாக மாற்றும்போது நம்முடைய நிதி நிலைக்கு ஏற்ப மாற்று வார்கள். பொதுவாக என். எச். எஸ். கான்பரன்ஸ் ஒவ்வொரு ஆண்டும் ஒவ்வொரு மாநிலத்திலும் நடக்கும். குஜராத்திலே 1989-லே அந்த மாநாடு நடந்தபோது கிட்டத்தட்ட ஆயிரம் கிலோமீட்டர் மாநிலச் சாலைகளை தேசிய நெடுஞ்சாலைகளாக அறிவித்தார்கள். ஆனால், 1988-லே தமிழ் நாட்டிலே அந்த கான்பரன்ஸ் நடந்தது. அதன் பிறகு நமக்கு 80 கிலோமீட்டர் தான் அவர்கள் கொடுத்திருக்கிறார்கள். அந்த 80 கிலோமீட்ட ரையும் எங்கே போட்டிருக்கிறார்கள் என்று அம்மையார் அவர்கள் கேட்டார்கள். அம்மையாருடைய மாமியார் வீட்டுக்குப்போகிற மதுரையிலிருந்து சின்னமனூர் செல்கிற தேனி வரையிலான சாலையைத்தான் அவ்வாறு போட்டிருக்கிறார்கள். (சிரிப்பு) ஆகவே, அந்த வகையிலே அக்கறை கொண்டு கேட்டிருப்பார்கள் என்று நான் கருதுகிறேன். (சிரிப்பு) நான் இவ்வளவு கிலோமீட்டர் என்று இங்கே படித்த போது, ஐயோ இவ்வளவு கிலோமீட்டர் கள் கேட்டிருக்கிறோமா என்று நினைத்திருப்பீர்கள். ஆனால், இவ்வளவு கேட்டால்தான் இவ்வளவு கிடைக்கும் என்ற நியதி

[1991 சனவரி 24

இருக்கிறது. இருந்தாலும் தமிழ்நாட்டிலே 20 ஆண்டுகளாக மாநிலச் சாலைகளை தேசிய நெடுஞ்சாலைகளாக மாற்றுகிற பிரச்சினை எழாமல் போய்விட்டது. அவர்களும் மாற்றாமல் விட்டுவிட்டார்கள். இன்னும் சொல்லப்போனால், அவர்கள் விட்டுப் போய்விட்டதை, அவர்களுக்கு ஞாபகப்படுத்துகிற வேலையைத்தான் இந்த அரசு செய்து கொண்டிருக்கிறது. நிச்சயமாக இந்த மாநிலச் சாலைகளை எல்லாம் தேசிய நெடுஞ்சாலைகளாக மாற்ற வேண்டுமென்று இந்த அரசு தொடர்ந்து வலியுறுத்தும்.

9.55 மணி

திருமதி பாப்பா உமாநாத் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, அமைச்சர் வரிசையாகப் படிக்கும்போது பரவாயில்லை என்று நினைக்கத் தோன்றியது. ஆனால், 3,000 கிலோ மீட்டரை 80 ஆகக் குறைத்தது படுமோசமான காரியம். ஆகவே நாம் எல்லோரும் சேர்ந்து நம்முடைய கோரிக்கையை ஏற்றுக் கொள்ளச் செய்ய வேண்டியிருக்கிறது. குறிப்பாக வேளாங் கண்ணி, நாகூர் போன்ற, அனைத்து மதத்தினரும் விரும்பிச் செல்லுகின்ற இடங்கள் அமைந்துள்ள திருச்சி-நாகை சாலையை தேசிய நெடுஞ்சாலையாக ஆக்க வேண்டுமென்ற கோரிக்கை நீண்டகாலமாக இருக்கிறது. அதுவும் திருச்சி டி.டி.சி. மீட்டிங்கில் அதைப்பற்றி பரிந்துரையும் செய்யப்பட்டிருக்கிறது. எனவே, அமைச்சர் அவர்கள் அடுத்து வரக்கூடிய முதல் கோரிக்கையாக அதை ஏற்றுக் கொள்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : துணைத் தலைவர் அவர்களே, அம்மையார் அவர்கள் நான் படிக்கும்போதே கவனித்திருக்கலாம். நாகப்பட்டினம்-கூடலூர் சாலைக்குத்தான் பர்ஸ்ட் பிரபரன்ஸ் கொடுத்திருக்கிறோம். நாகப்பட்டினம், தஞ்சாவூர், திருச்சி, கோயம்புத்தூர், கூடலூர் வழியாக மைசூர் செல்லும் சாலையைத் தேசிய நெடுஞ்சாலையாக அறிவிக்கக் கேட்டிருக்கிறோம். அதற்கு பர்ஸ்ட் பிரபரன்ஸ்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, அமைச்சரவர்கள் படிக்கும்போது சொன்னார்கள். திண்டுக்கல்-தேனி சாலை முக்கியமான சாலை என்று அரசு சிபாரிசு செய்யும்போது அந்தச் சாலையையும் சேர்த்துக் கொள்ள இயலுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : துணைத் தலைவர் அவர்களே, திண்டுக்கல்-தேனி சாலையைத் தேசிய நெடுஞ்சாலையாக அறிவிக்க வேண்டுமென்று அம்மையார் அவர்கள்



1991 சனவரி 24]

கேட்கிறார்கள். இந்த நிலையில் அது எங்கே வரப்போகிறது? தேசிய நெடுஞ்சாலை அளவுக்கு அந்தச் சாலையை நான் செய்து தருகிறேன்.

திரு. செ. நூர்முகமது : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, கன்னியாகுமரி-மதுரை சாலை தற்போது தேசிய நெடுஞ்சாலையாக இருக்கிறது. ஆனால் பெரும்பான்மையான வாகனங்கள், 99.9 சதவிகிதம் வாகனங்கள் நாகர்கோவிலிலிருந்து காவல்கிணறு வழியாக திருநெல்வேலி, மதுரை என்று சென்றடைகின்றன. எனவே காவல்கிணறு பகுதியில்தான் அந்த நெடுஞ்சாலை வந்து இணைகிறது. காவல்கிணறு-நாகர்கோவில் இடையிலே உள்ள நெடுஞ்சாலை தேசிய நெடுஞ்சாலையிலே இணைக்கப்படாத காரணத்தால்தான் அது பராமரிப்பற்று இருக்கிறது. ஆகவே நான் கேட்டுக்கொள்வதெல்லாம் அந்தப் பகுதி மாத்திரம் சிறிய துண்டாக தேசிய நெடுஞ்சாலையிலிருந்து விடுபட்டிருக்கிற காரணத்தால், மிகப் பெரும்பான்மையான வாகனங்கள் அந்தப் பாதை வழியாகச் செல்கின்ற காரணத்தால் நாகர்கோவில்-காவல்கிணறு சாலையை மதுரை தேசிய நெடுஞ்சாலையோடு இணைத்து எடுத்துக் கொள்வதற்கு மத்திய அரசை மாநில அரசு வற்புறுத்துமா என்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவரவர்களே, நானும் அந்தச் சாலையைப் பார்வையிட்டேன். அதிகமான வாகனங்கள் அந்தப் பகுதியில்தான் போகின்றன. எனவே தேசிய நெடுஞ்சாலையாக அதை அறிவிக்க வேண்டுமென்று கேட்டு, அவர்கள் அனுமதி கிடைக்கிற வரையில்கூட நாம் காத்திருக்கத் தேவையில்லை. உடனடியாக அந்தப் பகுதியை தேசிய நெடுஞ்சாலை ஸ்டான்டர்டுக்குக் கொண்டுவர வேண்டும். அதை இந்த ஆண்டு எடுத்துக் கொள்ள வேண்டுமென்று இலாகாவுக்கு உத்தரவிட்டிருக்கிறேன்.

தக்காளியை மூலப்பொருளாகக் கொண்டு தொழிற்சாலை துவங்கும் திட்டம்.

*1523 திரு. ப. காளியப்பன் : மாண்புமிகு சமூகநலம் மற்றும் ஊரகத் தொழில்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:—

திண்டுக்கல்-காயிதே மில்லத் மாவட்டம், பழனி வட்டம் ஒட்டன்சத்திரத்தில் தக்காளியை மூலப் பொருளாகக் கொண்டு தொழிற்சாலை துவங்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே,

திண்டுக்கல்—காயிதே மில்லத் மாவட்டம், பழனி வட்டம் சத்திரத்தில் தக்காளியை மூலப் பொருளாகக் கொண்டு அரசின் சார்பில் தொழிற்சாலை துவங்கும் செயற்குறிப்பு

தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை, எனினும் தனியார் மற்றும் கூட்டுறவுத் துறையின் மூலமாக அத்தகைய தொழிற்சாலையைத் துவக்க முன்வந்தால், அரசு அனைத்து உதவிகளையும் வழங்கும்.

**திரு. ப. காளியப்பன் :** பேரவைத் துணைத் தலைவரவர்களே, ஒட்டன்சத்திரம், வேடசந்தூர், வடமதுரை, வத்தலக்குண்டு, பழனி பகுதிகளில் உள்ள விவசாயிகள் எளிய முறையில் பயிரிட்டு அதிக மகசூல் செய்யும் பொருள் தக்காளி. அந்தத் தக்காளியை மூலப் பொருளாகக் கொண்டு தயார் செய்யும் தக்காளிப் பவுடர் தயாரிக்கும் தொழிற்சாலையை அரசே ஏற்கும் எண்ணம் உள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் :** துணைத் தலைவர் அவர்களே, வேளாண் துறையின் ஒரு பகுதியாக இருக்கக்கூடிய தோட்டக் கலைத் துறை மூலமாக பழங்களை ஏராளமாக உற்பத்தி செய்து, அதிலிருந்து கிடைக்கின்ற பழ வகைப் பொருள்களை உற்பத்தி செய்கின்ற ஒரு தொழிற்பேட்டையைத் துவக்குகின்ற திட்டம் அரசின் பரிசீலனையில் இருக்கிறது. அந்தத் திட்டம் செயல்படுகிற நேரத்தில் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை பரிசீலிக்கப்படும்.

**திரு. ப. காளியப்பன் :** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அதற்கான மதிப்பீட்டுப் பட்டியல்-புராஜக்ட் ரிப்போர்ட் தமிழ்நாட்டில் கிடைக்கவில்லை. அதை அரசே கேட்டு வாங்கும் எண்ணம் உள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் :** துணைத் தலைவர் அவர்களே, பழப் பொருள்களைப் பதப்படுத்தும் தொழில்களைத் துவங்குவதற்கு நாம் முன்வருகிற நேரத்தில் அதற்குத் தேவையான திட்ட மதிப்பீடுகளைப் பெறலாம்.

**திரு. என். பழனிவேல் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒட்டன்சத்திரம் பகுதி தக்காளி உற்பத்தியில் தமிழ்நாட்டிலேயே முதலிடம் வகிக்கும் பகுதி. அங்கே கோடிக்கணக்கான ரூபாய் மதிப்புள்ள தக்காளி உற்பத்தியாகிறது. வெளி வட்டங்களிலிருந்தும் அங்கே வந்து விற்பனையாகிறது. சில நேரங்களில் விற்பனை மந்தமாகி, தக்காளி வீணாகி, விவசாயிகளுக்கு நஷ்டம் ஏற்படுகிறது. ஆகவே அரசு சார்பில் ஒரு தொழிற்சாலையை தக்காளிக்காக ஏற்படுத்திக் கொடுத்தால் அந்த வட்டத்தினுடைய விவசாயிகளுக்கும், வெளியிலே இருந்து வருகிறவர்களுக்கும் உதவியாக இருக்கும், ஆகவே அரசு அதை மீண்டும் பரிசீலனை செய்து அந்தத் தொழிற்சாலையை ஏற்படுத்தித் தருவதற்கு ஆணை பிறப்பிக்குமா ?



10-00 மணி.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** பேரவையின் அனுமதியுடன் வினா நேரம் சற்று நீட்டிக்கப்படுகிறது.

**மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மூலக் கேள்விக்குப் பதில் சொல்கிற நேரத்திலே தெளிவாகக் குறிப்பிட்டேன். அரசின் சார்பில் தொழில்களைத் தொடங்குகிற திட்டம் இப்போது பரிசீலனையில் இல்லை. தனியாரோ அல்லது கூட்டுறவுத் துறை மூலமாகவோ அந்தப் பகுதியில் தக்காளி பயிர் செய்கிற விவசாயிகள் ஒரு பத்து அல்லது 50 பேர் முன்வந்து அதைப் போன்ற தொழில்களைத் தொடங்க முன்வந்தால் அரசு இப்படிப்பட்ட • தொழிற்சாலைகளைச் சரியான முறையில் நடத்துவதற்கு அனைத்து உதவிகளையும் செய்து கொடுக்கும். எனவே கூட்டுறவுத்துறை மூலமாக இப்படிப்பட்ட பணிகளைச் செய்வதுதான் எதிர்காலத்தில் விவசாயிகளுக்கு நல்ல பலனைத் தரும் என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

## தென்னை சார்புப் பொருட்களைக் கொண்டு தொழிற்சாலை துவங்குதல்

* 10295 **திரு. கா. அண்ணாதுரை :** மாண்புமிகு சமூக நலம் மற்றும் ஊரகத் தொழில்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பட்டுக்கோட்டை பகுதியில் தென்னை சார்புப் பொருட்களைக் கொண்டு தொழிற்சாலை துவக்குகிற திட்டம் எதுவும் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

**மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) பட்டுக்கோட்டை பகுதியில் தென்னை சார்புப் பொருட்களைக் கொண்டு தொழிற்சாலை துவக்குகிற திட்டம் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

**திரு. கா. அண்ணாதுரை :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்த அளவில் பட்டுக்கோட்டை மற்றும் பேராவூரணி பகுதியிலே தான் தேங்காய் அதிகமாக உற்பத்தி ஆகிறது. இன்னும் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டுமானால், தமிழ்நாட்டிலேயே தென்னை உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம் என்கிற

சிறப்புச் சங்கம் பட்டுக்கோட்டையிலேதான் இயங்கி வருகிறது. எனவே அந்தச் சிறப்புக்களை முக்கியத்துவமாகக் கொண்டு தேங்காயிலிருந்து, தென்னை சார்புப் பொருள்களிலிருந்து ஃபோம்மேட், தேங்காய்ப் பவுடர் போன்ற பொருள்களைத் தயாரிக்கிற ஒரு அரசு நிறுவனத்தையோ அல்லது கூட்டுறவுத் துறை மூலமாகத் துவக்குகிற எண்ணத்தையோ அரசு மேற்கொள்ள மறு பரிசீலனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே பட்டுக்கோட்டைப் பகுதியில் 4 தொழிற் கூட்டுறவு கயிறு தயார் செய்யும் சங்கங்கள் இயங்கிக் கொண்டிருக்கின்றன. சோழநாடு கயிறு தொழிற்பேட்டை, பேராவூரணி கயிறு தொழிற் கூட்டுறவுச் சங்கம், குருவிக்கரம்பை கயிறு தொழிற் கூட்டுறவுச் சங்கம், திட்டக்குடி கயிறு தொழிலாளர் கூட்டுறவுச் சங்கம் என்ற 4 கூட்டுறவுச் சங்கங்கள் நல்ல முறையில் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. இன்னும் இதைப்போன்ற சங்கங்களை உருவாக்க வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர்கள் விரும்பினால், கூட்டுறவுத் துறையிலேயே இதைப்போன்ற தொழிற் கூடங்களையே நம்மாலே அமைத்துத் தர முடியும்.

திரு. கா. அண்ணாதுரை : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறியதைப் போன்ற அந்தக் கூட்டுறவுத் துறை மூலம் துவங்க இருக்கின்ற தொழில்களுக்கு அரசு எந்தெந்த விதத்திலே உதவ முன்வரும் என்று நான் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மற்ற கூட்டுறவுச் சங்கங்களுக்கு அரசுச் சலுகைகள் எந்த அளவுக்குச் செயல்படுகிறதோ அது போலத்தான். மேலும் மத்திய கயிறு வாரியம் என்ற ஓர் அமைப்பு செயல்படுகிறது ; அந்த மத்திய கயிறு வாரியம் இதைப் போன்ற கயிறு தொழிற் கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தேவையான நிதி உதவி வழங்கிக் கொண்டிருக்கிறது. எனவே, கூட்டுறவுச் சங்கங்களை அமைத்துச் செயல்படுவதில் எந்தவிதமான சிரமமும் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எஸ். காதர்பாட்சா என்கிற வெள்ளைச்சாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தக் கயிறு உற்பத்தித் தொழிற்சாலைகள் பல இடங்களில் ' சிக் மில் ' ஆக இருக்கின்றன. தற்சமயம் வெளிநாட்டுக்கு ஏற்றுமதி செய்யக்கூடிய அளவுக்கு மெத்தை, தலையணை போன்ற பொருள்களைக் கயிறு இண்டஸ்ட்ரியிலே செய்யலாம் என்று தெரிகிறது.



அதற்காக அரசு ஏற்றுமதி செய்வதற்கு, ஏற்றுமதி வாரியத்தின் மூலமாக ஏதாவது ஏற்பாடு செய்து, இந்தத் தொழிற்சாலையை முற்போக்கு செய்வதற்கு, முன்னேற்றுவதற்கு உதவி செய்ய அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, தமிழக அரசின் தொழிற்துறை மூலமாக நடத்தப்படுகின்ற இண்டஸ்ட்ரியல் கோவாபரேடிவ் என்று சொல்லக்கூடிய இந்தக் கயிறு தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் எல்லாமே சிறப்பான முறையில் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. ' சிக் மில் ' என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எதைக் குறிப்பிடுகிறார்கள் என்று எனக்குத் தெரியவில்லை. அப்படி ஏதாவது தனிப்பட்ட ஒரு தொழிற் கூட்டுறவுச் சங்கம் சரியான முறையில் இயங்காமல், நஷ்டத்திலே இயங்குமேயானால் அதைப்பற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அரசின் கவனத்துக்குக் கொண்டுவந்தால், அதை நல்ல முறையிலே இயக்குவதற்கான வாய்ப்பினை அரசு ஏற்படுத்தித் தரும். பொதுவாக கூட்டுறவு அமைப்புக்கள் நல்ல முறையிலே செயல்படாததற்குக் காரணம் அங்கு இருக்கக்கூடிய நிர்வாகக் கோளாறுகள்தான். எனவே, சமீபத்திலே தான் எல்லாக் கூட்டுறவுச் சங்கங்களுக்கும் தேர்தல்கள் நடத்தப்பட்டு, தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் பொறுப்பிலே அமர்ந்து இருக்கிறார்கள். எனவே, நஷ்டத்திலே இயங்குகிற அல்லது ' சிக் மில் ' ஆகக் கருதப்படுகின்ற அந்தக் கூட்டுறவுச் சங்கங்களினுடைய விவரங்களை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தந்தால் அதைப் பற்றி அரசு பரிசீலிக்கும். இப்போது மத்திய கயிறு வாரியம் தான் வெளிநாடுகளுக்கு கயிறு பொருள்க்ளை ஏற்றுமதி செய்கின்ற பணியிலே ஈடுபட்டு இருக்கின்றது. நம்முடைய தொழிற் கூட்டுறவுச் சங்கங்களிலிருந்து பொருள்களைப் பெற்றுத்தான் ஏற்றுமதி செய்கிறார்கள். தமிழகத்திலேயே கூட்டுறவு முறையில் நார்ப் பொருள்களிலிருந்து மெத்தை தயார் செய்கின்ற ஓர் அமைப்பை சமீபத்திலே தான் மாண்புமிகு முதல்வர் அவர்கள் தஞ்சை மாவட்டத்திலே தொடங்கி வைத்து இருக்கின்றார்கள். எனவே, எல்லா மூலப் பொருள்களும் நல்ல முறையில் இந்தக் கூட்டுறவு அமைப்புகளின் மூலம் பயன்படுத்தப்படுகின்றன.

### கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

*1151 திரு. ஜி. ஜி. குருமூர்த்தி :

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) பவானி ஒன்றியம், பி. மேட்டுப்பாளையம், கவுந்தபாடி மற்றும் சலங்கபாளையம் கூட்டுக் குடிநீர்த் திட்டம் அரசின் ஆய்வில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன ?

[ 1991 சனவரி 24

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) இக்கூட்டுக் குடிநீர்த் திட்டத்திற்கு ரூபாய் 108.22 இலட்சத்திற்கு நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. அனைத்துப் பணிகளும் தொடங்கப்பட்டு இப்போது செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

10-05 மணி.

திரு. ஜி. ஜி. குருமூர்த்தி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இது போன்ற அத்தியாவசியமான குடிநீர்த் திட்டங்கள் செயல்படுவதிலே நீண்ட காலதாமதங்கள் ஏற்படுகின்றன. அதற்குண்டான காரணங்கள் என்ன என்பதை அரசு தெரிவிக்குமா ? அதை நிவர்த்தி செய்வதற்கான முயற்சிகள் என்ன எடுக்கப்படுகின்றன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சில பணிகள், இந்த அரசு பொறுப்பேற்பதற்கு முன்பே துவங்கப்பட்ட நிலையிலே துவக்கப்படாமலேயே இருந்திருக்கின்றன. அவைகளைத் துரிதப்படுத்த வேண்டும் என்ற நோக்கத்தோடுதான் மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்களும் அறிந்ததைப் போல குடிநீர் வடிகால் வாரியத்தைச் சார்ந்த இயக்குநர் அவர்களும் அந்தத் துறையிலே பணியாற்றுகிற களப் பணியாளர்களும் ஒவ்வொரு மாவட்டத் தலைநகருக்கும் சென்று அங்கே இருக்கின்ற சட்டமன்ற உறுப்பினர், ஊராட்சி ஒன்றியத் தலைவர் ஆகியவர்களையெல்லாம் அழைத்துப் பேசி, தேக்கம் இருக்கின்ற திட்டங்களைத் துரிதப்படுத்த வேண்டுமென்ற நோக்கத்தோடு ஆய்வுக் கூட்டங்கள் நடைபெற்று வருவதை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவார்கள். இதுவரை 4 மாவட்டங்களில் அந்தக் கூட்டம் நடைபெற்று இருக்கிறது. அதிலே அந்தத் துறையைச் சார்ந்தவன் என்ற முறையிலே நானும் கலந்துகொண்டு உறுப்பினர் கூறிய பணிகள் துரிதப்படுத்தப்பட்டு வருகின்றன. இந்தத் திட்டத்தைப் பொறுத்த வரையில் 1991 மார்ச்சுக்குள் நிறைவேற்றப்பட வேண்டும் என்று நிர்வாகத் துறைக்கு இந்த அரசு ஆணையிட்டிருக்கிறது. பணிகள் விரைவுபடுத்தப்பட்டிருக்கின்றன. நிச்சயமாக அந்தப் பணிகளை விரைவில் அரசு முடித்துத் தரும் என்று உறுப்பினருக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.



1991 சனவரி 24 ]

குறிஞ்சிப்பாடியில் அரசு மருத்துவமனை.

*10556 திரு. நா. கணேச மூர்த்தி : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தென்னாற்காடு மாவட்டம், குறிஞ்சிப்பாடி தொகுதியில் குறிஞ்சிப்பாடியில் அரசு மருத்துவமனை துவங்கும் உத்தேசம் அரசுக்கு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது ஆரம்பிக்கப்படும் ?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி; மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) தென்னாற்காடு மாவட்டம் குறிஞ்சிப்பாடி தொகுதியில் குறிஞ்சிப்பாடியில் அரசாங்க மருத்துவமனை துவங்கும் உத்தேசம் அரசுக்கு இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. நா. கணேச மூர்த்தி : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, குறிஞ்சிப்பாடி பேரூராட்சியில் முதல் நிலை சிகிச்சை அளிக்கும் வகையிலே ஒன்றிய மருந்தகம் ஒன்று செயல்பட்டு வருகிறது. அதைப் படுக்கை வசதி கொண்ட ஆரம்பச் சுகாதார நிலையமாக அரசு மாற்றித் தருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பஞ்சாயத்து ஒன்றியங்களால் நடத்தப்பட்டு வருகிற பல்வேறு மருத்துவமனைகளை அரசே ஏற்று நடத்த வேண்டும் என்று பல ஒன்றியங்களில் இருந்து அரசுக்குக் கோரிக்கைகள் வந்துள்ளன. அதேபோல் சில மருத்துவமனைகளை அரசு மேற்கொண்டிருக்கிறது. உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களையும் கலந்துகொண்டு அந்தத் துறையினுடைய ஆலோசனையையும் கேட்டு, இது போன்ற ஒன்றிய மருந்தகங்களையும் ஆரம்பச் சுகாதார நிலையமாக மாற்றி அமைப்பதற்கான கருத்துரு அரசிடம் உள்ளது. அது முடிவு பெற்றவுடன் இதை ஆரம்பச் சுகாதார நிலையமாக மாற்றுவதற்கு அரசு ஆவன செய்யும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

## நாகர்கோவில் ஒளிபரப்பு அஞ்சல் நிலையம்

*10957 திரு. செ. நூர்முகமது:
மாண்புமிகு செய்தி மற்றும் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சென்னைத் தொலைக்காட்சி நிலைய ஒளிபரப்பு நிகழச்சிகள், குமரி மாவட்டம் முழுவதும் முழுமையாகத் தெரிவதில்லை என்ற விவரம் அரசுக்கு தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், நாகர்கோவில் ஒளிபரப்பு அஞ்சல் நிலையத்தின் (Trans Mitter) திறனை அதிகரிக்க வேண்டுமென்று மைய அரசைத் தமிழக அரசு கேட்டுக்கொள்ளுமா ?

மாண்புமிகு திரு. கே. என். நேரு : துணைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) தற்போது இக்கருத்துரு அரசின் பரிசீலனையில் இல்லை.

திரு. செ. நூர்முகமது : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்து மக்கள், தாய்த் தமிழகத்தோடு இணைய வேண்டும் என்று மிகுந்த போராட்டங்கள் நடத்தி தாய்த் தமிழகத்தோடு இணைந்தோம். ஆனால் கன்னியாகுமரி மாவட்டத்திலே இருக்கின்ற தொலைக் காட்சியில் தமிழகத்திலே இருந்து ஒளிபரப்பப்படுகின்ற தமிழ் நிகழ்ச்சிகளைக் காண்கின்ற அளவிற்கு வலிவற்றதாக இருக்கிறது. நாங்கள் நம் தமிழகத்திலே இணைந்த பிறகும்கூட கேரள மாநிலத்தில் ஒளிபரப்பப்படுகிற மலையாள நிகழச்சிகளைத்தான் பார்த்துக் கொண்டிருக்கவேண்டுமா என்று கவலைப்படுகிறோம். ஆகவே தமிழகத்து மக்களாகிய கன்னியாகுமரி மக்கள் தமிழ் நிகழ்ச்சிகளைக் கண்டு களிக்கிற வகையில் வலுக்கூடிய டிரான்ஸ் மிட்டர்களை அமைக்க மத்திய அரசை மாநில அரசு வலியுறுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. என். நேரு : துணைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள தொலைக் காட்சியில் குறைந்த அழுத்தச் சக்தி டிரான்ஸ்மிட்டர் மூலம் நூறு விழுக்காடு தெரிய வாய்ப்பில்லை. அதற்குக் காரணம் தென் மேற்குப் பகுதி தென் மேற்குக் குன்றுகளால் தடுக்கப்படுவதுதான் என்று தெரிவித்திருக்கிறார்கள். நாகர்கோவிலில் அமைக்கப் பட்டுள்ள குறைந்த அழுத்தச் சக்தி டிரான்ஸ்மிட்டர் மூலம் 20 முதல் 25 கிலோமீட்டர் உள்ள சுற்றுப் பகுதியில் தொலைக் காட்சி தெரிய வாய்ப்புள்ளது. மேலும் கன்னியாகுமரி மாவட்டத்திற்கு அத்தனை நிகழச்சிகளும் தெரிய வேண்டும் என்ற





நோக்கத்தோடு ஏற்கெனவே தமிழ்நாடு அரசு சார்பாக மத்திய அரசுக்குக் கடிதம் அனுப்பப்பட்டிருக்கிறது. தமிழ்நாட்டில் காஞ்சிபுரம், திண்டுக்கல், உதகமண்டலம், தஞ்சாவூர், திருவண்ணாமலை, விழுப்புரம், வாணியம்பாடி, திருச்செந்தூர், திண்டிவனம், ராமேஸ்வரம் மற்றும் திருப்பத்தூர், (வடஆற்காடு) ஆகிய 12 இடங்களில் குறைந்த அழுத்தச் சக்தித் தொலைக்காட்சி ஒளிபரப்பு நிலையங்கள் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டு வருகிறது. இப்படியிருந்தும் திருநெல்வேலியிலே ஒரு ஹைபவர் டிரான்ஸ்மிட்டரை அமைப்பதற்கு தமிழ்நாடு அரசு சார்பாகக் கருத்துருக்கள் மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டு அது மத்திய அரசின் பரிசீலனையில் இருக்கிறது. திருநெல்வேலியிலே அமைத்தாலே அது கன்னியாகுமரி மாவட்டம் முழுவதும் தெரியும் அளவில் இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள் கிறேன்.

10-10 மணி

திரு. செ. நூர்முகமது : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, அந்த டிரான்ஸ்மிட்டரிலிருந்து ஒளிபரப்புகின்ற நிகழ்ச்சிகள், குன்றுகள் மிகுந்த பகுதி அது என்ற காரணத்தால் தடுக்கப்படுவதாக அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டது உண்மை. எனவே நாகர்கோவிலில் இப்போது அமைக்கப்பட்டிருக்கிற டிரான்ஸ்மிட்டரிலிருந்து ஒளிபரப்பப்படுகின்ற நிகழ்ச்சிகள் சுங்காங்கடை என்ற இடத்தில் இருக்கிற குன்றால் தடுக்கப்படுகிறது. எனவே சுங்காங்கடைக்கு மறுபுறம் இருக்கிற என்னுடைய தொகுதி மற்றுமுள்ள பகுதிகளில் இருக்கிற தமிழ் மக்கள் தமிழ்நாட்டு நிகழ்ச்சிகளைக் காண முடியாமல் இருக்கிறார்கள். ஆகையால் நான் வேண்டிக் கொள்வதெல்லாம் குறைந்தபட்சம் அந்த டிரான்ஸ்மிட்டரை சுங்காங்கடையில் இருக்கிற குன்றிலே அமைப்பதற்கு—குன்றுக்கு மறுபக்கத்தில் வேறு குன்றுகள் இல்லை—எனவே அந்தக் குன்றிலே அமைத்தால் கூட குமரி மாவட்டம் முழுவதும் அந்த நிகழ்ச்சிகள் தெரிவதற்கு வாய்ப்பு இருக்கிறது. எனவே நாகர்கோவிலில் இருக்கிற டிரான்ஸ்மிட்டரை சுங்காங்கடை குன்றில் அமைப்பதற்கு— அரசு வலியுறுத்துமா என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. என். நேரு : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, தென்னாற்காடு மாவட்டம் முழுவதும் பயன்பெறும் பொருட்டு நெய்வேலியிலும், தஞ்சை மாவட்டம் முழுவதும் தெரிகிற வகையில் தஞ்சையிலும், சேலம் மற்றும் தர்மபுரி மாவட்டங்கள் பயன்பெறும் வகையில் ஏற்காட்டிலும், நெல்லை-கட்டபொம்மன் , சிதம்பரனார், கன்னியாகுமரி மாவட்டங்களின் மக்கள் பயன்பெறும் வகையில் திருநெல்வேலியிலும் உயர் அழுத்தச் சக்தி கொண்ட தொலைக்காட்சி அஞ்சல் நிலையங்கள் அமைப்பதற்காகத்தான் இப்போது கருத்துருக்கள் அனுப்பப்பட்டிருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள்

தங்களுடைய பகுதியில் அந்தக் குன்றின் மேல் அமைப்பதற்குக் கேட்டிருக்கிறார்கள். இதையும் மத்திய அரசின் கவனத்திற்கு நிச்சயமாகக் கொண்டு செல்வோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. மு. க. ஸ்டாலின் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சென்னைத் தொலைக்காட்சியில் ஒளி பரப்பப்படும் இரண்டாம் அலைவரிசை நிகழ்ச்சியினைத் தமிழ் நாடு முழுவதும் ஒளிபரப்புவதற்கான முயற்சியில் இந்த அரசு ஈடுபடுமா ? அதற்கான குறிப்பு ஏதேனும் அரசுக்கு உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. என். நேரு : ஏற்கெனவே அனைத்து மாநில அரசுகளுமே ஒரு அலைவரிசையை மாநில அரசுக்குத் தரவேண்டுமென்ற ஒரு கோரிக்கையை மத்திய அரசில் கேட்டிருந்தாலும் அவர்கள் அதை ஏற்றுக்கொள்ளவில்லை. ஆனால் இரண்டாம் அலைவரிசையை விரிவுபடுத்தி தமிழகம் முழுவதும் தெரிய வைக்கக்கூடிய அந்தக் கொள்கைக் குறிப்பை நாம் மத்திய அரசிடம் வலியுறுத்திக் கொண்டிருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எச். எம். ராஜு : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, சென்னை தொலைக்காட்சி ஒளிப்பரப்பு நிகழ்ச்சிகள் நீலகிரி மாவட்டத்தில் கோத்தகிரிபகுதியிலும் கூடலூர் பகுதியிலும் நன்றாகத் தெரிவதில்லை. இது பற்றி மாவட்ட வளர்ச்சி மன்றம் மூலமாகத் தீர்மானம் அனுப்பி வைத்தது அரசுக்கு வந்துள்ளதா ? இதுவரைக்கும் அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது என்பதை அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு திரு. கே. என். நேரு : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இதுபோன்ற கருத்துரு எதுவும் அரசுக்கு வரவில்லை. வந்தால் அதுபற்றிப் பரிசீலிக்கப்படும்.

திரு. மா. சுந்தரதாஸ் : துணைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் இருக்கிற டி. வி. சென்டரில் 10 கிலோ மீட்டர் பரப்பளவு கூட தமிழ் நிகழ்ச்சிகள் கிடைப்பதில்லை. இன்று இரண்டாம் சானலும் திறக்கப்பட்டிருக்கிறது. ஆகையினால் உடனடியாக 6 மாதத்திற்குள்ளாவது கன்னியாகுமரி மாவட்டம் முழுவதும் நிகழ்ச்சிகள் தெரிவதற்கான, அதாவது எல்லா சானல் நிகழ்ச்சிகளும் தெரிவதற்கான, நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. என். நேரு : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. சுந்தரதாஸ் அவர்களுடைய உதவி இப்போது எங்களுக்குத் தேவைப்படுகிறது.



அவர்களுக்கு அனுசரணையாக உள்ள மத்திய அரசு இப்போது இருக்கிறது. நாங்கள் எடுக்கக்கூடிய நடவடிக்கைகளுக்கு அவர் உறுதுணையாக இருப்பாரேயானால் நிச்சயமாக அதை விரைவில் நிறைவேற்றித் தருவதற்குத் தயாராக இருக்கிறோம். (குறுக்கீடு.)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : சரி இருக்கட்டும், அது உங்களுக்கு ஒரு மரியாதைதானுங்களே.

திரு. பெ. சீனிவாசன் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, ஒருசில இடங்களில் மாத்திரம் டி.வி. நிகழ்ச்சிகள் தெரிய வில்லை என்று சொல்கிறார்கள். என்னைப் பொறுத்தவரையில் அது தெரியாமல் இருந்தாலே நஷ்டமாக ஒன்றும் தோன்றவில்லை. காரணம், முக்கால்வாசி நிகழ்ச்சிகள் நமக்குப் புரியாத இந்தி மொழியிலேயே ஒளிபரப்பப்படுகின்றன. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அன்றாடம் தொலைக்காட்சி பார்ப்பது உண்டா ? பார்க்கும்போது அந்த எண்ணம் அவர்களுக்கு ஏற்படுவது உண்டா? இதை மத்திய அரசிடம் சொல்லி தமிழ் மொழியிலேயே நிகழ்ச்சிகள் அமையவேண்டுமென்று வற்புறுத்துவாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. என். நேரு : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கருத்தும் இந்த அரசினுடைய கருத்தும் ஒன்றுதான். அதையும் மத்திய அரசிடம் வலியுறுத்துவதற்குத் தயாராக இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

10-15 மணி

திரு. நா. கணபதி : துணைத் தலைவர் அவர்களே, தொலைக்காட்சி எல்லோருக்கும் தெரிகிறதோ இல்லையோ, சமீபத்தில் அதில் தமிழ்ச் செய்தி படிக்கிறவர்கள் தடுமாறுகிறார்கள், தத்தளிக்கிறார்கள். அதற்குக் காரணம் என்ன என்பதை ஆராய்ந்து சரி செய்ய இந்த அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. என். நேரு : துணைத் தலைவர் அவர்களே, தடுமாறுகிறவர்களையும், தத்தளிக்கிறவர்களையும் பற்றி அறிந்து சரி செய்ய நமக்கு அதிகாரம் இல்லையென்று கருதுகிறேன். இருந்தாலும் மாண்புமிகு உறுப்பினர் திரு. கணபதி அவர்களுடைய இந்தக் கேள்வியை அப்படியே அவர்களுக்கு அனுப்பி நடவடிக்கையெடுக்கும்படி அவர்களை நாம் கேட்டுக் கொள்ளலாம்.

எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறைப் பணியாளர்.

* 12515 திரு. உ. ரா. வரதராசன் :
மாண்புமிகு செய்தி மற்றும் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா ;

(அ) எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறைப் பணி நிலை, பணி அமைப்பு, பணியாளர் பாதுகாப்பு பற்றித் தொழிலாளர் ஆணையர் தலைமையில் 1989-ல் அமைக்கப்பட்ட குழுவின் பரிந்துரைகள் அரசுக்கு கிடைத்துள்ளனவா ?

(ஆ) ஆம் எனில், அப்பரிந்துரைகள் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. கே. என். நேரு : துணைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. உ. ரா. வரதராசன் : துணைத் தலைவர் அவர்களே, அக்குழு அதனுடைய அறிக்கையை எப்போது அரசுக்குத் தந்தது ? அதன் மீது விரைவாகப் பரிசீலனை செய்து முடித்து எப்போது அந்தப் பரிந்துரைகள் அமலாக்கப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. என். நேரு : துணைத் தலைவர் அவர்களே, தொழிலாளர் நலத்துறையினுடைய ஆணையராக இருந்த திரு. மலைச்சாமி அவர்கள் தலைமையில் அந்தக் குழு அமைக்கப்பட்டு, கடந்த ஓராண்டுக் காலமாக அது பல்வேறு குறிப்புகளை எடுத்து, அரசுக்கு ஒரு அறிக்கையைக் கடந்த மாதம் கொடுத்துள்ளது. அந்த அறிக்கையின் மேல், சம்பந்தப்பட்ட அதிகாரிகளை வைத்து ஆய்வுகள் நடத்திக் கொண்டிருக்கிறோம். கூடிய விரைவில் நிதித்துறைச் செயலாளரிடமும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடமும் கலந்தாலோசித்து அதை நிறைவேற்றுவதற்கு இந்த அரசு விரைவாகப் பாடுபடும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஆர். எஸ். ஸ்ரீதர் : துணைத் தலைவர் அவர்களே, நமது அரசுக்குச் சொந்தமான அச்சகத் துறையிலும், எழுதுபொருள் கிடங்கிலும் ஒரே மாதிரியான பணியைச் செய்யும் சில தொழிலாளர்களுக்கிடையே மாறுபாடான ஊதிய விகிதம் உள்ளதை அரசு பரிசீலனை செய்து அதனைச் சரிசெய்யுமா ? அது குறித்துப் பரிந்துரைகள் எதுவும் அரசிடம் உள்ளனவா என்பதையும் அறிய விரும்புகிறேன்.



மாண்புமிகு திரு. கே. என். நேரு : துணைத் தலைவர் அவர்களே, இதுபோல சம்பள விகிதங்கள் மாறுபட்டிருப்பதும் இந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதையும் இந்த அரசு கவனத்தில் கொள்ளும்.

விளையாட்டு மைதானத்தைப் புதுப்பித்தல்.

* 490 திரு. அ. இரகுமான்கான் :
மாண்புமிகு கைத்தறி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னை பூங்கா நகர் தொகுதி, கேசவப்பிள்ளை பார்க்கில் உள்ள விளையாட்டு மைதானத்தைப் புதுப்பித்துச் சீர் செய்து தர அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. ச. தங்கவேலு : துணைத் தலைவர் அவர்களே,

சென்னை பூங்கா நகர் சட்டமன்றத் தொகுதியிலுள்ள கேசவப்பிள்ளை பார்க், குடிசை மாற்றுத் திட்டப் பகுதியில் அமைந்துள்ள விளையாட்டுத் திடலைச் சுற்றி வேலியமைத்து மேம்பாட்டுப்பணி முடிக்கப்பட்டுள்ளது.

திரு. நா. கணபதி : துணைத் தலைவர் அவர்களே, வக்கீல் என்பதற்காக என்னைத் துணை வினா கேட்க அனுமதித்துள்ளீர்கள். அதற்காக நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். கேசவப் பிள்ளை பூங்காவைச் சுற்றிலும் வேலி அமைத்துச் சீர்செய்ததைப் போல சென்னை நகரில் மற்ற இடங்களிலும் செய்ய வேண்டும். சென்னை நகரில் பல்வேறு விளையாட்டு மைதானங்கள், பார்க்குகள் ஆகியவற்றில் புதிது புதிதாகக் குடிசைகள் முளைக்கின்றனவே அவைகளைத் தடுப்பதற்கு அரசு என்ன நடவடிக்கையை எடுத்துள்ளது என்பதைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. தங்கவேலு : துணைத் தலைவர் அவர்களே, குடிசை மாற்று வாரியப் பகுதியில் உள்ள விளையாட்டு மைதானங்கள், பூங்காப் பகுதிகளில் புதியதாக உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றுவதற்குக் குடிசை மாற்று வாரியத்தின் மூலமாக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. இரா. மதிவாணன் : துணைத் தலைவர் அவர்களே, இராயபுரம் இராபின்சன் பூங்கா அருகிலுள்ள கால்பந்து மற்றும் கூடைப் பந்து விளையாட்டுத் திடலைப் புதுப்பிக்க அரசு உடன் ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. தங்கவேலு : துணைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் சொன்ன அந்த விளையாட்டுத் திடல் குடிசை மாற்று வாரியத்துதினுடைய பராமரிப்பில் இல்லையென்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

## கால்நடை கிளை மருந்தகம்.

* *10323* திரு. ப. சுந்தரம் :
மாண்புமிகு கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வட ஆற்காடு—அம்பேத்கார் மாவட்டம், திருப்பத்தூர் ஊராட்சி ஒன்றியத்திலுள்ள பூங்குளம் என்னுமிடத்தில் கால்நடை கிளை மருந்தகம் அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், உடன் ஆரம்பிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

**10-20 மணி**

மாண்புமிகு டாக்டர் க. சந்திரசேகரன் : துணைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) இல்லை. இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. ப. சுந்தரம் : துணைத் தலைவர் அவர்களே, திருப்பத்தூர் ஊராட்சி ஒன்றியத்தில் கடைசியாக உள்ள கிராமம் பூங்குளம் என்ற கிராமம் ஆகும். அங்கேயிருந்து கால்நடை மருத்துவமனைக்கு வரவேண்டுமென்றால் 25 கிலோ மீட்டர் வரவேண்டியிருக்கிற காரணத்தால், அந்த இடத்தில் ஒரு கிளை கால்நடை மருந்தகம் ஆரம்பிக்க அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.



மாண்புமிகு டாக்டர் க. சந்திரசேகரன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, உரிய பிரேரணை அரசிடம் ஏதும் இதுவரையில் பெறப்படவில்லை, உரிய முறையில் கிளை நிலையம் அமைப்பதற்கான ஒரு பிரேரணையை அரசுக்கு அனுப்பி வைப்பார்களேயானால் அது பின்னர் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

திரு. ப. சுந்தரம் : துணைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே ஊராட்சி ஒன்றியத்தின் மூலமாகத் தீர்மானம் போட்டு பூங்குளம் அல்லது குரிசலாப்பட்டு என்ற இடத்திலே கால்நடை கிளை மருந்தகம் ஒன்றை ஆரம்பிக்க வேண்டும் என்று அனுப்பப்பட்டுள்ளது. அது அரசுக்குக் கிடைக்கப் பெற்றுள்ளதா ? கிடைக்கப்பட்டுள்ளதை வைத்து, உடனடியாக அது ஆரம்பிக்கப்படுமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. சந்திரசேகரன் : துணைத் தலைவர் அவர்களே, பூங்குளம் கிராமத்தில் கிளை நிலையம் அமைப்பதற்கான கோரிக்கை இது வரையில் அரசிடம் ஏதும் பெறப்படவில்லை. உரிய முறையில் ஊராட்சி ஒன்றியத்தின் மூலம் தீர்மானம் நிறைவேற்றி அனுப்பி வைக்கப்படுமானால், அது குறித்து ஆய்வு செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. இரா. மகேந்திரன் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, வட ஆற்காடு-அம்பேத்கார் மாவட்டத்தில் கால்நடைகள் அதிகமான அளவில் இருக்கின்றன. ஆனால் கால்நடைப் பண்ணை ஏதும் இல்லை. வட ஆற்காடு-அம்பேத்கார் மாவட்டத்தில் பண்ணை அமைக்க வேண்டும் என்பதைக் கருத்தில் கொண்டு, என்னுடைய தொகுதியான நாட்ராம்பள்ளியில் கால்நடைப் பண்ணை அமைக்க அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. சந்திரசேகரன் : துணைத் தலைவர் அவர்களே, அதற்கான சாத்தியக் கூறுகள் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வினாக்கள் விடைகள் முடிவுற்றன.

(குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப் பெற்றிருந்தால், அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.)

## 2. தகவல் கோரல்.

(அ) உறுப்பினர்கள் திருவாளர்கள் எஸ். திருநாவுக்கரசு கே.கே. எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன் எஸ். டி. உகம்சந்த் ஆகியோரின் அணியை ''அ.இ.அ.தி.மு.க. 2'' கட்சியாக அங்கீகரித்துள்ளது பற்றிய பேரவைத் தலைவரின் தீர்ப்பு குறித்து.

*திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு துணை சபாநாயகர் அவர்களே, இந்த அவையின் அமைப்பு பற்றியும், அவ்வயில் இருக்கிற உறுப்பினர்கள் அழைக்கப்பட வேண்டிய விதம் குறித்தும் எங்கள் மனதில் இருக்கின்ற சில எண்ணங்களை உங்கள் முன்னாலே சமர்ப்பிப்பதற்கு நாங்கள் விரும்புகிறோம். இதனை நேற்றே நாங்கள் செய்ய வேண்டும் என்று நினைத்தாலும் இங்கே நடைபெற்ற சம்பவங்கள், அதன் அடிப்படையிலே இந்த அவையிலிருந்த உணர்ச்சிகரமான ஒரு நிலை, இவைகளை மனதிலே கொண்டு, இதனை இன்று காலையிலேயே எழுப்பலாம் என்று எண்ணி, உங்கள் முன்னாலே நான் நின்று கொண்டு இருக்கிறேன்.

எங்கள் அருமைக்குரிய சகோதரி மாண்புமிகு உறுப்பினர் திருமதி ரமணி நல்லதம்பி அவர்களுக்கும் வாய்ப்பு பின்னர் இருக்கும், உங்கள் அனுமதியோடு என்று நான் கருதுகிறேன்.

இந்த அவையைப் பொறுத்த வரையில், எங்கள் அனைவருக்கும் பாதுகாப்புத் தருவது அந்தச் சபாநாயகர் ஆசனத்திலே அமர்ந்திருக்கிற பெருமகனார்தான். அவர்களே மிகுந்த மன நிறைவோடும், மிகுந்த பெருந்தன்மையோடும் சொன்னார்கள், எனக்கு இருக்கிற உரிமையும், பெருமையும் இங்கிருக்கிற ஒவ்வொரு உறுப்பினருக்கும் உண்டு என்று. அந்த வகையில் அவர்களுக்கு எந்தத் துன்பம் வந்தாலும் எங்களுக்கு வந்த துன்பமாக நாங்கள் எடுத்துக் கொள்கிறோம் என்பதை நேற்று எங்களுடைய உணர்வுகளை வெளியிட்டதன் மூலமாக இங்கே தெரிவித்தோம்.

இந்த அவையிலே எழுப்பப்பட்ட ஒரு பிரச்சினை தொடர்பாக நானே அதனை அவைத் தலைவர் அவர்களிடம் கேட்கின்ற ஒரு வாய்ப்புப் பெற்று, இங்கிருக்கிற மரியாதைக்குரிய மாண்புமிகு திருநாவுக்கரசு, மாண்புமிகு கே.கே.எஸ்.எஸ்.ஆர். மாண்புமிகு உகம்சந்த் ஆகியோர்கள் பற்றிய ஒரு தீர்ப்பைக் கேட்டவுடனே மாண்புமிகு சபாநாயகர் அவர்கள் மிகுந்த ஆய்வோடும் மிகுந்த சட்ட நுணுக்கத்தோடும் அவர்களை 'அன்-அட்டாச்ட்'



எவ்வகையிலும் சாராதவர்கள்,அல்லது யாரோடும் சாராதவர்கள் என்று சொல்கிற ஒரு வகையிலே இங்கே அறிவித்தார்கள். நாங்கள் அத்தனை பேர்களும் அதனை அமைதியாக இருந்து ஏற்றுக் கொண்டோம். சபாநாயகருடைய தீர்ப்பு என்பதற்காகவும் ஏற்றுக் கொண்டோம். சபாநாயகர் அவர்கள் மிகுந்த உயரிய நோக்கத்தோடு அந்தக் காரியத்தைச் செய்து இருக்கிறார்கள் என்பதற்காகவும், சட்ட திட்டங்களுக்கு உட்பட்டு செய்திருக்கிறார்கள் என்பதற்காகவும் நாங்கள் அதை ஏற்றுக் கொண்டோம். அதன் பிறகு, மறுநாள் அவர்கள் மீண்டும் ஒரு கோரிக்கையை வைத்தவுடனேயே, சபாநாயகர் அவர்கள் நீங்கள் என்னை, தன்னுடைய அறையிலே வந்து சந்திக்கலாம் என்று அவர்களுக்கு அனுமதி கொடுத்து, அதற்குப் பிறகு சொன்ன அந்தத் தீர்ப்பில், குறை சொல்லவில்லை, எங்கள் மனத்தில் இருக்கிற மனக் குறையை எடுத்துச் சொல்கிறோம். (குறுக்கீடு).

திரு. நா. கணபதி : பாயின்ட் ஆப் ஆர்டர் ........

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : தயவுசெய்து உட்காருங்கள்.

10.25 மணி

திரு. குமரி அனந்தன் : அதிலே என்னவென்றால், அவர்கள் 3 பேர்களும் எந்த வகையிலே அழைக்கப்படவேண்டும் என்பதையும் மாண்புமிகு சபாநாயகர் அவர்கள் இங்கே அறிவித்தார்கள். இதற்கு முன்பு, பாராளுமன்றத்திலே இப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் நடைபெற்று இருக்கின்றன. ஏன் என்று சொன்னால், திரு. பொம்மை அவர்கள்—24 பேர்கள் எண்ணிக்கை என்று கருதுகிறேன்—அவர்களைக் கட்சியிலிருந்து வெளியேற்றியதாகச் சொன்னார்கள். உடனே அங்கு ரபிராய் அவர்கள், மாண்புமிகு சபாநாயகர் அவர்களே ''அன்-அட்டாச்ட்'' என்று அவர்களை அழைத்தார்கள். அதற்குப் பிறகு அவர்களுக்குள்ளே நடைபெற்ற விவாதம் என்னவென்று சொன்னால், அல்லது கருத்து பரிமாற்றம் என்னவென்று சொன்னால், இந்த மூன்றில் ஒரு எண்ணிக்கை கொண்ட உறுப்பினர்களுடைய பட்டியல், சந்திரசேகர் அவர்கள் கொடுத்ததற்குப் பின்னால், பொம்மையினுடைய நடவடிக்கை வந்ததா, அல்லது முன்னால் வந்ததா என்பதைப் பற்றி ஆராய்ந்ததற்குப் பிறகு, அந்தப் பட்டியல், மூன்றில் ஒரு பகுதி பட்டியல் கொடுக்கப்பட்டதற்குப் பின்னால் 'எக்ஸ்பல்ஷன்' வந்த காரணத்தினாலே தீர்ப்பை அவர்கள் அதற்குத் தகுந்தாற்போல் எழுத வேண்டி வந்தது. இங்கே அந்தச் சூழ்நிலை எழவில்லை. ஏற்கெனவே கட்சியிலிருந்து வெளியேற்றப்பட்டவர்கள் என்பதிலே இங்கு இருக்கின்ற .... (குறுக்கீடு) குறை சொல்லவில்லை. I is a fac..

[1991 சனவரி 24

Thiru N. GANAPATHI : Mr. Deputy Speaker, Sir, you cannot go on permitting what should not be discussed in the House. That is the rule. A ruling has been given. I cannot be discussed again.

Thiru S. R. BALASUBRAMANIAM: We are not criticising the ruling.

Thiru N. GANAPATHI : You are criticising the ruling.

**மாண்புமிகு திரு. துரைமுருகன் :** துணைத் தலைவர் அவர்களே, நேற்று ஒரு பிரச்சினை எழுப்பப்பட்டு, அது இரண்டு நாட்களாக இந்த அவையிலே பேசப்பட்டு, நேற்று அதனுடைய உச்சகட்டத்திற்குச் சென்று, விரும்பத் தகாத நிகழ்ச்சி ஏற்பட்டு, பிறகு சபாநாயகர் அவர்களாலே ஒரு தீர்ப்பு உரைக்கப்பட்டு, சபாநாயகருடைய கருத்தோடு, இந்த அவையிலே இருக்கிற எல்லாக் கட்சித் தலைவர்களும் ஒன்றுபட்டு கருத்துரைத்து, அதற்குப் பிறகு அந்தப் பிரச்சினை முடிந்து போயிற்று. மீண்டும் அந்தப் பிரச்சினை எழக்கூடாது. வேறு ஏதாவது அந்தப் பிரச்சினைக்கு உட்படாத ஒரு செய்தியை கேட்க வேண்டுமானால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்கலாம். ஆனால் மாண்புமிகு உறுப்பினர் திரு. குமரி அனந்தன் அவர்கள், 'அன்-அட்டாச்ட்' மெம்பர் என்பதிலே ஆரம்பித்து தன்னுடைய விவாதத்தைத் துவக்குகிறார். அவர் 'அன்-அட்டாச்ட்' மெம்பரா, 'ஏ' யா, 'பி' யா என்ற விவகாரங்கள் முடிந்து விட்டன. மீண்டும் அதை இந்த அவையிலே கிளப்புவது இந்த அவையினுடைய மரபுக்கு உகந்தது அல்ல. எனவே தங்களுடைய தீர்ப்பை நான் எதிர்பார்க்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** அதற்கு முன்னாலே நான் ஒன்றைச் சொல்கிறேன். திரு. குமரி அனந்தன் அவர்களைப் பொறுத்த வரையில், எதிர்க் கட்சித் துணைத் தலைவர் பதவி என்பதால் மட்டுமல்ல, இந்த மன்றத்தினுடைய மூத்த உறுப்பினராகவும் இருக்கக் கூடியவர். அவருடைய உணர்வுகளுக்கு மதிப்பு அளிக்க இந்த மன்றம் கடமைப்பட்டிருக்கிறது. இருந்தபோதிலும் மாண்புமிகு சபாநாயகர் அவர்கள் வழங்கிய தீர்ப்பின் அடிப்படையில் அது குறித்து விளக்கம் கேட்பதோ, அந்தத் தீர்ப்பிற்கு உள்ளே செல்வதோ, அனுமதிக்க முடியாத ஒன்று. வேறு ஏதாவது பிரச்சினை இருந்தால், அல்லது நேற்று நடந்து முடிந்த சம்பவத்தினுடைய பின்விளைவுகள் ஏதாவது இந்த மன்றத்திற்கு அவசியம் தெரிவிக்கப்பட வேண்டுமென்று இருந்தால், மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வரப்பட வேண்டிய அவசியம் இருந்தால், நாம் அனுமதிக்கலாம் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. குமரி அனந்தன் :** நான் இங்கே சொல்ல வந்தது, நாம் எல்லோரும் ஒரு சுமுகமான நிலையிலே இருந்து, இந்த அவையை நடத்துவதற்கு எங்களாலான ஒத்துழைப்பை எப்போதும் போல் தரவேண்டுமென்று சொல்கிற உயரிய நோக்கத்தோடும், சீரிய எண்ணத்தோடும்தான் நான் சொல்கிறேனே தவிர, யாரையும் குறை சொல்கின்ற நோக்கத்தோடு அல்ல.



நான் பாராளுமன்றத்தைத் தொட்டதற்கே காரணம், இங்கு நமது சபாநாயகர் அவர்கள் சொன்னது, ஏற்கனவே யாரும் சொல்லாத ஒன்று அல்ல. இங்கே அண்ணா தி.மு.க. 2— என்று சொன்னதைப் போலே இதுவரை யாரும் சொல்லாத ஒன்றை இவர் சொல்லிவிடவில்லை. பாராளுமன்றத்திலேகூட அண்ணா தி.மு.க. 2—என்று அழைக்கப்பட்டது உண்டு ஆனால் ஒன்று என்று அழைக்கப்பட்டு, இரண்டு என்று அன்று அழைக்கப்பட்டது அங்கே 'வர்ட்டிகல் ஸ்பிளிட்'—செங்குத்தான ஒரு பிளவு, இந்தப் பெயர்கள் அங்கே வைக்கப்பட்டன. எனவே வைக்காத பெயரை வைத்து விட்டார்கள் என்றெல்லாம் நான் குறை சொல்லப்போவது இல்லை; வைத்தது வைத்தது தான். ஆனால் இங்கே நீங்கள் சொன்னதைப் போல் நேற்று நடந்த சம்பவத்தினுடைய பின் விளைவு என்று சொல்வதற்குரிய காரணம் என்னவென்று சொன்னால், இந்த இடத்திலேதான், நீங்கள் 'இரண்டு' என்று அழைத்தால் நாங்கள் பாதிக்கப்படுகிறோமே என்று அவர்கள் ஆரம்பித்தார்கள். அப்போது ஆரம்பித்ததினுடைய விளைவு என்னவென்பதைப் பற்றி நான் சொல்ல விரும்புகிறேன் என்றால், இப்போது இங்கே இரண்டு பேர் இருக்கிறார்கள்.

நம்முடைய மரியாதைக்குரிய முன்னாள் சபாநாயகர் (குறுக்கீடு) அவர்கள் அவ்வளவு தூரத்திற்கு அதிகாரம் செலுத்திய காரணத்தால் அதிலிருந்து அவரை நான் வேறுபடுத்திப் பார்க்க முடியவில்லை (சிரிப்பு) Aroma is still there. அவர்கள் இப்போது ஜானகி இராமச்சந்திரன்—(ஜா) அணி என்று அழைக்கப்படுகிறார்கள். எனவே இப்படி ஒரு உதாரணம் இங்கே இருக்கிறது.

எங்களிலே கூட இப்படி வந்தது. காங்கிரஸ் கட்சிக்குள்ளேயும் கூட பிளவு வந்தது. காங்கிரஸ் (ஆர்) காங்கிரஸ் (ஓ) என்றெல்லாம் வந்தது. நான் இங்கே இப்படிச் சொல்வது நம்முடைய வருங்காலத்திற்கும் கொஞ்சம் உதவியாக இருக்கும் என்பதற்காக நான் மீண்டும் சொல்லுகிறேன். இந்த அவையினுடைய தலைவரை மிகுந்த மரியாதையோடு நடத்தி வந்த காரணத்தினாலே, அதனாலே நமது மாண்புமிகு துணை சபாநாயகர் அவர்கள் இப்படித்தான் அது இருக்க வேண்டும் என்று சொல்லி விட்டால் அந்தத் தீர்ப்பை நாங்கள் ஏற்பதைத் தவிர வேறு வழி இருக்காது. ஆனால் இப்படியெல்லாம் உதாரணம் இருக்கிற காரணத்தினாலே அதை 'இரண்டு' என்றுதான் சொல்ல வேண்டுமா? தாங்கள் எங்கள் மனக் குறையைப் போக்குவதற்கான வேறு வகை இருக்குமானால், அந்தத் தீர்ப்பை நீங்கள் சொல்வீர்களேயானால் ஒரு சுமுகமான சூழ்நிலையை உருவாக்கலாமே என்ற எண்ணத்தின் அடிப்படையில் மனக் குறையைப் போக்குவதற்கு இடம் இருந்தால் உருவாக்கலாமே என்பதற்காக வைக்கப்படுகிற ஒரு சப்மிஷன் இது. அதைத் தவிர வேறு ஒன்றும் இல்லை.

[திரு. குமரி அனந்தன்] [1991 சனவரி 24

10-30 மணி

இரண்டாவது. நமது துணை சபாநாயகர் அவர்களே சொல்லுகிறபோது நேற்று நடந்ததின் பின்விளைவுகள் என்று சொன்னார்கள். நான் ஒன்றை இங்கே சொல்ல ஆசைப்படுகிறேன். சபாநாயகர் அவர்கள் மீது ஒரு துரும்பு விழுந்தால் கூட, அது எந்தச் சூழ்நிலையில் யாரால் எப்படி நடந்தது. என்றெல்லாம் கூட அல்ல, அது எங்கள் மீது ஒரு தூண் தாக்கியதைப் போலத்தான் நாங்கள் கருதுகிறோம். ஏனென்றால் அது தனிப்பட்ட ஒரு நபர் என்று சொல்லுகிற தமிழ்க்குடிமகனுக்கு ஏற்படுவதாக நாங்கள் கருதவில்லை. அந்த ஆசனத்திற்குக் கொடுக்கின்ற ஒரு மரியாதையை நாங்கள் மறுத்து விடவில்லை. எனவே சூழ்நிலை எப்படி என்று பார்க்கின்ற நேரத்தில், நான் ஒன்றை மட்டும் சொல்ல விரும்புகிறேன். சபாநாயகர் அவர்களுக்கு, நமது காவலர் அவர்கள்கூட எங்களையெல்லாம் சற்று கண்ணியத்தோடு நடத்த வேண்டும். அடிக்கிற அளவுக்கும், சட்டையைக் கிழிக்கிற அளவுக்கும் அவர்கள் செல்லக் கூடாது. . . . . . (குறுக்கீடுகள்).

*மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, நான் உள்ளபடியே மிகவும் வருத்தப்படுகிறேன். நேற்றையதினம் எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் இங்கு நேரிலே கண்டதை மிக வன்மையாகக் கண்டித்துப் பேசியிருக்கிறார்கள். என்னதான் தோழமைக் கூட்டு என்றாலும் கூட அதற்காக அவர்களுக்கு வக்காலத்து வாங்குவதைப் போல ஏதோ இங்கே இருக்கிற காவலர்கள் தாக்கினார்கள் என்பதுபோல இன்று புதியதாக ஒரு பிரச்சினையைச் சொல்லி பத்திரிகைகளுக்கு மீண்டும் ஒரு செய்தியைத் தந்து, இந்த அவையில் என்ன காரணத்தினாலோ, இவைகள் எல்லாம் நடைபெற்றன என்பதைப் போன்ற ஒரு சூழலை உருவாக்குவது நல்லதாக எனக்குப் படவில்லை. நான் நம்முடைய எதிர்க்கட்சித் துணைத் தலைவரிடம் இருந்து இப்படிப்பட்ட ஒரு அணுகு முறையை நிச்சயமாக எதிர்பார்க்கவில்லை. அதற்காக வருந்துகிறேன்.

திரு. குமரி அனந்தன் : இந்த மைக் சில நேரங்களிலே கொடுப்பது இல்லை. சிலருக்கு வருகிறது. சிலருக்கு வரமாட்டேன் என்கிறது. உங்களுக்கே வரவில்லை என்றால் எங்களுக்கும் வரவில்லை என்று சொல்வதை விட உங்களுக்கும் வந்து எங்களுக்கும் வரலாம் என்றால் மகிழ்ச்சிதான்.

மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, நான் இப்போது சொல்லுகிற நேரத்தில் ஏதோ நான் இட்டுக் கட்டிச் சொல்வதாகவோ என்னவோ அவர்கள் மனத்தில் குறையாக இருந்த காரணத்தினால் சொல்லி விட்டார்கள். நான் சொல்வது—இன்று காலையிலே வெளியே திரு. இராதா வந்து என்னைப் பார்த்தார்கள். அடிபட்டதைச் சொன்னார்கள். அதற்காகச் சொன்னேன்.



1991 சனவரி 24] [திரு. குமரி அனந்தன்]

சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையில் சொன்னேன். சாதாரணமாகச் சொன்னேன். நமது முதல்வர் அவர்கள் அதை உணர்ந்து கொள்வார்கள் என்பதற்காகச் சொன்னேன். (குறுக்கீடு) அதையெல்லாம் நேற்றுப் பேசி விட்டோம் அல்லவா . . . .

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, இங்கே இருக்கிற அவை உறுப்பினர்களுக்கு அவையினுடைய மரபையும் அதே நேரத்தில் சபாநாயகர் அவர்களையும் காப்பாற்ற வேண்டும் என்ற உரிமையும், உணர்வும் எந்த அளவுக்கு இருக்கிறதோ, அதைப்போல காவலர்களுக்கும் சபாநாயகர் அவர்களைக் காப்பாற்ற வேண்டும் என்கிற அந்த உணர்வும் உண்டு. கடமையும் உண்டு. அவர்களாலேயே காப்பாற்ற முடியாத ஒரு சூழ்நிலை ஏற்பட்டு சபாநாயகர் அவர்களே தாக்கப்படும்போது காவலர்கள் வேறு எந்த விதத்திலே நடந்து கொள்ள வேண்டும் என்று நாம் எதிர்பார்க்க முடியும்?

திரு. குமரி அனந்தன்: தலைவர் அவர்களே, சபாநாயகர் அவர்களுடைய தீர்ப்பில் இந்த செஷன் மட்டும் அல்லாது வரவு-செலவுக் கூட்டத்திலேயும் கலந்து கொள்ள வேண்டாம் என்று அறிவித்திருப்பது, நேற்று வரை பிரதான எதிர்க்கட்சியாக இருந்து இன்று கூட வித்தியாசம் அதிக அளவில் இல்லாத நிலையிலே இருந்து கொண்டிருக்கிற ஒரு கட்சி முழுவதுமாகக் கலந்து கொள்ளக் கூடாது என்ற சூழ்நிலையிலே அவையை நடத்துவது என்பது ஒரு மனக் குறையாகத்தான் இருக்கிறது என்பதை நான் ஒரு சமர்ப்பணமாகத்தான் சொல்ல விரும்புகிறேன். எனவே, உங்கள் முன்னால் நான் வைக்க விரும்புவது, நான் முதலிலே சொன்னதைப் போல, அதிமுக—2 என்று சொல்வதிலே ஒரு மாற்றத்தைச் செய்து, அதிலே இந்தத் தண்டனையின் அளவையும் குறைத்து நீங்கள் செய்வீர்களேயானால், நான் எதிர்க்கட்சித் துணைத் தலைவர் என்ற முறையில் மட்டும் அல்லாமல் சட்டமன்ற சாதாரண உறுப்பினர் என்ற முறையிலே கூட இந்தச சமர்ப்பணத்தை மதிப்பிற்குரிய தலைவருக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். அதற்கு நீங்கள் இப்போதே முடிவு செய்தாலும் நாங்கள் மகிழ்வோம் அல்லது . . . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : நீங்கள் உட்காருங்கள். நான் சொல்லி விடுகிறேன் (குறுக்கீடு).

நம்முடைய எதிர்க்கட்சித் துணைத் தலைவர், மாண்புமிகு முதல்வர் அவர்கள் கூறியது போல் நேற்றையதினம் நடந்த சம்பவத்தைப் பற்றி மிக வன்மையாக அவருக்கே உரிய தமிழ் இலக்கியத் திறமையோடு, நயத்தோடு தெரிவித்தார்கள். இன்றைக்கு, நேற்று வழங்கிய தீர்ப்பை மறு ஆய்வு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்டார். இது போன்ற முன் உதாரணங்கள் கிடையாது. அதிலும் குறிப்பாக இது போன்ற சம்பவங்களுக்கு '' Reconsider '' என்று கேட்டுக் கொள்வதே அவர்

களுடைய seniority-க்கு, தகுதிக்கு எந்த வகையில் பொருந்தும் என்பதைத் தெரிவித்துக் கொள்வதோடு வழங்கிய தீர்ப்பினை எந்த நிலையிலும் மறு ஆய்வுக்கு எடுத்துக் கொள்ள முடியாது என்பதை நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அது மட்டுமல்லாமல், நேற்று அவர்களுடைய கட்சியின் தலைவர் களே, மன்ற உறுப்பினர்களே செல்லக் கூடாது என்று சொல்லி விட்ட பிறகு நாம் என்ன செய்ய முடியும் (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு).

10-35 மணி

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, அவர்களுடைய கட்சியின் பொதுச் செயலாளரே ஒரு அறிக்கை விடுத்து, இனி மேல் சட்டமன்றத்திற்கே செல்வதில்லை என்று அறிவித்து விட்டார்கள். நான் இந்த நேரத்தில் சற்று வாதம் நீளும் என்றாலும் கூட பொறுத்துக் கொள்ள வேண்டும் என்ற அந்தக் கோரிக்கையோடு கேட்க விரும்புகிறேன். இந்த இரண்டு ஆண்டுக் காலத்தில் எதிர்க்கட்சியாகச் செயல்பட்ட அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம், அதனுடைய எதிர்க்கட்சித் தலைவர் — முதலில் இருந்த தலைவர், பிறகு வந்த தலைவர் யாராவது இந்த அவையில் கவர்னர் உரை விவாதத்திலோ, பட்ஜெட் விவாதத்திலோ முழு நேரம் ஒரு பேச்சைப் பேசி, மக்களுக்குத் தொடர்புடைய பிரச்சனைகளை இங்கே ஏதாவது பேசியிருக்கிறார்களா என்று நான் நம்முடைய எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

நான் காங்கிரஸ் கட்சியை இப்பொழுது புகழ்வது அல்லது வேறு கட்சிகளைப் புகழ்வது அவர்களைக் கார்னர் பண்ண வேண்டும் என்பதற்காக அல்ல. உங்களுடைய கட்சிகளின் சார்பாக எவ்வளவு கருத்துக்களை எடுத்து வைத்திருக்கிறீர்கள். அவை நாங்கள் முழுமையாக ஏற்றுக் கொள்ளத் தகாத கருத்துக்களாக இருக்கலாம்; அல்லது நாங்கள் சொல்கின்ற கருத்துக்கள் உங்களுக்கு ஏற்றுக் கொள்ளத்தகாத கருத்துக்களாக இருந்திருக்கலாம். இருந்தாலும் கூட கம்யூனிஸ்ட் கட்சியானாலும் அல்லது ஜனதா தளமானாலும் சில நேரங்களில் ஆளும் கட்சிக்கு மாறுபட்ட கருத்துக்களைக் கூட எடுத்து வைத்திருக்கிறார்கள். சில நேரங்களில் தங்களுடைய கருத்து வேறுபாடுகளை எல்லாம் எடுத்துக் கூறியிருக்கிறார்கள். அதைப் போல காங்கிரஸ் கட்சியின் சார்பில் எடுத்துக் கூறியிருக்கிறீர்கள். அது போல ஏதாவது உருப்படியான கருத்துக்களை, மக்களுக்குத் தேவையான கருத்துக்களை அல்லது தொகுதி மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு வந்தார்களே, அந்தத் தொகுதி மக்களுக்குத் தேவையான கருத்துக்களை, அந்தக் கட்சியிலே உள்ள ஒரு சில உறுப்பினர்களைத் தவிர, எதிர்க்கட்சித் தலைவராக இருந்தவர்கள் என்றைக்காவது எடுத்து வைத்திருக்கிறார்களா? வந்தால்—அதுவும் கேள்வி நேரத்தில் பெரும்பாலும் வருவதில்லை. கேள்வி





நேரம் முடிகிற நேரத்தில் திடீரென்று அமெரிக்கப்படை விமானங்கள் ஈராக்கிலே நுழைந்ததே அதைப்போல (சிரிப்பு) படபடவென்று நுழைய வேண்டியது, நுழைந்தவுடனே ஒரு அமளியை ஏற்படுத்த வேண்டியது. ஒரு மணி நேரம், இரண்டு மணி நேரம் சட்டமன்றம் நடக்காமல் இருக்கிற ஒரு சூழ்நிலையை ஏற்படுத்த வேண்டியது, இவைகள் எல்லாம் முறைதானா? இப்படி நாங்கள் செய்ய மாட்டோம்; செய்ததற்காக நாங்கள் மன்னிப்புக் கேட்டுக்கொள்கிறோம் என்று அவர்கள் எழுதித் தருவார்களானால், அறிக்கை விடுவார்களானால், அதற்குப் பிறகு, எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களுடைய யோசனையை நாம் ஆராய்வோம்.

திரு. குமரி அனந்தன் : கனம் சபாநாயகர் அவர்களே, நான் இங்கே எதிர்க்கட்சித் துணைத் தலைவர் என்பது மட்டுமல்லாமல், ஒரு சீனியர் மெம்பரே இதைக் கேட்கலாமா என்று தாங்கள் சொன்னீர்கள், முதல் நாள் நமக்கு ''அன்அட்டாச்டு'' என்று சொன்னதை மறுபரிசீலனை செய்து நல்லது வழங்கியதைப் போலே இதையும் வழங்குவீர்கள் என்று எதிர்பார்த்து நான் கேட்டேனே தவிர வேறு ஒன்றும் இல்லை. தாங்கள் அதை எங்களுக்குத் திருப்பிப் பரிசீலனையே செய்ய முடியாது என்றும் அவர்களுக்குக் கொடுத்த அந்தக் கடுமையான தண்டனையைக் குறைக்க முடியாது என்றும் சொன்னதற்கு நம் முதல்வர் அவர்கள் மறுமொழி நமக்குக் கொடுத்தார்கள். ஆனால் நாங்கள் இதிலே திருப்தி அடையவில்லை. எனவே தாங்கள் அறையிலே கூட உங்களை மீண்டும் வந்து சந்திப்பதற்கு, நீங்கள் அனுமதி கொடுத்தால் மீண்டும் வந்து உங்களிடம் எங்களுடைய கருத்துக்களை எடுத்து வைத்து சமர்ப்பிப்பதற்கு தயாராக இருக்கிறோம். அதற்கு நீங்கள் வாய்ப்பு அளித்தால் நாங்கள் தயாராக இருக்கிறோம். அப்படி இல்லையென்று சொன்னால், அப்படி ஒரு வாய்ப்புக் கொடுத்து எங்களுடைய மனக்குறையைப் போக்குகின்ற அளவுக்கு நிறைவான ஒரு பதில் கொடுப்பது வரை நாங்கள் இந்த அவையினுடைய நடவடிக்கையில் கலந்துகொள்ள முடியாத ஒரு சூழ்நிலை எங்களுக்கும் இருக்கிறது. எங்கள் கட்சித் தலைவரைக் கலந்து கொண்டு அவர்கள் எப்போது சொல்கிறார்களோ அப்பொழுது தான் நாங்கள் மீண்டும் கலந்து கொள்கின்ற நிலை ஏற்படும். அந்த நிலை ஏற்படாத அளவுக்கு மீண்டும் நான் சொல்கிறேன். தயவு செய்து இதை ஒரு சுமுகமான நிலைக்கு கொண்டு வருவதற்கு மீண்டும் பரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டு ... ... ... ... ...

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : நீங்களும் ஒரு முடிவு எடுத்துக்கொண்டுதான் வந்திருப்பதாகத் தெரிகிறது. (சிரிப்பு) வேறு வழியில்லை, என்ன செய்வது? நான் இல்லை என்று கூறவில்லை. நான் அப்பொழுதே மிக்சாதாரணமான ஒரு நிபந்தனையை தான் சொன்னேன். அதை

அவர்கள் ஏற்றுக்கொள்ளலாம். வழக்கமாக சட்டமன்றத்திற்கு வந்தால் ஒவ்வொரு நாளும் ஒரு தகராறு செய்து சட்டமன்றம் நடக்கவிடாமல் ஒரு மணி நேரம், இரண்டு மணி நேரம்—வெளியேறுவது வேறு, வெளியேற்றப்படுகிற சூழ்நிலையை தினம் தினம் உண்டாக்கிக் கொண்டிருப்பது முறை தானா? அதற்கு அவர்கள் இனிமேல் இப்படிச் செய்ய மாட்டோம் என்ற உத்திரவாதம் அளிப்பார்களா? இதுவரையில் 2 தடவை, 3 தடவை நம்முடைய இலக்கியச் செல்வர் அவர்களிடத்திலே சொல்லியிருக்கிறேன். நீங்கள் போய் அவர்களை சமாதானம் செய்யுங்கள், இப்படிச் செய்ய மாட்டோம் என்ற உறுதியை வாங்கினால் அவர்கள் அனுமதிக்கப்படலாம் என்று சொன்னேன். ஆனால் நம்முடைய எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் தாழ்வாரம் வரையிலே சென்று இங்கே திரும்பி வந்து, உதட்டைப் பிதுக்கி, அது ஒன்றும் முடியவில்லை என்று சொன்னார்களே தவிர, அவர்களுடைய கோரிக்கையை அவர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. அவர்களுடைய வேண்டுகோளை அவர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை.

10-40 மணி

இங்கே வந்து அமைதியான முறையில், அதற்காகக் கூச்சல் குழப்பமே இல்லாமல் சட்டசபையை நடத்த வேண்டும் என்பது முடியாத காரியம், சில நேரங்களில் உணர்ச்சி வயப்பட்டு நாம் உரத்த குரலிலே பேசுவது, கடுமையான சொற்களைப் பயன்படுத்துவது, சில சொற்களைப் பாராளுமன்ற முறைக்கு இயலாத சொற்களை அவைக் குறிப்பிலிருந்து எடுப்பது இவைகள் எல்லாம் அவையிலுள்ள அன்றாடம் தோன்றி மறையும் நடைமுறைகள்தான். அதற்காக அதுவே தான் நடைமுறைகளாக ஆகிவிடுமானால் நாம் மக்கள் பிரச்சினைகளை—நேற்றையதினம் திரு. லத்தீப் அவர்கள் இங்கே எடுத்துக் காட்டியதுபோல்-அவர்களுடைய பணத்தைக் கொண்டு நடைபெறுகின்ற மாமன்றத்தில், அவர்களுடைய பணத்தை நாம் விரயம் ஆக்கிக்கொண்டிருக்கிறோம் என்ற குற்றச்சாட்டுகளுக்கு, ஆளுங்கட்சி, எதிர்க்கட்சி மற்ற எல்லாக் கட்சிகளும் ஆளாகி விடக்கூடும் என்பதற்காகத்தான் இதைச் சொல்கிறேனே அல்லாமல், வேறு அல்ல. அவர்கள் ஒரு நிபந்தனைக்கு உட்பட்டு வரத் தயாராக இருந்தால் எங்களுக்கு எந்த விதமான மறுப்பும் இல்லை.

திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,................

திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இங்கே நம்முடைய முதலமைச்சர் அவர்கள் சொல்லுவதை நாம் எல்லோரும் கேட்டுக்கொண்டு இருந்த நேரத்தில் அவர்கள் ஒன்றைக் குறிப்பிட்டுச் சொன்னார்கள். நீங்களும் ஒரு முடிவு எடுத்து விட்டுத் தான் வந்து இருப்பீர்கள்



என்று சொன்னார்கள். நான் உண்மையிலேயே சொல்கிறேன், நேற்று இருந்த ஒரு சூழ்நிலையினால் தான் நாங்கள் பேசவில்லையே தவிர, இல்லை என்று சொன்னால் நேற்றே கூட இந்தக் கருத்தை நான் சொல்லியிருப்பேன் என்பது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும் தெரியும். அதனாலே பரிசீலித்து நீங்கள் ஏற்றுக்கொள்வீர்கள் என்ற நம்பிக்கை எங்களுக்கு நேற்றைக்கு இருந்தது. அதனால் தான் திருமதி ரமணி நல்லதம்பி அவர்களுக்குக் கூட பின்னாலே பேசுவதற்கு உங்களுக்கு வாய்ப்பு கிடைக்கும் என்று நான் சொன்னேன். எனவே, அந்த நோக்கத்தோடு வரவில்லை. ஆனாலும் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் (2) என்ற பெயர் ஒன்று; கடுமையான அந்தத் தண்டனையைக் குறைப்பது ஒன்று; இந்த இரண்டையும் நீங்கள் பரிசீலிக்க வேண்டும் என்ற காரணத்திற்காக நான் எற்கனவே சொன்ன அந்த காரணங்களை வைத்துக்கொண்டு அறையில் கூட உங்களைச் சந்திக்க தயாராக இருக்கிறேன். இல்லை என்றால் எங்கள் தலைவர் அவர்கள் சொல்லும் வரை நாங்கள் இந்த அவையினுடைய நடவடிக்கையிலிருந்து வெளியேறுவதற்கு நீங்கள் அனுமதிக்க வேண்டும் என்று கேட்டு நாங்கள் வருத்தத்தோடு வெளியேறுகிறோம்.

(இந்திய தேசியக் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்தனர்.)

திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு சட்டமன்ற எதிர்க்கட்சியினுடைய துணைத் தலைவர் அவர்கள் எடுத்து வைத்திருக்கின்ற ஒரு சில கருத்துக்களை ஒட்டி அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய சார்பாக ஒரு சில கருத்துக்களை நான் சொல்ல விரும்புகிறேன். எங்களுடைய உட்கட்சி விவகாரத்திலே இந்த அளவுக்குக் காங்கிரஸ் கட்சி அக்கறை எடுத்துக் கொண்டிருப்பதற்கு நான் நன்றி சொல்வதா அல்லது அவர்கள் செய்து கொண்டிருக்கின்ற ஒரு ஒப்பந்தத்தின் காரணமாக இப்படிப்பட்ட சூழ்நிலையில் இன்றைக்கு நிர்பந்தத்திற்கு உட்பட்டு இப்படிப்பட்ட ஒரு நிலையை எடுத்து இருக்கிறார்கள் என்று சொல்வதா? ஏன் என்று சொன்னால் ஏற்கனவே அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் 1988 ஆம் ஆண்டு பிளவுபட்ட நேரத்திலே அன்றைய தினம் இருந்த மாண்புமிகு சபாநாயகர் அருமைச் சகோதரர் திரு. பி. எச். பாண்டியன் அவர்களிடம் இந்த அணியானது எப்படி எல்லாம் அழைக்கப்பட வேண்டும் என்ற முறையிலே அன்றைக்கு மனுக்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அன்றைக்கு One third இல்லாத சூழ்நிலையில் கூட எங்களை ஒரு அணியாக நீங்கள் ஏற்றுக்கொள்ளவேண்டும் என்றுதான் செல்வி ஜெயலலிதா அவர்கள் கோரிக்கை வைத்து இருக்கிறார்கள்.

பாராளுமன்ற நடைமுறையை ஏற்கனவே நீங்கள் சுட்டிக் காட்டியிருக்கிறீர்கள். அந்த நடைமுறை விதிகளின்படி இன்றைக்கு எங்களுக்கு நீங்கள் தீர்ப்பை வழங்கியிருக்கிறீர்கள். நிர்பந்தம் பலருக்கு ஏற்படலாம், அது இந்த மாமன்றத்திற்கு ஏற்படக்கூடாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இதைப் போல் உட்கட்சி விவகாரத்தில் மற்ற கட்சியினர் தலையிடுவது உண்டு என்று சொன்னால் மற்றவர்கள் மற்ற கட்சியினுடைய உட்கட்சி விவகாரத்திலே தலையிட வேண்டி வரும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களும், அவர்களுடைய கட்சியினரும் வெளிநடப்புச் செய்திருக்கிறார்கள். ஆனால் வெளிநடப்புச் செய்வதற்கு முன்பு நான் அவர்களுக்கு முன் வைத்த வேண்டுகோளை அவர்கள் செவி மடுத்ததாகத் தெரியவில்லை. செவி மடுக்க ஒருவர் மட்டும் அங்கே நிற்கிறார். (பலத்த சிரிப்பு) நான் தண்டனையைக் குறைப்பதைப் பற்றியோ, நாளைக்கே கூட அவர்கள் அவைக்கு வரலாம் என்பதைப் பற்றியோ கூட பிரச்சினை எதுவும் இல்லை. ஆனால் நான் எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களை மிகுந்த பணிவன்போடு கேட்டுக் கொண்டதெல்லாம், இனிமேல் இப்படிப்பட்ட நிலைகள் இந்த அவையிலே நடக்காது என்பதற்கு உத்தரவாதம் அளிக்க முடியுமா என்பதுதான். ஏற்கனவே பலமுறை அவர் முயன்றார் இப்படி உத்தரவாதம் அளிப்பதற்கு. அவர்களிடத்திலே இவர் பேசினார். அவர்கள் முடியாது என்று மறுத்ததை இந்த அவையிலே வந்து என்னிடத்திலே சொல்லியிருக்கிறார். அதையும் அவருக்கு நேராகவே இப்போது நான் சொன்னேன். அதை அவர் மறுக்கவில்லை என்பதையும் நீங்கள் அனைவரும் நன்றாக அறிவீர்கள். நான் இங்கே வைத்த அந்த நிபந்தனைகள் என்ன என்பதும் இந்த அவைக்கு நன்றாகத் தெரியும்.

**10.45 மணி**

நேற்றைய தினம் நடைபெற்ற சம்பவத்திற்கு அவர்கள் மன்னிப்போ அல்லது மன்னிப்பு என்பது பெரிய வார்த்தையாக இருந்தால் வருத்தமோ தெரிவித்துக் கொள்ள வேண்டும் என்பது ஒன்றாகும். அதையும் நான் முதலிலே சொன்னேன். அடுத்தபடியாக, இந்த இரண்டு ஆண்டுக் காலத்திலே மக்கள் பிரச்சினைகளைப் பேசுவதை விட்டுவிட்டு தினம் தினம் குழப்பம் ஏற்படுத்துவதையே தங்களுடைய வாடிக்கையாகக் கொண்டிருக்கின்றார்கள். அதை விடுத்து இந்த அவை நல்லமுறையில், அமைதியாக நடைபெறுவதற்குக் கூடுமான வரையில்—சில நேரங்களில் அமைதி இழக்கக் கூடும் என்பதைச் சுட்டிக்காட்டி





னேன்—தாங்கள் ஒத்துழைக்க முடியும் என்பதையும் அவர்கள் தெரிவிக்க வேண்டும். அதற்கு நம்முடைய எதிர்க்கட்சித் துணைத் தலைவர் குமரி அனந்தன் அவர்கள் உறுதி வழங்குவாரேயானால் இந்தப் பிரச்சினையைப் பற்றித் தாங்கள் பேசலாம். அவர்கள் மீது விதிக்கப்பட்ட தண்டனையைக் குறைப்பதில் எந்தவிதமான மறுப்பும் இல்லை என்பதைக்கூட சொல்லியிருக்கிறேன். அதை அவர்கள் கேட்கவில்லை, வெளியேறி விட்டார்கள். இருந்தாலும் எனக்கு நம்பிக்கை இருக்கிறது, வெளியேறியவர்கள் திரும்பி வருவார்கள் என்று. ஏனென்றால், குமரி அனந்தன் அவர்கள் தன்னுடைய கைக்குட்டையை இங்கே விட்டுச் சென்று இருக்கிறார். எனவே திரும்பி வருவார்கள் என்று நான் நம்புகிறேன். இவர்கள் பிடிவாதமாக இருந்தாலும், அவர்களுடைய தலைவர் என்னுடைய அருமை நண்பர் மூப்பனார் அவர்கள், எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், அவர்களுக்கு அறிவுரை கூறி, தொடர்ந்து அவர்கள் இந்த அவையிலே பணியாற்ற வரவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கின்றேன்.

**திரு. பி. எச். பாண்டியன் :** மாண்புமிகு பேரவைத் துணைத்
தலைவர் அவர்களே, நம்முடைய எதிர்க்கட்சித் துணைத்
தலைவர் அவர்கள் சொல்லும் போது, அன்றைக்கு வர்ட்டிகல்
ஸ்பிளிட், இன்றைக்கு வேறு என்று சொன்னார்கள். ஒரு
உண்மையான நிலை என்னவென்றால், ஒரு முறை இங்கேயே
சட்டமன்றத்தில் நான் சொல்லும்போது தேர்தல் கமிஷனுக்கு,
இரட்டை இலைச் சின்னத்தை வாங்குவதற்கு உண்மையான
பொதுக்குழு உறுப்பினர்களுடைய பெயர்களையெல்லாம்
தவிர்த்துவிட்டு இன்றைக்கு இருக்கின்றார்கள் அப்பாவிகள்,
அவர்களெல்லாம் பொதுக்குழுவிலே உறுப்பினர்களாக
இருக்கின்றோம் என்று எண்ணிக் கொண்டிருக்கிறார்கள். அவர்
களெல்லாம் பொதுக்குழு உறுப்பினர்களாக இல்லை. கட்சிக்
கும் சம்பந்தம் இல்லாதவர்கள், அவர்களுடைய பெயர்களை
யெல்லாம் அதிலே எழுதி தேர்தல் கமிஷனில், இல்லாத
பெயர்களைச் சேர்த்து அந்த இரட்டை இலைச்சின்னத்தை அன்
றைக்கே வாங்கினார்கள். தேர்தல் கமிஷனை ஏமாற்றினார்
கள் என்று அன்றைக்கே நான் சொன்னேன். ஆகவே,
இணைந்தோம் என்று சொல்லக் கூடியவர்கள் அவர்கள்
ஏற்கனவே இருந்த பதவிகளில் போய் அங்கே இணையவில்லை.
அதிலும் இரண்டு பேர், ப.உ.ச. அவர்கள் பொதுச் செய
லாளராக இருந்தவர் அங்கே வந்துவிட்டார்; இராகவானந்தம்,
பொதுச் செயலாளராக இருந்தவர் அங்கே வந்துவிட்டார். 97
எம்.எல்.ஏ.-க்கள் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்
னேற்றக் கழக (ஜானகி எம்.ஜி.ஆர்.) அணியிலே இருந்தவர்கள்
பலபேர் பொதுக்குழு உறுப்பினர்களாக புரட்சித் தலைவர்
எம்.ஜி.ஆர். அவர்கள் இருந்தபொழுது இருந்தார்கள். இன்
றைக்கு அவர்களெல்லாம் பொதுக்குழுவில் உறுப்பினர்
களாக இல்லை. காரணம், இப்படி ஒரு நிலை வரும், இவர்கள்
தங்களை எதிர்க்க வந்தால், தங்களுடைய இரட்டை இலைச்

[திரு. பி. எச். பாண்டியன்] [1991 சனவரி 24

சின்னத்தை முடக்க வந்தால், தேர்தல் கமிஷனில் இவர்களெல்லாம் பொதுக்குழு உறுப்பினர்கள் அல்ல என்று சொல்லி நிலை நிறுத்துவதற்கு ஒரு பெரிய மோசடியே தேர்தல் கமிஷனில் நடைபெற்றிருக்கிறது என்று நான்கூட அன்றைக்குச் சொன்னேன். இரண்டாம் சனிக்கிழமை அன்று தேர்தல் கமிஷன் திறக்கப்பட்டு இவைகளெல்லாம் வாங்கப்பட்டு அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத் தொண்டர்களெல்லாம் ஏமாற்றப்பட்டிருக்கிறார்கள் அங்குபோய்ச் சேர்ந்தவர்களெல்லாம் இன்றைக்கு ஏமாந்து, ஏதோ பிற்காலத்தில் ஒரு வாழ்வு கிடைக்கும், ஏதோ இழந்த பதவிகளை எப்படியாவது பெற்றுவிடலாம் என்றுதான் அவர்கள் இருந்து கொண்டு இருக்கின்றார்கள் பாவம் அந்த அப்பாவிகள்.

(ஆ) விவசாயிகள் மின் கட்டண பாக்கிகளைச் செலுத்துவதற்குக் கால அவகாசம் அளிக்க வேண்டியதன் அவசியம் குறித்து.

திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு பேரவையினுடைய துணைத் தலைவர் அவர்களே, இந்த நேரத்தில் நான் மாண்புமிகு மின் துறை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு ஒரு செய்தியைச் சொல்ல விரும்புகிறேன். ஏற்கனவே தமிழகத்திலே விவசாயிகள் பல நேரங்களிலே மின்சார பம்ப் செட்டுகளுக்கு உண்டான மின் கட்டணத்தைக் கட்டாதவர்களுக்கு சென்ற அரசு அந்த மின் இணைப்பைத் துண்டித்து விட்டார்கள். அவர்கள் மீண்டும் மின் இணைப்பு பெறுவதற்கு இந்த அரசு, நம்முடைய மாண்புமிகு கலைஞர் அவர்களுடைய தலைமையிலே அமைந்த இந்த அரசு, இரண்டு முறை 30—9—1990 வரையிலே பாக்கியிருக்கின்ற மின் கட்டணத்தைக்கட்டி மீண்டும் மின் இணைப்புப் பெறலாம் என்ற ஒரு சலுகையை அறிவித்தது. அந்த அடிப்படையில் சிலபேர் கட்டி பெற்றார்கள். இன்றைய தினம் நமது மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள், இலவச மின்சாரம் என்று விவசாயிகளுக்கு ஒரு பெரும் சலுகையை அறிவித்திருக்கின்ற இந்த நேரத்தில், பல ஏழை விவசாயிகள் ஏற்கெனவே மின்இணைப்பைத் துண்டித்துவிட்டிருந்தாலும் அவர்கள் மீண்டும் அந்தப் பாக்கிக் கட்டணத்தைக் கட்டி மின்னிணைப்புப் பெறுவதற்குண்டான நிலையில் இன்றையதினம் எண்ணுகிறார்கள். என்னைப்போன்ற சட்டமன்ற உறுப்பினர்களை அணுகுகிறார்கள். அதை மனதிலே நிறுத்தி நமது மாண்புமிகு பொதுப்பணி—மின்துறை அமைச்சர் அவர்கள் வருகிற 30–9–1991 தேதி வரையிலே அதற்குக் கால அவகாசம் தந்து, அது வரையில் பாக்கிக் கட்டணத்தைக் கட்டுகின்ற விவசாயிகள் மின்னிணைப்புப் பெறலாம் என்று சலுகையை அறிவிக்கவேண்டும். அறிவிப்பார்களா என்று நான் அறிய விரும்புகிறேன், நன்றி, வணக்கம்.



[1991 சனவரி 24] 10–50 மணி

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவரவர்களே, விவசாயிகள்—மின் கட்டணத்தைக் கட்டாத விவசாயிகளுடைய பம்பு செட்டுகளின் மின்னிணைப்பு துண்டிக்கப்பட்டு விடுகிறது. அதன் பிறகு மின் கம்பிகள், கம்பங்கள் எல்லாவற்றையும்கூட அகற்றி விடுவார்கள். அப்படிப்பட்ட ஒரு நிலைமை தமிழகத்திலே இருந்தது.

1—4—1979 வரையில் இப்படி மின்னிணைப்பு துண்டிக்கப்பட்ட விவசாயிகளுடைய எண்ணிக்கை சுமார் 36,500. மீண்டும் கலைஞருடைய ஆட்சி தமிழகத்திலே அமைந்த பிறகு ஒரு முடிவெடுத்து, அவர்கள் பாக்கியிருக்கிற தொகையைக் கட்டிவிட்டால் அவர்களுக்கு மின்னிணைப்பு கொடுத்துவிடலாம், ஏனென்றால், துண்டித்து கம்பங்களை அகற்றிவிட்டால் அவர்களுக்கு மறுபடியும் சீனியாரிட்டி வராமல் போய்விடும். எனவே, அந்த சீனியாரிட்டியிலிருந்து அவர்களைக் காப்பதற்காக ஒரு வழிவகை செய்து 31–3–1990 முடிய— அந்த 31—3—1990-க்குள் தங்கள் பாக்கிகளைக் கட்டிவிட்டால் அவர்களுக்கு மின்னிணைப்பு தரப்படும் என்ற செய்தியைக் கலைஞர் அரசு அறிவித்தது. அதன்படி 10,328 பேர்கள் கட்டினார்கள். இருந்தாலும் பலர் கட்டவில்லை.

மீண்டும், மாண்புமிகு உறுப்பினர் திருவேங்கடம் சொன்னதைப்போல, அவர்களுக்குக் கால நீட்டிப்புத் தர வேண்டுமென்று கேட்டார்கள். சென்ற ஆண்டு நிதிநிலை தொடர் கட்டத்தில் மின் இலாக்காவின் மீது நடைபெற்ற விவாதத்தின் பொழுது அறிவித்தேன். 30–9–1990-க்குள் அவர்கள் தங்கள் பாக்கிகளைக் கட்டிவிட்டால், உடனடியாக மின்னிணைப்பு தரப்படும் என்று அறிவித்தேன். அதன் அடிப்படையில் 2,233 பேர்கள்தான் கட்டினார்கள். மீதி இருப்பவர்கள் அதைப் பற்றிக் கவலைப்படக் கூட இல்லை. காரணம் மின் கட்டணத்தைக் கட்ட வேண்டுமே என்கிற நிலைமை இருந்தது.

மாண்புமிகு முதல்வரவர்கள் விவசாயிகளுக்குப் பம்பு செட்டுக்கு இலவச மின்சாரத்தை அறிவித்த காரணத்தால், எப்படியும் இந்த ஒரிஜினலைக் காப்பாற்றிக் கொள்ள வேண்டுமென்பதில் இப்பொழுது பல விவசாயிகள் முன் வந்திருக்கிறார்கள். அரசுக்கு ஏராளமான மனுக்கள் வந்திருக்கின்றன. அதைத்தான் மாண்புமிகு உறுப்பினர் திருவேங்கடம் அவர்கள் சுட்டிக்காட்டினார்கள். எனவே அரசு ஆய்ந்து, மீண்டும் அவர்களுக்குக் கால நீட்டிப்புத் தரலாமா என்பதை மாண்புமிகு முதல்வரவர்களோடு நான் கலந்து பேசினேன். முதல்வர் அவர்களும், அவர்கள் மீதி எவ்வளவு பேர்கள் இருப்பார்கள் என்று கேட்டார்கள். கிட்டத்தட்ட மீதி 24,000 பேர்கள் இப்படிப்பட்ட விவசாயிகள் இருக்கிறார்கள் என்று தெரிவித்தேன். எனவே, மீண்டும் ஒரு தவணை அவர்

[திரு. துரைமுருகன்] [1991 சனவரி 24

களுக்குத் தரலாம் என்று முதல்வரவர்கள் எனக்கு அறிவித்ததன் அடிப்படையில் 30-6-1991 வரையில் அந்தக் கால நீட்டிப்பு தரப்பட்டிருக்கிறது. எனவே, இந்தக் கால நீட்டிப்பை விவசாயிகள் பயன்படுத்திக்கொண்டு, உடனடியாக அந்த நிலுவைத் தொகையை, பாக்கியைக் கட்டி விட வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். அதற்கு மேற்கொண்டும் கால நீட்டிப்பு தர முடியாத நிலைமை. எனவே, இந்தக் காலத்திற்குள் 30—6—1991-க்குள் அவர்கள் தங்கள் பாக்கியைக் கட்டிவிட்டு, மின்னிணைப்பைப் பெற்றுக் கொள்ளலாம் என்று நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

10–55 மணி.

(இ) பி. அண்ட் சி. ஆலையை மூடிவிடுவதாக நிர்வாகம் அறிவித்துள்ளதால் தொழிலாளர்களுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்பு குறித்து.

*திரு. உ. ரா. வரதராசன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சென்னை நகரிலே 8,000 தொழிலாளர்களின் குடும்பங்கள் பாதிக்கப்படக்கூடிய, பி. அண்ட் சி. (பின்னி) ஆலை மூடல் பிரச்சினையைப் பற்றி மாண்புமிகு முதலமைச்சர் மற்றும் தொழிலாளர் நல அமைச்சர் ஆகியோருடைய கவனத்திற்குக் கொண்டுவர நான் விழைகிறேன். கடந்த காலங்களில் மூன்று முறை மூடித் திறக்கப்பட்ட ஆலை இது. 15 ஆயிரம் உழைப்பாளர்களாக இருந்து, இப்போது சுருங்கி, சுருங்கி 8 ஆயிரம் என்று வந்திருக்கக்கூடிய நிலையிலே, இதை மூடிவிடுவது என்ற அறிவிப்பை நிர்வாகம் செய்திருக்கிறது. தொழிற் சங்கங்கள் சார்பிலே இந்த ஆலையை சீராக நடத்துவதற்கு எந்த அளவுக்கு ஒத்துழைப்புத் தர முடியுமோ, அந்த அளவுக்கு ஒத்துழைப்புத் தருகிறோம் என்று நாங்கள் எல்லாம் பேச்சு வார்த்தைகள் நடத்திய நேரத்திலே சொல்லியும், இப்போதைய நிர்வாகம் இதனை மூடுவேன் என்று அறிவித்திருக்கிறது.

இதனுடைய உயிர்நாடியாக இருக்கக்கூடிய 'ப்ராஸஸிங் யூனிட்' என்ற பகுதியை புவனகிரிக்கு எடுத்துச் செல்வோம் என்று பிடிவாதம் பிடித்து, அதை ஒப்புக்கொள்ளாவிட்டால் நாங்கள் ஆலையை மூடுவோம் என்று அறிவித்து, அதற்கான சட்ட அறிவிப்புகளை எல்லாம் கொடுத்திருக்கிறது. ஏற்கெனவே, இந்த ஆலை மூடப்பட்ட நேரத்திலே, இன்றைய தமிழக முதலமைச்சர் மதிப்பிற்குரிய கலைஞர் அவர்கள் தன்னுடைய கடிதத்தில், "மூடப்படுவது ஆலையல்ல ; ஆயிரக்கணக்கான தொழிலாளர்களுக்கு வெட்டப்படும் சவக்குழி" என்று எழுதி, இந்த ஆலையை மூடக்கூடாது என்ற அவசியத்தை உணர்ந்திருக்கிற தன்மையை வெளிப்படுத்தியிருக்கிறார்கள். புவனகிரிக்கு இதனுடைய 'ப்ராசஸிங் டிபார்ட்மெண்ட்' எடுத்துச் செல்லப்படுமேயானால், இங்கே இருக்கிற மில்கள் மூடப்பட்டு (மணியடிக்கப் பெற்றது)...... ஒரு நிமிடத்தில் முடித்து விடுகிறேன்.



1991 சனவரி 24]

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** சுருக்கமாகச் சொல்லுங்கள் ; "Special mention" என்பது "Zero Hour"..—

**திரு. உ. ரா. வரதராசன் :** இங்கே இருக்கக்கூடிய மில் பகுதிகள் மூடப்பட்டு, இவை ஒரு 'ரியல் எஸ்டேட்' வியாபாரமாகவே ஆகிவிடும். அதற்கான அனுமதியைக்கூட அவர்கள் 'போர்டி'லே பெற்றிருக்கிறார்கள். அந்த 'டிபார்ட்மென்ட்டை அங்கே எடுத்துச் செல்வதன் காரணமாக புவனகிரியிலே நிலத்தடி நீருக்கும் பாதிப்பு ஏற்படும் என்கிற அடிப்படையிலே, இந்த நிபந்தனைகளைக் கைவிட்டு, 117 ஆண்டுகளாக செயல்பட்டுக் கொண்டிருக்கக்கூடிய பின்னி ஆலையை தொடர்ந்து இயக்குவதற்கு, அந்த நிர்வாகம் மறுக்குமேயானால் இந்த அரசு மத்திய அரசினுடைய உதவியோடு அதை ஏற்று நடத்துவதற்கு, உடனடியாக ஒரு தனி அதிகாரியை நியமிப்பதற்கு முன்வர வேண்டும் ; இந்த ஆலையினுடைய 8 ஆயிரம் தொழிலாளர்களினுடைய குடும்பங்களைப் பாதுகாக்கிற நல்ல பணியினை இந்த அரசு செய்ய வேண்டும் என்பதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், தொழிலாளர் நல அமைச்சர் அவர்களுக்கும் வேண்டுகோளாக வைத்து, நல்ல பதிலை எதிர்பார்த்து அமர்கிறேன்.

**திரு. எஸ். டி. உகம்சந்த் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பின்னி ஆலையானது, சென்னை நகரத்திற்கு மட்டுமல்ல ; இந்திய நாட்டிற்கே ஒரு பெருமை சேர்க்கின்ற முதன்மையான, பழமையான ஆலையாக செயல்பட்டுக் கொண்டு வந்தது. அந்த ஆலையை, நிர்வாகத்திலே வந்திருக்கிற பல்வேறு நபர்கள், தங்களுடைய சொந்த இலாபத்திற்காக, அதன் பல்வேறு வருமானங்களையெல்லாம் திருப்பி விடுவதன் காரணமாக, இன்றைக்கு நசிந்து, அதை கட்டாயமாக மூடுகின்ற அளவுக்கு அவர்கள் செய்து கொண்டு வருகிறார்கள்.

இன்றைக்கு அவர்கள் அந்த ஆலையை மூடுவதற்குச் சொல்கிற ஒரு காரணத்தை எண்ணிப் பார்க்கிற நேரத்திலே, புவனகிரியில் எங்களுக்கு தண்ணீர் மிக தாராளமாகக் கிடைத்துக் கொண்டிருக்கிறது; சென்னையில் தண்ணீர் சீரானபடி கிடைக்காத காரணத்தினாலும், நிலக்கரியானது சீரானபடி கிடைக்காத காரணத்தினாலும், அதை மாற்ற வேண்டுமென்று சொல்கிறார்கள். புவனகிரியை எடுத்துக் கொண்டாலும் சரி, இன்றைக்கு அங்கு தண்ணீர் பற்றாக்குறை இருந்துகொண்டுதான் இருக்கிறது. அவர்கள் சொல்வதெல்லாம் 266 ஏக்கர் நிலமானது சென்னையிலே இருக்கிறது. அதற்கு ஈடாக 266 ஏக்கர் நிலத்தை புவனகிரியில் கொடுத்து விடுகிறோம் என்று சொல்கிறார்கள். புவனகிரியிலுள்ள நிலத்தின் மதிப்பு எவ்வளவு, சென்னையிலுள்ள நிலத்தின் மதிப்பு எவ்வளவு என்பதை நான் சொல்ல வேண்டியது

இல்லை. அந்த அளவுக்கு வித்தியாசத்தை அவர்கள் தங்களுடைய சொந்த இலாபத்திற்காகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்கிற காரணத்திற்காகவும், இதேபோன்று அவர்கள் பல்வேறு ஆலைகளையெல்லாம், பல்வேறு நிறுவனங்களை எல்லாம் எடுத்துக் கொண்டு நடத்துகிறார்கள் என்பதையும் பார்க்கும்போது,—'ஸ்பென்ஸரை' யும் எடுத்துக் கொண்டார்கள்; சுதேசமித்திரனையும் எடுத்துக் கொண்டார்கள்; அவையெல்லாம் 'காம்ப்ளெக்ஸ்'-ஆக மாறி, கட்டிடங்களாக வியாபாரமாகத்தான் மாறி இருக்கிறதே ஒழிய அதற்கான நல்ல நோக்கங்கள் நிறைவேறவில்லை என்பதைப் பார்க்கும்போது—பின்னியை இன்றைக்கு மூடுவதாகச் சொல்வதுகூட, 'காம்ப்ளெக்ஸ்'—ஆக வியாபாரத்திற்காக செய்கிறார்களேயொழிய, அந்தத் தொழிலாளர்களுக்கு என்று அந்த ஆலையை நடத்த வேண்டும் என்ற முறையிலே அவர்கள் செய்யவில்லை என்பதைக் கருத்தில் கொண்டு, அரசாங்கம் அவர்களுக்கு ஏற்கனவே பல்வேறு சலுகைகளை வழங்கி, அந்தச் சலுகைகளையெல்லாம் பெற்றுங்கூட, அவர்கள் அந்த ஆலையை நடத்த முன்வராத காரணத்தினால், அரசே அதை ஏற்று நடத்த வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. கே.என். நேரு : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. வரதராசன் அவர்களும், திரு. உகம்சந்த் அவர்களும் சென்னையில் இயங்கிக் கொண்டிருக்கிற பின்னி ஆலையைப் பற்றி இங்கு அமைச்சர் அவர்கள் உறுதிமொழி தர வேண்டுமென்று கோரியிருக்கிறார்கள். பின்னி ஆலையைப் பொறுத்தவரை, அவர்கள் அதைத் தொடர்ந்து நடத்துவதற்கு மிகவும் சிரமமாக இருக்கிறது; அதற்குத் தேவையான தண்ணீர் கிடைக்கவில்லை; அதேபோல், நிலக்கரி வேண்டுமென்றால் நிலக்கரிக்கு முதல் முன்னுரிமையை மின்சார வாரியத்திற்குத் தருகிறார்கள்; எங்களுக்கு நிலக்கரி கிடைக்கவில்லை என்ற இந்த இரண்டும் இருக்கிற காரணத்தினால், தமிழ்நாட்டில் உள்ள அத்தனை ஆலைகளும் இலாபத்தில் இயங்கும்போது நாங்கள் தொடர்ந்து நட்டத்தில் இயங்கிக் கொண்டிருக்கிறோம். எங்களுக்கு இங்கிருந்து மாற்றி புனவகிரிக்குக் கொண்டு சென்றால், அங்கு தண்ணீரும் அதிகமாகக் கிடைக்கும்; அதே நேரத்தில் நிலக்கரிக்குப் பதிலாக, அங்கு கிடைக்கக்கூடிய எரி வாயுவைப் பயன்படுத்தி நல்லமுறையில் இலாபத்திலே இயக்கலாம் என்ற ஒரு கோரிக்கையை அரசுக்கு வைத்திருக்கிறார்கள். அதே நேரத்தில் தொழிலாளர்களும் இங்கிருந்து இந்த ஆலையை மாற்றக்கூடாது; இது இங்கேயே இருக்க வேண்டும்; மற்றப் பிரச்சினை எதுவாக இருந்தாலும், அதைப் பேசித் தீர்த்துக் கொள்ளலாம் என்ற அளவிலே அவர்களும் இதை அரசுக்கு மனுவாகத் தந்திருக்கிறார்கள்.

**11-00 மணி.**





இரண்டு பேர்களுடைய மனுக்களையும், தொழிலாளர் துறையின் இணை ஆணையர் இரண்டு மூன்று தினங்களாகத் தனித்தனியாக ஹியரிங் வைத்து அழைத்துப் பேசிக் கொண்டிருக்கிறார்கள். அதன் முடிவை அரசுக்கு இன்னும் அவர்கள் அறிவிக்கவில்லை. தொழிலாளர் துறையினுடைய ஆணையர் அவர்கள் என்ன முடிவு எடுத்து அறிவிக்கிறார்கள் என்பதைப் பார்த்து அரசு தொழிலாளர்களுக்கு என்ன நன்மை செய்ய முடியும் என்பதைத்தான் இந்த அரசு கவனத்தில்கொண்டு இருக்குமே தவிர மற்ற எவருக்கும் ஆதரவாக இருக்காது. நிச்சயமாகத் தொழிலாளர் பக்கம்தான் இருக்கும். மேலும் ஏன் அவர்கள் இதை இங்கே இருந்து மாற்றுகிறார்கள் என்பதற்கு ஒரு காரணம் சொல்கிறார்கள். தண்ணீர் தேவை என்றாலும் கூட அதற்கு நாங்கள் ஏற்பாடு செய்து தருகிறோம். மற்ற எல்லா வசதிகளையும் அரசின் சார்பாகச் செய்து தருகிறோம் என்று சொன்னபோது கூட நாங்கள் இந்த ஆலையை மேலும் விரிவுபடுத்துவதற்காக ஐ.டி.பி.ஐ. மூலம் 60 கோடி ரூபாய் கடன் கேட்டு இருக்கிறோம். இந்த நட்டத்திலேயே தொடர்ந்து நடத்தினால் அவர்கள் கடன் தர மறுக்கிறார்கள். எனவே எங்களுக்கு இந்த ஆலையை மூடுவதைத் தவிர வேறு வழி இல்லை என்று சொல்கிறார்கள். இணை ஆணையர் அவர்கள் விசாரித்துக்கொண்டு இருக்கிறார்கள். அதன் முடிவு தெரிந்ததற்குப் பிறகு நிச்சயமாக அரசு நல்ல முடிவை எடுக்கும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

**(ஈ) திண்டுக்கல்லில் ஒரு பட்டாசுக் கடையில் ஏற்பட்ட விபத்தினால் இறந்தவர்களின் குடும்பங்களுக்கு நிவாரணம் அளிக்க வேண்டியதன் அவசியம் குறித்து.**

திரு. எஸ். ஏ. தங்கராஜன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சென்ற தீபாவளித் திருநாள் அன்று திண்டுக்கல் நகரத்தில் 20 உயிர்கள் மூச்சுத் திணறி இறந்து போனார்கள் என்ற சோகச் செய்தியை இந்த மாமன்றம் நன்றாக அறியும். அந்தப் பட்டாசுக் கடைக்கு எவ்வாறு அனுமதி வழங்கினார்கள் அதிகாரிகள் என்பது ஒரு ரகசியமாக இருக்கிறது. இரண்டு பெட்ரோல் பங்குகளுக்கு நடுவில் 50 அடிக்கு உட்பட்ட பகுதியில் இந்தப் பட்டாசுக் கடைக்கு அனுமதி வழங்கப்பட்டு இருக்கிறது. தீயணைக்கும் படையினர், காவல் துறையினர் இதற்கு எவ்வாறு என்.ஓ.சி. கொடுத்தார்கள் என்பது புரியவில்லை. தீயணைக்கும் படையினர் அந்தச் சமயத்தில் ஸ்தலத்தில் இருந்திருந்தால் அந்த இயந்திரங்கள் வேலை செய்திருந்தால் உடனடியாகத் தீயை அணைத்திருக்கலாம்; 20 உயிர்களைக் காப்பாற்றி இருக்கலாம். 20 பேர் பட்டாசுக் கடைக்

குப் பக்கத்திலே இருந்த ஒரு கடையில் தங்கி இருந்தார்கள். இந்த நெருப்பில் இருந்து தப்பிக்க அவர்கள் ஓண்டியபோது மூச்சுத் திணறி இறந்துவிட்டார்கள். எனவே முதலமைச்சர் அவர்கள் இதை விசாரித்து, அந்த அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுத்து, இறந்தவர் குடும்பத்தினருக்கு நிவாரணம் அளிக்க வேண்டும் என்று நான் வற்புறுத்திக் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் என்னிடத்தில் வந்து இப்படி உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு நிவாரணம் அளிக்கவேண்டும் என்று கேட்கப் போகிறேன். அதற்கு விளக்கம் அளித்தால் போதும் என்று என்னிடத்தில் சொன்னார்கள். நானும் அதைத்தான் எதிர்பார்த்தேன். ஆனால் ஒத்திவைப்புத் தீர்மானம் போல் பல குற்றச்சாட்டுகளை எடுத்துக் கூறி, அவைகளுக்கெல்லாம் விவரங்கள் கேட்டிருக்கிறார்கள். இதை ஒத்திவைப்புத் தீர்மானமாகக் கொடுத்திருந்தால்தான் நான் அதைப்பற்றிய விவரங்களை அறிந்து பதில் சொல்லியிருக்க முடியும். ஆனால் திடீரென்று பல குற்றச்சாட்டுகளைச் சொல்லும் போது எந்த அதிகாரிகள் அதற்கு உடன்பட்டிருந்தார்கள், உள்ளபடியே இவை குற்றங்கள்தானா, அல்லவா என்பதை எல்லாம் ஆராய நேரம் இல்லை. இருந்தாலும் உயிரிழந்தவர்களுடைய குடும்பத்தினருக்கு நிதியளிப்பதைப் பற்றி மாவட்ட ஆட்சித் தலைவரோடு கலந்து பேசி ஆவன செய்யப்படும்.

## 3. கவன ஈர்ப்பு

**மதுரை மற்றும் திண்டுக்கல் காயிதே மில்லத் மாவட்டங்களில் இரசாயன உரங்கள் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் விவசாயிகளுக்கு நியாய விலையில் கிடைக்கச் செய்யவேண்டியதன் அவசியம் குறித்து.**

திரு. என். பழனிவேல் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 'மதுரை மற்றும் திண்டுக்கல் காயிதேமில்லத் மாவட்டங்களில், யூரியா, அம்மோனியா மற்றும் சல்பேட் போன்ற உரங்கள் கிடைக்காமையால் அவைகளைக் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் விவசாயிகளுக்கு நியாய விலையில் அளிக்க வேண்டிய அவசியம், குறித்த அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க் கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.



அறிக்கை.

மதுரை மற்றும் திண்டுக்கல் காயிதேமில்லத் மாவட்டங்களில் உள்ள தொடக்கக் கூட்டுறவு வங்கிகளுக்கு தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம் மதுரையிலுள்ள மண்டல அலுவலகம் மூலம் இரசாயன உரம் விநியோகம் செய்கிறது. இதில் பெரும் பகுதி பயிர்க்கடனில் பொருட்பகுதிக்கு வழங்கப்படுகிறது. இம்மாவட்டங்களில் கடந்த ஆண்டும் நடப்பு ஆண்டிலும் ரபி பருவத்தில் அக்டோபர் முதல் நாளது தேதி வரை உர விநியோகம் செய்த அளவு பின்வருமாறு :—

| | 1989 அக்டோபர் முதல் டிசம்பர் வரை. | சென்ற ஆண்டு ரபி பருவம். | |
|---|---|---|---|
| | | ஜனவரி 1990. | மொத்தம். |
| (1) | (2) | (3) | (4) |
| | (மெட்ரிக் டன்) | | |
| மதுரை மாவட்டம் | 6,743 | 686 | 7,429 |
| திண்டுக்கல் காயிதே மில்லத் மாவட்டம். | 2,085 | 205 | 2,290 |
| மொத்தம் .. | 9,628 | 891 | 9,719 |

| | நடப்பு ரபி பருவம். | | |
|---|---|---|---|
| | 1990 அக்டோபர் முதல் டிசம்பர் வரை. | ஜனவரி 1991. | மொத்தம். |
| (1) | (5) | (6) | (7) |
| | (மெட்ரிக் டன்) | | |
| மதுரை மாவட்டம் .. | 15,091 | 4,324 | 19,415 |
| திண்டுக்கல் காயிதே மில்லத் மாவட்டம். | 3,768 | 2,452 | 6,220 |
| மொத்தம் .. | 19,659 | 6,776 | 25,635 |

சென்ற ஆண்டு நடப்பு பருவத்தில் நாளது தேதிவரை 9,719 மெட்ரிக் டன் மட்டும் வழங்கப்பட்டுள்ளது. ஆனால் நடப்பு ஆண்டில் அதைவிட கூடுதலாக 25,635 மெட்ரிக் டன் வழங்கப்பட்டுள்ளது. இதில் யூரியா மட்டும் சென்ற ஆண்டு டிசம்பர் வரை 3,300 மெட்ரிக் டன் விநியோகம் செய்யப் பட்டிருந்தது. இந்த ஆண்டு அதைவிட அதிகமாக 8,058 மெட்ரிக் டன் விநியோகிக்கப்பட்டுள்ளது.

மதுரை மற்றும் திண்டுக்கல் காயிதே மில்லத் மாவட்டங் களில் உள்ள கூட்டுறவுச் சங்கங்களில் அரசால் நிர்ணயிக்கப் பட்ட விலைக்குட்பட்டு இரசாயன உரம் விற்பனை செய்யப் படுகிறது. தனியார் கடைகளில் கூடுதல் விலைக்கு விற்பதை கட்டுப்படுத்த கூட்டுறவு அதிகாரிகளுக்கு அதிகாரம் கிடை யாது.

மேலும் தற்பொழுது இம்மாவட்டங்களில் உள்ள கூட் டுறவுச் சங்கங்களின் விநியோகத்திற்காக 1,811 டன் யூரியா உட்பட 4,376 டன் இரசாயன உரங்கள் இருப்பு உள்ளன. ஆனால் தொடக்கக் கூட்டுறவு வங்கிகளிடமிருந்து 440 டன் யூரியா உட்பட 830 டன்களுக்கு மட்டுமே உரத் தேவைப்பட்டி யல் பெறப்பட்டுள்ளது. இதற்கு கைவசமுள்ள இருப்பே போதுமானதாகும்.

மேலும் உற்பத்தியாளர்களுக்கு 7,200 டன் உரங்களுக்கு ஆர்டர் கொடுக்கப்பட்டுள்ளது. எனவே, கூட்டுறவுச் சங் கங்களிடமிருந்து மேலும் வரக்கூடிய தேவைப்பட்டியல்களுக் கும் உரம் வழங்க இணையம் தயார் நிலையில் உள்ளது.

தமிழ்நாட்டுக்கு அமோனியம் சல்பேட் விநியோகம் செய்ய மத்திய அரசு பாக்ட் மற்றும் செயில் (Steel Authority of India) ஆகிய இரண்டு நிறுவனங்களை நியமித்துள்ளது. இணையம் அமோனியம் சல்பேட் வாங்க 15,790 மெட்ரிக் டன்களுக்கு ஆர்டர் கொடுத்துள்ளது. ஆனால் இயந்திர கோளாறு மற்றும் உற் பத்தித் தடை ஆகிய காரணங்களினால் சப்ளை செய்ய முடியவில்லை. இந்த நிறுவனங்கள் சப்ளை செய்யத் தொடங் கியதும், இந்த உரத்தைப் பெற்று கூட்டுறவு வங்கிகளுக்கு வழங்க ஏற்பாடு செய்யப்படும்.

திரு. என். பழனிவேல் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று இங்கே இருக்கிறது. அந்த விவர அறிக்கையில் இன்றைய நிலவரத்தைச் சொல்லி யிருக்கிறார்கள் என்று கருதுகிறேன். ஜனவரி மாதம் முடியப் போகிறது. ஆனால் விவசாயிகளுக்கு உரம் தேவையான காலம் என்பது குறிப்பாக அக்டோபர், நவம்பர் மாதங்களில்தான். அந்தக் காலங்களில் நான் சொல்லியிருக்கக்கூடிய மாவட்டங் களான திண்டுக்கல், காயிதேமில்லத், மதுரை, கன்னியாகுமரி





போன்றவற்றில் உரங்கள் குறிப்பாக யூரியா போன்றவை கிடைக் காமல் விவசாயிகள் வெளியே அதிக விலை கொடுத்து வாங்கி னார்கள் என்பது என்னுடைய கவனத்திற்கு வந்தது. அரசின் கவனத்திற்கும் வந்திருக்கும். ஆனால் இங்கே தனியார் கடைகளில்தான் உரங்கள் அதிக விலைக்கு விற்கப்படுகின்றன, கூட்டுறவுக் கடைகளில் இல்லை என்று சொல்கிறார்கள். கூட்டுறவுச் சங்கக் கடைகளில் அதிக விலைக்கு விற்பதாக நான் சொல்லவில்லை. தனியார் கடைகளில்தான் விற்கிறார் கள். அப்படி தனியார் கடைகளில் ஒரு மூட்டை 20 ரூபாய் அதிகம் கொடுத்து விவசாயிகள் வாங்கக்கூடிய அவல நிலை இருக்கின்ற காரணத்தினால் விவசாயிகளுக்குத் தேவையான அந்த ரசாயன உரங்களை கூட்டுறவுச் சங்கக் கடைகளிலே தேவைப்படுகின்ற அளவுக்கு அந்தந்த காலங்களில், அக்டோபர், நவம்பர் மாதங்களில் கொடுத்தால்தான் விவசாயிகளுக்கு உதவிகரமாக இருக்கும். இன்றைக்கு விவசாயிகள் பெரும் பாலும் ரசாயன உரத்தை நம்பித்தான் அவர்களுடைய விவ சாயத்தைச் செய்ய வேண்டி இருக்கின்ற காரணத்தினால் அதற்கு அரசு தகுந்த நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்பு கிறேன்.

11-05 மணி

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வடகிழக்குப் பருவக் காற்றின் பயனாக திடீரென்று மழை பெய்துவிட்டதால் நாம் உடனடியாக விவசாய உரங்களை விவசாயிகளுக்கு விநியோகம் செய்வதில் கொஞ்சம் தடை ஏற்பட்டது என்பது உண்மைதான். உடனடியாக நானே அந்த உர உற்பத்தியாளர்களை அழைத்து, அவர்களிடம் இந்த உரம் உடனடியாக வழங்கப்பட வேண்டும். தனி நபர்களுக்கு வழங்குவதைவிட இங்கே டேன்பெட் நிறுவனத் திற்கு முன் உரிமை கொடுத்து வழங்கவேண்டும் என்று நான் கேட்டுக் கொண்டதன் பேரில் உடனடியாக அவர்களும் ஏற்றுக் கொண்டு உரத்தை டேன்பெட் நிறுவனத்திற்கு வழங்கினார்கள். கூட்டுறவுத் துறையின் சார்பாக டேன்பெட் மூலம் வழங்கப் படுகின்ற கடனில், அந்தப் பகுதிக்கு மட்டும் தான் அந்தத் துறையின் மூலம் உரங்கள் வழங்கப்படுகின்றன. அந்தக் கால தாமதத்தைப் பற்றி உர உற்பத்தியாளர்களிடம் கலந்து பேசி சரி செய்த பின்னாலே இந்த நடப்பாண்டில் 25,635 மெட்ரிக் டன் உரம் விநியோகம் செய்யப்பட்டிருக்கிறது. இன்றும் நம்மிடம் மதுரை, இராமநாதபுரம், காயிதே மில்லத் மாவட்டங் களில் உரம் கையிருப்பு இருக்கிறது. மேலும் அம்மோனியம் சல்பேட் 15,290 மெட்ரிக் டன் ஆர்டர் கொடுத்துள்ளோம். அதையும் எதிர்பார்த்துக் கொண்டுள்ளோம். இப்போதைய நிலை நமக்கு யூரியா கையிருப்பு இருக்கின்ற காரணத்தினாலே விவசாயிகளுக்கு எத்தவிதமான சங்கடமும் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள்

எடுத்துச் சொன்ன குறைபாடுகள் கடந்த காலத்தில் இருந்திருந்தாலும்கூட எதிர்காலத்தில் சரி செய்யப்படும் என்பதையும் நான் இங்கே தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

திரு. என். பழனிவேல் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நல்ல பதிலை இங்கே சொல்லி இருக்கின்றார்கள். இருந்தாலும் தமிழ்நாட்டில் அம்மோனியம் சல்பேட் விநியோகிக்கக் கூடிய அந்த உரிமையை மத்திய அரசு இரண்டு நிறுவனங்களுக்குக் கொடுத்திருப்பதாகச் சொல்லியிருக்கின்றார்கள். பாக்ட் மற்றும் செயில் நிறுவனங்களுக்கு கொடுத்திருப்பதாகவும், தற்போது அவர்கள் உற்பத்தியில் தயக்கம் ஏற்பட்டு அவர்களுடைய இயந்திரங்கள் கோளாறாக தடையில் இருப்பதாக இங்கே சொல்லியிருக்கின்றார்கள். அதனாலே அவர்கள் கேட்டிருக்கக் கூடிய 15,290 மெட்ரிக் டன் உரத்தைப் பெறுவதற்குக்கூட காலதாமதம் ஏற்படும் என்று கருதுகிறேன். ஆகவே அவைகளை துரிதமாகப் பெற்றுத் தருவதற்கு முயற்சி செய்ய வேண்டும் என்றும் எதிர்காலத்தில் முழு முயற்சி மேற்கொள்ள வேண்டும் என்றும் கேட்டு, அமைகிறேன்.

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அரசு நிச்சயமாக முயற்சி மேற்கொள்ளும்.

### 4. அறிக்கைகள் அளித்தல்.

#### (அ) பொதுக் கணக்குக் குழு.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் அவர்கள் சார்பில் திரு. அப்துல் லத்தீப் அவர்கள் அறிக்கையை அவைக்கு அளிப்பார்கள்.

திரு. எம். அப்துல் லத்தீப் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1990—91 ஆம் ஆண்டிற்கான பொதுக் கணக்குக் குழுவின் ஐம்பத்தொன்றாவது முதல் ஐம்பத்தொன்பதாவது வரையிலான (ஒன்பதாவது சட்டமன்றப் பேரவை) அறிக்கைகளை இப்பேரவைக்கு தலைவர் அவர்களின் சார்பாக அளிக்கிறேன்.

போதிய அவகாசம் இன்மையால் அச்சிடப்பட்ட பிரதிகளுக்குப் பதிலாக படியெடுத்த பிரதிகள் அளிக்கப்பட்டுள்ளன. ஆதலால் இவ்வறிக்கைகளின் பிரதிகள் சட்டமன்ற நூலகத்தில் மாண்புமிகு உறுப்பினர்களின் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ளன. அச்சிடப்பட்ட பிரதிகள் கிடைத்தவுடன் அவை பேரவை உறுப்பினர்களுக்கு தனியாக அனுப்பி வைக்கப்பெறும்.



#### (ஆ) பொது நிறுவனங்கள் குழு.

திரு. பெ. சீனிவாசன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1990—91 ஆம் ஆண்டிற்கான பொது நிறுவனங்கள் குழுவின் ஐம்பத்தைந்தாவது மற்றும் ஐம்பத்தி ஆறாவது (ஒன்பதாவது பேரவை) அறிக்கைகளை பேரவைக்கு அளிக்கிறேன்.

### 5. அறிவிப்புகள்.

#### (அ) கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள், 1990—91 (ஆ. இ.)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : 1990—91 ஆம் ஆண்டு கூடுதல் மானியங்களுக்கான கோரிக்கைகள் பேரவையில் முன்மொழிந்துள்ளது குறித்து ஆளுநர் அவர்களிடம் இருந்து கீழ்க்கண்ட செய்தி வரப்பெற்றுள்ளது :

#### MESSAGE.

"In pursuance of Article 203, clause 3, of the Constitution of India, I, Surjit Slng Barnala, Governor of Tamll Nadu, hereby give my recommendation to the moving, in the Tamil Nadu Legislative Assembly, of the Demands for further Granis for the year of 1990-91''

#### இரண்டாம் துணை நிதிநிலை அறிக்கை, 1990—91 பொது விவாதமும் அவ்வாண்டின் கூடுதல் செலவிற்றான மானியக் கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பும்.

திரு. எல். கணேசன் (முதலமைச்சரின் ஆட்சி மன்றச் செயலர்) : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

'' 1990—91 ஆம் ஆண்டிற்கான கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள் அடங்கிய 22—1—1991 தேதியிடப் பெற்ற அறிவிப்பில் குறிப்பிடப்பெற்றுள்ள துணை மானியக் கோரிக்கைகள் ஒவ்வொன்றுக்கும் எதிரே கூறப்பெற்றுள்ள தொகைகளுக்கு மேற்படாத தொகைகள் 1990—91 ஆம் ஆண்டு பொகைக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெறதற்கான கூடுதல் செலவிற்காக அரசுக்கு வழங்கப்பெற வேண்டும் ''.

11-10 மணி

#### கோரிக்கை எண். 16—தீயணைப்புப் பணிகள்.

திரு. வே. தம்புசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திருவாரூர் வட்டம், கீவளூர் நகரத்தில்

துணை நியணைப்பு நிலையம் ஏற்படுத்துவது குறித்து விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கோரிக்கை எண். 16—நியணைப்புப் பணிகள் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 79,64,000-ல் ரூ. 1 குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆட்சி மன்றச் செயலரின் தீர்மானமும், வெட்டுத் தீர்மானமும் பேரவைமுன் விவாதத்திற்கு வைக்கப்பட்டுள்ளன. வெட்டுத் தீர்மானமும், பதில் உரையும் 13-00 மணிக்கு முடிந்து, வாக்கெடுப்பு எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும்.

திரு. எம். இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1990-91 ஆம் ஆண்டினுடைய துணை மதிப்பீட்டு மானியம் இங்கே அவையிலே வைக்கப்பட்டிருப்பதற்கு நன்றிகூறி, வாய்ப்பளித்தமைக்கு நன்றி தெரிவித்து என் உரையைத் தொடங்குகிறேன். வழக்கமாக நிதிநிலை அறிக்கையிலே குறிப்பிடுகிறபோது அந்தந்த ஆண்டினுடைய செலவுத் தொகை மதிப்பீடுகளைக் குறிப்பிட்டிருந்தாலும் அதற்குப் பின்னாலே ஏற்படுகிற அவசரக் காரியங்களுக்கு, மிக முக்கியமாகக் கருதப்படுகிற காரியங்களுக்கு எல்லாம் செலவீட்டுத் தொகை அவசியம் என்று கருதப்படுகிறபோது அதிலே செலவிட்டு விட்டு, அதற்குப் பின்னாலே இங்கே இப்படிப்பட்ட அறிக்கை வைப்பதை வரவேற்க வேண்டிய ஒரு விஷயமாக நான் கருதுகிறேன். இங்கே சொல்கிறபோது 75 கோடி ரூபாய்க்கு இந்தத் துணை நிதிநிலை அறிக்கை வைக்கப்பட்டுள்ளது என்று தெரிவித்துள்ளார்கள். இதிலே, 1990 ஆம் ஆண்டு நீலகிரி மாவட்டத்தில் ஏற்பட்ட ஒரு பெரு மழை வெள்ளத்தின் காரணமாக பெரிய இழப்பு ஏற்பட்டது. அப்படி ஓர் இழப்பு இதுவரையில் ஏற்படாத காரணத்தாலே பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்களையும், கோயம்புத்தூர் மாவட்டத்தைச் சார்ந்த மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் அவர்களையும் நேரடியாக அந்த இடத்திற்கே அனுப்பி, அங்கு ஏற்பட்டிருக்கிற இழப்பை அப்போதே பார்வையிட்டு, பாதிக்கப்பட்ட அந்த மக்களுக்கு உதவி வழங்க வேண்டுமென்ற நிலைக்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஏற்பாடு செய்திருந்தார்கள். அந்த வகையிலே 80 இலட்சம் ரூபாயை அந்த மக்களுக்கும், அந்த மாவட்டத்திலே மிகவும் பாதிக்கப்பட்டிருந்த நிலையிலே இருந்தவர்களுக்கும் உதவியாக தரப்பட்டதை இந்த அறிக்கையிலே சொல்லியிருக்கிறார்கள்.

கழகத்தலைவர் டாக்டர். கலைஞர் அவர்கள் எந்த நிகழ்ச்சியாக இருந்தாலும் அதை கிடப்பிலே போடுவதில்லை என்பதற்கு இது ஒரு முன் உதாரணம். ஆகவே, பாதிக்கப்பட்ட அந்த மக்களுக்கு வழங்கப்பட வேண்டும் என்பதற்காக அந்தத் தொகை



அனுமதிக்கப்பட்டுள்ளது. அதற்குப் பின்னாலே 49 இலட்சத்து
85 ஆயிரம் ரூபாயை பாலங்கள் பழுதுபார்க்க வேண்டும்.
போக்குவரத்து சரியாக இல்லை. ஆகவே அவைகளைச் சரி
செய்ய வேண்டும் என்பதற்காகவும் இந்தத் தொகை அனுமதிக்
கப்பட்டுள்ளது. இந்த மானியத்திலே நான் பேசுகிறபோது ஒரு
நிகழ்ச்சியை இங்கே குறிப்பிட விரும்புகிறேன். ஆதி காலத்திலே
கிராமங்களை, கிராமத் தலைவர்கள் என்று சொல்கிறவர்கள்
நிர்வகித்து வந்தார்கள். கர்ணீகர்கள் என்றும், கிராமத் தலை
வர்கள் என்றும் அந்தக் கிராமத்தில் உள்ள நல்லது கெட்டது
களைப் பார்க்கும் பணிக்காக அரசாங்கம் நியமித்து இருந்தது.
அவர்களுக்குக் கொடுக்கப்பட்ட சம்பளம் மிகவும் குறைவு.
ஆனால் மரியாதை நியமித்தம் காரணமாக அவர்கள் கிராமங்
களிலே பணியாற்றிக் கொண்டிருந்தார்கள். கட்டுப்பாடாகவும்
முறையாகவும் அவர்கள் செயல்பட்ட நேரத்தில், ஒரு நாள்
இரவு அவர்களுடைய பதவிகள் எல்லாம் பறிக்கப்பட்டு,
அவர்கள் எல்லாம் கஷ்டமான சூழ்நிலையில், மானத்தை இழந்த
நிலையில் இருக்கிறோம் என்று அவர்கள் கருதுகிற நிலையில்
ஒரு ஏற்பாட்டை அரசாங்கம் செய்தது.

11-15 மணி

அதற்குப் பின்னாலே பல்லாண்டுக் காலம் அந்த ஆட்சி நடந்த
போதும் உச்சநீதி மன்றம் வரையிலேகூட அவர்கள் சென்று
முறையிட்டார்கள். ஆனால் அவர்களுக்கு நீதிமன்றம் கூட
அந்த நீதியை வழங்கவில்லை. திராவிட முன்னேற்றக் கழகம்
1984-லே போட்டியிட்டபோது தேர்தல் அறிக்கையிலே அதை
வைத்தது. நாங்கள் ஆட்சிக்கு வந்தால் நீங்கள் எல்லாம் பணி
அமர்த்தப்படுவீர்கள் என்று சொன்னோம். கிராமத் தலைவர்
களாக இருந்தவர்களில் சிலர் மிராசுதார்கள். அவர்கள் வாழ
வழி இருந்தது. ஆனால் கர்ணீகர் பதவியில் இருந்த சிலர்
அதையே நம்பி வாழ்ந்தவர்கள். அந்தப் பதவி பறி போன
பின்பு, கஷ்டப்பட்டு தற்கொலை செய்து கொண்டார்கள்.
வாழ வழியில்லாமல் கஷ்டப்பட்டார்கள். 1984 தேர்தல்
அறிக்கையிலே அதை வைத்தோம். ஆனால்வெற்றி வாய்ப்பை
இழந்தோம். 1989-ல் தேர்தலில் நின்ற போதும் முன்னாள்
கிராமப் பணியாளர்களுக்கும், கிராமத் தலைவர்களுக்கும்
மறுபடியும் நாங்கள் ஆட்சிக்கு வந்தால்பதவி வழங்கப்
படும் என்று சொல்லியிருந்தோம். கழகத் தலைவர்
அவர்கள் பெருவாரியான சட்டமன்ற உறுப்பினர்களைப்
பெற்று முதலமைச்சராக வந்த பின்னர் எப்படியாவது இந்த
நிலையைப் பரிசீலிக்க வேண்டும், எப்படியாவது அவர்களுக்குப்
பதவிகளைத் தரவேண்டுமென்ற அவாவின் காரணமாக அவர்கள்
இந்த ஆண்டு ஜனவரித் திங்கள் 1 ஆம் தேதி முதல் பதவியிலே
நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களுக்கு வாழ்வு கொடுத்
ததை அவர்கள் எல்லாம் மிகப் பெருமையாகக் கருதுகிறார்கள்.
அதிலே சில முன்னாள் கிராமத் தலைவர்களை, கர்ணீகர்களை

நான் பார்த்தேன். அப்படிப் பார்க்கிறபோது, அவர்கள் மிகவும் சந்தோஷமாக இருக்கிறார்கள். எங்களைத் திருடர்களைப்போல எண்ணி எங்கள் பதவிகளைப் பறித்துக்கொண்டார்கள். இரவு நேரத்தில் எங்களிடமிருந்த கட்டுகளை தூக்கிக் கொண்டு சென்றார்கள். எங்கள் மரியாதையை எல்லாம் அரசாங்கம் கெடுத்தது. ஆனால் இப்போது எங்களுக்கு கலைஞர் அவர்கள் வாழ்வு அளித்திருக்கிறார், அவருக்கு நன்றிக் கடன்பட்டவர்களாக இருப்போமென்று சொல்லும் அளவுக்கு ஒவ்வொரு ஊராட்சிக்கும் உதவியாளர்களாக அவர்களைப் போட்டு அவர்கள் வாழ்க்கைக்கும், குடும்பத்திற்கும் உத்தரவாதம் அளித்துள்ள மனப்பான்மையை இந்த மானியத்தில் காண்கிறோம்.

அதுமாத்திரமல்ல, கம்பன் பாடும்போது காவிரி நாடு போன்று கங்கைநாடு என்று சொல்லுவான். கங்கை வற்றாத நதியாக இருந்தாலும், தன்னுடைய நாட்டைப் பெருமையாக கருத வேண்டும், தன்னுடைய பூமியைப் பெருமையாகச் சொல்ல வேண்டும் என்ற முறையில் தான் தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்தவன் என்பதால் கம்பன் பாடுகிறான், காவிரி நாட்டைப் போன்ற கங்கை நாடு என்று. அந்தக் காவிரி நாடு கை ஏந்தி நிற்கும் நிலையிலே கர்நாடகத்தைப் பார்த்து தண்ணீர் கொடுக்க வேண்டும், எங்கள் விவசாயிகள் அப்போதுதான் வாழ முடியும், அவர்கள் வாழ்வுக்கு வழி செய்யுங்கள் என்று கேட்கும் நாடாக காவிரி நாடு இருக்கிறது. காங்கிரஸ் கட்சி உறுப்பினர் அவர்கள் ஒன்றைச் சொன்னார்கள். எங்களுடைய காங்கிரஸ் கட்சித் தலைவர் திரு. குண்டுராவ் அவர்கள் தண்ணீர் தர வேண்டுமென்று சொல்லுகிறார்கள் என்று சொன்னார்கள். ஆனால் தர வேண்டுமென்றுதான் அவர் சொல்கிறாரே தவிர, அவருடைய கட்சியைச் சேர்ந்தவர், முதலமைச்சராக இருப்பவர் தர முடியாது என்று சொல்கிறார். உரிமைகள் பறிக்கப் படுகின்றன. அந்த உரிமைகள் பறிக்கப்பட்டு, இன்றைக்கு அவர்கள் மழையை நம்பியிருக்கிறார்கள்.

11-20 மணி

சரஸ்வதி மகாலில் ஒரு குறிப்பு எழுதி வைத்திருக்கிறார்கள். பிரகதீஸ்வரருடைய நந்திக்கு மிளகு அபிஷேகம்செய்தால்தான் மழை பெய்யும் என்று சொல்லி பழைய ஓலைச் சுவடியில் எழுதி இருப்பதை இன்று பிரகதீஸ்வரர் கோயிலுக்கு நடைமுறைப் படுத்த வேண்டிய நிலையிலே காவிரி நாடு இருக்கிறது. அந்த மாதிரி ஒரு நிலையிலே இன்று மழை வேண்டி, பிரார்த்தனைக் காக வேண்டி மிளகு அபிஷேகம் நந்திக்குச் செய்ய வேண்டிய



நிலை தமிழகத்திற்கு வந்து இருக்கிறது. அப்படிப்பட்ட சூழ்
நிலையிலே இன்று காவிரி நாடு கங்கை நாட்டைப் போல்
இல்லை ; வளம் குன்றி இருக்கிறது. இந்தச் சூழ்நிலையில்
கல்லணைக் கால்வாய்ப் பகுதியிலே மட்டும் தான் இளநீர் ஊற்று
பெருவாரியாக இருக்கின்றன; அவை பல ஆண்டுகளுக்கு வரும்
என்பதை ஆராய்ச்சியாளர்கள் கண்டு பிடித்து இருக்கிறார்கள்.
கல்லணைக் கால்வாய்ப் பகுதியிலே ஊற்று நீர் இருப்பதை
இதற்கு முந்திய அரசு கண்டுபிடிக்கவில்லையா ? ஆச்சரியமாக
இருக்கிறது. அதற்குப் பின்னாலே, கழக அரசு வந்த பின்னாலே
அந்த ஊற்றுநீரை மேலே இறைத்து விவசாயத்திதுக்கு உப
யோகித்துக்கொள்ளலாம் என்கிற நிலைக்கு இந்த அரசு இந்த
மானியத்திலே 50 இலட்சம் ரூபாயைத் தந்திருக்கிறது. முன்
பணமாக 50 இலட்சம் ரூபாயும், ரூபாய் 55 இலட்சத்தை ஆழ்
துளைக் கிணறுகளையும், ஏரிகளையும் நடைமுறைப்படுத்து
வதற்கும் ஒதுக்கி இருக்கிறார்கள். அது மிகவும் வரவேற்க
வேண்டிய ஒரு காரியம்.

தஞ்சை மாவட்டத்தில் விவசாயிகள் எல்லாம் தண்ணீரை
நம்பி இருக்கிறார்கள் ; விவசாயத்தை நம்பி இருக்கிறார்கள் :
வேறு வழி இல்லாத நிலையில் இருக்கிறார்கள் ; விவசாயம்தான்
அவர்களுக்கு வேலை. வேறு தொழிலோ, தொழிற்சாலையோ
ஒன்றுமே இல்லாத ஒரு மாவட்டம் தஞ்சை மாவட்டம். அந்த
மாவட்டத்திலே இருக்கிற விவசாயிகள் எப்போதுமே தங்களு
டைய வாழ்க்கையை விவசாயத்துக்காகவே அர்ப்பணித்துக்
கொண்டவர்கள். அவர்களுக்கு தண்ணீர் இல்லை என்று
சொன்னால் வழி இல்லை. அந்த வழி ஏற்படுவதற்கு இந்தத்
துணை மானியத்திலே ஒரு வழியைச் செய்து இருக்கிறார்கள்.
ஆகவே இந்தமாதிரியான ஒரு நிலையிலே அந்தக் காவிரி ஆற்றி
னுடைய பெருமைகள்ளக் காப்பதற்கு காவிரியின் தலைவன்
கலைஞர் அவர்கள் ஒரு வழி செய்து இருக்கிறார்கள். அது
வரவேற்கக்கூடிய ஒரு காரியமாக அமைந்து இருக்கிறது.

அதுமட்டுமல்லாமல், அதற்குப் பின்னாலே தஞ்சை மாவட்
டத்திலே ஒரு பெரும் காரியத்தை இதிலே சொல்ல வேண்டி
இருக்கிறது. காரணம், தஞ்சை மாவட்டத்திலே இருக்கிற
சாலைகள் சரியாக இருக்காது. வாய்க்கால்களும் நீர்ப்பாசன
முமாக உள்ள பகுதியாக இருக்கிற காரணத்தினால் தஞ்சை
மாவட்டத்தில் மண்ணினுடைய தன்மை மாறி இளகுகிற ஒரு
தன்மையிலே இருக்கிறது. அந்த நிலை இருக்கிறபோது அந்த
மாவட்டத்தினுடைய சாலைகள் எல்லாம் பழுது படுகின்றன.
எந்தச் சூழ்நிலையிலும் தார் சாலைகள் போட்டாலும் அல்லது
மற்ற எந்தச் சாலைகள் போட்டு வைத்து இருந்தாலும் அந்தச்
சாலைகள் பழுது ஆகிவிடுகின்றன. அந்தச் சாலைகளைச்
செப்பனிட, எல்லா மாவட்டத்துக்கும் எடுத்துக்கொள்கிற ஒரு
காரியத்தை தஞ்சை மாவட்டத்துக்கு எடுத்துக்கொள்ள முடியாது
அதைவேறு மாதிரியாக எடுத்துக் கொண்டு செயல்படுத்த
வேண்டும்.

காரணம் அந்தத் தஞ்சை மாவட்டத்தின் சாலைகள் விரைவிலே வேகமாகப் பழுதுபடுகின்றன; மண்ணினுடைய தன்மை அப்படி இருக்கிறது. எனவே தஞ்சை மாவட்டத்துக்கு என்று தனியான ஒரு முறையை ஏற்படுத்தி, பணத்தை ஒதுக்கி அந்தச் சாலைகளைச் செப்பனிடுவதற்கு ஒருவழிவகை செய்ய வேண்டும் என்று சொல்லி, அது முதலமைச்சருடைய மாவட்டம், அவர் பிறந்த மண்; ஆகவே, அந்த மண்ணுக்கு ஒரு வழிவகை செய்ய வேண்டுமென்று சொல்லி இந்த மானியத்திலே ஒரு கோரிக்கையாக எடுத்து வைக்கிறோம்.

அதுமட்டுமல்லாமல். விவசாயத்தையே நம்பி இருக்கிற மாவட்டம் அது. அங்கு வாய்க்கால்களிலே காலாலே தள்ளி விட்டு தண்ணீரை வயல்களிலே பாய்ச்சிய ஒரு காலம் உண்டு. காலாலேயே மடையைக் கட்டுவார்கள். அது ஒரு காலம். அங்கு வயல்களிலே எல்லாம் விரால் மீன்கள் வாழ்ந்த காலம் ஒன்று உண்டு. அவைகள் செழித்து வாழ்ந்து மிகச் சிறப்புப் பெற்ற ஒரு காலம் இருந்தது. ஆனால் இப்போது அப்படி இல்லை. இப்போது வாய்க்கால்களிலே காலாலே தள்ள முடியவில்லை; மண்வெட்டியாலே அணையைப் போட்டும் நிறுத்த முடியவில்லை; வாய்க்காலிலே தண்ணீரே வரவில்லை என்ற சூழ்நிலை இருக்கிறது. இப்போது எல்லாம் விவசாயிகள் தனக்கு ஒரு ஆழ்துளைக் கிணறோ அல்லது கிணறோ இருந்தால் தான் விவசாயம் செய்ய முடியும் என்கிற நிலையிலே தஞ்சை மாவட்டம் இருக்கிற காரணத்தாலே மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்களை நான் கேட்டுக்கொள்ள விரும்புவது, தஞ்சை மாவட்டத்துக்கு மட்டும் இதுவரையிலே வந்து இருக்கிற மனுக்களைப் பெற்று — அதற்கு முன்னுரிமையாக மற்ற மாவட்டங்களில் எல்லாம் இருக்கலாம், அங்கு அவர்களுக்கு மழை இல்லை, வாய்க்கால் இல்லை, காவிரி நீர் பாய்வது இல்லை என்ற நிலை இருக்கலாம். ஆனால் தஞ்சை மாவட்டத்தில் தண்ணீர் வந்தால் தான் விவசாயம் செய்ய முடியும். அங்கு 6 மாதம் விவசாயம் செய்வதும், 6 மாதம் உட்கார்ந்து சாப்பிடுவதும் ஒரு பழக்கம். தஞ்சை மாவட்டம் கலை வளர்ந்த இடம்; நாட்டுக் கலைகள், பாட்டுக் கலைகள் எல்லாம் வளர்ந்த இடம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: கலையைப் பற்றிப் பேச இப்போது நேரம் ஏது?

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, நாட்டியக் கலை, பாட்டுக் கலை ஆகியவற்றுக்கெல்லாம் தண்ணீர் தேவையில்லை என்று கருதுகிறேன். சிரிப்பு.

திரு. எம். இராமச்சந்திரன்: ஆனால் நாட்டியக்கலை பாட்டுக் கலை வளருவதற்கு உணவு அவசியம். அந்த உணவைத் தான் தஞ்சை மாவட்டம் தந்து கொண்டிருக்கிறது. அது



இன்றைக்குச் சிரமமான சூழ்நிலையில் இருக்கிற காரணத்தால் தான் நான் இதையெல்லாம் சொல்லுகிறேன். ஆகவே தஞ்சை மாவட்டத்திலே இருக்கின்ற ஆழ் குழாய் கிணறுகளுக்கு மின்சாரம் தேவைப்படுகிறபோது மின்சாரத்தைத் தருவதற்கு தஞ்சை மாவட்டத்திற்கென்று தனியான முன்னுரிமையைத் தர வேண்டும் என்பதை இங்கே என்னுடைய கருத்தாகச் சொல்ல விரும்புகிறேன்.

11.25 மணி

அது மட்டுமல்லாமல் கரும்பு விவசாயிகள் எல்லாம் எத்தனையோ முறை போராடி கரும்புக்கு விலை உயர்வு தர வேண்டும் என்று கேட்டிருக்கிறார்கள். எனக்கு முன்னால் பேசிய உறுப்பினர்கள் எல்லாம் கூட சொன்னார்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: எல்லாவற்றையும் நீங்களே பேசினால் மற்ற உறுப்பினர்களுக்கு பேச ''Subject'', இருக்காது. நீங்கள் தண்ணீரோடு நிறுத்திக்கொள்ளுங்கள்.

திரு. எம். இராமச்சந்திரன்: இன்னும் ஒன்று சொல்லி விடுகிறேன். என்னுடைய தொகுதிக்காக ஒரு கோரிக்கையை பொதுப்பணித் துறை அமைச்சரிடமும், முதலமைச்சரிடமும் கேட்டேன். சென்ற ஆண்டே முதலமைச்சர் முத்துவாரி திட்டத்திற்கு ஒரு கோடி ரூபாயை ஒதுக்கினார்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இதையெல்லாம் ''Budget''ல் பேச வேண்டும்.

திரு. எம். இராமச்சந்திரன்: அதிலே பேச சந்தர்ப்பம் கொடுக்க மாட்டார்கள். ஏதாவது ஒன்றில் பேச வேண்டும் அல்லவா? 148 பேருக்கும் ஏது நேரம்? ஆகவே இப்போது சொல்லுகிறேன். இந்த ஆண்டு முதலமைச்சர் முத்துவாரி திட்டத்திற்கு நிதி ஒதுக்கினால் வேலைசெய்வதற்கு உதவியாக இருக்கும். மேலும் தஞ்சை மாவட்டத்தில் ஒரு தொழிற்சாலையை ஆரம்பிக்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: ஏற்கெனவே முதலமைச்சர் அவர்கள் 20 வட்டங்களைப் பின்தங்கிய தாலுக்காக்கள் என்று அறிவித்திருக்கிறார்கள்.

திரு. எம். இராமச்சந்திரன்: ஆனால் தொழிலைத் துவக்க யாரும் முன்வரவில்லை. தனியார் யாரும் முன்வரவில்லை. ஆகவே, நாம்தான், அரசாங்கம்தான் தொழிலைத் துவக்கவேண்டும். அது மட்டுமல்ல. இந்தத் துணை மானியக் கோரிக்கையில் நல்ல பல காரியங்களைச் சொல்லியிருப்பதால் அவைகள் அத்தனையும் வரவேற்கக் கூடிய விஷயங்கள் தான். இதிலே ஒரு

காரியத்தைச் சொல்லியிருக்கிறார்கள். சத்துணவுத் திட்ட அமைப்பாளர்களை யார் போட்டார்கள்? இந்த அரசாங்கத்திற்கும் அதற்கும் சம்பந்தமில்லை. இதிலே இந்த அரசாங்கம் மாறாக நடக்கிறது என்று சொன்னார்கள் அது சரியல்ல. சத்துணவு அமைப்பாளர்கள் வேறு அரசாங்கத்தால் போடப்பட்டவர்கள். இருந்தாலும் அவர்களுக்காக ஆயுள்காப்பீட்டுக் கழகத்திறகு இந்தக் கழகம்தான் பணம் கட்டுகிறது. திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிதான் அவர்களுக்காக பணம் கட்டி அவர்களை வாழ வைக்கிறது. அந்த வகையிலே அவர்கள் வாழ்வதற்கு ஒரு நல்ல வாய்ப்பு தரப்பட்டிருக்கிறது என்பது இந்த மானியக் கோரிக்கையில் குறிப்பிடப்பட்டிருப்பதால் அதை வரவேற்று, நன்றி தெரிவித்து, நான் விடைபெறுகிறேன். வணக்கம்.

* **திருமதி பாப்பா உமாநாத்** : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, துணை மானியக் கோரிக்கையின் மீது மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் சில கருத்துக்களை முன் வைக்க விரும்புகிறேன். சட்டப் பேரவையின் இந்தக் குறுகிய கால கூட்டத் தொடர் தொடங்கிய நாள் முதல் நடத்தப்பட்ட ரகளைகள் காரணமாக மக்கள் பிரச்சினைகளை இந்த மன்றத்தில் எடுத்து வைக்க முடியாத நிலையில் இந்த அவையின் நேரம் வீணடிக்கப்பட்டுவிட்டது. எனக்குக் கூட துணைச் சபாநாயகர் குறைவான நேரத்தைத்தான் கொடுத்திருக்கிறார். இப்படி நேரத்தை வீணாக்குவது என்பது சாதாரண விஷயமல்ல. இது ஜனநாயகத்திற்கு விரோதம் மட்டுமல்ல. வாக்களித்த மக்களுக்குச் செய்யு[ம்] துரோகமாகும் என்பதைச் சுட்டிக்காட்ட கடமைப்பட்டிருக்கிறேன். 1989 மார்ச் 25 ஆனாலும் சரி, 1991 சனவரி 23 ஆனாலும் சரி, அந்நாட்களில் நடைபெற்ற நிகழ்ச்சிகள் திட்டமிட்டு நடத்தப்பட்ட நிகழ்ச்சிகள் என்ற உண்மை வெளிப்படுத்தப்பட்டுவிட்டது. இவ்வளவையும் செய்துவிட்டு தி.மு.க. ஆட்சியில் ஜனநாயகம் செத்துவிட்டது என்று அறிக்கை விடுகிற பரிதாபகரமான நிலைமை ஏற்பட்டுள்ளது.

நாட்டு ஒற்றுமைக்கு ஆபத்து ஏற்பட்டுள்ளதா, வகுப்புவாத சக்திகளின் செயல்பாடு மக்களை நாசப்படுத்துகிறதா, வளைகுடா போரினால் ஏற்படும் விளைவுகள் நாட்டின் பொருளாதாரத்தை பாதிக்கிறதா, விலைவாசி ராக்கெட்டில் பறந்துகொண்டிருக்கிறதா என்பதைப் பற்றியெல்லாம் இந்தக் கட்சிகளுக்குக் கவலையில்லை. ''மகன் செத்தாலும் பரவாயில்லை, மருமகள் தாலி அறுக்கவேண்டும்'' என்ற எண்ணத்தோடு சட்டமன்றத்தை கலைத்துவிட்டு நாற்காலியில் உட்கார வேண்டும் என்று அலைகின்றனர். எதையெதையோ சொல்லிப் பார்த்தனர், எடுபடவில்லை, எரிச்சல்படுகின்றனர். மத்திய அரசு ஏன் இந்த மாநில அரசை கலைக்கவில்லை, இதுமெத்தனப்போக்கு என்று கண்டனத் தீர்மானத்தைப் போடுகிறார்கள். ஆனால் மத்திய அரசு தமிழகத்தை புறக்கணித்திருப்பது பற்றியோ, அரிசி அளவைக் குறைத்திருப்பது பற்றியோ, பல இரயில்வே திட்டங்களுக்கு ஒப்புதல்



(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை)

அளிக்க மறுத்திருப்பது பற்றியோ இவர்கள் அலட்டிக்கொள்ளவில்லை. இவர்களுக்கு ஏற்பட்ட ஏமாற்றத்தின் விளைவாக வன்முறையைத் தூண்டுவதற்காக இம்மாதம் 28ஆம் தேதி சாலை மறியல் என்ற பெயரால் ஒரு போராட்டம் நடத்தப் போகிறார்கள். மக்களைப் பெரிதும் பாதிக்கும் பிரச்சினைகளைப் பற்றி கவலைப்படாதவர்கள், மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசைக் கலைக்கக் கோருவதன் மூலமாக மக்கள் அளித்த வாக்குரிமையையே சவக் குழிக்கு அனுப்புகிறார்கள். இங்கே ஆட்சிக் கவிழ்ப்பை முறியடிக்க மட்டுமல்ல. அங்கே மையத்தில் துரோக ஆட்சியை முறியடிக்க; மையத்தில் ஜனநாயக, மதசார்பற்ற இடதுசாரிகளின் ஆட்சியை மீண்டும் அமைக்க தமிழக மக்கள் அனுப்பிவைக்கும் வகையில் முனைப்போடு ஈடுபட இந்த அரசும் ஆளுங்கட்சியும் முன்கை எடுத்து செயல்பட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

*11-30 மணி.*

தவறான மாயையில் திசை திருப்பப்படும் தமிழக மக்களை வென்றெடுக்க காரியங்களை உடனடியாகச் செய்யவேண்டும். தமிழகத்தில் கோடானுகோடி உழைப்பாளி மக்களின் நம்பிக்கையைப் பெறுவதற்கு அரசு செயல்படவேண்டுமென்று நான் வலியுறுத்த விரும்புகிறேன். ஆனால் அந்த உழைப்பாளர்கள் பற்றி ஆளுநர் உரையிலும் மற்ற எதுவும் குறிப்பிடப்படாமல் இருப்பது ஏமாற்றம் அளிப்பதாக இருக்கிறது. மூடப்பட்ட ஆலைகளைத் திறப்பதுபற்றி, தொழில் நசிவுகள்பற்றி எதுவும் குறிப்பிடப்படவில்லை. இந்த அரசு ஒரு சில பஞ்சாலைகளைத் திறந்துள்ளது என்பதை நான் மறுக்கவில்லை; வரவேற்கிறேன். ஆனால் இன்னும் பல திறக்கப்படாமல் இருக்கின்றன என்பதை நினைவுபடுத்த விரும்புகிறேன்.

ஸ்டாண்டர்டு மோட்டார்ஸை இரண்டாண்டுகளுக்கு முன் தமிழக அரசு எடுப்பதாகச் சொன்னது. 3 கோடி ரூபாய் தருவதாகவும் சொல்லப்பட்டது. ஆனால், திரு. ஏ. சி. முத்தையா செட்டியார் 'முடியாது' என்று கைவிரித்ததை எப்படி அனுமதிக்க முடியும் ? முரண்டுபிடிக்கும் முதலாளிகளை வழிக்குக் கொண்டுவர, தொழிலாளர்களைப் பாதுகாக்க உறுதியான நடவடிக்கை வேண்டாமா என்று நான் அரசைக் கேட்க விரும்புகிறேன். அது மட்டுமல்ல, பின்னி தொழிற்சாலைபற்றி இங்கே காலையில் கூட பேசப்பட்டது. 8,000 தொழிலாளர்களின் வாழ்க்கைப் பிரச்சினை அது. ஆனால் பின்னி நிர்வாகத்தின் சொல்படி புவனகிரிக்கு மாற்றுவது என்பது நிர்வாகத்தின் யோசனை. ஐ.டி.பி.ஐ. (I.D.B I.) கடன்கொடுப்பதற்கு அதை ஒரு நிபந்தனையாக விதிக்கவில்லை என்பதை ஞாபகப்படுத்த விரும்புகிறேன். இங்கே

சென்னையிலேயே அதை நவீனப்படுத்த முடியும். எனவே இங்கேயே அந்த மில்லை நடத்துவதற்கு அரசு வலியுறுத்தவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அது மட்டுமல்ல பின்னி நிர்வாகத்தின் போர்டில் 13 இயக்குநர்கள் 4 பேர்தான் உடையார் நிர்வாகத்தைச் சேர்ந்தவர்கள். 9 பேர் மத்திய, மாநில மற்றும் பொது நிறுவனங்களின் பிரதிநிதிகள். தமிழ்நாடு அரசின் கைத்தறி இயக்குநர் அதில் ஒரு டைரக்டர். அப்படி 9 பேர் அரசின் பிரதிநிதிகளாக இருந்தும் எப்படி போர்டில் அதை மூட அனுமதித்தார்கள் என்பதை நான் கேட்க விரும்புகிறேன். உடையார் நிர்வாகத்திலிருந்து ராமச்சந்திரா நிறுவனத்தை விடுவித்த அரசு ஏன் 8000 தொழிலாளர்களின் குடும்பங்களை வாழ்விக்க பின்னி மில்லை ஏற்கக்கூடாது என்று கேட்க விரும்புகிறேன். ஆகவே மத்திய அரசுடன் பேசி இதற்கு வழிவகை காணவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல, தண்ணீர் இல்லை, அது இல்லை என்று சொல்கிறார்கள். அந்தப் பகுதியை பிளாட் போட்டு விற்க உடையார் வகையறா விரும்புகிறார்கள். ஆகவே அப்படி செய்வதைத்தடுத்து, மில்லைத் திறக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று இதில் கறாராக அரசு இருக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். பல்லாயிரக்கணக்கான குடும்பங்கள் இந்தத் தொழில் மூடப்பட்டதால் அல்லல்படுகிறார்கள். அந்த மில்லைத் திறக்க நடவடிக்கை எடுங்கள்.

இந்த மன்றத்தில் பலமுறை எழுப்பப்பட்ட ஒரு பிரச்சினை சென்னை உரத்தொழிற்சாலை கான்ராக்ட் தொழிலாளர்கள் பற்றி. 1,200 பேர் இரண்டாண்டு காலமாக வீதியில் நிறுத்தப்பட்டுள்ளனர். அந்த நிர்வாகம் தொழிலாளர் சங்கத்துடன் தொழிலாளர் ஆணையர் மத்தியில் பேச மறுத்து வருகிறது. அமைச்சர் கூறிய உறுதியை ஏற்றுக் கொண்டது. ஆனால் இப்போது மறுத்து வருகிறது. இந்த ஆணவத்தை முறியடிக்க வேண்டாமா என்று கேட்க விரும்புகிறேன்.

இதேபோல, அரசுப் பொறுப்பில் உள்ள கனிம நிறுவனத்தின் எம்.டி. 15 மாதங்களாக 200 தொழிலாளர்களை வீதியில் நிறுத்தி பலகோடி ரூபாய் மதிப்புள்ள உற்பத்தியை பாழடித்துக்கொண்டிருக்கிறார். கோர்ட் தீர்ப்பை அவமதித்திருக்கிறார். இதுபோல குடிநீர் வடிகால் வாரியத்தில் தாற்காலிகமாக உள்ள ஊழியர்கள் 7 ஆண்டுகள் பணியாற்றியவர்கள்கூட வெளியில் நிறுத்தப்பட்டிருக்கிறார்கள். பொதுப்பணித்துறையில் 10 ஆண்டுகள் வேலை புரிந்தவர்கள் பணி நிரந்தரம் செய்வது தள்ளிப்போடப்பட்டு வருகிறது. சத்துணவு ஊழியர்களுக்குக் குடும்பப் பாதுகாப்புக் கொண்டு வந்து இருப்பது வரவேற்கத்தக்கது. ஆனால் அவர்கள் ஊதியத்தை உயர்த்துவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.



மிக முக்கியமாக இங்கே நான் குறிப்பிட விரும்புவது, விலைவாசி உயர்வு பற்றி. எகிறிப் பாய்ந்து கொண்டிருக்கும் விலைவாசி குறித்து வளைகுடாப் போரைச் சாக்கிட்டு, அத்தியாவசியப் பொருட்கள் விலை கடுமையாக உயர்ந்திருக்கிறது. மக்களைக் கொள்ளையடிக்க தமிழகம் முழுவதும் வர்த்தக முதலைகள் பலர் ஈவிரக்கம் இன்றி இறங்கியுள்ளனர். குடும்பம் நடத்த முடியாமல் ஏழை மக்கள் மட்டுமல்ல. மத்திய தர வர்க்கத்தைச் சேர்ந்தவர்கள்கூட மிகவும் அல்லல் பட்டுக்கொண்டிருக்கிறார்கள். குடும்பத்தை நடத்தக்கூடிய பெண்கள் மிகவும் துன்பத்தில் அழுத்தப்பட்டிருக்கிறார்கள். சமையல் எண்ணெய், பருப்பு, பயறுவகைகள், காய்கறி வகைகள், தக்காளி, வெங்காயம் ஆகியவற்றின் விலைகள் கடந்த பத்து தினங்கள் மேலும் ஏறியிருக்கின்றன. தக்காளி ரூ. 10 முதல் 12 ரூபாய் வரையிலும், வெங்காயம் ரூ. 9 முதல் ரூ. 10 வரையிலும், உருளைக் கிழங்கு 8 ரூபாய் வரையிலும், கத்தரிக்காய் 10 ரூபாய் வரையிலும்-இப்படி எல்லாக் காய்கறிகளும் இறக்கை கட்டிக் கொண்டு பறக்கின்றன. யுத்தம் தொடங்குவதற்கு முன்பு சுத்திகரிக்கப்பட்ட கடலை எண்ணெய் ரூ. 44-க்கு விற்றது. இப்போது 52 ரூபாய்க்கு விற்கிறது. ரூ.37க்கு விற்ற நல்லெண்ணெய் ரூ. 41க்கு விற்கிறது. சூரியகாந்தி, எண்ணெய் ரூ. 58 முதல் 60 ரூபாய் வரை விற்கிறது. துவரம் பருப்பு ரூ. 16 லிருந்து ரூ. 18 வரை விற்கிறது. இன்றைக்கு படிக்கும்போது கூட விலை ஏறியிருக்கலாம். இந்தப் பிரச்சினையில் அரசு உடனடியாகத் தலையிட வேண்டும்.

11-35 மணி

நம்முடைய உணவுத் துறை அமைச்சர் அவர்கள் நேற்றைய தினம் நிருபர்களிடம் அளித்த பேட்டியில் சில நடவடிக்கைகளைச் சொல்லியிருக்கிறார்கள். அதெல்லாம் போதாது. என்னுடைய ஆலோசனையாகத் தெரிவிப்பது குடும்ப அட்டைதாரர்களுக்கு இதுபோன்ற பொருள்களை கொள்முதல் செய்து அரசே மலிவான விலையில், நியாயமான விலையில் விநியோகிக்க வேண்டும். கேரளா மாநிலத்தில் இதுபோன்ற ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. அந்த முறையில் அரசு கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். விலைவாசி உயர்விற்கு சில்லரை வியாபாரிகள் மொத்த வியாபாரிகளை குற்றம் சொல்கிறார்கள். மொத்த வியாபாரிகள் லாரி கட்டண உயர்வால் தான் இப்படி உயர்ந்துவிட்டது என்று சொல்கிறார்கள். லாரிகாரர்கள் அதிலே 10 சதவீதம்தான் லாரி கட்டணம். மொத்த வியாபாரிகள்தான் கொள்ளையடிப்பதாகச் சொல்கிறார்கள். யார் என்ன செய்தாலும் குற்றவாளிகளைக் கண்டுபிடிப்பது நல்லது. பதுக்கினால், கள்ளமார்கெட் செய்தால், விலையை உயர்த்தினால் கடுமையான தண்டனை கிடைக்கும் என்ற பயம் அவர்களுக்கு இருக்க வேண்டும். தமிழக அரசு சும்மா விடாது இந்த விஷயத்திலே என்ற அச்சத்தை அவர்களுக்கு ஏற்படுத்தக்கூடிய முறையில் நட

வடிக்கையெடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதன் மூலமாக பல்லாயிரக்கணக்கான பெண்கள், ஏழை எளிய நடுத்தர மக்களின் பேராதரவை இந்த அரசு பெற முடியும் என்பதை நான் அன்போடு தெரிவிக்க விரும்புகிறேன். (மணியடிக்கப்பெற்றது) முடித்துவிடுகிறேன். எனது தொகுதி உள்பட தமிழகத்தில் பல இடங்களில் குடிமனைப்பட்டா நீண்டகாலமாக கிடைக்காமல் பல்லாயிரக்கணக்கான மக்கள் தவிக்கிறார்கள். குறிப்பிட்ட கால அவகாசத்தில் விரைவில் இந்த பட்டாக்கள் கிடைக்க அரசு நடவடிக்கையெடுக்க வேண்டும். அதன்மூலம் ஏராளமான ஏழைகள் ஆதரவை நாம் வென்றெடுக்க முடியும்.

அதைப்போல ரேஷன் கார்டுகள் கிடைக்கவில்லை. இடையில் அரசு தருவதாகச் சொல்லி பிறகு தருவதில்லையென்று எடுத்த முடிவின் காரணமாக மக்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். இது பற்றி உடன் கவனம் செலுத்தி, 2, 3 மாதங்களில் அதனைக் கொடுப்பது நல்லது. கள்ளக் கார்டுகள் 100 பிடித்தால் 50 புதிய கார்டுகள் கொடுக்க முடியும் என்று சொல்வதை ஏற்றுக் கொள்ள முடியாது. கள்ளக் கார்டுகள் இருப்பது நம்மைப் போன்றவர்களுக்கு தெரியாது. ஆனால் அது நியாய விலைக் கடைகளில் பணியில் இருப்டவர்களுக்குத் தெரியும். அவர்களுக்கு ஏதாவது சன்மானம் தருவதாகச்சொல்லி 2,3 மாதங்களில் அந்தக் கள்ளக் கார்டுகளை பிடித்துத் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்ளலாம் என்று நான் நினைக்கிறேன்.

அடுத்து, பெண்கள் மீதான கொடுமைகள் பற்றிய வழக்குகளில் விரைவாக நடவடிக்கையெடுக்கப்படவேண்டுமென்பது என்னுடைய கருத்து. குறிப்பாக ஆளுநர் ஆட்சியில் 1988ஆம் ஆண்டு ஜனவரியில் தளி என்ற ஊரில் காவல் நிலையத்தில் கல்பனா சுமதி என்ற ஆசிரியர் கொடுமையாகக் கற்பழிக்கப்பட்ட வழக்கு 2½ ஆண்டுகள் ஆகியும் கூட செஷன்சில் விசாரணைக்கு எடுக்கப்படாமல் இருக்கிறது. அதற்கு சார்ஜ் ஷீட் போடப்படவில்லையென்று சொல்கிறார்கள். நம்முடைய சட்ட அமைச்சர் அவர்கள் இங்கே இருக்கிறார்கள். அவர்கள் உடனடியாகத் தலையிட்டு செஷன்சில் அதை விசாரணைக்கு எடுப்பதற்கு நடவடிக்கையெடுக்க வேண்டும். இதுபோன்ற குற்றங்கள் நிகழும்போது வழக்குகள் துரிதமாக நடப்பது உண்மையிலேயே அந்தப் பெண்களுக்கு நியாயம் கிடைக்கக் கூடிய நிலை ஏற்படும். அந்த வகையில் நம்முடைய தமிழக அரசு பரிவோடு அதன்மீது நடவடிக்கையெடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

தமிழக அரசின் பொதுத் துறை நிறுவனமான பெரம்பலூர் சர்க்கரை ஆலையில் தினக்கூலியாக 1978 ஆகஸ்ட் முதல், ஆலை தொடங்கிய காலத்திலிருந்து வேலை செய்த 33 தொழிலாளர்களை வேலைக்கு எடுக்காமல் அந்த மேனேஜிங் டைரக்டர் பிடிவாதமாக இருக்கிறார். அவர்கள் உயர்நீதிமன்றத்தில் வழக்கு



போட்டு ஆணையும் பெற்றிருக்கிறார்கள். அந்த ஆணையை நிறைவேற்ற அந்த எம். டி. மறுக்கிறார். அதிலே நீங்கள் நடவடிக்கையெடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்த அரசின் நல்ல பல திட்டங்கள் சரிவர மக்களுக்கு சேர்வதில்லை. திருமண உதவிப் பணத்தில் கட்டுப்பாட்டை ஏற்படுத்துவதால் திருமணம் முடிந்து தாமதமாகத்தான் உதவி கிடைக்கிறது. அதேபோல விதவைகளுக்கு வயது கட்டுப்பாடு இல்லையென்று இந்த மாமன்றத்தில் அறிவிக்கப்பட்டது. ஆனால் இப்போது வயது கட்டுப்பாடு இருப்பதாக பல மாவட்டங்களில், வட்டங்களில் தாசில்தார்கள் கூறுகிறார்கள். அதுபற்றி விளக்கமாக குறிப்பை அரசாங்கம் அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

நிலச்சீர்திருத்தம் சம்பந்தமாகச் சொல்வது கிராமங்களில் இருக்கிற பினாமி நிலங்களைக் கைப்பற்றி, அவைகளை நிலமற்ற விவசாயிகளுக்கு அளித்தோம் என்று சொன்னால் உண்மையில் நல்ல நடவடிக்கைகளை எடுக்க வாய்ப்பு ஏற்படும் என்பதை நான் தெரிவிக்க விரும்புகிறேன்.

தமிழகத்தில் மறுக்கப்பட்ட ரெயில்வே திட்டங்கள் சம்பந்தமாக சொல்ல விரும்புகிறேன். சென்னை புறநகர் ரெயில் வசதி நீட்டிப்பு செய்வதில் வில்லிவாக்கத்திற்கும் அண்ணா நகருக்கும் இடையில் மூன்று கிலோமீட்டர் தூரத்திற்கு ரெயில் பாதை அமைக்கும் திட்டமும், சென்னை அகல ரெயில் பாதைப் போக்குவரத்துக்கு இரண்டாவது முனையம் அமைக்கும் திட்டமும், செங்கல்பட்டு—திண்டிவனம் குறுகிய ரெயில் பாதையை இரட்டைத் தடப் பாதையாக மாற்றும் திட்டமும், திண்டிவனம் - விழுப்புரம் குறுகிய ரெயில் பாதையில் மைலத்திற்கும் பேரணைக்கும் இடையே இரட்டைத் தடப் பாதை அமைக்கும் திட்டமும் அமைவதற்கான கருத்துருக்களுக்கு ரெயில்வே போர்டு மறுப்பு தெரிவித்து இருக்கிறது. அந்த மறுப்பை ரத்து செய்ய வேண்டுமென்று கேட்டு நாம் மீண்டும் நடவடிக்கையெடுக்க வேண்டும்.

சில அலுவலகங்களில் அதிகாரிகள், உடன் வேலை செய்யக் கூடிய பெண்களிடம் தகாத முறையில் நடக்கக்கூடிய ஒரு சூழ்நிலை ஏற்பட்டு இருக்கிறது. நம்முடைய வேளாண்மைத்துறை அமைச்சர் அவர்களிடம் கூட இதைப் பற்றி நான் குறிப்பிட்டு இருக்கிறேன். ஆகவே, இதுபோன்ற விஷயங்களில் அரசு உடனடியாக கவனம் செலுத்தவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

11-40 மணி

முந்தைய ஆட்சியில் பணி நீக்கம் செய்யப்பட்ட காவல் துறையினர்களுக்கு ஆண்டுகள் 2 ஆகியும்கூட ஒரு பகுதியினருக்கு வேலை இன்னும் கிடைக்கவில்லை. ஜான் "பிரிட்டோ

[திருமதி பாப்பா உமாநாத்] [1991 சனவரி 24

அவர்கள் தலைமையிலே இருக்கக்கூடிய அவர்களுக்கு, நம்முடைய அரசு தேர்தலில் வாக்குறுதி கொடுத்ததுபோல நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

எப்படியிருப்பினும் நம்மை எதிர்க்கக்கூடியவர்கள் இன்றைக்கு தமிழகத்தின் நிலையை நிர்ணயிக்கக்கூடியவர்கள் அல்ல. நாம் இன்றைக்கு பல நல்ல திட்டங்களைப் போட்டு மக்களை வென்று எடுக்கக்கூடிய முறையில் நடவடிக்கை எடுத்தால், மக்களிடம் அந்தக் கருத்தை எடுத்துச் சென்றோம் என்று சொன்னால், நிச்சயமாக கலைப்பு நடவடிக்கை மட்டுமல்ல, எல்லாவிதமான ஜனநாயகத்திற்கு விரோதமான நடவடிக்கைகளையும் கூட முறியடிக்க முடியும் என்ற நம்பிக்கையோடு அரசு நல்ல காரியங்களை மேலும் தொடங்க வேண்டும் என்று கேட்டு, அமைகிறேன்.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர் : மாண்புமிகு தற்காலிக சபாநாயகர் அவர்களே, இந்த இரண்டாவது துணை நிதிநிலை மதிப்பீட்டில் எங்கள் கட்சியின் சார்பாகச் சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். இன்றைக்கு எத்தனையோ இலாக்காக்கள் நாட்டிலே முளைத்துக் கொண்டே வருகின்றன. அதற்கு கணக்கே கிடையாது. இன்னும் எவ்வளவு வரப்போகிறது என்று தெரியவில்லை. இந்த மதிப்பீட்டிலே, பட்ஜெட் போடும்போது, இத்தனை கோடி ரூபாய் வரவு, இத்தனை கோடி ரூபாய் செலவு என்று சொல்லும்போது சில இக்கட்டான நேரத்தில், சில ஐட்டங்களிலே கூடுதல் செலவும், சிலவற்றில் வரவும் வரலாம். இப்போது இருக்கிற இந்த விலைவாசியிலே வரவும் இன்னும் ஏறிக்கொண்டே போகும். ஆமாம். செலவு ஐட்டங்கள் எத்தனையோ இருக்கின்றன இதிலே. 10 ஐட்டங்கள் போட்டு இருக்கிறார்கள் செலவுக்கு.

ஏற்கனவே இந்த விற்பனை வரி என்பது ஸ்ரீ ராஜகோபாலாச்சாரி காலத்திலே, ரூபாய்க்கு 192 பைசா என்று இருந்தபோது, ஒரு பைசா போட்டார்கள். ஒரு ரூபாய்க்கு 192 பைசா என்று இருந்தபோது, 1 பைசா போட்டார்கள். அது எப்படியோ, வளர்ந்து, வளர்ந்து, வளர்ந்து, இப்போது 1 ரூபாய்க்கு 100 பைசா என்று இருக்கிற நேரத்திலே, விற்பனை வரி என்பது, இந்தக் கலியுகத்திலே காமதேனு மாதிரி வசூலாகிக்கொண்டேயிருக்கிறது. மாதிரி என்ன, காமதேனுதான்.

இப்போது விலைவாசியைப் பற்றி அம்மா பேசும்போது சொன்னார்கள் பாருங்கள். எண்ணெயைப் பற்றி, 54 ரூபாய், 52 ரூபாய், 58 ரூபாய் என்று ஏற்றிக்கொண்டே போகிறது என்று சொன்னால், இனிமேல் எண்ணெயாவது, கிண்ணெயாவது, எண்ணெயை நான் மறந்துவிட வேண்டியதுதான். என்னுடைய தலைக்கு கொஞ்சம் இருந்தால் போதும். கிராப் வைத்திருப்பவர்களுக்கு எவ்வளவு செலவாகும்? எனக்கு 5



1991 சனவரி 24] [திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர்]

ரூபாய் எண்ணெய் இருந்தால் போதும். ஆனால் அதைக்கூட வாங்க முடியவில்லை. (குறுக்கீடு) 1 ரூபாய் கொடுத்து பழனியிலே போய் மொட்டை அடித்துக் கொண்டு வந்துவிடுங்கள் என்று கூறுகிறார்கள், நம்முடைய அமைச்சர் அவர்கள். அது வாஸ்தவம்தான். நல்ல பதில்தான் இதற்கு. ஏன் என்றால் விலைவாசியை இறக்க முடியாது. நான் எண்ணெய் என்று சொன்னால், நீங்கள் கல்ப் எண்ணெய் என்று நினைத்துவிடாதீர்கள். அங்கேயிருந்து வருகிற பெட்ரோல், கிட்ரோல் அது எல்லாம் பணக்காரர்கள் உபயோகப்படுத்துகிற எண்ணெய். ஏழைகள் உபயோகப்படுத்துகிற எண்ணெயைத்தான் நான் சொல்கிறேன். சில பேர்கள் சொல்கிறார்கள். வார் வந்துவிட்டது. சண்டை வந்துவிட்டது என்று. நான் இரண்டு உலக மகா யுத்தங்களைப் பார்த்தவன். இரண்டாவது யுத்தத்தை 1939-லிருந்து 1945 வரையில் நடந்ததைப்பற்றி, அன்றைக்கு 'புரோகிபிட்டட் ஏரியா' என்று சொல்வார்களே, அங்கே ரேடியோ வைத்துக் கேட்டுக் கொண்டே இருப்போம். வேறு வேலையே கிடையாது எங்களுக்கு. படிக்கத் தெரியுதோ, இல்லையோ, அவன் என்ன சொல்றான், இவன் என்ன சொல்றான் என்று கேட்டுக் கொண்டு இருப்போம். அந்த யுத்தத்திலேகூட இவ்வளவு சிரமப்படவில்லை. இப்போது இந்த 6 நாள் யுத்தத்திலே விலை ஏறிக்கொண்டே போய்க் கொண்டிருக்கிறது. எது மேலே ஏறுகிறது என்று தெரியவில்லை. ஸ்ரீரங்கம் ராஜகோபுரத்து மேலே ஏறிவிட்டதா, அல்லது வேறு எந்த கோபுரத்தின் மேலே ஏறிவிட்டதா என்று தெரியவில்லை. ஏறிக்கொண்டே தான் இருக்கிறது. இன்றைக்கு ஏறவில்லை. 43 வருடத்திலே ஏறிக்கொண்டே இருக்கிறது. இடையிலே நாங்கள் எங்கள் ஆட்சியை 2½ வருடம் நடத்தினோம், இப்போது 11 மாதம் நடத்தினோம். அவ்வளவுதான். விலை என்ன காரணத்தாலே ஏறுகிறது. அதற்கு என்ன செய்வது, அதைக் குறைப்பதற்கு என்ன வழி என்பதைப் பற்றி, மத்திய அரசும் மாநில அரசும் சேர்ந்து தான் செய்யவேண்டும். விலை ஏறிவிட்டது, விலை ஏறிவிட்டது என்று சொன்னால் போதாது, அது ஏறிக்கொண்டுதான் இருக்கும். ஜனங்கள் சாப்பிட்டுக் கொண்டுதான் இருப்பார்கள், எப்படியோ.

ஒரு ஹோட்டலுக்குப் போக முடியவில்லை. ஏன் ஐயா, இட்டிலி போடவில்லை இன்று என்று கேட்டால், எங்களுக்குக் கட்டுப்படியாகவில்லை என்று சொல்கிறார்கள். ரூ. 3.75 தோசை என்கிறார்கள். தப்பித் தவறி வேறு தோசை கொண்டு வா என்றால், 5 ரூபாய் என்று சொல்கிறான். போன வாரம் இருந்த விலை இந்த வாரம் இல்லை என்று சொல்கிறான். அதோடு அது வேறு சுருங்கிக் கொண்டே போய்க் கொண்டிருக்கிறது. போன வாரம் இருந்த விலையைவிட இந்த வாரம் ஏறிப் போய்விட்டது. சாமான்கள் எல்லாம் சுருங்கிக் கொண்டே வந்து கொண்டு இருக்கிறது இப்போது.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை.)

நாட்டிலே உள்ள உற்பத்தியைப் பற்றிச் சொன்னார்கள். நண்பர் ராமச்சந்திரன் அவர்கள் காவிரியைப் பற்றிச் சொன்னார்கள். எப்படிப்பட்ட நிலைமை இருக்கிறது என்று. காவிரித் தண்ணீரைப் பற்றி நாம் சண்டை போட்டுக்கொண்டே இருக்கிறோம். மைசூரிலே எந்த கவர்ன்மெண்ட் இருந்தாலும் சரி, ஜனதா தள கவர்ன்மெண்ட் இருப்பதாலே தண்ணீர் விடமாட்டான் என்று இங்கேயிருக்கிற காங்கிரஸ்காரர்கள் சொல்வார்கள்.

அங்கே காங்கிரஸ்காரர்கள் இருக்கும்போது தண்ணீர் வரவில்லை என்று சொன்னால், காங்கிரஸ்காரர்களால்தான் தண்ணீர் வரவில்லை என்று இங்கே சிலர் சொல்வார்கள். இரண்டுக்கும் பொது, மழையே வரவில்லை. அதைச் சொல்ல மாட்டார்கள். இங்கேயிருந்து பழிச்சொல் அவனைச் சொல்வது, அங்கேயிருந்து பழிச்சொல், இவனைச் சொல்வது. இதுதான் நடக்கிறது. காவிரியிலே 1924ஆம் வருடம், ரக்தாஷி வருடம், வெள்ளம் வந்தபோது, எனக்கும் தெரியும். 18 நாள் வெள்ளம். எங்கள் ரயில்வே ஸ்டேஷனைக் கூட அடித்துக் கொண்டு போய் விட்டது. காவிரிக்கும் கொள்ளிடத்திற்கும் மத்தியில் இருப்பது ஸ்ரீரங்கம். டெல்டா ஏரியாவாக இருப்பதினால் தீவு மாதிரி அது. பூராவும் முழுகிவிட்டது. 18 நாட்கள் அவ்வாறு கஸ்டப் பட்டோம். அப்போது அந்தத் தீவிற்குள்ளேயே இருந்திருக்கிறேன். ஸ்ரீரங்கம் கோவில், திருவானைக்காவல் கோவில்கள் பெரிய கோவில்கள். அந்தக் கோவில் கோபுரங்கள் மேலே 10 ஆயிரம் பேர். 5 ஆயிரம் பேர் நின்று கொள்ளலாம். அந்த மாதிரிக் கட்டிடம் அது. அப்போது அங்கே வருகிற தண்ணீரை வைத்து 1924-லே ஒப்பந்தம் போட்டார்கள். இவ்வளவு தண்ணீர் 18 நாட்களுக்குத் தாங்காது என்று ஒப்பந்தம் போட்டார்கள். அதற்குப் பிறகு மழை கொஞ்சம் கொஞ்சமாகக் குறைந்து, குறைந்து, குறைந்து இப்போது மழையே இல்லையா என்று தெரியவில்லை, இல்லை அணையை அடைத்து விட்டார்களா என்றும் தெரியவில்லை.

11-45 மணி

நான் போய் ட்ரிபியூனல் வேண்டுமென்று ரொம்ப தூரம் போய் கேட்டேன். டில்லிக்கு இரண்டு தரம் போனேன். மீட்டிங்குக்குப் போய், மெட்ராஸ் வருவதற்குள், நாளைக்கே வந்து விடும் என்று நிச்சயமாக சொன்னதோடு சரி, ஆக இரண்டு வருஷம் போயாச்சு. இன்னும் வந்தபாடில்லை. இந்திரா காந்தி இருந்த போதும் போனேன். ராஜீவ் காந்தி இருந்த போதும் இரண்டு தடவைகள் எத்தனையோ பேர் போய் அந்தக் கமிட்டியிலே வாதாடினோம். இன்னும் தண்ணீரைக் காணோம். அங்கிருந்து, டிரிப்யூனல் போடப் போகிறோம் என்றார்கள். ஏதோ நம்முடைய கலைஞர் காலத்தில், கலைஞருடைய சகலை இருந்த



காலத்தில், வி.பி. சிங் இருந்த காலத்தில் ஒரு டிரிப்யூனலை அமைத்தார்கள். இல்லையென்றால் நாம் இந்த டிரிப்யூனலையே எதிர்பார்த்திருக்க முடியாது. சரி, டிரிப்யூனல் போட்டால் நமக்கு சாதகமாக இருக்கும். தண்ணீர் வந்து விடும் என்று எதிர்பார்த்தோம். (மணியடிக்கப்பெற்றது) (குறுக்கீடு) ஆரம்பித்து ஒரு நிமிடம்தான் ஆனது. இதோ பாருங்கள், இன்னும் இவ்வளவு இருக்கிறது. இரண்டு கட்சிகள் வெளியே போய்விட்டன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** ஐயா, இதை முடித்து 9 சட்டமுன்வடிவுகள் இருக்கின்றன.

**திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர் :** இருக்கட்டுமே ; (சிரிப்பு) நான் வேண்டாமென்று சொன்னேனா ?

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மாலையில் பேசுகிறீர்களா ? இல்லை, இத்தோடு சேர்த்துக் கொள்கிறீர்களா ? மாலையிலும் ஒரு முறை பேசுவதற்கு வாய்ப்பு இருக்கிறதே, எப்படி ?

**திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர் :** கவர்னர் உரை என்பது கிட்டத்தட்ட 15 நாட்கள் நடந்திருக்கிறது. இப்போது நீங்கள் 5 நாட்களிலே முடித்து விடுகிறீர்களே ?

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இது ஆளுநர் உரை இல்லை. ஆளுநர் உரையிலே நீங்கள் மாலையிலே பேசப் போகிறீர்களா ? இல்லையா ?

**திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர் :** இல்லை, சப்ளிமெண்டரி பட்ஜெட்டும் சேர்ந்து தானே வந்திருக்கிறது. இல்லாவிட்டால் அதைத் தனியாக வைத்துக் கொள்ளலாமே !

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மாலையில் நீங்கள் பேசுவதற்கு வாய்ப்பு இருக்கிறது. இதிலே முடித்து விட்டால் அதற்குப் போகலாமே.

**திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர் :** டிரிபியூனல் வைத்தால் நாக்கு சாதகமாக இருக்கும் என்றாலும் வரவில்லை. இனிமேல் தண்ணீர் வரவில்லை என்றால் தஞ்சாவூர் மட்டுமல்ல. அவர் தஞ்சாவூரைப் பற்றி மட்டுமே பேசினார். திருச்சிராப்பள்ளியிலே ஏதோ ஒரு பகுதி, தொட்டியம் பகுதி மட்டும் தான். பாக்கிப் பகுதிகள் எல்லாம் காய்ந்து, காய்ந்து, காய்ந்து, நித்தியக் காய்வு தான். எப்படி வீட்டில் வந்து, கரி அடுப்பு, காஸ் அடுப்பு, மரத்தூள் அடுப்பு, சீமை எண்ணெய் அடுப்பு என்றெல்லாம் வைத்திருக்கிறோமே அது மாதிரி சாகுபடி பண்ணுகிறவன் மண்வெட்டியை மட்டும் வைத்து தண்ணீர் எடுக்க முடியாது. பம்ப், கிணறு இறக்க வேண்டும். அதற்குப் பிறகு பில்டர்

[திரு ஓய். வெங்கடேஸ்வர தீட்சிதர்] [1991 சனவரி 24

பாயிண்ட் இறக்கவேண்டும். இத்தனைக்கும் ஏற்பாடு பண்ண வேண்டும். இப்போது கலைஞர் இலவச மின்சாரம் கொடுத்து விட்டார். விவசாயிகளுக்கு எல்லாம் கரண்ட் சப்ளை இலவசம் என்று கொடுத்துவிட்டார். நாங்கள் எல்லாம் இராத்திரி சுச்சைப் போட்டுவிட்டு படுத்துக்கொள்கிறோம். அது ஓடினால் என்ன ? எப்படியிருந்தால் என்ன ? எங்களுக்குப் பொறுப்பில்லை. ஏதாவது பொறுப்பு இருந்தால்தானே ? 10 பைசா என்று வைத்திருந்தால் தானே, அரசாங்கத்திற்கு 10 பைசா கொடுக்க வேண்டுமென்று பொறுப்போடு இருந்து எழுந்துபோய் அணைப்பான். சரி இலவச கரண்ட் தானே, சர்க்கார் கரண்ட் தானே போகிறது என்று சொல்லி ராத்திரி சுச்சைப் போட்டுவிட்டு தூங்கிவிடுகிறான். காலையிலே போய்ப் பார்த்தால் தண்ணீர் அடியிலே இறங்கிப் போயிருக்கும். கீழே தண்ணீர் எங்கே இறங்கிப் போய் விடுகிறது ? லேண்ட் வாட்டர் அடியில் இறங்கிப் போய்விடுகிறது. நான்கு பேர் சேர்ந்தாற் போல் போட்டுவிட்டால் தண்ணீர் வருவதே இல்லை. சர்க்கார் கரண்ட் தானே, அவர்கள் பணம் கொடுப்பதே இல்லை. ஆகவே அதைப்பற்றி அவன் கவலைப்படுவதேயில்லை. வயலுக்கும் பிரயோசனம் இல்லை. எங்களுக்கும் பிரயோசனம் இல்லை. சர்க்காருக்கும் பிரயோசனம் இல்லை. இந்த மாதிரி நாட்டில் விவசாயம் நடந்து கொண்டிருக்கிறது. நான் கூட 3 பம்ப்செட் வைத்திருக்கிறேன். நான் விவசாயிதான். விவசாயம் பண்ணிக் கொண்டிருக்கிறேன். நான் நடைமுறையைத்தான் சொல்கிறேன்.

முக்கியமான சமாச்சாரம் சொல்கிறேன். இந்தக் கல்வி ஸ்தாபனங்களுக்கு எல்லாம் நாம் என்ன பண்ணிக்கொண்டிருக்கிறோம் ? இத்தனை நாள் நாட்டில் படிப்பு இல்லை. 32 பர்செண்ட்தான். (குறுக்கீடு) எனக்கு விவசாயம்தான் தெரியும். படிக்கக் கூட ஒழுங்காகத் தெரியாது. கல்வி நிறுவனங்களுக்கு இப்போது புதியதாக வரி போடுகிறார்கள். நாம் கல்வி ஸ்தாபனத்தை நடத்த வேண்டும். கல்வியை வளர்க்க வேண்டும். நம் நாட்டிற்கு சுதந்திரம் கிடைத்து 43 வருஷங்கள் ஆகியும் கல்வியைப் பொறுத்தமட்டில் 32 சதவீதம் தான். எலக்ஷன் கமிஷனிடம் கேட்டால், ஏன் ஐயா பொம்மைக்கு ஓட்டுப் போடுகிறேன் என்று கேட்டால், கைக்கு ஓட்டு போடு, காளைக்கு ஓட்டு போடு, சூரியனுக்கு ஓட்டு போடு, மரத்திற்கு ஓட்டுப் போடு, இலைக்கு ஓட்டு போடு என்றால், ஐயா உங்களுக்கு இன்னுமா ஒன்றும் தெரியவில்லை. 32 பர்சன்ட் தான் படித்திருக்கிறார்கள். 68 பர்சன்ட் இன்னும் படிக்கவில்லை என்கிறார்கள். அந்த நிலைமையில் தான் நாம் இன்னும் இருக்கிறோம். நம்மோடு சுதந்திரம் வாங்கிய நாட்டிலுள்ளவர்கள் எப்படி இருக்கிறார்கள் என்று கேட்டால், மிலிட்டரிக்கு வா என்றால் துப்பாக்கி எடுத்துக்கொண்டு ஓடுகிறான். துப்பாக்கியை எடுத்து சுடக் கூடிய அளவில் பயிற்சி கொடுத்திருக்கிறார்கள். நம் நாட்டில் என்ன நடக்கிறது ? இன்றைக்கு வரி போடுகிறார்கள். எவ்வளவோ பள்ளிக் கூடங்களை நடத்துகிறார்கள். அவ



1991 சனவரி 24] [திரு ஓய். வெங்கடேஸ்வர தீட்சிதர்]

களுக்கு நகராட்சிகள் வரி போடுகிறார்கள். ப்ராபர்டி டாக்ஸ், ப்ராபர்டி டாக்ஸ் போட்டால் என்னவாகும் ? அங்கே வந்து பாருங்கள். செயிண்ட் ஜோசப் காலேஜ், நேஷனல் காலேஜ், பிஷப் காலேஜ், ஜமால் மொஹிதீன் காலேஜ், இது மாதிரி இருக்கிற அத்தனைக் கட்டிடங்களுக்கு வரி போடுகிறார்கள். (மணியடிக்கப்பெற்றது). நீங்கள் சொல்வதை நான் ஒத்துக்கொள்கிறேன்.

உங்களிடம் பணம் இல்லை. சரசா மடத்தில், கோ. சி. மணி அவர்கள் பணம் இல்லை என்கிறார். அதற்கு நாங்கள் ஜவாப்தாரியா ? இத்தனை நாள் எப்படி இருந்தது ? நாட்டிற்கு சுதந்திரம் கிடைத்து எத்தனை ஆண்டுகள் ஆகிறது ? வெள்ளைக்காரன் காலத்தில் எத்தனை கட்டிடங்கள் கட்டியிருப்பார்கள் ? அத்தனைக்கும் வரி போட்டால் நாட்டில் கல்வியின் நிலைமை என்னவாகும் ? இப்போதே பள்ளிக்கூடம் நடத்தப்படுவதில்லை, காலேஜ் நடத்தப்படுவதில்லை, எப்படி கல்வி அறிவு வளரும் ? யோசனை பண்ணிப் பாருங்கள். முதலிலே இந்த டாக்சை வித்டிரா பண்ண வேண்டும். இதனால் ஊரிலே கெட்ட பெயர் கொஞ்ச நஞ்சம் அல்ல. இந்த பிராப்பர்ட்டி டாக்சை கல்வி ஸ்தாபனங்களுக்கு போடுவதில் ஏற்கெனவே எப்படி வரி போடப்பட்டிருந்தது என்றால், எல்லா மதத்தையும் ஒத்துக் கொள்ள வேண்டும். எல்லா மதத்தினரும் அங்கே படிக்க வேண்டும். எல்லா பாஷைகளையும் படிக்க வேண்டும். எல்லா ஜாதியினரும் படித்துக் கொண்டிருந்தால்தான் அதற்கு ப்ரி ஆப் டாக்ஸ்—வரி கிடையாது என்று இருந்தது. இப்போது அப்படி எல்லாம் ஒன்றுமே இல்லை. ஆகையினால் அதை முதலில் சர்க்கார் கவனித்து ஆவன செய்ய வேண்டும். கல்வியமைச்சர் இங்கே உட்கார்ந்திருக்கிறார். முதலமைச்சர் இல்லை ; முதலமைச்சர் வந்த பிறகு எல்லோரும் சேர்ந்து மந்திரி சபையிலே தீர்மானம் பண்ண வேண்டும். கல்விக்கு வரி போடக் கூடாது. டிக்ரி கோர்ஸ் வரைக்கும் ஃப்ரி எஜுகேஷன் கேட்க வேண்டும் என்று கருதுகிற இந்தக் காலத்தில் சர்க்கார் வரி போட்டால் என்ன பண்ண முடியும்? காவிரி பிரச்சினை தீர்ந்து போச்சு அடுத்து மண்டல் கமிஷன் (சிரிப்பு) தீர்ந்து போச்சு என்று சொல்லியாகி விட்டது. தண்ணீர் எப்படி வரும்? பவானியை திறந்து விடவில்லை. திருமூர்த்தி ஆற்றிலே கொஞ்சம் கொஞ்சம் இருக்கிறது, அவர்கள் அதை விடப் போவதில்லை. மாசி மாசம் அறுப்பு அறுக்கிற காலத்திலே தான் விடுகிறேன் என்று சொல்லப் போகிறார்கள். (குறுக்கீடு)

11-50 மணி

மாண்புமிகு பேரவைத் தலைவர் : காவிரிப் பிரச்சினை தீர்ந்து போயிற்று என்றீர்களே, மறுபடியும் கடைப்பு எடுத்துக் கொண்டதா என்று பார்த்தேன்.

திரு. ஓய். வெங்கடேஸ்வர தீட்சிதர் : நீங்கள் என்னை விரிவாகப் பேச விடுவதில்லை. 15 நிமிடமாவது பேச விட்டால் நிறைய சொல்லுவேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒரு சிறிய விஷயம். இன்றைய நிலைமையை முதலிலே சொல்லி விடுகிறேன். இந்த விவாதம் முடிந்து நமது முதலமைச்சருடைய ஆட்சி மன்றச் செயலாளருடைய பதிலுரை முடிந்து அதற்கு பிறகு 9 சட்ட முன் வடிவுகள் 1.30-க்குள் முடிய வேண்டும். 4 மணிக்கு மீண்டும் சட்ட மன்றம் இருக்கிறது. முன் வரிசையில் இருக்கிற அத்தனை பேரும் பேச வேண்டும். அதற்கப்புறம் எனக்கு ஒன்றும் பிரச்சினை இல்லை. இரவு 9 மணி ஆனாலும் 10 மணியானாலும் நடத்திக் கொண்டே இருக்கிறேன்.

திரு. ஓய். வெங்கடேஸ்வர தீட்சிதர் : அடுத்து மண்டல் கமிஷன், ஊரிலே எங்கே போனாலும் மண்டல் கமிஷன், மண்டல் கமிஷன் என்று பேசுகிறார்கள். 47 கோடி பேருக்கு....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாலையிலே நீங்கள் பேச வேண்டும். அதை நினைவூட்டுகிறேன்.

திரு. ஓய். வெங்கடேஸ்வர தீட்சிதர் : 47 கோடி பேருக்கு சலுகை கொடுத்தது எங்கள் சர்க்கார், வி.பி. சிங் அவர்கள் கொண்டு வந்தார்கள். அவர் பதவி இழந்த காரணமே அது தான். இவ்வளவு சலுகை கொடுத்தார்களே, அது எதற்காக கொடுத்தார்கள், யாருக்காக கொடுத்தார்கள்' எதற்காக பதவி இழந்தார்கள் என்று யாருக்காவது தெரியுமா ? இன்னும் சட்டமன்றத்திலே கூட சரியாக நாம் அதைப் பற்றி விரிவாகப் பேசவில்லை. ஆதரவு கொடுத்தார்கள், சலுகை கொடுத்தார்கள் என்றால், யார் வி.பி. சிங் என்று கேட்கிறார்கள். அந்த நிலைமை இந்த நாட்டிலே உருவாகியிருக்கிறது. மண்டல் கமிஷனிலே என்ன சொன்னான் ? கவர்னர் அறிக்கையைப் பார்த்தேன் நான். 1890 ஆம் வருஷத்திலே 16 வகையான பேக்வேர்டு கிளாசுகள் தான் இருந்தன. 1903 லே 63 தான் பேக்வேர்டு கிளாசுகள். இன்றைக்கு 213 பேக்வேர்டு கிளாசுகள் இருக்கின்றன என்றால் எங்கேயிருந்து முளைத்தன அவை ? எப்படி என்று தெரியவில்லை. வெள்ளைக்காரன் காலத்திலே 16 ஆக இருந்து, பிறகு 63 ஆகி, இன்றைக்கு இருநூற்று சொச்சம் பேக்வேர்டு கிளாசுகளாக இருந்தால் இன்னும் எத்தனை இருக்கிறதோ, அத்தனைக்கும் எப்படி தருவது ? மண்டல் கமிஷன் அறிக்கை பொதுவில் சரி, அப்படி எல்லோருக்கும் வர வேண்டியது தான். நாங்களே வாழ வேண்டும் என்று சொல்லவில்லை. இனிமேல் யாராவது வாழட்டும். ஆனால் அதற்கும் வழி வகை விட மாட்டேன் என்கிறார்களே, இப்போது பாருங்கள் வடக்கே குத்திக் கொண்டு சாகிறார்கள். நிஜமாக சாகிறார்களோ அல்லது சிமெண்டை ஊர் சாகடிக்கிறார்களோ



தெரியவில்லை : பேக்வேர்டு கிளாஸ் என்பது யார் ? அந்தக் காலத்திலே நாடார்கள் இருந்தார்கள், அதற்கப்புறம் தேவர்கள் இருந்தார்கள், அப்புறம் கள்ளர்கள், எங்கள் ஊரிலே அம்பலக்காரர்கள் இருந்தார்கள், இங்கே வந்தால் படையாச்சி என்று இருக்கிறார்கள். அப்புறம் கூலி வேலை செய்கிறவர்கள் வண்ணார் இவர்கள் எல்லாம் பேக்வேர்ட்டு கிளாஸ் என்கிறார்கள். இப்போது எல்லாமே பேக்வேர்டு கிளாஸ், எதிலும் பேக்வேர்டு கிளாஸ்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஐயா என்னைப் பார்த்துப் பேசுங்கள் ஐயா (சிரிப்பு), போகிற போக்கைப் பார்த்தால் அங்கேயே இசைவு கேட்டு பேசுவீர்கள் போல் இருக்கிறது.

திரு. ஓய். வெங்கடேஸ்வர தீட்சிதர் : எதற்காக சொல்லுகிறேன் என்றால், தானும் கெட்டு சந்திர புஷ்கரணியையும் சேர்த்து கெடுப்பது போல் ஆகிவிடக் கூடாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அங்கே முன்னாலே இருந்து யாராவது தூண்டி விடுகிறார்களா ஐயா ? (சிரிப்பு).

திரு. ஓய். வெங்கடேஸ்வர தீட்சிதர் : இல்லை அப்படி ஒன்றும் கிடையாது. அதற்கப்புறம்.......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இன்னுமா அப்புறம். மாலையிலே வேறு இருக்கிறது. இது துணை நிதி நிலை அறிக்கை ஐயா. இதை முடித்து விட்டு மாலையிலே ஆளுநர் உரையிலே பேசும்போது வேண்டுமானால் அத்தனையும் பேசலாம். இவ்வளவு தூரம் சொல்லியும் விளங்கிக் கொள்ள மாட்டேன் என்கிறீர்களே.

திரு. ஓய். வெங்கடேஸ்வர தீட்சிதர் : எங்களுக்கெல்லாம் கலக்குகிறது சார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எங்களுக்கெல்லாம் நெஞ்சே கலங்குகிறது ஐயா.

திரு. ஓய். வெங்கடேஸ்வர தீட்சிதர் : உங்களுக்கெல்லாம் கலக்காது. சபாநாயகருக்கு எதிராக ஒன்றும் இருக்கப்படாது என்று இருக்கிறது......(சிரிப்பு).

*மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, துணை நிதி நிலை அறிக்கை விவாதத்தைப் பொதுவான விவாதம் என்று எடுத்துக் கொள்ளக் கூடாது. கேட்கப்பட்டிருக்கிற நிதி கொடுக்கப்படுவதைப் பற்றிய கருத்துக்களைப் பேசினால்தான் பொருத்தமாக இருக்கும். மாலையில் ஆளுநர் உரையில் தாங்களே உரையாற்றுகிறபோது தங்களுடைய இத்தகைய எண்ணங்களை வெளியிடலாம்.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர் : எனக்கு 5 அல்லது 10 நிமிடம் கொடுங்கள். நிறையப் பேச வேண்டியது இருக்கிறது.

11-55 மணி

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாலை 4 மணிக்குத் தொடங்கி இரவு 10 வரை அல்லது 12 மணி வரை பேசலாம். வேறு யாரையாவது உட்கார வைத்து விட்டு நான் அறையிலேயே இருப்பேன். அதைப் பற்றிப் பிரச்சினை இல்லை. எல்லோருமே முடிவுக்கு வந்து விட்டோம். இப்போது முடியுங்கள். மாலை பேசலாம்.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர் இதோடு முடித்துக் கொள்கிறேன். மாலை 15 நிமிடம் அதிகமாகக் கொடுக்க வேண்டும். ஏனென்றால் 2 கட்சிகள் வரவில்லை.

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : தலைவர் அவர்களே, வராத கட்சிக்கு என்று யாரும் பிரதிநிதி ஆக முடியாது. வராத கட்சி என்பது பொதுக் கணக்கே தவிர தனிப்பிரதிநிதித்துவம் யாருக்கும் வராது. இன்னும் சொல்லப் போனால் தீட்சிதர் அவர்கள் அந்தக் கட்சிக்கு பிரதிநிதியாக என்றைக்கும் வரமாட்டார்கள். (சிரிப்பு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஐயா முடித்தாகி விட்டதா ? பிறகு வாக்கியத்தை முடிக்கவில்லை என்று வருத்தப் படுவீர்களே.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர் : ஒரே ஒரு விஷயத்தை மட்டும் சொல்லி விடுகிறேன். மத்திய அரசின் இணை மந்திரியாக இருந்தார்களே, ப. சிதம்பரம், குட்டையாக இருப்பார், அவர் சொல்கிறார், தினமணியிலே வந்திருக்கிறது. அவர் சொல்லி விட்டாராம். இவர் எழுதி விட்டாராம். அவர் சொல்கிறார். நாட்டிலே புலிகளுடைய முகாம்கள் இருந்து கொண்டிருக்கின்றன. அதை நீங்களாக சரியான முறையிலே கண்டுபிடிக்கவில்லையென்றால் நான் கண்டுபிடித்து விடுவேன் எனக்குத் தெரியும் : அதை வெளியிட்டு விடுவேன் என்கிறார். யாராவது தடுத்துக் கொண்டிருக்கிறார்களா ? எந்தக் கட்சியாவது போய்த் தடுத்ததா? எனக்குத் தெரியும் எல்.டி.டி.ஈ. சமாச்சாரம் முழுவதும். நமது கலைஞர் 50 ஆயிரம் கொடுத்துக் கூட வேண்டாம் என்றார். ஆனால் எம்.ஜி.ஆர். 4 கோடி கொடுத்த போது அவர் வாங்கிக் கொண்டார். வாங்கிக் கொண்டாரா இல்லையா ? அதை ஒத்துக் கொள்ள முடியுமா ? (மணியடிக்கப்பெற்றது).



ஒரு முடிவுக்கு வரவேண்டும். அந்த பிரபாகரன் ஒரு தமிழன். ஏதோ சிங்களவனா அல்லது ஆப்பிரிக்க நீக்ரோவா அல்லது அமெரிக்க நீக்ரோவா அல்லது வேறே ஏதோ ஐரோப்பிய நாட்டிலிருந்து வந்தவரா ? அவரும் நம் தமிழன். சுதந்திரத்திற்காகப் போராடுகிறார். அவரை விடக் கூடாது, அவர் எங்கே இருக்கிறார் என்கிறார்கள். ஏதோ 2, 3 கொலை நடந்தது. ஏன் வேறு யாராவது செய்து விட்டு அவர் மேல் வைக்கக் கூடாதா ? மற்றவர்களிடம் துப்பாக்கி இல்லையா ? அவருக்கு எங்கிருந்து துப்பாக்கி கிடைத்தது என்கிறார்கள். ஏன் கண்டுபிடியுங்களேன். உல்ஃபாவுக்கு சப்ளை பண்ணப்படுகிறது என்கிறார்கள். அங்கே யாருடைய ஆட்சி நடக்கிறது ? மத்திய அரசு ஆட்சி நடக்கிறது. அதைத் தடுக்க முடியவில்லை. நமக்கு அதற்கு சக்தி இல்லை என்றால் அதைச் சொல்ல வேண்டும். ஐயா எங்களுக்கு சக்தி இல்லை, நாங்கள் மத்திய ஆட்சி நடத்துகிறோம், அஸாமிலே எங்களால் முடியவில்லை, பஞ்சாபிலே நடக்கிற அக்கிரமங்களைச் சகிக்க முடியவில்லை, ஒடுக்க முடியவில்லை, நாங்கள் ராஜினாமா செய்கிறோம் என்று சொல்லாமல், அவர்கள் இங்கே 1, 2-ஐக் கண்டு பிடித்து விட்டார்களாம். கண்டு பிடித்து விட்டு சொல்லவும் மாட்டேன் என்கிறார்கள். ஆனால் மிரட்டிக் கொண்டே இருக்கிறார்கள். இந்த மிரட்டலுக்கு வேறே இரண்டு கட்சிகள் உடந்தையாக இருந்து எல்லோரையும் சேர்த்து ஒரே மிரட்டலாக மிரட்டுகிறார்கள். ஆகையினால் இதற்கெல்லாம் ஒரு முடிவு கட்டுவதற்கு நம்முடைய சபையிலே உள்ள அத்தனை பேரும் ஒன்றாக இருக்க வேண்டும். ஒன்றிரண்டு போனாலும் கவலையில்லை, மற்றவர்கள் ஒன்றாக இருந்து முடிவு கட்ட வேண்டுமென்று கேட்டுக் கொண்டு முடிக்கிறேன்.

திருமதி பொ. லட்சுமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிதிநிலை அறிக்கையில் பேச வாய்ப்பு அளித்தமைக்கு எனது முதற்கண் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். எனது வால்பாறை தொகுதி, மலைகள் சூழ்ந்த தொகுதி ஆகும். அங்கு காட்டு மிருகங்கள் அதிகமாக இருக்கின்றன. மேலும் மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அடிக்கடி எனது தொகுதிப் பக்கம் சென்று அங்குள்ள வனச் சரணாலயங்களை எல்லாம் பார்த்திருக்கிறார்கள். அந்த வன மிருகங்களால் ஏற்படுகின்ற தொல்லைகளும் அவருக்கு நன்கு தெரியும்.

அந்தத் தொகுதியில் தேயிலைத் தோட்டங்களில் பணி புரிகின்ற தொழிலாளர்கள் அங்குள்ள தேயிலைத் தோட்ட நிர்வாகத்தவர்கள் ஒதுக்கித் தந்த இடங்களில் குடியிருந்து வருகிறார்கள். அந்தக் குடியிருப்புகள் நல்ல பாதுகாப்பற்ற நிலையில் இருப்பதினால் இரவு நேரங்களிலே வன மிருகங்கள் அந்தப் பகுதிகளுக்குச் சென்று அங்குள்ள மனிதர்களுக்கும், அவர்கள் வளர்க்கின்ற ஆடுமாடுகள் போன்ற மிருகங்களுக்கும் சேதங்களை உண்டாக்கி அவர்களுக்குப் பல இன்னல்களை தந்து

வருகின்றன. காட்டு வள அதிகாரிகள் அங்கு அதிகமாக இல்லை. இந்தச் சூழ்நிலையில் அவர்களுக்குத் தக்க பாதுகாப்பு இல்லாததால் அங்குள்ளவர்கள் மிகவும் வேதனைக்கு ஆளாகின்ற ஒரு சூழ்நிலை உருவாகின்றது. எனவே அங்கு வன இலாக்கா அதிகாரிகளை அதிகமாக நியமித்து அந்த மக்களின் குறையைத் தீர்க்கும் வண்ணம் அவர்களுக்குப் பாதுகாப்பு அளிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

**12.00 மணி**

அதே நேரத்தில் கடந்த சட்டமன்றக் கூட்டத் தொடரில் கூட நான் அந்தக் கருத்தைப் பற்றிப் பேசி இருக்கிறேன். சத்தியா எஸ்டேட் என்ற அந்த இடத்திலே சாலைப் பராமரிப்பு இல்லாத காரணத்தால் அங்கு பஸ் போன்ற மற்ற வாகனங்கள் கூட செல்வதற்கு மிகவும் சிரமமான சூழ்நிலை இருக்கிறது. அங்கு அந்தத் தேயிலைத் தோட்டத்திற்குச் செல்வதற்கு சாலை பராமரிப்பு இல்லாமல் இருந்து, கடந்த சட்டமன்றக் கூட்டத் தொடரில் நான் பேசியதற்குப் பின்னால் மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் அதற்கு என்று தனியாக நிதியை ஒதுக்கி அந்தச் சாலையைச் செப்பனிடுவதாக வாக்குறுதி அளித்தார்கள். இன்னும் அந்தச் சாலைப் பராமரிப்பு வேலை கூட ஆரம்பிக்கவில்லை. அந்த எஸ்டேட்டில் இருப்பவர்கள் வால்பாறை வருவதற்குக் கூட மிகவும் சிரமப்படுகின்ற சூழ்நிலை இருந்து வருகிறது. எனவே, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் அந்தச் சாலையை உடனடியாகச் செப்பனிட்டு அந்தத் தேயிலைத் தோட்டத்தில் வசிப்பவர்களின் குறையைத் தீர்க்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அங்கே தேயிலைத் தோட்டங்களில் பெரும்பாலும் பெண்கள் தான் அதிகமாக வேலை செய்கிறார்கள். அப்படி வேலை செய்கின்றவர்களுக்கு எவ்வளவு சம்பளம் வழங்கப்படுகிறது என்றால் அது 22 ரூபாய் முதலில் வழங்கப்பட்டது. தற்போது அவர்களுக்கு 15 ரூபாய் தான் வழங்கப்படுகிறது. எனவே அவர்களின் நியாயமான கோரிக்கையைப் பரிசீலித்து அவர்களுக்கு அதிகமான சம்பளம் வழங்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அந்தத் தேயிலைத் தோட்டங்களில் பணிபுரிகின்ற பெண்களின் மத்தியில் மாதத்தில் ஒரு முறை ஒரு நாள் விடுப்பு அளிக்க வேண்டும் என்ற கோரிக்கை நீண்ட நாட்களாக நிலவி வருகிறது. எனவே, அவர்களின் நீண்ட நாளைய கோரிக்கையான அந்த ஒரு நாள் விடுப்புக் கோரிக்கையை நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



ஆனைமலை ஒன்றிய பகுதியில் வாழ்கின்ற மக்களுக்கு நிறைய இடங்கள் இருந்தும் அவர்களுக்கு பட்டாக்கள் இருந்தும், குடியிருப்புகளுக்கு வீடுகள் கட்டித்தர முடியாத சூழ்நிலை தற்போது நிலவி வருகிறது. எனவே, ஆதி திராவிட நலத்துறையின் மூலமாக அந்தத் தாழ்த்தப்பட்ட சமுதாய மக்களுக்காக நிலங்களை கையகப்படுத்தி. அவர்களுக்கு இலவச வீடுகள் கட்டித் தருகின்றபோது எனது வால்பாறைத் தொகுதியில் அதிக தொகுப்பு வீடுகளை ஒதுக்கி அவர்களது குறைகளை நிவர்த்தி செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். வாய்ப்புக்கு நன்றி கூறி அமைகிறேன். நன்றி, வணக்கம்.

**திரு. எல். கணேசன் (முதலமைச்சரின் ஆட்சி மன்றச் செயலர்)** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த இரண்டாவது துணை மதிப்பீடுகள் குறித்து மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுடைய கருத்துக்களை முன்வைத்திருக்கிறார்கள். இதிலே பெரிய விவாதப் பொருள் எதுவும் இல்லை. வயதில் முதிர்ந்தவர்களுக்கு மரியாதை உண்டு ; உரிமையுண்டு ; ஆனால் திரு. தீட்சிதர் போன்றவர்களுக்கு உரிமமே வழங்கப்பட்டிருக்கிறது, . சில வேளைகளில் லைசன்ஸ் என்று சொல்லுவார்களே அதுவே கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆளுநர் உரையாகவும் கருதிக் கொண்டு ; அதை நிதிநிலை அறிக்கையாகவும் கருதிக் கொண்டு எல்லாவற்றையும் இங்கே பேசியிருக்கிறார்கள். ஆனால் ஒட்டு மொத்தமாக இதிலே சில வேளைகளில் அதிகம் தேவைப்படுகிற நிதி ஆதாரங்களை நிதியைப் பெறுவதற்கு சட்டமன்றத்தை அணுகுகிறோம்.

துணை மானியக் கோரிக்கைகளில் வரவு-செலவுத் திட்டத்தில் செய்யப்பட்டுள்ள ஒதுக்கீடுகளுக்கு மேல் தேவைப்படுகின்ற நிதி ஒதுக்கீடு கோரப்பட்டுள்ளது. ஓர் ஆண்டில் கூடுதல் நிதி தேவைப்படும்போது இந்தப் பேரவையின் ஒப்புதல் பெறவேண்டும் என்ற எண்ணத்தோடு நடப்பு ஆண்டில் இரண்டாவது துணை மதிப்பீடுகள் கொண்டு வரப்பட்டுள்ளன. பல்வேறு திட்டப் பணிகளை மிக விரைவாகச் செயற்படுத்துவதால் நிதி ஒதுக்கீடு அதிகம் தேவைப்படுகின்றது. இதனை வழங்கும் பொருட்டு இரண்டாவது துணை மதிப்பீடுகள் இந்தப் பேரவையின் முன் வைக்கப்பட்டுள்ளன. கடந்த 16 ஆண்டுகளில் இரண்டாவது துணை மதிப்பீடுகள் கொண்டுவரப்படாத நிலையிலும் இந்த அரசு அவ்வப்போது பேரவையின் ஒப்புதலைப் பெறவேண்டும் என்ற எண்ணத்துடன் இந்த முறை இரண்டாவது துணை மதிப்பீடுகளை இந்தப் பேரவையின் முன் வைத்துள்ளது.

இங்கே பல மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுடைய கருத்துக்களைச் சொன்னார்கள். குறிப்பாக திருமதி பாப்பா உமாநாத் அவர்கள் ஒன்றைச் சொன்னார்கள். எதிர்க்கட்சியினர் இந்த

ஆட்சியைக் கலைக்கவேண்டுமென்று எடுத்துக்கொள்கிற முயற்சிகளைப்பற்றியெல்லாம் சொன்னார்கள். ஆனால் ஒன்று உறுதி. பாரதப் பிரதமர் அவர்கள் திட்டவட்டமாக, தெளிவாக தமிழ்நாடு அரசைக் கலைக்கும் உத்தேசம் இல்லை. அப்படி எண்ணம் இல்லை, கலைக்கமாட்டோம் என்று அறிவித்ததற்குப் பின்னாலும் அதைப்பற்றி நாம் சர்ச்சைகள் எழுப்பிக்கொண்டு இருக்கத் தேவையில்லை.

12-05 மணி

இரண்டாம் துணை மானியக் கோரிக்கைகளில் மிக முக்கிய திட்டங்களுக்கு ஒதுக்கீடுகள் கோரப்பட்டுள்ளன. அரசு அலுவலர்களுக்கு ஊதியக்கொடை வழங்குவது, இந்த அரசு தமது அலுவலர்களுக்கு வழங்கியுள்ள ஊதியக் கொடை, மத்திய அரசு, அதன் அலுவலர்களுக்கு வழங்கிய ஊதியக் கொடையைக் காட்டிலும் தாராளமானதாகும். ஏனெனில், மத்திய அரசில் மாதம் ரூபாய் 2,500-க்கும் அதற்கு மேலாகவும் மாதச் சம்பளம் பெறும் அலுவலர்களுக்கு போனஸ் வழங்குவதில்லை. ஆனால் நமது மாநில அரசு இந்த விகிதங்களில் சம்பளம் பெறும் அலுவலர்களுக்கும் சிறப்பு போனசாக ரூபாய் 450 வழங்கியுள்ளது. அதைப்போலவே ஊதிய விகிதங்கள் இல்லாத தினக்கூலி, தொகுப்பு ஊதியம், மதிப்பு ஊதியம் பெறும் அலுவலர்களுக்கு மத்திய அரசில் ரூபாய் 261 மட்டும் போனசாக வழங்கப்படுகிறது. ஆனால் நமது மாநிலத்தில் இவர்களுக்கு சிறப்பு போனசாக ரூபாய் 450 வழங்கப்பட்டுள்ளது. மாநில அரசு அலுவலர்களுக்கு ஊதியக் கொடை வழங்குவதால் அரசுக்கு ஏற்படக்கூடிய செலவு சுமார் ரூபாய் 70 கோடி இருக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. இது முந்தைய ஆண்டு பொங்கல் பரிசு வழங்கப்பட்டதனால் ஏற்பட்ட செலவான 44 கோடியை விடவும் அதிகமானதாகும்.

அதைப்போலவே இன்னொன்று, ஆதி திராவிடர், பழங்குடியினர், பிற்படுத்தப்பட்ட மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்புகளைச் சார்ந்த மாணவர்களுக்கு அனுமதிக்கப்பட்ட உணவுக்கான செலவுத் தொகை 1986ஆம் ஆண்டுக்குப் பிறகு உயர்த்தப்படாமல் இருக்கிறது. விலைவாசி உயர்வுக்கேற்ப இந்த உணவுக்கான செலவுத் தொகை உயர்ந்தியிருக்க வேண்டும். அதனைக் கருத்திற்கொண்டு இந்த அரசு அவர்களுக்கு அனுமதிக்கப்படும் உணவுக்கான செலவுத் தொகையை மாதம் ஒன்றுக்கு ரூபாய் 20 உயர்த்தி வழங்கி உள்ளது. இதனால் அரசாங்கத்திற்குக் கூடுதல் செலவு ரூபாய் 2.5 கோடி ஆகும். பயன்பெறும் மாணவர்களுடைய எண்ணிக்கை 1.2 இலட்சமாகும்.

கைத்தறி நெசவாளர்களைப் பொறுத்தவரையில் இந்த அரசு பதவியேற்றபோது கைத்தறி கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் கோ-ஆப்டெக்ஸ் போன்றவற்றுக்கு அரசு தரவேண்டிய மானியத் தொகை ரூபாய் 26.15 கோடி நிலுவையிலே இருந்தது. அதனைக் கொடுத்து உதவியதுடன் அவர்களுக்குச் சேரவேண்டிய மானியத் தொகை தாமதமின்றிக் கொடுக்கப்படுவதில் இந்த அரசு தனிக்



கவனம் காட்டி வருகிறது. நிதிநிலை அறிக்கையில் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கும் கோ-ஆப்டெக்ஸ்களுக்கும் தொகையாக ரூபாய் 27 கோடி சேர்க்கப்பட்டிருந்தும் முதல் துணை மானியக் கோரிக்கையில் ரூபாய் 9.38 கோடிக்கு வகை செய்யப்பட்டு அளிக்கப்பட்டது. இந்தத் துணை மானியக் கோரிக்கையில் நெசவாளர் சங்கங்களுக்குக் கொடுக்கவேண்டிய மானியத் தொகையாக ரூபாய் 2.52 கோடி கோரப்படுகிறது.

அதைப்போலவே, இலங்கையிலிருந்து வந்துள்ள அகதிகளுக்கு உணவு, உடை, இருக்க இடம் ஆகியவற்றுக்கான ஏற்பாடுகள் செய்வதில் இந்த அரசு விரைந்து செயல்பட்டு வருகிறது. ஏற்கெனவே இயங்கிக் கொண்டிருந்த நிரந்தரமான முகாம்களில் போதிய இடவசதி இல்லை என்ற காரணத்தால் 10 ஆயிரம் குடும்பங்களுக்கு இருப்பிட வசதிகள் செய்து கொடுப்பதற்காக இந்த அரசு அனுமதித்த 4.5 கோடிக்கு இந்தத் துணை மானியக் கோரிக்கைகளில் வகை செய்யப்பட்டுள்ளது. மொத்த இலங்கை அகதிகளுக்கு என இந்த அரசு ரூபாய் 21 கோடி செலவிட்டிருக்கிறது. ஆகவே, இதைப்போன்ற அத்தியாவசியமான தேவைகளைக் கருதி இந்த மதிப்பீடு முன்வைக்கப்பட்டிருக்கிறது. இதை அங்கீகரித்துத் தரவேண்டுமென்று கேட்டுக்கொண்டு, அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத்தலைவர் : விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு.

திரு. வே. தம்புசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி :

'' 1990-91 ஆம் ஆண்டிற்குக் கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள் அடங்கிய 22—1—1991 தேதியிடப்பெற்ற அறிவிப்பில் குறிப்பிடப் பெற்றுள்ள துணை மானியக் கோரிக்கைகள் ஒவ்வொன்றிற்கும் எதிரே குறிப்பிடப்பெற்றுள்ள தொகைகளுக்கு மேற்படாத தொகை 1990-91 ஆம் ஆண்டிற்கான கூடுதல் செலவிற்காக அரசுக்கு வழங்கப் பெறவேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.

12-10 மணி

பொது விவாதமும், அவ்வாண்டின் கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கை மீது வாக்கெடுப்பும்

[ 1991 சனவரி 24

நிறைவேற்றப்பெற்ற 1990-91 ஆம் ஆண்டிற்கான கூடுதல் மானியக் கோரிக்கைகள்.

A. வருவாய்க் கணக்கில் செலவு.

| கோரிக்கை. | (ரூபாய் ஆயிரத்தில்) |
|---|---|
| 2 மாநில ஆயத்தீர்வைத் துறை .. .. | 26.90 |
| 9 மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள். | 2,97,33 |
| 11 மாவட்ட நிருவாகம் .. .. .. | 2,54,66 |
| 15 காவல் துறை .. .. .. .. | 37,53 |
| 16 தீயணைப்புப் பணிகள் ... .. .. | 79,64 |
| 17 கல்வி .. .. .. .. .. | 8,21,56 |
| 20 வேளாண்மை .. .. .. .. | 1,14,91 |
| 21 மீனளம் .. .. ... .. .. | 4,15,26 |
| 22 கால்நடை வளர்ப்பு .. .. .. | 26,20 |
| 23 கூட்டுறவு .. .. .. .. | 3 |
| 24 தொழில்கள் .. .. .. .. | 7,00,00 |
| 26 கைத்தறி—துணித் தொழில் .. .. | 2,52,92 |
| 28 சமுதாய நல வளர்ச்சித் திட்டங்களும், நகராட்சி நிருவாகமும். | 2,72,92 |
| 30 சமூக நலன் .. .. .. .. | 1,09,67 |
| 31 பழங்குடியினர், ஆதி திராவிடர் முதலியோர் நலன். | 3,20 |
| 32 பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் முதலியோர் நலன். | 51,26 |
| 33 வீட்டு வசதி .. .. .. .. | 21,85 |



பொது விவாதமும், அவ்வாண்டின் கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பும்

1991 சனவரி 24]

| | |
|---|---|
| 36 பாசனம் .. .. .. .. .. | 55.00 |
| 38 பொதுப்பணிகள்—பணியாளரமைப்பும், கருவிகளும், தளவாடமும். | 13,09 |
| 39 சாலைகளும், பாலங்களும் .. .. .. | 3,89,14 |
| 41 இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர்தணிப்பு | 1,29,85 |
| 42 ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும். | 15,64 |
| 43 பல்வகை .. .. .. .. .. | 15,36,41 |
| 47 செய்தி, சுற்றுலா, திரைப்படத் தொழில் நுட்பவியல். | 15.00 |
| 48 ஊரகத் தொழில்கள் ... .. .. | 6,69,00 |
| 49 குடிநீர் வழங்கல் ... .. .. .. | 5,96,82 |
| மொத்தம்—A—வருவாய்க் கணக்கு | 69,05,79 |

B. வருவாய்க்கணக்கின் கீழ் வராத மூலதனச் செலவு.

| | |
|---|---|
| 51 தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு | 1,71,53 |
| 53 பொதுப்பணிகள் குறித்த மூலதனச் செலவு—கட்டிடங்கள். | 86,02 |
| 54 சாலைகள்—பாலங்கள் குறித்த மூலதனச் செலவு. | 1,00,00 |
| 57 ஊரகத் தொழில்கள் குறித்த மூலதனச் செலவு | 41,21 |
| 58 பல்வகை மூலதனச் செலவு .. .. | 49,98 |
| மொத்தம்—B. வருவாய்க் கணக்கின்கீழ் வராத மூலதனச் செலவு | 4,48,74 |

C. கடன்கள் முன்பணங்கள் வழங்குதலும் கடனைத் திரும்பிச் செலுத்துதலும்.

| | |
|---|---|
| 59 மாநில அரசு வழங்கும் கடன்களும், முன் பணங்களும். | 1,28,43 |
| பெரு மொத்தம் .. | 74,82,96 |

5. அறிவிப்பு — தொடர்ச்சி.

(ஆ) நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவு 1991.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 1991 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவைப் பேரவையில் அறிமுகம் செய்யவும், ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளவும் ஆளுநர் அவர்கள் தமது இசைவினைத் தெரிவித்துள்ளார்கள்.

7. சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்).

நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவு, 1991.

திரு. எல். கணேசன் : (முதலமைச்சரின் ஆட்சி மன்றச் செயலர்) : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

"1991 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்.".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

திரு. எல். கணேசன் : (முதலமைச்சரின் ஆட்சி மன்ற செயலர்) : இச்சட்ட முன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

8. சட்ட முன்வடிவுகள் (ஆய்வு செய்தல்).

(அ) பொது விற்பனை வரி (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு, 1991.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன். :

"1991 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (இரண்டாம் திருத்த) சட்டமுன்வடிவு * (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 13 1991) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெறவேண்டும்".

* 1991 ஆம் வருடம் சனவரி மாதம் 23 ஆம் தேதியிட்ட **தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.**



தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, சட்ட முன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற்றது.

பிரிவு 2 பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றன.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்.

"1991 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 13/1991) நிறைவேற்றப் பெற வேண்டும்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்டமுன்வடிவு நிறைவேற்றப்பெற்றது.

(ஆ) கேளிக்கைகள் வரி (இரண்டாம் திருத்த) சட்டமுன்வடிவு 1991.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

"1991 ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (இரண்டாம் திருத்த சட்ட முன்வடிவு) *(சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 14/1991) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும்".

திரு. யூ. கே. வெள்ளிங்கிரி : பேரவைத் தலைவர் அவர்களே, கேளிக்கை வரி திருத்தம் சம்பந்தமாக ஒருசில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். இன்றைய தினம் நாடு முழுவதும் வீடியோக்கள், டி.வி. மூலமாக சினிமாத் தொழில் சிறிதளவு பாதிக்கப்பட்டிருக்கிற இந்த நேரத்தில் அவர்களுக்கெல்லாம் ஒரு சூழ்நிலையை உருவாக்குவதற்காக ஏற்கனவே இருக்கிற வரியிலே கொஞ்சம் தளர்த்தி, குறைத்து, இன்றைக்கு இந்தச் சட்டத் திருத்தத்தைக் கொண்டு வந்திருக்கிறீர்கள். அது

* 1991-ஆம் வருடம் சனவரி மாதம் 23 ஆம் தேதியிட்ட **தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.**

உண்மையிலே வரவேற்கக் கூடியதுதான். அதேநேரத்தில் சினிமாத் துறையில் சினிமாக் கொட்டகைகளிலே நாம் பார்க்கும் பொழுது இன்றைக்குக் கள்ள டிக்கெட்டுகள் அதிகமாக விற்பனை செய்து அரசாங்கத்திற்கு வர வேண்டிய பணத்தை, வரிகளை ஏய்க்கின்ற முறையில் ஒருசில தியேட்டர்களிலே ஈடுபடுகிறார்கள் என்பதையும் நாம் கவனத்திலே கொள்ள வேண்டுமென்பதை நான் இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அதே நேரத்திலே, இன்றைக்கு வரிக் குறைப்பின் மூலமாக நகரமானாலும், கிராமங்களிலே இருக்கக் கூடிய திரையரங்குகள் ஆனாலும் அந்த வரிக் குறைப்பின் மூலமாக சினிமாக் கட்டணத்தை — ஏற்கனவே ஏற்றியிருக்கின்ற இந்தச் சூழ்நிலையில் கிராமங்களில் இருக்கின்ற இந்தத் திரையரங்குகளிலே இந்த வரிக் குறைப்புக்கு ஏற்ற முறையில் சினிமாக் கட்டணத்தை மாற்றியமைப்பதற்கு ஒரு சூழ்நிலையை அரசாங்கம் ஏற்படுத்த வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல, சுகாதாரம் என்பது அடியோடு பல தியேட்டர்களில் கிடையாது. அந்த முறையில் ஒவ்வொரு தியேட்டரிலும் சம்பந்தப்பட்ட அரசுத் துறை அதிகாரிகள் சென்று, எந்த முறையில் அந்தத் தியேட்டர்களை சுகாதார முறையில் வைத்துக் கொள்ள வேண்டுமோ, அந்த அளவுக்கு வைத்துக் கொள்வதற்கான ஒரு சூழ்நிலையை உருவாக்குவதற்கு உத்தரவாதம் ஏற்படுத்த வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன். பல தியேட்டர்களில் சுகாதாரம் என்பது அறவே கிடையாது. அங்கே போய் உட்கார முடியாத அளவுக்கு சில மோசமான நிலைமைகள் இருக்கின்றன என்பதையும் இந்த நேரத்தில் நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். நூற்றுக்கணக்கான, ஆயிரக்கணக்கான ஆண்களும், பெண்களும் அந்த 2, 3 மணி நேரம் அங்கு அமர்ந்து, காட்சியைக் காணக்கூடிய நேரத்தில், அந்தத் தியேட்டர்களை சுகாதாரமாக வைத்துக் கொள்வதற்கு உத்தரவாதம் அளிக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

12-15 மணி.

அதேபோல, இன்றைக்கு சினிமா தியேட்டர்களில் வருமானங்களைப் பெருக்குகின்ற வகையில், ஆபாச சினிமாக்கள் அதிகமாக வந்திருக்கின்றன என்பதை அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். ஆண்கள், தங்கள் குடும்பத்தோடு சென்று பார்க்க முடியாத அளவுக்கு, இளைஞர்களை முறுக்கேற்றக்கூடிய முறையில் ஆபாசமான காட்சிகளைப் படமாக்கி, மாநிலம் முழுவதும் இளைஞர்களைக் கெடுக்கக்கூடிய முறையில் ஒருசில படத் தயாரிப்பாளர்கள் இருக்கிறார்கள் என்பதையும் தெரிவித்து,



அதைத் தடுக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன். தரமான சினிமாக்களை, சமூகத் தொண்டு செய்யக்கூடிய மக்களுக்குச் சேவை செய்யக்கூடிய முறையிலே தயார் செய்து, அப்படிப்பட்ட சினிமாக்களை மக்களுக்கு எடுத்து உரைக்கின்ற முறையில் முன்வருவார்களேயானால், அப்படிப்பட்ட படத் தயாரிப்பாளர்களுக்கு ஊக்கம் அளிக்கின்ற வகையில் பரிசுகளையும், சில உதவிகளையும் அரசாங்கமே செய்ய முன்வந்தால், நிச்சயமாக நல்ல சினிமாக்களைத் தயார் செய்ய முடியும். அதற்கான உதவிகளையும் அரசாங்கம் செய்ய வேண்டுமென்று இந்த நேரத்தில் நான் சொல்லி, எனக்கு வாய்ப்புக் கொடுத்தமைக்கு நன்றிகூறி விடைபெறுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி :

"1991 ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (இரண்டாம் திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 14/1991) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெறவேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற்றது.

பிரிவு 2 மற்றும் 3 பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றன.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

"1991 ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கைகள் ரி (இரண்டாம் திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 14/1991) நிறைவேற்றப் பெறவேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்டமுன்வடிவு நிறைவேற்றப்பெற்றது.

(இ) பச்சையப்ப அறக்கட்டளை மற்றும் பட்டியல் பொதுப் பொறுப்பாட்சியமைப்புகள் மற்றும் நிலைக்கட்டளைகளை (மேலாண்மையை மேற்கொள்ளுதல்) திருத்தச் சட்ட முன் வடிவு, 1991.

திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

'' 19—12—1990 ஆம் நாளன்று ஆளுநர் அவர்கள் பிறப்பித்துள்ள 1990 ஆம் ஆண்டு பச்சையப்ப அறக்கட்டளை மற்றும் பட்டியல் பொதுப் பொறுப்பாட்சியமைப்புகள் மற்றும் நிலைக் கட்டளைகள் (மேலாண்மையை மேற்கொள்ளுதல்) இரண்டாம் திருத்த அவசரச் சட்டத்தை (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண். 12/1990), இப்பேரவை நிராகரிக்கின்றது.''.

(தீர்மானம் முறைப்படி வழிமொழியப் பெற்றது.)

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

'' 1991 ஆம் ஆண்டு பச்சையப்ப அறக்கட்டளை மற்றும் பட்டியல் பொதுப் பொறுப்பாட்சியமைப்புகள் மற்றும் நிலைக் கட்டளைகள் (மேலாண்மையை மேற்கொள்ளுதல்)திருத்தச் சட்ட முன்வடிவு* (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 1/1991) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெறவேண்டும்.''.

12-20 மணி.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு விளக்கம் சொல்லவேண்டிய கடமை எனக்கு இருக்கிறது. இது அரசாங்கம் விருப்பத்தின் காரணமாகக் கொண்டு வந்த அல்லது ஆர்வத்தின் காரணமாகக் கொண்டு வந்த திருத்தம் அல்ல. நீதிமன்றத்தில் இருக்கிற வழக்குகளும், உச்சநீதிமன்றத்தில் இருக்கிற வழக்கும் முடிவு பெறாத காரணத்தால் வேறு வழி இல்லாத ஒரு சூழ்நிலையில் புதிய ஒரு அமைப்பாக உருவாக்குவதாக இருந்தாலும் நீதிமன்றத்தின் தீர்ப்புக் கிடைத்தால்தான் கைட்லைனாக இருக்கும் என்ற அடிப்படையில் காத்துக் கொண்டிருக்கிற காரணத்தால் வேறு வழியில்லாமல், இடையிலே ஒரு நிர்வாகமே இல்லாமல் போய்விடாமல் தொடருவதற்காக சட்டத்தின் மூலமாக வாய்ப்பு பெறுவதற்காகக் கொண்டு வரப் பட்டது என்பதை நான் இந்த அவைக்குத் தெரிவிக்கக் கடமைப் பட்டிருக்கிறேன்.

---

*1991 ஆம் வருடம் சனவரி மாதம் 21 ஆம் தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.



திரு. கோ. பூவராகன் : மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, இந்த வாய்ப்புக்காக அரசாங்கமே இவ் வாறு ஒவ்வொரு ஆண்டும் ஏற்பாடு செய்து கொண்டிருக்கிறது. ஒரு முடிவுக்கு வராமல் இந்த ஏற்பாட்டைச் செய்து கொண்டிருக் கிறது. முதலாவதாக அரசாங்கம் இதில் தலையிடக் காரணம் என்னவென்றால் அந்த நிர்வாகம் சரியாக நடக்கவில்லை என்பதற்காக. அதனால் தான் எல்லா அறக்கட்டளைகளையும் ஒன்றாக இணைத்து அரசாங்கம் தலையிட்டது. அரசாங்கம் கடந்த 10 ஆண்டுகளாக எந்த அளவுக்கு அதைச் சரியாக நிர் வாகம் செய்தது என்பதுதான் சென்ற ஆண்டே நான் கேள்வியாக எழுப்பியது.

*மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் அசம்ஷன் என்ற வகையில் அவர்கள் மேற்கொண்டு எடுத்துச் சொல்கிற கருத்து அடிப்படையில் தவறாகும். ஏற்கெனவே ஒன்றாக இருந்த அறக்கட்டளையைத்தான் நிர்வாகத்தில் ஏற்பட்ட குறைகளுக்காக அரசாங்கம் அந்தக் காலகட்டத்தில் மேற் கொண்டது. அது இந்த ஆட்சி அல்ல. அன்றைக்கு இருந்த ஆட்சி அந்த நிர்வாகத்தை மேற்கொண்டது. அறக்கட்டளை நிர்வாகம் சரியாக நடக்கவில்லை என்று அவர்கள் கருதிய காரணத்தால் அவ்வாறு மேற்கொண்டுவிட்டது. அப்படி மேற் கொண்ட காரணத்தால் அறக்கட்டளைகள் எல்லாம் ஒன்றாக இணைக்கப்படவில்லை. அதற்குப் பின்னர் ஏற்பட்ட பிரச் சினையில் நீதிமன்றத்தில் ஒரு முடிவு காணப்படவில்லை. அறக் கட்டளை நிர்வாகத்தை நடத்துவதில் அந்தக் குழு அரசுக்குச் சொன்ன ஆலோசனைப்படி இணைத்து நடத்த வேண்டும், பிரிக் கக் கூடாது என்ற ஒருகருத்து நிலவி அதன் காரணமாக உச்ச நீதிமன்றத்திற்கு வழக்கு சென்று, இடையிலே தடையாணையும் பெறப்பட்டிருக்கிறது. உச்சநீதிமன்றத்தீர்ப்பும் நமக்குக் கிடைக்க வேண்டி இருக்கிறது. நீதிமன்றத்தில் போடப்பட்ட வழக்கும் அப்படியே தொடருகிறது. இந்த நிலைமைகளில் என்ன செய்ய லாம் என்று முடிவு காணாத அந்த அடிப்படையில் தான் இந்தத் திருத்தம் வந்திருக்கிறது.

திரு. கோ. பூவராகன் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அறக் திருத்தத்தினுடைய நோக்கம் நன்றாகப் புரிகிறது. இந்த செங்கல்வராயன், கட்டளையோடு சேர்ந்திருக்கிற அந்த பிரிக்க வேண்டும் கோவிந்தப்ப நாயக்கன் அறக்கட்டளையைப் என்பது வழக்கு, அந்த வழக்கில் அரசாங்கத்திற்கு என்ன நியதி இருக்கிறது. நீதிமன்றம் தீர்ப்பு கூறிய பிறகும் கூட திரும்பவும் உயர்நீதிமன்றத்திற்குச் செல்ல வேண்டிய கட்டாயம் என்ன வந் தது என்பதுதான் என்னுடைய கேள்வி. சென்ற முறை இதே கேள்வியைத்தான் நான் எழுப்பினேன். அந்த வழக்கைத் திரும்ப பெற்றுவிட்டால் அந்த இரண்டு கட்டளைகளையும் தனியாக நீங்கள் எடுத்துவிட்டால் உங்களுக்கு என்ன பெரிய சங்கடம் வந்துவிடும்? ஒரு தனிப்பட்ட நிறுவனம் அது. ஒரு தனிப்பட்ட

வன்னிய வகுப்பைச் சேர்ந்தவர்கள் அந்த அறக்கட்டளையை நல்ல முறையில் 100 ஆண்டுகளுக்கு முன்னாலே ஏற்பாடு செய்து இருக்கிறார்கள். அந்த அறக்கட்டளை வன்னிய மக்களுக்காகவே ஏற்பாடு செய்யப்பட வேண்டியது? எனவே அதில் நான்கு பேரை, நிறைந்த அனுபவம் உள்ளவர்களை, நல்ல திறமைசாலிகளை, அறக்கட்டளை உறுப்பினர்களாக நியமிக்க வேண்டும். 100 வருஷங்களுக்கு முன்னால் இந்த அறக்கட்டளையைப் பொறுத்த வரையில் இன்னின்ன காரியங்களுக்குப் பயன்படுத்த வேண்டும் என்று அதில் குறிப்பிடப்பட்டு இருக்கிறது. அந்த அறக்கட்டளையைச் சேர்ந்த மற்ற அறக்கட்டளைகளைப் பொறுத்த வரையில் எல்லாம் நீங்கள் படித்துப் பார்ப்பீர்களேயானால் ஒரு அறக்கட்டளைகூட கல்வி நிறுவனத்திற்காக, தொழில் நிறுவனத்திற்காக, விதவைகளுக்காக, கண்பார்வையற்றவர்களுக்காக, வைத்தியசாலை அமைப்பதற்காக என்று குறிப்பிடப்படவில்லை. மற்ற அறக்கட்டளைகள் அத்தனையும் கோயில்களுக்கு விளக்குப் போடுவது, சாமிகளுக்கு மாலை போடுவது, அன்ன சத்திரங்களுக்கு ஏற்பாடு செய்வது என்ற இது போன்ற நியதிகள் இருக்கின்றன. அதைத் தொடர்ந்துதான் செங்கல்வராயன் அறக்கட்டளையையும் தனியாகப் பிரிக்க வேண்டும் என்பது குறித்து நீதிமன்றத்திற்கு வழக்கு சென்றது. நீதிமன்றம் நன்றாக விசாரித்து இதை ஒன்றாக இணைக்கக் கூடாது, தனியாகத்தான் இருக்க வேண்டும் என்று சொன்னது.

12—25 மணி

அரசாங்கம் எதற்காக உயர்நீதிமன்றத்திற்குப் போனது. அதை ஏன் வித்ட்ரா செய்யக்கூடாது? அதிலே அரசாங்கத்திற்கு என்ன சங்கடம்? நாம் மிகவும் பெருமையாகப் பேசுகிறோம், நாங்கள் அதைச் செய்கிறோம், இதைச் செய்கிறோம் என்றெல்லாம் பேசுகிறோம். அப்படிச் சொல்கிறபோது இந்தச் சமயத்திலாவது நீங்கள் செய்யவில்லை என்று சொன்னால் வேறு யார் செய்ய இருக்கிறார்கள்? நீங்கள் சொல்கிற காரணம் என்னவென்றால் இந்த இரண்டு அறக்கட்டளைகளில்தான் பணம் வருகிறது. மற்ற அறக்கட்டளைகளில் பணம் வரவில்லை. அதனால்தான், நாங்கள் எல்லாவற்றையும் மொத்தமாக வைத்துக் கொள்கிறோம் என்று கூறுகிறீர்கள். மற்ற அறக்கட்டளையில் வரவில்லை என்றால் அந்த அறக்கட்டளையை ஏற்பாடு செய்த வாரிசுகள் இருக்கிறார்கள். அவர்களைக் கேளுங்கள். யாரும் பணம் கொடுக்கவில்லை என்று சொன்னால், இந்த அரசு, எத்தனையோ காரியங்களுக்குக் கோடிக்கணக்கான ரூபாய் செலவு செய்கிறது, ஒரு கோடி, 2 கோடி அந்த அறக்கட்டளைக்குச் செலவு செய்து அதைத் தனியாக வைத்து நடத்த வேண்டும் என்பதுதான் என்னுடைய கோரிக்கை. இதைக் கட்டாயம் செய்ய வேண்டும். ஓராண்டு, இரண்டாண்டு என்று தள்ளிப் போடுவதில் உள்நோக்கம் இருந்தால் வேறு பிரச்சினை எழுந்து அரசாங்கம் அதைச் சந்திக்க வேண்டும் என்ற நிலையோடு என்னுடைய வார்த்தைகளை நான் முடித்துக் கொள்கிறேன். வணக்கம். நன்றி.



திரு. எஸ். டி. உகம்சந்த்: மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவரவர்களே, இந்த பச்சையப்பன் அறக் கட்டளையை 1980 ஆம் ஆண்டு அரசினுடைய நிர்வாகத்தின் கீழ் கொண்டு வந்த நேரத்தில் அங்கே பலவேறு தவறுகள் இருந்தன என்ற காரணத்தினால், அன்றைக்கு நிர்வாகத்திலே இருந்தவர்கள், குறைந்த வாடகை, நீண்ட காலக் குத்தகை, தகுதி பெறாத ஊழியர்களுக்கு பதவி உயர்வு, தகுதியற்ற ஊழியர்கள் நியமனம், தாறுமாறான நிர்வாகம், பலன் அளிக்காத தன்மைகள், யூ.சி.ஜி. மானியம் போன்றவைகள் பெற முடியாத நிலைமை இப்படிப் பல்வேறு தவறுகளை அவர்கள் செய்தார்கள். அதனால் அரசாங்கம் 2 ஆண்டு காலத்திற்கு தன்னுடைய பொறுப்பிலே எடுத்துக் கொண்டது. ஆனால் காலப் போக்கிலே நீடிப்பு செய்து கொண்டே வந்திருக்கின்ற இந்தச் சூழ்நிலையில், இன்றைக்கு நான் இந்த அரசைப் பார்த்துக் கேட்டுக்கொள்ள விரும்புவதெல்லாம் அரசாங்கம் இதற்கு முன்பு தன்னுடைய பொறுப்பிலே எடுத்துக் கொண்ட சமயத்தில் இருந்த நிலைமைகள் என்ன? பிறகு அரசாங்க அதிகாரிகள் பொறுப்பிலே இருக்கின்ற சூழ்நிலையிலே அதிலே என்னென்ன மாற்றங்கள் வந்திருக்கின்றன, என்னென்ன நன்மைகள் ஏற்பட்டிருக்கின்றன என்ற விவரத்தை எல்லாம் அரசாங்கம் தெரிவிக்க வேண்டும்.

இதற்கு முன்புகூட திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் இன்றைக்கு பொதுப்பணித் துறை அமைச்சராக இருக்கின்ற மாண்புமிகு திரு. துரைமுருகன் அவர்கள் அன்றைக்கு எதிர்க் கட்சியிலே இருக்கும்போது சொன்னார்கள். 'நீங்கள் 2 ஆண்டுக் காலத்திற்கு அதை அரசினுடைய பொறுப்பிலே எடுத்துக் கொள்கிறோம் என்று சொல்லிக் கொண்டு இருக்கின்றீர்கள், ஆனால் காலப் போக்கிலே இதை நீடித்துக்கொண்டே சென்றால் அது தவறு' என்று வாதித்து இருக்கிறார்கள். அன்றைக்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர். திரு. ரகுமான்கான் அவர்களும் 'அரசாங்கம் இதை மேலும் கால நீடிப்புச் செய்வது தவறு' என்று சொல்லியிருக்கிறார்கள்.

நான் அறிந்து கொள்ள விரும்புவதெல்லாம் இன்றைக்குள்ள சூழ்நிலையில், இன்றைக்கு வழக்கு மன்றத்திலே வழக்கானது நிலுவையிலே இருக்கின்றது. நாங்கள் மேனேஜ்மெண்டை மாற்றுவதற்காக, அந்த ஸ்கீமிலே சொல்லி மாற்றங்களைச் செய்வதற்காக ஹைக்கோர்ட்டிலே வழக்குப் போட்டிருக்கிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள். அதன் காரணமாக ஓராண்டு காலத்திற்கு நீடிப்புத் தேவை என்று சொல்லியிருக்கிறார்கள். நீதிமன்றத்திலே இருக்கின்ற வழக்கானது ஓராண்டு காலத்தில் முடிந்துவிடுமா? இன்னும் 5, 6 ஆண்டுகள் ஆகும். ஏன் அதை மறைத்து ஓராண்டு காலத்திற்கு மட்டும்தான் நீடிப்பு என்று கேட்கிறீர்கள். தேவை என்று சொன்னால் 5 ஆண்டு காலத்திற்கு என்று சொல்லுங்கள். இல்லை என்று சொன்னால் உடனடியாகத் தேர்தல் நடத்துங்கள். நான் திருத்தங்கள் கொடுத்திருக்

கிறேன். ஓராண்டு அல்ல. 3 மாதத்திற்குள்ளாகவே நீங்கள் தேர்தல் நடத்துங்கள். தேர்தல் நடத்த வேண்டுமென்ற எண்ணம் இருந்தால் 3 மாதத்தில் நடத்துங்கள். இல்லையென்றால் 5 ஆண்டு காலம் நீதி மன்றத்திலே ஆகலாம். 5 ஆண்டுகள் அல்ல 10 ஆண்டுகள்கூட ஆகும். உச்ச நீதி மன்றம் செல்ல வேண்டிய நிலைமைகூட ஏற்படும். ஆகவே 10 ஆண்டு காலம் அரசின் பொறுப்பில் எடுத்துக் கொள்கிறோம் என்றே சொல்லி விடலாம். அரசாங்கமே நிரந்தரமாக எடுத்துக் கொள்ளும் என்று சொல்ல வேண்டும். அதை விட்டு விட்டு ஓராண்டு, ஓராண்டு என்று ஒவ்வொரு ஆண்டும் கொண்டு வருவதை விட, இதை நீங்கள் நல்ல முறையிலே பொதுமக்களுக்குத் தெளிவாகத் தெரிவிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. பூவராகன் அவர்கள் சொல்வது போல் இந்த அறக்கட்டளையிலிருந்து செங்கல்வராயன் பாலிடெக்னிக் போன்றவைகளை, கோவிந்த நாய்க்கன் அறக்கட்டளையை நீக்குகின்ற அளவுக்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இந்த அறக்கட்டளை செம்மையாக முறையாக நடக்கக்கூடிய அளவுக்கு மக்கள் பிரதிநிதிகளை நீங்கள் அங்கே அங்கத்தினர்களாக சேர்க்க வேண்டும். இல்லை என்றால் தேர்தலை வைத்துவிடுங்கள். அதாவது நல்ல முடிவு சொல்ல வேண்டும். ஓராண்டு, ஓராண்டு என்று நீடிப்பு கூடாது என்று தெரிவித்துக் கொண்டு என்னுடைய உரையை முடிக்கிறேன், வணக்கம்.

12-30 மணி

திரு. ரெ. பிச்சைமுத்து: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பச்சையப்பன் அறக்கட்டளை குறித்த சட்ட முன்வடிவு குறித்து இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். இந்த பச்சையப்பன் அறக்கட்டளை என்பது பொது மக்களுக்காக, அதாவது பின்தங்கிய மக்கள், அந்த சமுதாய மக்கள் பயன் பெற, அதிலே வேலை வாய்ப்பு, படிப்பு சம்பந்தப்பட்ட துறையில் பயன் பெற வேண்டி அந்தக் கட்டளை நிறுவப்பட்டது. ஆனால் அந்த அறக் கட்டளையில் நடப்பது என்ன வென்றால் அது வியாபாரஸ்தலமாக, அதாவது குறிப்பாகக் கூற வேண்டுமென்றால், அது தனிப்பட்ட நபர் என்பதை விட ஒரு கூட்டு அமைப்பின் சார்பிலே அவர்கள் தவறான வழியிலே அதை அங்கே இயக்கிக் கொண்டிருக்கிறார்கள் என்பதை அரசுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். காரணம் அதிலே இருக்கின்ற அங்கத்தினர்கள் அதை முறையாகப் பயன்படுத்துவதில்லை; அரசியலிலே இருக்கக் கூடிய ஓட்டை உடைசலைப் பயன்படுத்தி, நீதி மன்றத்திலே வழக்கு மூலமாக அதிலிருந்து அவர்கள் தப்பித்துக் கொள்கிறார்கள். ஆகவே என்னுடைய கட்சியின் சார்பில் வலியுறுத்திக்



கூறுவது என்னவென்றால் இதை அரசே ஏற்று நடத்துவது சாலச் சிறந்தது என்று கூறி, எனக்கு வாய்ப்பு நல்கியதற்கு நன்றி கூறி, அமைகிறேன், வணக்கம்.

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எந்த ஒரு பிரச்சினையாக இருந்தாலும், வெவ்வேறான கண்ணோட்டத்தில் வெவ்வேறான கருத்துக்கள் பிறக்கின்றன. அந்த வகையில் 1981 ஆம் ஆண்டில் இந்த அறக்கட்டளையை அரசு மேற்கொண்டபோது, அறக்கட்டளை பல தவறுகளைச் செய்ததாகச் சொல்லப்பட்ட கருத்து இன்னொரு சாராரால் மறுக்கப்பட முடியும். மறுக்க முடியாது என்பதல்ல. ஆயினும் அப்படி ஒரு கருத்து ஏற்பட்டு அரசு மேற்கொண்டது. அடுத்து, அந்த அறக் கட்டளை நிர்வாகத்தை நடத்துகிற முறையில் பச்சையப்பன் அறக்கட்டளை என்றும், செங்கல்வராயன் அறக்கட்டளை என்றும் பிரித்து நடத்த வேண்டுமென்ற ஒரு கருத்து நீதிமன்றத்தின் ஆலோசனையாகப் பெறப்பட்டாலும்கூட நடைமுறையில் இரண்டு அறக்கட்டளையாக நடத்துவதில் உள்ள சிரமங்கள் காரணமாக ஒரு தயக்கம் இருக்கிறது. அதை மீறி பிரித்து நடத்த வேண்டுமானால், மேலும் பரிசீலிக்க வேண்டிய ஒரு கால கட்டத்தில் அறக்கட்டளை அமைப்பையே மாற்றுவது என்று இன்னொரு வகையான கருத்து இருந்தாலும், ஏற்கெனவே உள்ள முறைகள் ஏற்புடையதாக இல்லாத காரணமாக இன்னின்ன வகையான பிரதிநிதித்துவம் உள்ளதாக தேர்வு நடைபெற வேண்டும் என்ற அடிப்படையில் உயர் நீதிமன்றத்தில் அதற்கான ஒரு வேண்டுகோள் தரப்பட்டு இருக்கிறது. அது இந்த வழக்குத் தொடர்புடைய கருத்தாக இருக்கிற காரணத்தினால் இதில் முடிவு பெறப்படாமல் இருக்கிறது.

இந்த அரசு ஓராண்டுக்குப் பதிலாக 5 ஆண்டு அல்லது 10 ஆண்டு நீடிக்கக் கேட்கலாம் என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. உகம்சந்த் அவர்கள் சொன்ன கருத்து ஒன்று முடிந்தால் இப்படிச் செய்யுங்கள், முடியாவிட்டால் அப்படிச் செய்யுங்கள் என்று சொல்கிற ஓர் அவசரமான போக்காகும். இந்த அரசு தொடர்ந்து அறக் கட்டளையை அரசாங்க அதிகாரிகளைக் கொண்டே நடத்த வேண்டுமென்று விரும்பவில்லை. விரும்பவில்லையென்றாலும்கூட, ஒரு புதிய அறக்கட்டளை அமைப்பை எப்படி அமைப்பது, மேலாண்மைக் குழுவை எப்படித் தேர்வு செய்வது, யார் யாரைக் கொண்டு தேர்வு செய்வது என்பதைத் தீர்மானிக்க முடியாத, தீர்மானித்து ஒரு முடிவுக்கு வர முடியாத இக்கட்டான சூழ்நிலை அரசுக்கு இருக்கிறது. செங்கல்வராய நாயக்கர் இன்ஸ்டிட்யூட்டைப் பொறுத்த வரையில் அந்த அறக் கட்டளையினுடைய, தனி உரிமைகள் பாதிக்கப்படாத வகையில் என்ன செய்ய முடியுமோ அதைச் செய்யவும் கருதப்படுகிறது. இவைகளை எல்லாம் சேர்த்து இணைத்து ஒரு முகமான ஒரு முடிவுக்கு வர முடியாத இக்கட்டான நிலை நீடிக்கிற காரணத்தினால்தான் தற்காலிகமாக இதன் மூலம் ஓராண்டுக் காலத்திற்கு நீட்டித்தால், இடையில் ஒரு முடிவை நீதிமன்றத்திட

மிருந்து பெற்று, நல்லதொரு முடிவை எடுக்கலாம் என்று அரசு எதிர்பார்க்கிறது. ஆகவேதான் இந்தத் திருத்த தீர்மானத்தைக் கொண்டு வர வேண்டியவனாக இருக்கிறேன்.

திரு. கோ. பூவராகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ......

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, இல்லை, அதற்கு மேல் ஒன்றும் இல்லை. தொடர்ந்து வாதம் வேண்டாம். (குறுக்கீடு) அமைச்சர் அவர்களின் பதில் முடிந்து விட்டது. (குறுக்கீடு) இல்லை, இல்லை, உங்களுடைய கருத்துக்குத்தான் அவர் பதில் உரையில் சொல்லிவிட்டாரே. (குறுக்கீடு) இல்லை, இல்லை.

திரு. கோ. பூவராகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் உறுதிமொழி அளித்து ஓராண்டு ஆகிறது. எப்போது இதில் ஒரு முடிவுக்கு வர இருக்கிறார்கள் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உயர்நீதிமன்றம் பச்சையப்பன் அறக் கட்டளையின் நிர்வாகப் பொறுப்பை அரசு மேற்கொண்டதற்கு எதிராகப் பிறப்பித்த ஆணைக்கு அரசு ஏற்கெனவே உச்ச நீதி மன்றத்தில் தடுப்பு ஆணை வாங்கியுள்ளது. மேற்சொன்ன வழக்கு இன்னும் நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது. உச்ச நீதிமன்றத்தில் ஒரு வழக்கு நிலுவையில் உள்ளபோது அதை யொட்டி வேறு பிரச்சினைகள் எழுகிற போது அரசு அவசரப் பட்டு ஒரு முடிவு எடுக்க முடியவில்லை. இன்னும் சொல்லப் போனால் நீதிமன்றத்தின் கருத்துக்களுக்கும் உரிய மரியாதை கொடுத்து, என்ன செய்வது என்பது ஆலோசனையில் இருக்கிறது. அவ்வளவு அவசரப்பட்டு ஒரு அரசு முடிவு செய்ய முடியாது என்பது ஒன்று. ஏற்கெனவே இருந்த அரசு 8 ஆண்டுகள் எடுத்துக்கொண்டது என்பதையும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் உணர்வார்களாதலால் இதனை ஏற்றுக் கொள்வார்கள் என்று நான் கருதுகிறேன்.

திரு. கோ. பூவராகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீதிமன்றத்தின் தீர்ப்பைப் பெற்று விரைவில் முடிவுக்கு வருவதில் அரசின் முயற்சி என்ன என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உச்ச நீதிமன்றத்தினுடைய தீர்ப்பு இல்லாமல் தகுந்த ஒரு முடிவுக்கு வர இயலவில்லை.



திரு. எஸ். டி. உகம் சந்த்: அவர்களுடைய தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி:

"1991 ஆம் ஆண்டு பச்சையப்ப அறக் கட்டளை மற்றும் பட்டியல் பொதுப் பொறுப்பாட்சியமைப்புகள் மற்றும் நிலைக் கட்டளைகள் (மேலாண்மையை மேற்கொள்ளுதல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 1/1991) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று, நிறை வேற்றப் பெற்று, சட்ட முன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற்றது.

பிரிவு 2, பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை வேற்றப் பெற்றது.

பிரிவு 3.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி:

"பிரிவு 3, சட்ட முன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப் பெற வேண்டும்."

Thiru S. D. Ugamchand: Sir I move—

"In clause 3, for the words 'eleven years' substitute the words ten years and three months'.

திருத்தம் முறைப்படி வழிமொழியப் பெற்றது.

திருத்தம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றது.

பிரிவு 3, பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை வேற்றப்பெற்றது.

பிரிவு 4, பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை வேற்றப்பெற்றது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றன.

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

''1991 ஆம் ஆண்டு பச்சையப்ப அறக்கட்டளை மற்றும் பட்டியல் பொதுப் பொறுப்பாட்சியமைப்புகள் மற்றும் நிலைக் கட்டளைகள் (மேலாண்மையை மேற்கொள்ளுதல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவைச் சட்ட முன்வடிவு எண் 1/1991) நிறைவேற்றப் பெற வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு நிறைவேற்றப் பெற்றது.

**(ஈ) பயிரிடு குத்தகையாளர்கள் குத்தகை நிலுவை (நிவாரண) திருத்தச் சட்ட முன்வடிவு 1991.**

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

'' 1991 ஆம் ஆண்டு தமிழ்நாடு பயிரிடு குத்தகையாளர்கள் குத்தகை நிலுவை (நிவாரண) திருத்தச் சட்டமுன்வடிவு * (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 2/1991) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற வேண்டும். ''

12-35 மணி.

நான் இங்கே கொண்டு வந்திருக்கிற இந்தச் சட்டமுன்வடிவு ஒட்டுமொத்தமாக உறுப்பினர்களின் கருத்துக்களைப் பிரதிபலிக்கக்கூடிய ஒன்று என்று நான் நிச்சயமாக நம்புகிறேன். ஆகவே இதிலே விவாதங்களோ, விமர்சனங்களோ தேவையியிராது. அப்படியே ஏற்றுக்கொள்வார்கள் என்று நம்புகிறேன். என்றாலும் ஜனநாயகத்தின் உயர் அம்சம் என்பது விவாதங்களும் விமர்சனங்களும்தான். முடிந்தவர்கள் பேசலாம். பிறகு பதில் சொல்கிறேன்.

திரு. வே. தம்புசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,குத்தகையாளர்கள் நிவாரணச் சட்டத்தை வருவாய்த் துறை அமைச்சரவர்கள் கொண்டுவந்திருப்பதை, காலத்தை நீட்டி இருப்பதை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் வரவேற்கிறேன். அத்தோடு இந்த குத்தகைச் சட்டத்திலே சொல்லப்பட்டிருக்கிற அந்தக் குத்தகை கட்டக்கூடிய காலக் கெடுவில், அதாவது 1991 மார்ச் 31-ஆம் தேதிக்குள் நான்கில்

*1991 ஆம் வருடம் சனவரி மாதம் 21 ஆம் தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.



ஒரு பங்கு கட்ட வேண்டுமென்று இருப்பதை இரண்டு தவணைகளாகக் கட்டுவதற்குச் சட்டத்திலே அனுமதி வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அந்த நான்கில் ஒரு பங்கை இரண்டு தவணைகளாகக் கட்டுவதற்கு இந்த ஆண்டு பசலி முடிகிற காலம் வரையிலும் கட்டுகிற முறையில் கால அவகாசத்தை நீட்டித்துத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மேலும், குத்தகை விவசாயிகளின் குத்தகை பாக்கியை நிர்ணயிக்கிறபோது, குத்தகை பாக்கி என்பதை 75 : 25 என்ற வார அடிப்படையில் நிர்ணயிக்க வேண்டும். இப்போது பாக்கி என்பது அவர்கள் குத்தகை பத்திரத்தில் முன்னாலே கண்ட பாக்கியைத்தான் பாக்கி என்று கூறுவதால் இப்படிப்பட்ட நிவாரணம் அளிக்கும்போது, குத்தகைக்கும் 75 சதவிகித வாரத்திற்கும் சம்பந்தம் இல்லாத சூழ்நிலை இருப்பதைக் கவனத்திலே கொண்டு, அந்த அடிப்படையிலே 75 : 25 என்ற வாரத்தை நிர்ணயிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அந்தக் குத்தகை விவசாயிகள் பயிரிடுகின்ற அந்த நிலம், சாகுபடி செய்யக்கூடிய நிலம் பதியாமல் விடுகிற சூழ்நிலை இருக்கிறது. முன்னாலே அப்படிப்பட்ட குத்தகை நிலங்களைப் பதிவதற்காக குழு அமைக்கப்பட்டிருக்கிறது. அந்தக் குழுவை மீண்டும் செயல்பட வைப்பதற்கான நடைமுறையை அரசு மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பொதுவாக குத்தகை விவசாயிகள் சாகுபடி செய்யும் போது அந்த நிலைமையை கிராமத்திலே உள்ள வி.ஓ. பதிவு செய்யாத நிலைமை நீடிக்கிறது. இதற்குப் பல்வேறு உதாரணங்களைச் சொல்ல முடியும். ஆகவே அப்படிச் சாகுபடி செய்யக்கூடிய அந்தக் குத்தகைதாரர்களை கிராமத்தில் இருக்கிற கிராம அதிகாரிகள், அவர்கள் சாகுபடி உரிமையைப் பாதுகாக்கின்ற வகையில் சாகுபடி உரிமையைப் பதிவு செய்ய வேண்டும் ; அதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அப்படி பதிவு செய்யாது இருக்கிற காரணத்தினாலே அவர்கள் இன்று அரசால் வழங்கக் கூடிய பல்வேறு சலுகைகளைப் பெற முடியாத சூழ்நிலை இருப்பதோடு, கூட்டுறவு வங்கியிலே கூட அவர்கள் தங்களுடைய சாகுபடி உரிமையைப் பதிவு செய்து கடன் பெற முடியாத நிலைமையும் இருக்கிறது. இத்தகைய திருத்தங்களோடு இந்தச் சட்டத்தை அரசு பரிசீலித்து, நான் சொல்லி இருக்கக் கூடிய கருத்துக்களைப் பரிசீலித்து, நிறைவேற்ற வேண்டும் என்று கேட்டு, வாய்ப்புக்கு நன்றி கூறி முடிக்கிறேன்.

12-40 மணி.

திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் கொண்டுவந்து இருக்கிற இந்தச் சட்டத் திருத்தத்தை வரவேற்கின்ற நேரத்தில் ஒருசில கருத்துக்களை

நான் சொல்ல விரும்புகிறேன். எனக்கு முன்னால் பேசிய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னது போன்று இன்றைக்கு குத்தகைதாரர் சட்டத்தின்படி பதிவுகளைச் செய்கின்றார்களா என்பது ஒரு கேள்விக் குறியாகத்தான் இருந்துகொண்டு வருகின்றது. அடங்கல் வைத்து இருக்கின்ற அதிகாரிகள், யாருக்கு நிலம் சொந்தமாக இருக்கின்றதோ அவர்களுடைய பெயர்களைத்தான் பதிவு செய்துகொண்டு வருகிறார்கள். அதன் காரணமாக உண்மையாக பயிர் செய்கின்றவர்களுக்கு எந்தவித மான நிவாரணமும் கிடைக்காத நிலைமைதான் இருந்துகொண்டு வருகின்றது. ஆதலால் கண்டிப்பான முறையில் உத்திரவுகளை சம்பந்தப்பட்ட கிராம அதிகாரிகளுக்கும் மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கும் மற்றவர்களுக்கும் நீங்கள் அனுப்ப வேண்டும். நிலத்திலே சென்று யார் பயிர் செய்கின்றார்களோ அவர்களுடைய பெயர்களை அங்கு இருக்கிற அதிகாரிகள் பதிவு செய்ய வேண்டும். அப்படிப்பட்டவர்கள் நிலச் சொந்தக்காரர்களாக இல்லாவிட்டாலும், நாங்கள் கேட்கின்ற நேரத்தில் அதிகாரிகள், நிலச் சொந்தக்காரர்கள் யாரோ அவர்களுடைய பெயர்களைத் தான் பதிவு செய்கின்றோம் என்று சொல்கிறார்கள். அப்படிப்பட்ட தவறுகளைச் செய்கின்ற அந்த அதிகாரிகள் மீது உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும் என்று நீங்கள் கண்டிப்பான முறையிலே உத்தரவுகளைப் போட்டால் தான் இதுபோன்ற நிவாரணத்தின் மூலமாக அவர்களுக்கு உண்மையான சலுகைகள் கிடைக்க முடியும். அதே நேரத்தில் மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் ஒன்றைக் கேட்க விரும்புகிறேன். இதுவரையில் இந்த ஆண்டு, எத்தனை பேர் குத்தகைதாரர் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டு இருக்கின்றார்கள் ? கோவில் நிலங்களுக்கு வேண்டுமானால் பதிவுகள் இருக்கலாம். அல்லது ஒருசிலர் வேண்டுமானால் பதிவுகளைச் செய்து இருப்பார்கள். ஆனால் 80 சதவீதம் பதிவு செய்யப்படாமல் இருக்கின்றது. எனவே அந்த விவரத்தை எல்லாம் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரியப்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, இந்தச் சட்டத் திருத்தத்தை வரவேற்று விடைபெறுகிறேன்.

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் :** மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே நான் கொண்டு வந்த சட்டமுன்வடிவை உறுப்பினர்கள் ஏற்றுக்கொள்வார்கள் என்ற நம்பிக்கையோடு தெரிவித்ததற்கு ஏற்ப, அவர்களும் அதை ஏற்றுக்கொண்டதற்காக முதற்கண் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். இப்போது கொண்டு வந்திருக்கிற இந்தச் சட்டமுன்வடிவின்படி—தமிழகத்தில் 4 இலட்சத்து 94 ஆயிரம் பயிரிடு குத்தகைதாரர்கள் இருக்கிறார்கள். மேற்சொன்ன சட்டத்தின்படியான நிவாரணத்தைத் தகுதியுடைய அனைத்துப் பயிரிடு குத்தகைதாரர்களும் பயன்படுத்திக் கொள்ள இயலுமாறு செய்யும் பொருட்டு, அவர்கள் விருப்பத்தைத் தெரியப்படுத்திக் கொள்வதற்கான கால வரம்பினை 1990 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 10 ஆம் நாள் முதல் மற்றுமோர்



இரண்டு திங்கள் கால அளவிற்கு நீட்டிப்பது என அரசு முடிவு செய்து இருக்கிறது. 38/90 சட்டப்படி பயிரிடு குத்தகைதாரர்கள் சலுகை முறையில் குத்தகைப் பாக்கிகளைச் செலுத்த வகை செய்யப்பட்டுள்ளது. இதற்கு முந்திய சட்டத்தில் மேற்கூறிய சலுகைகள் வழங்கப்படவில்லை. ஆதலால் 38/90 சட்டத்தில் 5 ஆம் பிரிவில், 5 ஆம் உட்பிரிவில், 2 ஆம் கூறில் குத்தகை நிலுவையில் ' நான்கில் ஒரு பங்கினை ' என்ற சொற்றொடர் பொருத்தமாக இல்லை. அதற்குப் பதிலாக அத்தகைய மேற்சொன்ன முடிவுகளுக்குச் செயல்வடிவம் கொடுப்பதற்கு 1990 ஆம் ஆண்டு தமிழ்நாடு பயிரிடு குத்தகைதாரர்கள் குத்தகை நிவாரணம் திருத்த அவசரச் சட்டம், தமிழ்நாடு அரசு அவசரச் சட்டம் ஆளுநரால் பிறப்பிக்கப்பட்டது. இச்சட்ட முன்வடிவு மேற்சொன்ன அவசரச் சட்டத்திற்குப் பதிலாக அமைய இருக்கிறது.

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் பேசிய மாண்புமிகு உறுப்பினர் அவர்களும், அடிக்கடி விவாதத்திலே கலந்து கொள்வதில் தனக்கு என்று ஒரு தனி முத்திரை பதித்துக்கொண்டிருக்கிற உகம்சந்த் அவர்களும் இதுபற்றித் தனது கருத்தை இதயப்பூர்வமாக எடுத்துச் சொன்னார்கள். பெரும்பாலும் நிர்வாகப் பிரச்சினையைப் பற்றி அவர்கள் சொன்னார்கள். பொதுப் பிரச்சினையைப்பற்றி நான் பேசியிருக்கிறேன். இதிலே ஏற்படுகிற சிக்கல்கள் ஏதாவது இருந்தால், அவைகள் அரசாங்கத்தின் கவனத்திற்கு வருமானால் நிச்சயமாக அரசாங்கம் அதைப் பரிசீலிக்கும் என்ற உறுதிப்பாட்டை நான் இங்கே வழங்கிக் கொள்ள விரும்புகிறேன். இந்த அடிப்படையில் இந்தச் சட்ட முன்வடிவை நிறைவேற்றித்தருமாறு பேரவைத் தலைவர் அவர்களை நான் கேட்டுக்கொள்கிறேன்.

12-45 மணி

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவை முன்னுள்ள கேள்வி :

'' 1991 ஆம் ஆண்டு தமிழ்நாடு பயிரிடு குத்தகையாளர்கள் குத்தகை நிலுவை (நிவாரண) திருத்தச் சட்டமுன் வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 2/1991) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும் .''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற்றது.

பிரிவுகள் 2 முதல் 4 வரை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றன.

பிரிவு 1, முகப்புரை நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றன.

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

'' 1991 ஆம் ஆண்டு தமிழ்நாடு பயிரிடு குத்தகையாளர்கள் குத்தகை நிலுவை (நிவாரண) திருத்தச் சட்டமுன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 2/1991) நிறைவேற்றப் பெற வேண்டும். ''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்டமுன் வடிவு நிறைவேற்றப்பெற்றது.

(உ) இயக்கூர்திகள் வரிவிதிப்பு (திருத்த) சட்ட முன்வடிவு, 1991.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

'' 1991 ஆம் ஆண்டு தமிழ்நாடு இயக்கூர்திகள் வரிவிதிப்பு (திருத்த) சட்டமுன்வடிவு *(சட்டமன்றப்பேரவை சட்டமுன் வடிவு எண். 15/1991) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும். ''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற்றது.

பிரிவுகள் 2 மற்றும் 3 பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

பிரிவு 1 முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றன.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

*1991 ஆம் வருடம் சனவரி மாதம் 23 ஆம் தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.



'' 1991 ஆம் ஆண்டு தமிழ்நாடு இயக்கூர்திகள் வரிவிதிப்பு (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவைச் சட்டமுன் வடிவு எண் 15/1991) நிறைவேற்றப்பெற வேண்டும். ''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்டமுன் வடிவு நிறைவேற்றப்பெற்றது.

(ஊ) இயக்கூர்திகள் (தனி வகை முறைகள்) நீத்தறவுச் சட்டமுன் வடிவு, 1991.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

'' 1991 ஆம் ஆண்டு தமிழ்நாடு இயக்கூர்திகள் (தனி வகைமுறைகள்) நீத்தறவுச் சட்டமுன்வடிவு * (சட்டமன்றப் பேரவைச் சட்டமுன்வடிவு எண் 16/1991) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும். ''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற்றது.

பிரிவுகள் 2 மற்றும் 3 பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றன.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

'' 1991 ஆம் ஆண்டு தமிழ்நாடு இயக்கூர்திகள் (தனி வகைமுறைகள்) நீத்தறவுச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவைச் சட்டமுன்வடிவு எண் 16/1991) நிறைவேற்றப்பெற வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்டமுன் வடிவு நிறைவேற்றப்பெற்றது.

*1991 ஆம் வருடம் சனவரி மாதம் 23 ஆம் தேதியிடப்பட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

விரோதக் கொள்கையில் இருந்தாலும்கூட, ராஜினாமா செய்ய வேண்டுமென்று நாங்கள் கோஷம் போட்டு போராடிய போதும் கூட, அன்றைய தினத்தில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசை கலைக்கக் கூடாது என்பதற்காக நாங்கள் குரல் கொடுத்தோம். அதை நான் காங்கிரஸ் கட்சி நண்பர்களுக்கு நினைவு படுத்த இந்த நேரத்தில் முயற்சிக்கிறேன்.

அதேபோல்தான் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு இடையிலே டிஸ்மிஸ் செய்யப்பட்டபோது கூட இந்திய கம்யூனிஸ்டு கட்சி சார்பாக கண்டித்திருக்கிறோம், மத்திய அரசை எதிர்த்திருக்கிறோம். ஆனால் இன்றைய தினத்திலே காங்கிரஸ் கட்சி இந்த அவையிலே இல்லையென்றாலும் கூட, ஜனநாயகப் படுகொலை மூலமாக அவர்கள் அதற்கு விரும்புகிறார்கள். காலையிலே அம்மையார் பாப்பா உமாநாத் அவர்கள் குறிப்பிட்டதுபோல், அநேகமாக தன்னுடைய மகன் இறந்தாலும் பரவாயில்லை, மருமகளை விதவையாகப் பார்க்க வேண்டுமென்பதற்காக, இந்தியாவில் ஒரு ஜனநாயகப் படுகொலையை இன்றைய தினத்தில் நம் முன்னாள் கொண்டு வந்து நிறுத்தியிருக்கிறார்கள். அமைதியான முறையில், ஒரு கலவரம் இல்லாமல் ஒரு புதிய அரசு பாண்டிச்சேரி மாநிலத்தில் வந்திருந்தது. இன்றையதினத்தில் விதவையாக அந்த அரசு நின்று கொண்டிருக்கிறது என்பதனை நான் அவர்களுக்கு நினைவுபடுத்த விரும்புகிறேன். அதேபோன்றுதான் அஸ்ஸாம் அரசை எடுத்துக்கொண்டாலும். இன்னும் கோவா அரசை எடுத்துக்கொண்டாலும், அவை போன்ற அரசுகள் எல்லாம் இன்றைக்கு ஜனநாயகப் படுகொலை செய்யப்பட்டு நாட்டிலே யாரும் கேட்பாரற்ற நிலையில் இருக்கின்றன. காங்கிரஸ் கட்சி நண்பர்கள் உணரவேண்டுமென்பதற்காக நான் இவைகளைச் சொல்ல விரும்புகிறேன்.

அதே நேரத்தில் இன்றையதினம் பத்திரிகையிலே அந்தக் கட்சியினுடைய தலைவர்களே குரல் கொடுப்பதை நான் பார்க்கிறேன். திருத்துறைப்பூண்டி, நாகப்பட்டினம், வேதாரணியம் போன்ற கடலோர பகுதிகளில் விடுதலைப் புலிகள், விடுதலைப் புலிகள் என்று இன்றையதினம் காங்கிரஸ் கட்சியினர் குரல் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். இன்றைக்கு விடுதலைப் புலிகளைச் சுட்டிக்காட்டி, ஆட்சியை ராஜினாமா செய்யவேண்டுமென்று சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். நான் அவர்களுக்கு நினைவுபடுத்த விரும்புகிறேன். அவர்கள் சொல்கிறார்கள். ''மாமியார் உடைத்தால் மண் சட்டி, மருமகள் உடைத்தால் பொன் சட்டி'' என்று சொல்வது போல் அவர்கள் ஆட்சி இருந்த காலத்தில், ராஜீவ் காந்தி மூலமாக அவர்களுக்கு நிதி வழங்கினார்கள், எம்.ஜி.ஆர். மூலமாக நிதி வழங்கினார்கள், ஆனால் இன்றையதினத்தில் ஏதோ திராவிட முன்னேற்றக் கழகம்தான் அவர்களுக்கு ஆதரவு கொடுப்பது போன்று



அவர்களுடைய பிரச்சாரங்களை நாடுதோறும் செய்து கொண்டிருக்கிறார்கள். அதை எல்லாம் சொல்லி மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கின்ற எந்த அரசாக இருந்தாலும் அதைக் கலைப்பதற்கு இந்திய கம்யூனிஸ்டு கட்சி மூலமாக நாங்கள் அனுமதிக்கப்போவது இல்லை. 356 என்ற பிரிவை அரசியல் சாசனத்திலிருந்து பார்லிமெண்டு நீக்கவேண்டுமென்பதற்காக நாங்கள் தொடர்ந்து குரல் கொடுத்துக் கொண்டிருக்கிறோம்.

அதேபோன்றுதான் இன்றைக்குக்கூட தமிழகத்தில் காவிரி நதி நீர்ப்பிரச்சினை, காவிரி நதி நீர்ப் பிரச்சினையைப் பொறுத்தவரையில் தஞ்சை மாவட்டத்தை எடுத்துக் கொண்டோம் என்று சொன்னால் 19 ஆண்டுக்காலமாக தொடர்ந்து அது ஒரு பாலைவனமாக மாறியிருக்கிறது. இயற்கையை நம்பியே தன்னுடைய வாழ்நாளை தஞ்சை மாவட்டத்து விவசாயிகள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அப்படிப்பட்ட பிரச்சினைகளிலே கூட இங்கே இருக்கக்கூடிய எதிர்க்கட்சியினுடைய குழுக்கள், அங்கே அவர்கள் நடுவர் தீர்ப்பிற்கு விடுகிறபோது, பிரதமரை சந்தித்துப் பேசவேண்டுமென்று போனபோதுகூட, அங்கே இருக்கக்கூடிய நாடாளுமன்ற உறுப்பினர் நம்முடைய பொதுப்பணித்துறை அமைச்சரோடு சென்று, அணுகிப் பேசி தீர்வு காண முன் வராதவர்கள், தனிப்பட்ட முறையிலே கர்நாடகத்தினுடைய முதலமைச்சர் மாண்புமிகு திரு. பங்காரப்பா அவர்களை சந்தித்து, தண்ணீர் விடப்போவதாகக் கூறினார்கள். ஆனால் தண்ணீர் திறந்துவிட்டபாடில்லை. அதனாலே இன்றைய தினத்தில் 12 இலட்சம் ஏக்கர்கள் தண்ணீர் இல்லாமல் கருகக் கூடிய ஒரு நிலைமை இருக்கிறது.

16-10 மணி

காவிரிப் பிரச்சினையை நடுவர் தீர்ப்புக்குக் கொண்டு சென்ற தமிழக அரசை நான் பாராட்டிக் கடமைப்பட்டிருக்கிறேன். அந்தக் காவிரி நீர் பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கு நம்முடைய அரசு தொடர்ந்து முயற்சி எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அதேபோல பத்தாயிரம் ரூபாய் கடன் தள்ளுபடி தொடர்ந்து நாங்கள் விவசாயச் சங்கத்தின் சார்பாக பல ஆண்டுக்காலமாக இந்த அவையிலே, 10 ஆயிரம் ரூபாய் கடனை தள்ளுபடி செய்ய உத்திரவிட வேண்டும் என்று சொல்லி கூட்டுறவுமானிய கோரிக்கையிலேகூட நாங்கள் சொன்னோம்- திராவிட முன்னேற்றக் கழகத்தின் கொள்கை இதில் என்ன என்று கூட நான் கேட்டேன். ஆனால் பத்தாயிரம் ரூபாய் தள்ளுபடி என்ற சட்டத்தைக் கொண்டு வந்து அதன் மூலம் 18 லட்சம் விவசாயிகளுக்கு நன்மை அளித்திருக்கிறது என்று சொன்னால் அதை நான் பாராட்டுவதற்கு கடமைப் பட்டிருக்கிறேன்.

[1991 சனவரி 24

**12-50 மணி**

## (எ) வேளாண் விளைபொருள் சந்தைகள் சார்ந்த சட்டங்கள் (திருத்த) சட்ட முன்வடிவு 1991.

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

"1991 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளைபொருள் சந்தைகள் சார்ந்த சட்டங்கள் (திருத்த) சட்டமுன் வடிவு* (சட்டமன்றப் பேரவைச் சட்டமுன்வடிவு எண் 10/1991) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும்."

திரு. சி. கோவிந்தசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த வேளாண் விளைபொருள் சந்தைகள் சார்ந்த சட்டங்கள் திருத்தச் சட்டமுன்வடிவில், ஏற்கெனவே கடந்த 1977ஆம் ஆண்டுக்கு முன்னாள் 1959-ம் வருடத்திய தமிழ்நாடு வேளாண்மை விளைபொருள் விற்பனைச் சட்டத்தின்படி ஒவ்வொரு மாவட்டத்திலும் உழவர்களும் வியாபாரிகளும் பங்குக் கொள்ளக்கூடிய வகையில் அந்தக் குழு அரசின் சார்பில் நியமிக்கப்பட்டு, அது சிறந்த முறையில் பணியாற்றிக்கொண்டிருக்கக் கூடிய சூழ்நிலையில், 1977-ல் அந்தக் குழு கலைக்கபட்டு, தனி அதிகாரிகள் நியமிக்கப்பட்டு ஏறக்குறைய தொடர்ந்து 13 ஆண்டுக் காலமாக அந்தத் தனி அதிகாரிகள் நிர்வாகமே அதில் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. ஆகவே இதேபோல கூட்டுறவுத் துறையில் தனி அதிகாரிகளுடைய நிர்வாச முறைக்கு முடிவு கட்டி இன்றைக்கு ஜனநாயகப் பூர்வமாக தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாகிகளைக் கொண்ட ஒரு அமைப்பு கூட்டுறவுத் துறையில் ஏற்பட்டிருக்கின்ற இந்தத் தருணத்தில், இந்த வேளாண் விளைபொருள் சந்தைக் குழுவிலும் விவசாயிகளும், வியாபாரிகளும் பங்கு கொள்ளத் தக்க வகையில் அரசின் சார்பில் குழு நியமிக்கப்பட்டோ அல்லது ஜனநாயகபூர்வமாக தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு குழுவோ நிர்வாகத்தை நடத்தக்கூடிய முறையில் இந்தத் தனி அதிகாரிகளுடைய காலத்தை மேலும் நீட்டிக்காமல் இங்கே அந்த சட்டவிதிகள் எல்லாம் உருவாக்கப்படுவதற்கு சில கால அவகாசம் தேவை என்று இந்த நோக்க-காரணங்களில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆகவே கூடிய விரைவாக அப்பணியை முடித்து ஜனநாயக பூர்வமாக அந்த வேளாண் விளைபொருள் சந்தைக் குழு செயல்படக்கூடிய வகையில் இந்த அரசு நடவடிக்கை எடுத்து செய்து கொடுக்க வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

---

*1991 ஆம் வருடம் சனவரி மாதம் 22ஆம் தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.



1991 சனவரி 24]

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே எடுத்துக் காட்டிய அந்தக் கருத்தின் அடிப்படையில்தான் இந்தச் சட்டத்திருத்தம் கொண்டு வரப்படுகிறது. விரைவிலேயே பொதுமக்களுடைய பிரதிநிதிகள் நியமிக்கப்பட்டு பொறுப்பை ஏற்கக்கூடிய வகையில் நடவடிக்கைகள் வேகமாக எடுக்கப்படக் கூடிய காரணத்தால் சட்டவிதி முறைகளை வகுப்பதற்குக் கால தாமதம் ஏற்பட்ட காரணத்தால்தான் இந்தக் கால நீட்டிப்பு அவசரச் சட்டமாக பிறப்பிக்கப்பட்டது. அதையொட்டி சட்டமாக அதை நிறைவேற்ற வேண்டுமென்பதற்காக இந்தத் திருத்தம் கொண்டுவரப்பட்டிருக்கிறது. இனிமேல் கால நீட்டிப்பு நிச்சயமாக இந்த அவையிலே கோரமாட்டேன். அங்கே பொது மக்கள் பிரதிநிதிகள் பொறுப்பேற்பார்கள் என்பதை எடுத்துச் சொல்லி, இதை நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி :

"1991 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளைபொருள் சந்தைகள் சார்ந்த சட்டங்கள் (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவைச் சட்டமுன்வடிவு எண் 10/1991) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற்றது.

பிரிவு 2 முதல் 5 வரை, பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றன.

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"1991 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளைபொருள் சந்தைகள் சார்ந்த சட்டங்கள் (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவைச் சட்டமுன்வடிவு எண் 10/1991) நிறைவேற்றப் பெற வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்டமுன்வடிவு நிறைவேற்றப்பெற்றது.

[1991 சனவரி 24

(ஏ) வேளாண்மைப் பல்கலைக் கழக (திருத்த) சட்ட முன்வடிவு 1991.

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

''1991 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழக (திருத்த) சட்ட முன்வடிவு* (சட்டமன்றப் பேரவைச் சட்ட முன்வடிவு எண் 11/1991) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும்.''

12-55 மணி.

திரு. என். பழனிவேல் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் கட்சியைச் சேர்ந்த திரு. கோவிந்தசாமி அவர்கள் பேசிய சட்ட முன்வடிவில் நான் பேசுவதாக இருந்தேன். இந்தச் சட்டமுன்வடிவில் நான் பேசவில்லை.

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஜீ.டி. நாயுடு அவர்கள் வேளாண்மைத் துறையில் விஞ்ஞான முறைகளைப் புகுத்தி, நல்ல விஞ்ஞான ரீதியாகக் கொண்டு வரவேண்டுமென்று பாடுபட்டவர்கள். அதைப்போல வேறு பயிர் ரகங்களையும் அவர் தமிழ் நாட்டில் அறிமுகம் செய்தவர். அப்படிப்பட்ட அந்த விஞ்ஞானியைப் பாராட்டிப் போற்றக்கூடிய வகையில், விஞ்ஞானிகளை பொதுவாக நல்ல அறிவாளிகளாகப் போற்றக்கூடிய வகையில் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் முடிவு செய்து, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம் என்று இருந்த பெயரை மாற்றி பட்டமளிப்பு விழாவின்போது அனைவருடைய கருத்தையும் ஏற்று 'தமிழ்நாடு ஜீ. டி. நாயுடு வேளாண்மைப் பல்கலைக் கழகம்' என்று பெயர் சூட்டியிருக்கிறார்கள். இது ஒரு விஞ்ஞானிக்கு இந்த அரசு தெரிவிக்கும் பெரும் மரியாதை என்று சொல்லி, இந்தச் சட்ட முன்வடிவை நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி :

''1991 ஆண்டு தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழக (திருத்த) சட்ட முன் வடிவு (சட்டமன்றப் பேரவைச் சட்ட முன்வடிவு எண் 11/1991) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும்''.

*1991 ஆம் வருடம் சனவரி மாதம் 22 ஆம் தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.



1991 சனவரி 24]

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, சட்ட முன் வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற்றது.

பிரிவுகள் 2 முதல் 8 வரை பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று, நிறைவேற்றப் பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றன.

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

''1991 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழக (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண்* 11/1991) நிறைவேற்றப்பெற வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு நிறைவேற்றப்பெற்றது.

(ஐ) டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக் கழகம், தமிழ்நாடு (திருத்த) சட்ட முன்வடிவு 1991.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

'' 1991 ஆம் ஆண்டு டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக் கழகம், தமிழ்நாடு (திருத்த) சட்ட முன் வடிவு* (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 12/1991) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்''.

திருமதி பொ. லட்சுமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலலைக் கழகத்தின் பெயரை மாற்றுவதற்காக இந்தச் சட்ட முன்வடிவு கொண்டு வரப்பட்டிருக்கிறது. இது தேவையற்றதாகும். தமிழ்நாட்டில் பல்வேறு பல்கலைக் கழகங்கள் இருக்கின்றன. அவற்றிற்கு எல்லாம் பெயருக்கு முன்னாலே 'தமிழ்நாடு' என்று வருவதில்லை. ஆகையால், மக்கள் மத்தியிலே, மறைந்த எங்கள் இதய தெய்வம் புரட்சித்தலைவரின் புகழை மறைக்கச் செய்யும் காரியமாக இந்தச் சட்ட முன்வடிவு கொண்டு வரப்பட்டிருக்கிறது என்று மக்கள் பேசிக் கொள்கிறார்கள். அதனால் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்தச் சட்ட முன்வடிவை வாபஸ் பெற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

*1991 ஆம் வருடம் சனவரி மாதம் 22 ஆம் தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

[1991 சனவரி 24

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அரசுக்கு யாருடைய பெயரையும் எடுத்துவிட வேண்டுமென்று எண்ணம் இல்லை. ஆனால் இதற்கு முன்பு இருந்த ஆட்சியில் அப்படி நடைபெற்றிருக்கலாம். ஏற்கெனவே தமிழ்நாட்டில் முதலமைச்சராக இருந்த டாக்டர் கலைஞர் அவர்களின் பெயரை பல இடங்களிலிருந்து முன்பு இருந்த அரசு எடுத்து விட்டதைப் போன்று பழிவாங்கும் போக்கு இந்த அரசுக்கு இல்லை. தமிழ் நாடு என்று புதிதாகச் சேர்க்கப்படுவதில்லை. ஏற்கெனவே தமிழ்நாடு என்ற சொல் இருக்கிறது. 'டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக் கழகம், தமிழ்நாடு' என்று ஏற்கெனவே இருந்தது. இப்போது 'தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக்கழகம்' என்று மாற்றப்படுகிறது; அவ்வளவு தான். வேறுவிதமான மாற்றமோ, நீக்கமோ இதிலே இல்லை. தமிழக முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்கள் ஏற்கெனவே இதுபற்றி விளக்கம் அளித்திருக்கிறார்கள் இந்த அவையிலேயே. எனவே, இதிலே எந்தவிதமான உள்நோக்கமும் இல்லை. மறைந்த முதலமைச்சரின் புகழைக் குறைக்க வேண்டுமென்ற உத்தேசமும் இல்லை. ஆகவே, இந்தச் சட்ட முன்வடிவை நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி:

"1991 ஆம் ஆண்டு டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக்கழகம், தமிழ்நாடு (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 12/1991) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, சட்ட முன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற்றது.

13-00 மணி

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் அனுமதியுடன் அலுவல் நேரம் ஒரு மணித்துளி நீட்டிக்கப் பெறுகிறது.

பிரிவுகள் 2 முதல் 8 வரை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றன.



1991 சனவரி 24]

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி: தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

"1991 ஆம் ஆண்டு டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக்கழகம், தமிழ்நாடு (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 12/1991) நிறைவேற்றப் பெற வேண்டும்".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு நிறைவேற்றப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் காலை அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, 16-00 மணிக்குப் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை 13-01 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் திரு. வி. பெ. துரைசாமி அவர்கள் தலைமையில் 16-00 மணியளவில் பேரவை மீண்டும் கூடியது.

9. ஆளுநர் பேருரைக்கு நன்றி கூறும் தீர்மானம்—விவாதம்—தொடர்ச்சி.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது கொடுக்கப்பட்ட திருத்தங்கள் இன்று முன்மொழியப்பட்டு, வழிமொழியப்படவேண்டும்.

திரு. எஸ்.டி. உகம்சந்த் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட திருத்தத்தை மொழிகிறேன் :

"தமிழகத்தில் டீசல் பம்ப்செட்டுகளைக் கொண்டு விவ
சாயம் செய்யும் விவசாயிகளுக்கு உடனடியாக மின் இணைப்பு
கொடுக்கவும், அதே நேரத்தில் மின் இணைப்பு கொடுக்கப்படும்
வரையில் அவர்களுக்கு டீசலை இலவசமாக வழங்குவதற்கு
ஏதும் குறிப்பிடாதது குறித்தும், தமிழகத்தில் குதிரைப் பந்த
யத்தை ஒழிப்பது குறித்தும், கடந்த இரண்டு ஆண்டுகளாக
மூடப்பட்டுள்ள ஸ்டாண்டர்டு மோட்டார்ஸ் தொழிற்சாலையை
உடனடியாகத் திறக்கவும், பாதிக்கப்பட்டுள்ள அந்தத் தொழி
லாளர்களுக்கு உடனடியாக நிவாரணம் வழங்குவது குறித்தும்,
சென்னையில் 100 ஆண்டுகளாக இயங்கிவரும் பின்னி தொழிற்
சாலையை உடனடியாக தமிழக அரசே ஏற்று நடத்துவது

D
V211,31'N91
N91·372
144898

குறித்தும், செங்கை—அண்ணா மாவட்டம், மதுராந்தகம் கூட்டுறவு பாலிதின் கோணிகள் தயாரிக்கும் தொழிற்சாலை சில ஆண்டுகளாக மூடப்பட்டு இருப்பதை மீண்டும் திறப்பது குறித்தும் ஆளுநர் உரையில் ஏதும் குறிப்பிடப்படாதது வருந்தத்தக்கது''.

திருத்தம் முறைப்படி வழிமொழியப்பெற்றது.

திரு. ஜி. பழனிச்சாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களுடைய உரையின்மீது இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக கருத்துக்களைக் கூறி நன்றி தெரிவிப்பதற்கு நான் முன் வருகிறேன்.

இன்றையதினம் வளைகுடாப் பகுதியிலே ஏற்பட்டிருக்கக்கூடிய யுத்தங்களை கணக்கில் எடுத்துக்கொண்டு மைய அரசோடு மாநில அரசும், மைய அரசு எடுக்கக்கூடிய முடிவுகளுக்கு மாநில அரசு இணங்கி அந்தப் போர் நிறுத்தப்பட்டு அமைதியை ஏற்படுத்துவதுகுறித்து ஆளுநர் உரையில் குறிப்பிடப்பட்டு இருப்பதை நாங்கள் வரவேற்கக் கடமைப்பட்டு இருக்கிறோம்.

அதேபோன்று நம்நாட்டிலே பல்வேறு பகுதிகளில் பதட்டமான சூழ்நிலைமையும், குவியலாக உயிரிழப்புகளும் ஏற்பட்டு இருந்தபோதிலும்கூட, தமிழகத்தில் சமீபத்தில் ஏற்பட்டு இருக்கக்கூடிய ஜாதியின் பெயரால் மதத்தின் பெயரால் பல்வேறு இடங்களிலே துவங்கப்பட்ட சில கிளர்ச்சிகளை மாநில அரசு கட்டுப்படுத்தி, அதுபோன்ற சம்பவங்கள் தமிழகத்தில் நடைபெறாமல் பாதுகாப்பதற்கு தமிழக அரசு எடுத்து இருக்கிற முயற்சியை இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக வரவேற்கக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

இன்றைக்கு நாட்டிலே பல்வேறு பதட்டமான சூழ்நிலைமைகள் இருந்தபோதிலும், தமிழகத்திலே மட்டும்தான் அப்படிப்பட்ட கலவரங்கள் இல்லாமல். ஒரு அமைதியான ஆட்சியை, ஜனநாயகப் பூர்வமாக நடைபெறுகிற ஆட்சியை நம்மால் காண முடிகிறது என்பதை நான் இந்தச் சந்தர்ப்பத்திலே குறிப்பிட விரும்புகிறேன்.

அதேபோன்று இதே அவையில் மண்டல் கமிஷன் சிபாரிசுகளை உடனடியாக மத்திய அரசு அமுல்படுத்தவேண்டும் என்பதற்காக, தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது. தமிழக அரசு முன்னோடியாக இருந்து அதற்கான முயற்சிகளை எடுத்துக்கொண்டதற்கு, மத்திய அரசிலேயிருந்த தேசிய முன்னணி அரசு மண்டல் கமிஷன் சிபாரிசுகளை அமுல்படுத்தி, பிற்படுத்தப்பட்ட அம்மக்களுக்கு 27 சதவீதம் ஒதுக்கீடுகளை முழுமையாக அமுல்படுத்துவதற்கான கடும் முயற்சிகளை தமிழக அரசு



எடுத்துக்கொண்டதற்கு, இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக நாங்கள் நன்றியைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறோம்.

அதேபோன்று, இன்றைக்கு உச்ச நீதிமன்றத்திலே அதற்கு இடைக்காலத் தடை விதிக்கப்பட்டு இருந்தபோதிலும்கூட, அந்தத் தடையை அகற்றி, மண்டல் கமிஷன் சிபாரிசுகளை அமுல்படுத்துவதற்கு மாநில அரசு தொடர்ந்து முயற்சிகளை மேற்கொள்ளவேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று இலங்கைத் தமிழர்கள் பிரச்சினையை எடுத்துக்கொண்டாலும், அநேகமாக பல ஆண்டுக்காலமாக இலங்கை இன மக்களுக்கு ஏற்பட்டு இருக்கக்கூடிய அந்தப் படுகொலையைத் தடுத்து நிறுத்துவதற்கு, தொடர்ந்து நடந்துகொண்டு இருக்கக்கூடிய அந்தச் சம்பவங்களைத் தடுத்து நிறுத்துவதற்கு இன்றைக்கு மத்திய அரசோடு மாநில அரசு, பேச்சுவார்த்தை மூலமாகத் தீர்வு காணவேண்டும் என்று ஆளுநர் உரையிலே குறிப்பிடப்பட்டு இருப்பதை நாங்கள் வரவேற்கக் கடமைப்பட்டு இருக்கிறோம். இதிலே ஏற்பட்டிருக்கக்கூடிய கருத்து முரண்பாடுகளைப் போக்க பேச்சுவார்த்தை மூலமாக இந்தப் பிரச்சினைகளுக்கு தீர்வுகாண வேண்டுமென்ற நிலையை எடுத்திருக்கிற மாநில அரசை நாங்கள் வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறோம்.

16-05 மணி

அதேபோல்தான் இன்றைக்கு தமிழகத்தில் அரசியல் காழ்ப்புணர்ச்சியின் காரணமாக ஓர் அமைதியான ஆட்சியைக் கலைக்க வேண்டுமென்பதற்காக காங்கிரஸ் கட்சியும், முன்னாள் எதிர்க்கட்சியாகஇருந்த அண்ணா தி.மு.க.வும் தொடர்ந்து கலைக்க வேண்டும், கலைக்க வேண்டுமென்று இன்றைய தினத்திலே ஒரு குழப்பத்தை விளைவித்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் இப்போது இந்த அவையிலே இல்லை. இருந்தாலும்கூட இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பாக அவர்கள் வெளியிலே இருந்தாலும்கூட, அவர்கள் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி அவர்கள் பிரதமராக இருந்தபோது முன்னாள் ஜனாதிபதி ஜெயில்சிங் அவர்கள் ஜனாதிபதியாக இருந்தபோது, யாருக்கு அதிக அதிகாரங்கள் இருக்கின்றன என்பதற்காக ஒரு மிகப் பெரிய சர்ச்சையே இந்தியாவில் நடைபெற்றுக் கொண்டிருந்தது. அப்போது அந்த சமயத்தில்தான் அன்றைய ஜனாதிபதி ஜெயில்சிங் அவர்கள், சட்ட ஆலோசகர்களைக் கலந்து, அரசியல் ஆலோசகர்களைக் கலந்து, ஜனாதிபதி ஆட்சியைக் கொண்டுவருவதற்காக அன்றைய தினத்திலே கடுமையான முயற்சிகளை எடுத்துக்கொண்டார்கள். அந்த நேரத்தில் இந்திய கம்யூனிஸ்டு கட்சி, ராஜீவ் காந்தி மக்கள்

அதேபோல மின்சார கட்டணம். இன்றைக்கு விவசாயி களுக்கு மின்சார கட்டணம் இல்லாமல் இலவசமாக கொண்டு வரப்பட்டிருக்கிறது. இது ஏதோ ஒரு காரணத்திற்காக அறிவித்து விட்டு பிறகு பின் வாங்கி விடாமல் மின் உற்பத்தியை இன்னும் அதிகப்படுத்தி, தொடர்ந்து அந்த விவசாயிகளுக்கு கொடுக்கப்பட வேண்டும் மின் இணைப்பு துண்டிக்கப்பட்ட பல்வேறு விவசாயி களுக்கும் மின் இணைப்பு கொடுக்கப்பட வேண்டும். புதிய மின் இணைப்பிற்காக பல வருட காலமாக மனு கொடுத்து இன்னும் கிடைக்காமல் இருக்கும் விவசாயிகளுக்கும் மின் இணைப்பு கொடுப்பதற்கு இந்த அரசு முயற்சி செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அத்தோடு சத்துணவு திட்டத்தின் மூலமாக 350 கோடி ரூபாய்க்கு மேலே இந்த அரசு செலவு செய்கிறது. அதேபோன்று தாய் சேய் நலம் என்றும் ஊட்டச்சத்து என்றும் பல்வேறு திட்டங்களை தமிழக அரசு கொண்டு வந்திருக்கிறது. இன்றைக்கு தமிழகத்திலே கிராமப்புறத்திலே இருக்கக்கூடிய சாதாரண மருத்துவமனைகளில் டாக்டர் இல்லாத சூழ்நிலை இருக்கிறது. மருந்துகள் இல்லாத சூழ்நிலை இருக்கிறது. அப்படிப்பட்ட கிராமப் பகுதிகளுக்கு நிரந்தரமாக டாக்டர்களைப் போட்டு அந்த மருத்துவ மனைகள் மூலமாக மக்களைப் பாதுகாக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோலத்தான் புதிய தொழில்களைத் தொடங்க வேண்டும் என்பதற்காக தமிழக அரசு கடுமையான முயற்சிகளை மேற்கொண்டு இன்றையதினம் 1,380 கோடி ரூபாய் செலவிலே எம். ஆர். எப். ஸ்பிக் கூட்டு முயற்சியிலே செய்யப்போவதாகச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். புதிய தொழிற்சாலைகளை துவங்க வேண்டும் என்ற முயற்சி நல்ல முயற்சியாக இருந்தாலும் கூட மூவாயிரத்திற்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் ஸ்டேன் டர்ட் மோட்டார் தொழிலாளர்கள் கஷ்டப்படுகிறார்கள். தமிழக முதலமைச்சர் அவர்கள் அறிவித்தும் தொழில் அமைச்சர் அறிவித்தும் கூட இதுவரையில் அந்த ஸ்டேன்டர்ட் மோட்டார் தொழிற்சாலையை திறப்பதற்கான சூழ்நிலை இல்லை. அந்தத் தொழிலாளர்களில் 30-க்கும் மேற்பட்டவர்கள் இறந்திருப்பதாக வந்திருக்கிற செய்தி துயரத்தை தருவதாக இருக்கிறது. ஆகவே ஸ்டேன்ட்ர்ட் மோட்டார் போன்ற தொழிற்சாலைகளை உடனடி யாக அரசே எடுத்து நடத்துவதற்கான முயற்சிகளை எடுத்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல திருச்சி மாவட்டத்தில் அரியலூர், ஆலங்குளம் ஆகிய சிமென்ட் தொழிற்சாலைகள் இன்றையதினம் தனியார் களிடத்திலே விடப்படுவதாக பத்திரிகையிலே நான் பார்த்தேன். அப்படிப்பட்ட ஒரு நிலை எடுத்து தனியார்களுக்கு விடாமல் அரசே அந்த சிமென்ட் தொழிற்சாலைகளை நடத்த வேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்திலே நான் கேட்டுக் கொள்கிறேன்.



பம்பாயிலேயிருந்து பெட்ரோலியம் இரசாயன தொழிற்சாலை களைக் கொண்டு வந்து தமிழகத்திலே பல்வேறு தொழில்களை துவங்குவதற்காக வழிவகைகளைப் பற்றி கவர்னர் உரையிலே சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் தமிழகத்திலேயே புவனகிரி, கோவில் களப்பான் போன்ற இடங்களில் கிடைக்கக் கூடிய எரிவாயுக்களைக் கொண்டு மின்சார உற்பத்தி செய்து, கிராமப் புறங்களுக்கு வழங்கி சிறு தொழில்களை துவங்குவதற்கு ஏற் பாடுகளைச் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல தஞ்சை மாவட்டத்தில் விவசாயத்தையே நம்பி இருக்கக்கூடிய விவசாயத் தொழிலாளர்கள் கிட்டத்தட்ட 20 இலட்சம் பேர்களுக்கு மேலே இருக்கிறார்கள். விவசாயத்தையே நம்பி இருப்பவர்கள் அதைத் தவிர வேறு பணிகள், வேறு வேலைகளே. தெரியாத அந்தத் தொழிலாளர்களுக்கு சிறு தொழில்களில் பயிற்சி கொடுத்து தொழில் துவங்குவதற்கு தமிழக அரசு கடுமையான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்று சொன்னால் விவசாயிகள் உற்பத்தி செய்யக் கூடிய மரவள்ளிக் கிழங்கை கூட கேரளத்திலேதான் கொண்டு போய் விற்பனை செய்ய வேண்டியிருக்கிறது. அப்படிப்பட்ட சிறு தொழில்கள் கூட தஞ்சை மாவட்டத்திலே இல்லாத காரணத்தினால் அங்கே இது போன்ற சிறு தொழில்களை தமிழக முதல் அமைச்சர் அவர்கள் துவங்க முயற்சி எடுக்க வேண்டும் என்று சொல்லி இந்தச் சந்தர்ப்பத்திலே நான் கேட்டுக் கொள்கிறேன். அப்படி விவசாயத் தொழிலாளர்களுக்கு மாற்று வேலை திட்டங்களை கொண்டு வரவேண்டும். இல்லை என்று சொன்னால் வேலை இல்லாத காலங்களுக்கு விவசாயத் தொழிலாளர்களுக்கு தனி கார்டுகளைக் கொடுத்து, வறுமை கோட்டிற்கு கீழே உள்ளவர்களுக்கு நிவாரணம் வழங்குவதைப் போன்று இவர்களுக்கும் தமிழக அரசு நிவாரணம் வழங்குவதற் கான முயற்சிகளை எடுக்க வேண்டும் என்று இந்தச் சந்தர்ப் பத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

16-15 மணி

அதே போல கூட்டுறவு ஊழியர்களுக்கு இன்றையதினம் 150 ரூபாய் உயர்த்தி கொடுக்கப்படுவதாக கவர்னர் உரையிலே குறிப்பிடப்பட்டு இருக்கிறது. அதே போலத்தான் சத்துணவு அமைப்பாளர்களும். அந்த ஊழியர்களுக்கும் ஊதியங்களை உயர்த்திக் கொடுத்து அதிலே நடக்கக் கூடிய தவறுகளை களைவதற்கான முயற்சிகளையும் தமிழக அரசு மேற்கொள்ள வேண்டும் என்று நான் இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக், கொள்கிறேன்.

அதே போன்று குடிநீர்ப் பிரச்சினை பற்றி குறிப்பிடப்பட்டி ருக்கிறது. குடிநீர்ப் பிரச்சினை என்று சொன்னால் எங்கள் பகுதியில் இன்றும் கூட குடிநீர்ப் பிரச்சியைத் தீர்க்க முடியாமல் பல ஆண்டுகாலமாக பல்றே தேனைகளுக்கு உள்ளாகி

யிருக்கிறோம். பட்டுக்கோட்டை வேளாண்மை கூட்டுக் குடிநீர்த் திட்டம் அறிவிக்கப்பட்டு இடையிலே அதற்கு தடை விதிக்கப் பட்டிருக்கிறது. அந்தத் திட்டத்தை அமல்படுத்துவதில் அங்கே இருக்கக்கூடிய மக்களுக்கு எந்தவித இடையூறும் ஏற்படாமல் அமல்படுத்தவேண்டும். தமிழகத்தில் எங்கெங்கு வறட்சி ஏற்படு கிறது, எங்கெங்கு குடிநீர் தட்டுப்பாடு ஏற்படுகிறது என்று முதலிலே ஒரு சர்வே செய்யப்படவேண்டும். அதன்மூலம் அந்தப் பகுதிகளுக்கு முன்னுரிமை கொடுத்து குடிநீர்ப் பிரச் சினையைத் தீர்ப்பதற்கு முயற்சிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். மருத்துவமனையை எடுத்துக்கொண்டால் மிகப் பெரிய கொடுமையான நிகழ்ச்சிகள் நடக்கின்றன. பல்வேறு கிராமங்களில், பல்வேறு தாலூக்கா தலைநகரங்களில் இருக்கக் கூடிய மருத்துவமனைகளில் போதுமான டாக்டர்கள் இல்லாமல் மருந்துகள் இல்லாமல் 50, 60 கிலோ மீட்டருக்கு அப்பால் மாவட்டத் தலைநகர மருத்துவமனைகளுக்குக் கொண்டுசெல்லக் கூடிய மோசமான நிலை இருக்கிறது. இக்குறைகளை அரசு களைய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்லாமல் சென்ற ஆளுநர் உரையில் முதலமைச்சர் அவர்கள் பஸ்கள் எல்லாம் தேசியமயமாக்கப்படும் என்று சொன்னார்கள். இந்த அறிக்கையிலே அது சம்பந்தமாக எதுவுமே குறிப்பிடப்படவில்லை. பஸ்கள் தேசியமயமாக்கப்பட்டதா, அந்த திட்டம் என்னவாயிற்று என்று குறிப்பிடவில்லை. ஆகையால் தமிழக அரசு சாதாரண ஏழை எளிய மக்களுக்கு இலவசமாக பல்வேறு திட்டங்களைக் கொண்டு வந்தாலும் கூட இதுபோன்ற திட்டங்களை விரைவில் நிறைவேற்றுவதற்குரிய நடவடிக்கை களை எடுக்க வேண்டுமென்று கேட்டு ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவித்து அமர்கிறேன். நன்றி வணக்கம்.

திரு. இரா. மோகன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரைக்கு நன்றிதெரிவித்து தர்மபுரி சட்டமன்ற உறுப்பினர் திரு. சின்னசாமி அவர்கள் கொண்டு வந்த இந்த தீர்மானத்தை ஆதரித்து திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் என்னுடைய கருத்துக்களை நான் கூற விரும்புகிறேன்.

ஆளுநர் உரை என்பது இந்த அரசின் ஒட்டுமொத்த கொள்கைகளை ஆளுநர் வாயிலாக பிரதிபலிக்கின்ற உரை தான். அந்த உரையில், இந்த முறை மிகுந்த பொறுப்புணர்ச்சியோடு நாட்டின் நிலையினை கருத்திலே கொண்டு வளைகுடாவிலே ஏற்பட்டு இருக்கின்ற திடீர் போர் சூழ்நிலை காரணமாக அந்தப் போரினால் ஏற்படக் கூடிய விளைவுகள் இந்திய திரு நாட்டையும் தாக்கும். இந்திய நாட்டிலே ஏற்படக்கூடிய அந்த பொருளாதாரச் சிக்கல்கள் தமிழகத்தையும் பாதிக்கக்கூடிய அபாயம் உண்டு என்பதை இந்த ஆளுநர் உரையிலே நம்முடைய அரசு சுட்டிக்காட்டி, அப்படிப்பட்ட சிக்கல்கள்



ஏற்பட்டாலும் கூட அதைத் துணிவோடு சமாளித்து மத்திய அரசு இதற்கு எடுக்கின்ற எல்லா நடவடிக்கைகளிலேயும் முழு அளவில் இந்த மாநில அரசாங்கம் ஒத்துழைப்பு நல்கும் என்ற பொறுப்புணர்ச்சி மிக்க வாசகம் இந்த ஆளுநர் உரையிலே இடம் பெற்று இருப்பதை இந்த அவையிலே நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

தமிழ் நாட்டிலே ஆளும் கட்சியாக திராவிட முன்னேற்றக் கழகம் இருந்தாலும் இன்றைக்கு இருக்கக் கூடிய அகில இந்திய சூழ்நிலையிலே ஆண்டுகொண்டிருக்கின்ற மத்திய அரசுக்கு எதிர்க்கட்சியாக நாம் விளங்குகின்றோம். ஆனால், அந்த ஒரு காரணத்தினாலேயே நாம் ஆதரித்த தேசீய முன்னணி அரசு கவிழ்ந்துவிட்டது, நாம் ஆதரித்த திரு. வி. பி. சிங். அவர்கள் இன்றைக்கு பிரதமராக இல்லை. திரு. சந்திரசேகர் பிரதமராக வந்திருக்கிறார். அவரை இந்திரா காங்கிரஸ் கட்சியும், அ.இ. அ.தி.மு.க.வும் ஆதரிக்கின்றன. ஆக அவருக்கென்று நாம் ஒத்துழைப்பு தருவது என்ற நிலையிலே இல்லாமல் நாட்டுநலனிலே அக்கறை கொண்ட பிரதமர் என்ற முறையில் அவர் எடுக்கின்ற நடவடிக்கைகளுக்கு இந்த அரசாங்கம் முழு ஒத்துழைப்பு தரும் என சுட்டிக்காட்டியிருப்பதை நான் இங்கே மனதார பாராட்டி வரவேற்பதற்கு கடமைப்பட்டிருக்கிறேன். இதுதான் அரசியலிலே ஒரு கட்சி மக்களைப் பற்றி எண்ணுகின்ற கட்சி கடைபிடிக்க வேண்டிய ஒரு நாகரிக முறை. அந்த முறை தமிழ்நாட்டிலே இன்றைக்கு கடைப்பிடிக்கப்படுகிறதா, தமிழ்நட்டிலே இருக்கின்ற சில கட்சிகளால் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறதா என்று பார்த்தால் வேதனை தான் மிஞ்சுகிறது.

16-20 மணி.

இந்திரா காங்கிரஸ் தமிழ்நாட்டில இருக்கின்ற கட்சி. இந்த அவையில் இன்றைக்கு பிரதான எதிர்கட்சியாக மாறி யிருக்கின்ற ஒரு கட்சி. நீண்டகாலமாக இந்தியாவை ஆண்ட ஒரு கட்சி. தமிழ் நாட்டிலே பல ஆண்டுகளாக ஆட்சிப் பொறுப்பில் இருந்த ஒரு கட்சி அந்தக் கட்சி இன்றைக்கு எதிர்கட்சியாக இருக்கின்ற ஒரே காரணத்தால் அதற்கு பக்க பலமாக அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஒரு அணி அதிலே சேர்ந்திருக்கின்ற காரணத்தால் எங்களுக்கு நாட்டின் ஒட்டுமொத்த நலனைப் பற்றி கவலை யில்லை; வளைகுடா போரைப் பற்றி எங்களுக்குக் கவலை யில்லை; அதனால் ஏற்படக் கூடிய பொருளாதாரத் தட்டுப் பாட்டைப்பற்றி எங்களுக்குக் கவலையில்லை; தமிழ் நாட்டு அரசாங்கம் அதற்கு என்ன நடவடிக்கை எடுக்கப்போகிறதோ அதைப்பற்றி எங்களுக்கு சிந்தனையில்லை. எங்களுடைய ஒரே கவலை, எங்களுடைய ஒரே சிந்தனை இந்த ஆட்சியை அப்புறப் படுத்த வேண்டும் என்பது தான். எந்த நேரத்தில் இதைப்பற்றி

பேசுகிறோம் என்பதைப்பற்றி கூட கவலைப்படாமல் தமிழகத்தின் தெருக்களில் நின்று கொண்டு இன்றைக்கு அறைக்கூவல் விட்டுக் கொண்டிருக்கிறார்கள் இந்த ஆட்சியை டிஸ்மிஸ் செய் என்று.

நேற்றைக்கோ, நேற்றைக்கு முன்தினமோ கூடிய தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியில் ஒரு தீர்மானம். ஏன் இன்னும் மத்திய அரசு நடவடிக்கை எடுக்கவில்லை; ஏன் மத்திய அரசு இந்த ஆட்சியை இன்னும் கலைக்கவில்லை; காலதாமதம் செய்வது எங்களுக்கு வேதனைத் தருகிறது என்று ஜனநாயக ரீதியில் இயங்குவதாக சொல்லுகின்ற ஒரு கட்சி தீர்மானம் போடுகிறது என்று சொன்னால் அதன் எதிர் ஒலியாகத் தான் அதற்கு ஆதரவாக இருக்கக்கூடிய அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக கட்சியின் தலைவி தினசரி ஒரு அறிக்கை விட்டுக்கொண்டிருக்கிறார்கள். இன்னும் தாங்காது தமிழ்நாடு என்கிறார்; தமிழ்நாடு தாங்குகிறது, அந்த அம்மையாருக்கு தாங்க முடியவில்லை. இன்னும் டிஸ்மிஸ் செய்யவில்லையே 1-ம் தேதி ஆயிற்று; 15 ஆம் தேதி ஆயிற்று; 20 ஆம் தேதி ஆயிற்று; இன்னும் கதை முடியவில்லை என்று ஒவ்வொரு நாளைக்கும் ஒரு அறிக்கை, இந்த அரசை உடனடியாக டிஸ்மிஸ் செய்யுங்கள் என்று. என்ன காரணம் கூறுகிறார்கள் டிஸ்மிஸ் செய்வதற்கு? ஒரு ஆட்சியை டிஸ்மிஸ் செய் என்று சொல்வதற்கே சில காரணங்கள் தேவை. டிஸ்மிஸ் செய்ய கூடாது தேர்ந்தெடுக்கப்பட்ட அரசை அரசியல் சட்டத்தின் 356வது விதியை பயன்படுத்தி கலைக்கக்கூடாது என்பது வேறு வாதம். ஆனால் ஒரு எதிர்கட்சி ஆளுங்கட்சியைப் பார்த்து, ஒரு மாநிலத்தின் ஆட்சியை மத்திய அரசு கலைக்கவேண்டும் என்று சொன்னால் அதற்கு ஒரு தகுந்த காரணம் இருக்க வேண்டாமா? நிகர மெஜாரிட்டியோடு நல்ல திட்டங்களைத் தீட்டி அனைத்து அரசியல் வாதிகளும், பொதுமக்களும் பாராட்டுகின்ற அளவுக்கு மக்களுக்கு எந்த ஊறும் நேராத வகையில் இந்த ஆட்சியை நம்முடைய தலைவர் டாக்டர் கலைஞர் அவர்கள் நடத்திச் செல்கிறார். என்ன காரணம் கூறி இந்த ஆட்சியைக் கலைக்கக்கச் சொல்கிறீர்கள்.? சட்டம் ஒழுங்கு கெட்டுப்போய் விட்டது. எங்கே பார்த்தாலும் விடுதலைப் புலிகள் ஏ. கே. 47 துப்பாக்கியோடு திரிந்து கொண்டிருக்கிறார்கள் இது இத்தனை நாள், 3 மாத காலமாக சொல்லி வந்தது திடீரென்று ஒரு மாதகாலமாக ஒரு புதிய படை உல்பா சேர்ந்து இருக்கிறது.

அசாம் உல்பா தீவிரவாதிகள் இங்கே முகாம் நடத்திக் கொண்டிருக்கிறார்கள். நானும் தமிழ் நாட்டில் பல பகுதிகளுக்குச் சென்று வரக்கூடிய வாய்ப்பைப் பெற்றவன். இங்கே இருக்கக் கூடிய பல்வேறு கட்சிகளைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர்கள் அந்தந்த தொகுதியிலிருந்து வந்து இருக்கிறார்கள். அவர்கள் அந்



தந்த தொகுதியின் பலயிடங்களிலும், அவர்கள் மாவட்டங்களிலும் அண்டை மாவட்டங்களிலும் சுற்றி வருகின்ற வாய்ப்பைப் பெற்றவர்கள். எங்கே பார்த்தோம் உல்பாவை? எங்கே நாம் சந்தித்தோம் உல்பா முகாம்களை? எங்கே பார்த்தோம் எல்.டி.டி.இனர், ஏ. கே. 47 துப்பாக்கியோடு தெருத்தெருவாகத் திரிகின்ற காட்சியை? நமக்கெல்லாம் கிடைக்காத அந்தப் பெரிய காட்சி; நமக்கெல்லாம் கிடைக்காத அந்தப் பெரிய வாய்ப்பு இந்திரா காங்கிரஸ் கட்சிக்காரர்களுக்கு மட்டும் தெரிகிறது. அவர்கள் கண்ணுக்கு மட்டும் உல்பா காரர்கள் தெரிகிறார்கள்; அவர்கள் கண்ணுக்கு மட்டும் எல்.டி.டி. இ-காரர்கள் தெரிகிறார்கள்; அவர்கள் கண்ணுக்கு மட்டும் ஏ. கே. 47 தெரிகிறது. அவர்கள் கண்ணுக்கு மட்டும் உல்பா முகாம்கள் தெரிகின்றன; அவர்கள் கண்ணுக்கு மட்டும் அந்த உல்பா முகாம்களில் நடைபெறுகின்ற போர் பயிற்சிகள் தெரிகின்றன. ஆக திட்டமிட்டு நயவஞ்சகமான ஒரு பொய்யை தமிழ் நாட்டில் கட்டவிழ்த்துவிட்டு பாராளுமன்றத்தில் அதைப் பேசுகிறார்கள்; சட்டமன்றத்தில் வந்து அதைப் பேசுகிறார்கள்; தெருவில் நின்று பேசுகிறார்கள்; இந்த ஆட்சியை இன்னும் கலைக்க வில்லையா என்று சொல்லி, நாங்கள் சாலை மறியல் செய்வோம் என்கிறார்கள். சாலை மறியல் என்பது சாதாரணமான போராட்டமா? மகாத்மா காந்தி வழியில் வந்த காங்கிரஸ் கட்சிக்காரர்கள் நடத்தும் போராட்டமா அந்தப் போராட்டம்? அகிம்சா வழியில் இந்த நாட்டுக்கு விடுதலைப் பெற்றுத் தந்தவர் இப்போது அவையில் படமாக மாறியிருக்கின்ற மகாத்மா காந்தி அடிகள் என்றைக்காவது அந்தக் காங்கிரஸ் கட்சியை வன்முறைப் போராட்டத்திற்கு அழைத்துச் சென்றது உண்டா? அதற்குப் பின்னாலே வந்த காங்கிரஸ் கட்சித் தலைவர்கள் ஏராளமான பேர் ஏதாவது ஒரு மாநிலத்தில் வன்முறைப் போராட்டத்தை நடத்தலாம் என்று அறை கூவல் விடுத்தது உண்டா? ஆனால் தமிழ் நாட்டில் சாலை மறியல் என்கிறார்கள் ;

16-25 மணி.

சாலைகள் முழுவதும் தமிழ்நாடு மாநிலத்திற்கு மட்டும் சொந்தமானதல்ல. தேசிய நெடுஞ்சாலைகள் இங்கே இருக்கின்றன. தேசிய நெடுஞ்சாலைகளைத் தடுப்பது எவ்வளவு பெரிய குற்றம்? தேசிய நெடுஞ்சாலைகள் என்பது தமிழ்நாடு அரசுக்கு மட்டும் சொந்தமானது அல்ல. தமிழக அரசே கட்டுப்படுத்த முடியாது. எங்கோ இருக்கிற கேரளாவிலேயிருந்து அவசரமாக டெல்லிக்கோ, பஞ்சாபிற்கோ, பம்பாய்க்கோ அல்லது அங்கேயிருந்து கேரளாவிற்கோ உணவு தானியங்களையோ மற்ற உயிர்காப்புப் பொருட்களையோ, பெட்ரோலையோ டீசலையோ எடுத்துச் செல்லவேண்டுமென்று சொன்னால் அந்த நெடுஞ்சாலைகள் வழியாகத்தான் செல்ல முடியும். அறிவித்து இருக்கிறார்கள். நாங்கள் சாலை மறியல்

செய்வோம் என்று. அ.தி.மு.க.-வும் சேர்ந்து அறிவிக்கிறது.
29 ஆம் தேதி என்று இருந்ததை ஒரு நாளைக்கு முன்னதாக
தாகவே மாற்றி 28 ஆம் தேதியே நாங்கள் போராட்டத்தைத்,
துவக்குவோம் என்கிறார்கள். காரணம், ஒரு நாள்கூட
அவர்களால் காத்திருக்க முடியவில்லை. அதற்குள் டிஸ்மிஸ்
செய்யவேண்டும். 28 ஆம் தேதி சாலை மறியல்
என்று சொன்னால் 27 ஆம் தேதி இந்த ஆட்சியைக் கலை;
ஆக, துடித்துப்போய் கிடக்கிறார்கள். இங்கே, சட்டசபையி
லேயும் அதை எதிரொலிக்கிறார்கள். நான் கேட்கிறேன்,
பேரவைத் தலைவர் அவர்களே, அன்றைக்கு கவர்னர் அவர்கள்
வந்திருக்கிறார். சாதாரணமானவரா கவர்னர்? எத்தனை
பெரிய அரசியல்வாதி? எத்தனை பெரிய பாரம்பரியம் மிக்க
வர். மிகப் பெரிய பொறுப்பிலே அங்கம் பெற்றவர். தமிழக
அரசாங்கத்தினுடைய கொள்கைகளை படிப்பதற்கு அந்தப்
பெரிய மனிதர். கவர்னர் இந்த அவையிலே வந்து எழுந்து
நிற்கிறார். படிக்க முற்படுகிறார். அறிக்கை படிக்கிறார்கள்.
அறிக்கை படிக்கட்டும்; தங்களுடைய கண்டனத்தைச் சொல்
லட்டும் ஓரிரு நிமிடங்களிலே தங்களுடைய வார்த்தைகளைச்
சொல்லிவிட்டு வெளியேறுவதற்குரிய காரியமல்ல. ஆனால்
அறிக்கையிலே காணப்பட்ட வாசகங்கள் என்ன? அன்றைக்கு
அவையின் விதிமுறைப்படி, கவர்னர் பேசுகின்ற நாளிலே
வேறு எந்தப் பேச்சும் இருக்கக் கூடாது என்கின்ற காரணத்
தால் அவர்களுடைய பேச்சை பதிவாக்கவில்லை. ஆனால்
பத்திரிகையிலே அறிக்கையாகத் தந்தார்கள்.

இங்கேகூட சில வார்த்தைகளை நாம் கேட்டோம். என்ன
சொன்னார்கள்? இந்த ஆட்சியைக் கலையுங்கள் என்றார்கள்.
இந்தச் சர்க்கார் தேசவிரோத செயலிலே ஈடுபடுகிறது என்
கிறார்கள். சாதாரண வார்த்தையா? இந்த அரசாங்கம்
தேசவிரோத செயலிலே ஈடுபடுகிறது என்று சொன்னால்,
தலைவர் கலைஞருடைய தலைமையிலே இயங்குகின்ற,
முதலமைச்சராகக் கொண்டு இயங்குகின்ற இந்த அரசு
தேசவிரோத செயலிலே இறங்குகிறது என்று சொன்னால்
தேசவிரோதிகள் என்று எங்களைக் குற்றம் சாட்டுகிறார்
களா? முதலமைச்சர் கலைஞர் தேச விரோதியா? குற்றம்
சாட்டிய நண்பர்கள் இன்றைக்கு இல்லாமல் போய் விட்டார்
கள். நான் கேட்கிறேன், தேசவிரோதிகளா, தேசத்துரோகிகளா
நாங்கள்? 67, 68 வயது ஆகின்றது இங்கே உட்கார்ந்திருக்கின்ற
நம்முடைய தலைவர் கலைஞர் முதலமைச்சர் அவர்களுக்கு.
13 வயதிலே அரசியலுக்கு வந்தவர். மா.பொ.சி. சொல்
வார்கள், 'நான், காலிலே நகம் முளைத்த நாளாக இந்த
நாட்டின் மீது அக்கறை கொண்டவன்' என்று சொல்வார்கள்.
அதைவிட இளம்வயதிலேயே, அரசியலுக்கு. அரசியல் என்று
சொன்னால், பொது வாழ்க்கைக்கு, தமிழ்நாட்டின் நலனுக்
கென்றே தன்னை ஒப்படைத்துக்கொண்டு, நாடு நகரமெல்



லாம் சுற்றியலைந்த தலைவர், எங்கேயோ வீட்டிலே, சோ
பாவின் அடியிலே உட்கார்ந்து கொண்டு அறிக்கை எழுதி,
தலைவர் ஆனவர் அல்ல. எங்கேயோ ஒரு மூலையில் உப்
பரிகையிலே, உல்லாசமாக அமர்ந்து கொண்டு அறிக்கைகளை
விடுத்து தலைவர் ஆனவர் அல்ல. ஒரு சாதாரண குடும்பத்தி
லே பிறந்து, 50 ஆண்டுக்காலம் ஓயாமல் உழைத்து, நாட்டின்
மூலைமுடுக்கெல்லாம் சுற்றி, சுற்றிப் பயணம் செய்து, பேசி,
எழுதி, மக்களை உணர்ச்சிகரமாக தன்னுடைய கொள்கை
யிலே ஈர்த்து, மக்களைப் பக்குவப்படுத்தி, தமிழ்நாட்டை
வாழவைக்க வேண்டுமென்று இன்றைக்கும் உழைத்துக் கொண்
டிருக்கிற தலைவர். பல பொறுப்புகளை ஏற்ற தலைவர்,
சட்டமன்ற உறுப்பினராக இங்கே 25 ஆண்டுகாலத்திற்கும்
மேலாக இருக்கிறார். சாதாரண அமைச்சராக இருந்தார்.
முதலமைச்சராக இருந்தார். எதிர்க்கட்சிதான், நீ அங்கே
போய் உட்கார் என்று சொன்னார்கள். முகம் சுளிக்காமல்
13 ஆண்டுக்காலம் இங்கே வந்து உட்கார்ந்து இருந்தார்.
இல்லை, உனக்கு சிறை உடையிலே சிறைச் சாலைதான்
என்றார்கள். பழைய முதலமைச்சர் என்றுகூட பார்க்காமல்,
தந்த அந்த உடையையும் அணிந்து கொண்டு தமிழுக்காக
அங்கேயும் போய் உட்கார்ந்திருந்தார்.

இன்றைக்கு மீண்டும் தமிழக மக்களுடைய தீர்ப்பைப்
பெற்று, முதலமைச்சராக வந்திருக்கிறார். யாரும் கொண்டு
வந்து அவரை உட்கார வைக்கவில்லை. ஜனநாயகத்திலே,
மக்கள் தீர்ப்பளித்து உட்கார வைத்திருக்கிறார்கள். அவர்
வரக்கூடாது என்று எல்லா சக்தியையும் பயன்படுத்தினார்
கள். காங்கிரஸ் கட்சி எல்லா சக்தியையும் பயன்படுத்தியது.
ராஜீவ் காந்தி 13 முறை வந்து சுற்றி தன்னுடைய பிரச்
சாரத்தைச் செய்தார்கள். பிரதமராக இருந்தவர். அ.தி.மு.க.
அத்தனை ஆயுதங்களையும் பயன்படுத்தியது. இத்தனை
சக்திகளுக்குப் பின்னாலும் தமிழக மக்கள் அவரை ஏற்று
நீங்கள்தான் இந்தத் தமிழகத்தினுடைய முதலமைச்சர் என்று
கொண்டு வந்து உட்கார வைத்திருக்கிறார்கள். அந்தத்
தலைவரைப்பற்றி, இந்த அவையிலே படிக்கிறார்கள். தேச
விரோத செயலிலே இந்த அரசாங்கம் ஈடுபடுகிறது என்று
சொன்னால், அவர் தேச விரோதியா? இத்தனை வாழ்க்கை
பின்னணி கொண்டவர், தமிழ்நாட்டு மக்களோடு இந்த அள
விற்குத் தொடர்பு கொண்டவர். தமிழ்நாடு முழுவதுமுள்ள
மூலை முடுக்கெல்லாம் அறிந்தவர். இந்தியாவிலே இருக்கக்
கூடிய எல்லா அரசியல் தலைவர்களோடும் பழகுகின்ற வாய்ப்
பைப் பெற்றவர். எந்த மாநிலத்திற்குச் சென்று எந்த அர
சியல் தலைவர் அவரைப் பார்த்தாலும் அன்போடு அவரை
கட்டி அணைத்துக்கொள்கிறார்கள். கலைஞர் அவர்களே,
உங்களை எங்களுக்கு 20 ஆண்டுக்காலமாகத் தெரியும், 30

ஆண்டுக்காலமாகத் தெரியும், 10 ஆண்டுக் காலமாகத் தெரியும் என்று கட்டி அணைக்கிறார்கள். அந்த நட்பு இன்றைக்கு தமிழகத்திற்குப் பயன்படுகிறது. அவர்களுடைய அந்த உழைப்பு, அவருடைய அந்த ஆற்றல் இன்றைக்கு தமிழ்நாட்டு மக்கள் நலனுக்குப் பயன்படுகிறது.

பல திட்டங்களை டெல்லியிலேயிருந்து நாம் பெறுவதற்குப் பயன்படுகிறது. தமிழகத்தைப் பார்த்து மற்றவர்கள் மதிப்பதற்கு அந்த ஆற்றல் நமக்குப் பயன்படுகிறது. அந்தத் தலைவரைத் தேசத் துரோகி என்று இங்கே சட்டசபையிலே பேசுகிறார்கள். அதைவிட இழிவான வார்த்தைகளால் வெளியிலே, பொதுக் கூட்டங்களிலே பேசுகிறார்கள். அதைவிட இழிவான வார்த்தைகளைப் பயன்படுத்தி, பத்திரிகையிலே அறிக்கை வெளியிடுகிறார்கள் என்று சொன்னால் நான் உங்களைப் பார்த்துக் கேட்கிறேன். அவரே தேசத் துரோகி என்று சொன்னால், இந்தத் தமிழ்நாட்டிலே வேறு எவர் தேச நலனிலே அக்கறை கொண்டவர் என்பதைத் தயவு செய்து சொல்லுங்கள். அவருக்கே தேசத் துரோகி என்ற பட்டம் என்று சொன்னால், தேச நலனிலே் அக்கறை கொண்டவர் வேறு யார்? இந்த அவையிலே இத்தனை பேர் இருக்கிறார்கள். பக்கத்திலே உட்கார்ந்திருக்கின்ற பேராசிரியர், இந்த அவையிலே பல ஆண்டுக் காலம் அங்கம் பெற்றவர்கள் : திராவிட முன்னேற்றக் கழகத்தை ஆளுங் கட்சியாக ஆதரித்த பல்வேறு தோழமைக் கட்சிகளினுடைய தலைவர்கள் இருக்கிறார்கள். அவர்களுடைய வயது என்ன? அவர்களுடைய அனுபவங்கள் என்ன? அவர்களெல்லாம் தேசத் துரோகிகளாகப் போய்விடுகிறார்கள் அல்லவா? இந்த அரசே தேசத் துரோகி என்று சொன்னால், அவர்களெல்லாம் தேசத் துரோகிகள் ஆகிறார்கள் அப்பொழுது. இந்தப் பிரச்சாரம் இன்றைக்கு வெளியிலே நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

**16–30 மணி.**

அதற்கு என்ன சொல்கிறார்கள் காரணம்? எல்.டி.டி.இ.யும், உல்பாவும் சுற்றிக்கொண்டிருக்கிறது தமிழ்நாட்டிலே என்று சொல்கிறார்கள். திரு. சிதம்பரத்திற்கு மட்டும் தெரிந்திருக்கிறது. எல்.டி.டி.இ.யும், உல்பாவும், வேறு யாருக்கும் தெரியாது. மாயமாக பெரிய கண்ணாடி வைத்திருக்கிறார்கள் போல் இருக்கிறது. முன்னாலே டெலிவிஷன் மாதிரி. கம்ப்யூட்டர் பட்டனை அழுத்தியவுடனே அவருக்கு மட்டும் தெரிகிறது, உல்பா தீவிரவாதிகள் கேம்ப் தமிழ்நாட்டிலே இருக்கிறது என்று. கலைஞர்—முதலமைச்சர் கேட்டார், நீங்கள் பொறுப்புள்ளவராக இருந்தால் எங்கே இருக்கிறது என்று சொல்லுங்கள். நான் நடவடிக்கை எடுக்கிறேன். என்று. எனக்குத் தெரியவில்லை. உங்களுக்குத் தெரியும்





என்று சொல்கிறீர்கள் அல்லவா? நீங்கள் சொல்லுங்கள் என்று. ஆனால், சொன்னாரா? இதுவரையில் சொன்னாரா? நீங்கள் சொல்லவில்லை என்று சொன்னால் நான் சொல்வேன் என்று சொன்னார். தெரியாது. நீங்களே சொல்லுங்கள் என்று சொல்லிவிட்டார். மறுநாள் சொல்லியிருக்கலாம் அல்லவா? ஏன் சொல்லவில்லை? ஏன் தகவல் தெரிவிக்க முடியவில்லை. உல்பாவும் எல்.டி.டி.இ.யையும் காட்டி மிரட்டிப் பார்த்தார்கள்.

திரு. சிதம்பரம் யார்? 11 மாதங்கள் திரு. வி. பி. சிங் பிரதமராக இருந்தார். இப்பொழுது ஒரு சில மாதங்களாக திரு. சந்திரசேகர் பிரதமராக இருக்கிறார். அதற்கு முன்னால் வரை மத்திய அரசாங்கத்தை ஆண்டு கொண்டிருந்தது இராஜிவ் காந்திதான். அந்த அமைச்சரவையிலே நம்முடைய திரு. சிதம்பரம் அவர்கள் ஒரு அமைச்சர். தமிழ்நாட்டைச் சேர்ந்த திரு. சிதம்பரம் மத்திய அமைச்சர். மத்திய அமைச்சராக இருந்தவர்கள். தமிழ் நாட்டிலே உல்பா முகாம் இருந்தது என்று சொன்னால் நீங்கள் என்ன செய்து கொண்டிருந்தீர்கள், மத்திய அமைச்சராக இருக்கக்கூடிய உங்களுக்கு இங்கே உல்பா முகாம் இருந்தது என்ற செய்தி இப்பொழுதுதான் வருகிறது என்று ஒத்துக்கொள்கிறீர்களா? மத்திய அமைச்சராக இருந்த உங்களுக்கே அந்த உல்பா முகாம் பற்றிய செய்தி தெரியவில்லை என்று சொன்னால் அதைவிடக் கேவலம் என்ன இருக்கிறது? தமிழ்நாட்டு மக்களைத் திட்டமிட்டுத் திசை திருப்புவதற்கான பிரச்சார முறைகள் இன்றைக்கு நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன என்று சொன்னால், நாம் மிகுந்த எச்சரிக்கையோடு அவைகளைச் சந்திப்பதற்குக் கடமைப்பட்டிருக்கிறோம்.

நான் ஒன்றை மீண்டும் வலியுறுத்திச் சொல்ல விரும்புகிறேன். சாலை மறியல் என்ற போராட்டத்தை இன்றைக்குத் துவக்கி இருக்கின்றார்கள். என்ன சாலை மறியல்? எதற்காகப் போய்ச் சாலையை மறிக்கிறீர்கள்? இந்த ஆட்சியை டிஸ்மிஸ் பண்ணுவதற்காகச் சாலை மறியலா? சரி. எங்களை எல்லாம் டிஸ்மிஸ் செய்து விட்டு நீங்கள் ஆட்சிக்கு வருகிறீர்கள் என்று வைத்துக் கொள்வோம். நடக்காத காரியம். வருகிறீர்க்ள் என்று வைத்துக்கொள்வோம். எங்களுக்குச் சாலை மறியல் பண்ணத் தெரியாதா? திராவிட முன்னேற்றக் கழகமும், அதனுடைய தோழமைக் கட்சிகளும் சேர்ந்து ஒரு நாள் சாலை மறியல் செய்தால் உடனே மத்திய அரசாங்கம் டிஸ்மிஸ் செய்துவிடுமா? நீங்கள் சாலை மறியல் செய்கின்ற காரணத்தினாலே இந்த ஆட்சி கவிழ்கிறது என்று சொன்னால், இந்திரா காங்கிரஸ் கட்சி ஆளுகின்ற மாநிலங்களிலே மற்றக் கட்சிகள் சாலை மறியல் போராட்டத்தில்

[திரு. இரா. மோகன்] [1991 சனவரி 24

ஈடுபடாதா? சட்டம் ஒழுங்குப் பிரச்சினையைத் தோற்று விக்காதா? சட்டம் ஒழுங்குப் பிரச்சினையைத் தோற்று விப்பது என்ன அவ்வளவு பெரிய காரியமா? பத்து பேர் போதாதா? மவுண்ட் ரோட்டிலே இருக்கின்ற அத்தனை கடைகளையும் நீங்கள் மூடச் சொான்னால், ஒரு பத்து பேர் இரண்டு சோடா பாட்டில்களை வீசி இங்கேயும் அங்கேயும் ஓடினால் போதும், கடையைப் பூராவும் மூடிவிடுவார்கள். ஆகவே, ஒரு ஆட்சியை இதைக் காண்பித்தே கலைக்க முடியுமா? இதைக் காண்பித்தே ஒரு ஆட்சி வேண்டா மென்ற முடிவுக்கு நீங்கள் வர முடியுமா?

இங்கே நேற்றைக்கு நடைபெற்ற சம்பவத்திற்குப் பின்னால், இந்த அவையிலே அவையினுடைய பேரவைத் தலைவரே தாக்கப்பட்டார் என்ற வரலாறு நிகழ்ந்ததற்குப் பின்னால் எனக்கு இன்றைக்குக் காலை கிடைத்த செய்தியை இந்த அவையிலே வருத்தத்தோடு சொல்கிறேன். வேதனையோடு இந்த அவையிலே நான் சொல்கிறேன். முதலமைச்சருடைய கவனத்திற்கு நான் கொண்டு வருகிறேன். இதைச் சொல் வதன் மூலமாகக் காவல் துறையினுடைய கவனத்திற்கு நான் கொண்டுவர விரும்புகிறேன். அதிர்ச்சி தரத்தக்க செய்தி ஒன்றை நான் கேள்விப்பட்டேன். ஏன் 29-ஆம் தேதி சாலை மறியல் என்பதற்குப் பதிலாக 28-ஆம் தேதி சாலை மறியல் என்று ஒரு நாள் முன்னதாகக் கொண்டு வந்தார்கள் என்று சொன்னால், தமிழகத்தின் முதலமைச்சரரைத் திட்டமிட்டுத் தாக்குவதற்குத் திட்டமிட்டிருக்கிறார்கள். எனக்குக் கிடைத்த செய்தியை நான் சொல்கிறேன். காவல் துறையினர் எழுதி வைத்துக் கொள்ளுங்கள். 27-ஆம் தேதி கோவை திருமணத்திலே கலந்து கொண்டு விட்டு, 28-ஆம் தேதி மதுரை சுற்றுப் பயணத்திற்காகச் செல்கிறார்கள். 29-ஆம் தேதி திருச்சிக்குச் செல்கிறார்கள். அந்த நிகழ்ச்சியில் அவருடைய காரைத் தாக்க வேண்டும். அந்த நிகழ்ச்சியில் முதலமைச்சருடைய காரை அதற்குப் பின்னாலே வருகின்ற காரை, முதலமைச்சரைத் தாக்க வேண்டுமென்று திட்டமிட்டு, அதற்கான செய்திகள் சென்னையிலேயிருந்து அனுப்பப்படு கின்றன. கூலிப் படைகள் சென்னையிலேயிருந்து அனுப்பப் படுகின்றன. ஆங்காங்கே இருக்கின்ற காலிப் பயல்களை யெல்லாம் இன்றைக்கு அ.தி.மு.க. காரர்களும், இந்திரா காங்கிரஸ்காரர்களும் தயார் செய்து கொண்டிருக்கிறார்கள். ஒரு திட்டமிட்ட சதி தமிழ் நாட்டிலே உருவாகியிருக்கிறது. காலித் தனத்தைக் கட்டவிழ்த்து விட்டு, இந்த ஆட்சிக்கு சவால் விடுகிறார்கள் என்று சொன்னால், நம்முடைய தமிழக காவல் துறை மிகுந்த எச்சரிக்கையோடு, விழிப்புணர்ச்சியோடு இந்தத் தருணத்திலே இயங்க வேண்டுமென்று இந்த அவையின் வாயி லாகக் கேட்டுக் கொள்கிறேன்.



1991 சனவரி 24] [திரு. இரா. மோகன்]

16-35 மணி

மற்றொரு விஷயத்தைச் சொன்னார்கள். ஏன் கலைக்க வேண்டும் என்பதற்கு சொல்கிற மற்றொரு காரணம், கூட்டு றவுத் துறை தேர்தல்களிலெல்லாம் ஊழல் நடந்து விட்டது; ஆகவே, இந்த ஆட்சியைக் கலைக்க வேண்டுமென்று சொல்லி விட்டு, அ.இ.அ.தி.மு.க. கட்சித் தலைவர் செல்வி ஜெயலலிதா சொல்கிறார்: கூட்டுறவுத் துறையிலே நடந்த தேர்தல்களில் ஊழல் காரணமாக எங்கெல்லாம் கூட்டுறவுத் துறைக்கு தேர்தல் நடைபெற்றதோ அந்த கூட்டுறவு சொசைட்டிகளையும், எல்லா 'இன்ஸ்டிட்யூஷன்' களையும் கலைக்க வேண்டும் என்று சொல் கிறார். அவற்றையும் கலைக்க வேண்டுமாம்; இந்த ஆட்சியை யும் கலைக்க வேண்டுமாம். 16 ஆண்டுக் காலம் கழித்து— கூட்டுறவுத் துறை மக்கள் பிரதிநிதிகள் அங்கம் வகிக்கக்கூடிய ஒரு இடம்; கூட்டுறவினுடைய தாத்பர்யம் அதுதான். 16 ஆண்டு காலம் மக்கள் பிரதிநிதிகள் அந்தக் கூட்டுறவிலே இல்லை 16 ஆண்டு காலம் கழித்து, இந்த அரசு, திராவிட முன்னேற்றக் கழக அரசு வந்ததற்குப் பின்னால், கூட்டுறவிற்குத் தேர்தல் நடந்து முடிந்திருக்கிறது. அவர்கள் கூறுகின்ற வார்த்தை, கூட்டுறவுத் துறைகளை முழுமையாகக் கலையுங்கள் என்று. இதற்கு என்ன காரணம் சொல்கிறார்கள்? தவறு நடந்திருக் கிறது என்று.

நான் அன்றைக்கே கேட்டேன்; மணமகளுக்கு மணமகன் வேண்டுமென்று சொன்னோம். திரு. பீட்டர் ஆல்போன்ஸ், பகும்போது சொன்னார்; குஷ்டரோகியைக் கொண்டு வந்து உட்கார வைத்திருக்கிறீர்கள் என்று சொன்னார். நான் கேட் டேன்; காங்கிரஸ் கட்சிக்காரர்கள் யாரும் ஜெயிக்க வில்லையா என்று கேட்டேன். காங்கிரஸ் கட்சிக்காரர்கள் யாரும் சொசைட் டியிலே ஜெயிக்கவில்லையா என்று கேட்டேன். முழுமையாக நான் அன்றைக்குப் பேச முடியவில்லை. காரணம், அன்றைக்கு நீங்கள் மணியடித்து விட்டீர்கள். இன்றைக்கு பேசுகின்ற வாய்ப்பு எனக்குக் கிடைத்த காரணத்தால் நான் பதில் அளிக் கிறேன். கூட்டுறவுத் தேர்தல்கள் முழுவதுமே ஊழல்; அவற்றை முழுவதும் கலையுங்கள் என்று சொல்கிறீர்களே, ஒவ்வொரு மாவட்டத்திலும் நான் பட்டியல் எடுத்துப் பார்த்தேன். திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் 75 சதவிகிதத்திலே இருந்து சில இடங்களில் 80 சதவிகிதம் வரை வெற்றி பெற் றிருக்கிறார்கள். ஒப்புக் கொள்கிறேன். பல இடங்களில் இந்திரா காங்கிரஸ் கட்சி எங்களுடையத் தோழர்களைத் தோற்கடித்து வெற்றி பெற்றிருக்கிறார்கள். ஒப்புக் கொள்கிறேன். சில இடங் களில் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஒரு அணியைச் சார்ந்தவர்கள், திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர் களைத் தோற்கடித்து வெற்றி பெற்றிருக்கிறார்கள். இன் றைக்கு அவர்களும் பொறுப்பேற்று, கூட்டுறவுச் சங்கங்களி னுடைய தலைவர்களாக இருக்கிறார்கள்.

கலையுங்கள் ஒட்டுமொத்தமாக என்று சொல்வதற்கு முன்
னால், மரியாதை இருந்தால், அவர்கள் சொல்கின்ற வார்த்
தைக்கு ஒரு மரியாதை வேண்டுமென்று அவர்கள் கருதுவார்
களேயானால், நான் இந்த அவையிலே அவர்களுக்கு விடுக்கின்ற
வேண்டுகோள், யாரெல்லாம் அந்தக் கூட்டுறவுத் துறையில்
உங்களுடைய கட்சியின் சார்பாக தலைவர்களாகத் தேர்ந்
தெடுக்கப்பட்டிருக்கிறார்களோ, அவர்கள் அத்தனை பேர்களை
யும் ராஜினாமா செய்யச் சொல்கிறீர்களா முதலில்? யாரெல்லாம்
உங்கள் கட்சியின் சார்பாக இயக்குநர்களாக தேர்ந்தெடுக்கப்
பட்டிருக்கிறார்களோ, அவர்களை முதலில் ராஜினாமா செய்யச்
சொல்லுங்கள். காரணம், இந்த அவையிலே நேற்றைக்கு
ஒரு சம்பவம் நடைபெற்று, அவைத் தலைவர் தாக்கப்பட்டு,
கடுமையான தீர்ப்பு அளிக்கப் போகிறார்கள் என்று நாங்கள்
எல்லாம் இந்த அவையிலே எதிர்பார்த்திருந்த நேரத்தில், சற்றும்
எதிர்பாராத வகையில், சாதாரண ஒரு தீர்ப்பு—சபாநாயகரை
அடித்தவர்களுக்கு இந்த 'செஷனி' லும் அடுத்த 'செஷனி' லும்
மட்டுமே வர வேண்டாம் என்ற அந்தத் தீர்ப்பு,—நியாயமான
தீர்ப்பா? அது சபாநாயகருடைய தீர்ப்பு; நான் குறை சொல்லக்
கூடாது. ஏனென்றால் அது தவறாகப் போய்விடும். ஆகவே,
நான் சொல்லவில்லை. ஆனால், எங்களுக்கெல்லாம் மனநிறைவு
தருகின்ற தீர்ப்பு என்று கருதுகிறீர்களா? அல்ல. ஆனால்,
இன்றைக்கு அப்படிப்பட்ட காரியத்தைச் செய்தவர்கள், என்ன
செய்கிறார்கள் என்று சொன்னால், நாங்கள் இனிமேல் சபைக்கே
வர மாட்டோம்; அ.இ.அ.தி.மு.க. வைச் சார்ந்த நாங்கள்
சட்டசபைக்கே இனிமேல் வர மாட்டோம்; இனிமேல் வெளி
யிலேதான் நாங்கள் வேலை செய்வோம் என்று அறிக்கை விடு
கிறார்கள். இன்றைக்கு காரணமே இல்லாமல், இந்திரா காங்
கிரஸைச் சேர்ந்தவர்கள் எழுந்து, நாங்களும் வரமாட்டோம்
என்று சொல்லிவிட்டு, வெளியே போனார்கள். என்ன
நியாயம்?

அன்றைக்குப் பேசிய திரு. பீட்டர் ஆல்போன்ஸ் மற்
றொன்றைச் சொன்னார். திரு. சந்திரசேகரே சொல்லி விட்டார்,
இந்த ஆட்சி தேசத் துரோகச் செயல் செய்கிறது என்று.
சொன்னார் திரு. சந்திரசேகர்? திரு. சந்திரசேகரா சொன்னார். என்ன
முதலமைச்சர் தேசத் துரோகி என்ற குற்றச்சாட்டையா திரு.
சந்திரசேகர் சொன்னார்? அவருக்கு இதுபோன்ற தகவல் அங்கே
போய் விட்டதா? ஆகவேதான் திரு. சந்திரசேகர் சொன்னாரா?
பிரதமரே சொன்னாரா? பிரதமரே சொல்லிவிட்டால், அப்பீலே
இல்லையா? பிரதமர் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு
கட்சியினுடைய தலைவர். 'பிரதமரே' என்று சொன்னால்,
முதலமைச்சர் அவர்களே சொல்கிறார்: 'அப்படி ஒன்றும்
நடக்கவில்லை' என்று சொல்கிறார். ஒப்புக் கொள்வீர்களா?
அதை ஏற்றுக் கொள்ள வேண்டியதுதானே! என்ன பிரதமரே
சொல்லி விட்டால், திரு. சந்திரசேகர் மேல் இந்திரா காங்கி



ரஸுக்கு என்ன அப்படி ஒரு பற்று? (மணியடிக்கப் பெற்றது)
முடித்து விடுகிறேன். இன்றைக்கு திரு. வி. பி. சிங்கைக் கவிழ்ப்
பதற்காக திரு. சந்திரசேகரைப் பயன்படுத்திய 'பாலிடிக்ஸ்'
எல்லோருக்கும் தெரியும். ஆனால் எவ்வளவு பற்று இன்றைக்கு?
திரு. சந்திரசேகரே சொல்லி விட்டாரே? இந்த சந்திரசேகரைப்
பற்றி முந்தைய பிரதமர் இந்திரா காந்தி என்ன சொன்னார்?
அவரை மிசாவிலே கைது செய்து உள்ளே போட வில்லையா?..

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : நம்முடைய
ஊர் " Subject 'க்கு வர வேண்டும்.

திரு. இரா. மோகன்: இந்திரா காங்கிரஸ் கட்சி இன்றைக்குச்
சொல்கிறது: திரு. சந்திரசேகரே சொன்னார் என்று. மிசா
விலே கைது செய்து அவரை உள்ளே போட்டார்கள். எங்களை
யும் கைது செய்து மிசாவிலே உள்ளே போட்டார்கள். எங்களுக்
கெல்லாம் ரொம்ப சந்தோஷம், எங்களை மாதிரி ஒரு மிசா
கைதி, பிரைம் மினிஸ்டராக வந்திருக்கிறாரே என்று. திரு.
ஜெயப்பிரகாஷ் நாராயணனை எல்லாம் கைது செய்து உள்ளே
போட்டார்கள். பத்திரிகைக்காரர்கள் கேட்டார்கள், இந்திரா
காந்தியைப் பார்த்து. ஏன் இவ்வளவு பெரிய 'நேஷனல் லீடர்ஸ்' ஐ
எல்லாம் மிசாவிலே கைது செய்து உள்ளே போட்டீர்கள் என்று
கேட்டார்கள். அந்த அம்மையார் கேலியாகப் பதில் சொன்னார்
அவர்கள் எல்லாம் தேசத் துரோகிகள், என்ன செய்வது? உள்ளே
தான் போட வேண்டியது என்று. இந்திரா காந்தி அம்மை
யாரால் தேசத் துரோகி என்று குற்றம் சாட்டப்பட்ட திரு.
சந்திரசேகர்தான் இன்றைக்கு, இந்திரா காங்கிரஸ் ஆதரவோடு
பிரதமராக வந்திருக்கிறார். அவர் சொல்கிறார்; பிரதமரே
சொல்லி விட்டாரே என்று. அரசியல் நெருக்கடியிலே பிரதமர்கள்
சில நேரங்களில் அவ்வாறு பேசலாம். அதுவே முடிவல்ல. (மணி
யடிக்கப் பெற்றது) நான் கடைசியாக, ஒன்றிரண்டு முக்கியமான
சில விஷயங்களைச் சொல்லிவிட்டு, முடித்து விடுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அப்படியென்றால்
இவ்வளவு நேரம் பேசியது? (சிரிப்பு).

16-40 மணி

திரு. இரா. மோகன்: யாரோ ஒருவர் பிடிக்கவில்லை என்றால்
இந்திரா காங்கிரஸ்காரர்கள் தொடுக்கிற முதல் பாணம்
(குறுக்கீடு) நான் சொல்வது 'வெரி சீரியஸ் மேட்டர்' அவர்கள்
தேசத் துரோகி என்று சொல்கிறார்கள். தேச விரோதச் செயல்
என்று சொல்கிறார்கள். இது சாதாரண விஷயம் அல்ல.
ரொம்ப சங்கடப்பட்டு பேசுகிறேன். பேசப் பேச கஷ்டமாக
இருக்கிறது. தேசத் துரோகி என்று சொல்லி யாரையெல்லாம்

[திரு. இரா. மோகன்] [1991 சனவரி 24

வருணிக்கிறார்கள் என்று பார்க்க வேண்டும். அவர்கள் தொடுக்கிற முதல் பாணம் இது. அன்றைக்குப் பார்த்தேன் திரு. ராஜீவ் காந்தி அவர்களும், திரு. பரூக் அப்துல்லா அவர்களும் ஒரே விமானத்தில் வந்து சங்கர மடத்திற்குப் போய் காஞ்சிப் பெரியவாளைத் தரிசித்து விட்டு அங்கிருந்து புறப்பட்டுச் சென்றிருக்கிறார்கள். நான் சந்தோஷப்படுகிறேன். ஆனால் அந்த பரூக் அப்துல்லா காஷ்மீர் 'சீஃப் மினிஸ்டராக' இருந்தபோது தேசத் துரோகி என்று குற்றம் சாட்டினார்கள். பார்லிமெண்டிலே பேசிய பேச்சு என்ன தெரியுமா?

பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் அப்போது அங்கே இருக்கக் கூடிய வாய்ப்பைப் பெற்றவன். இந்திரா காங்கிரஸ்காரர்கள் எழுந்து என்ன பேச்சுப் பேசினார்கள் தெரியுமா?

*மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. மோகன் அவர்கள் அவன், இவன் என்று அதாவது 'இந்திரா காங்கிரஸ் காரன்' என்று அந்த 'ன்' போட்டுப் பேசாமல் 'ர்' போட்டுப் பேசுமாறு கேட்டுக் கொள்கிறேன். எனவே அந்த 'ன்' போட்ட வார்த்தைகளை எல்லாம் அவைக் குறிப்பிலே இருந்து எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அந்த 'ன்' எல்லாம் 'ர்' என்று மாற்றப்பட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. இரா. மோகன்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் வேண்டுமென்று அப்படிப் பேசவில்லை. பேசும் போது அப்படி வந்து விடுகிறது. தேசத் துரோகி என்றெல்லாம் பேசுகிறார்கள். அதையெல்லாம் கேட்டுக் கொண்டு பேசாமல் இருக்கிறோம். ஆனால் இந்த வார்த்தையை மட்டும் பொறுக்க முடியவில்லை என்று சொல்கிறீர்கள். ஆனால் எவ்வளவு வேதனையான விஷயம் பாருங்கள். மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட திரு. பரூக் அப்துல்லா காஷ்மீரினுடைய முதலமைச்சராக வந்தார்கள். இந்திரா காங்கிரஸ் கட்சிக்கு அவர் வேண்டாதவராகப் போய் விட்டார் என்ற ஒரே காரணத்தால் திரு. பரூக் அப்துல்லாவைத் தேசத் துரோகி என்று அன்றைக்குக் குற்றம் சாட்டினார்கள். காஷ்மீரில் ஆகஸ்ட் 15 ஆம் தேதி இந்திய தேசியக் கொடி பறக்கிறது. ஸ்ரீநகரிலே பாகிஸ்தான் கொடியும் பறந்தது. இப்போதும் சுதந்திர நாளிலே அப்படிப் பறக்கிறது. ஆனால் அன்றைக்கு அதைக்கூடச் சொன்னார்கள். இந்த பரூக் அப்துல்லா தேச விரோதி என்று சொன்னார்கள்.

ஆனால் இன்றைக்கு அந்த திரு. பரூக் அப்துல்லா ராஜீவ் காந்தியினுடைய நண்பராக மாறிய ஒரே காரணத்தால் அவர் பெரிய தேசிய வாதியாக ஆகிவிட்டார். காஞ்சிப் பெரியவரை வந்து தரிசிக்கக்கூடிய அளவுக்கு தேசியவாதியாக மாறிவிட்டார்.



1991 சனவரி 24] [திரு. இரா. மோகன்]

ஏன் இந்தப் பாணத்தை இந்திரா காங்கிரஸ்காரர்கள் தொடுக்
கிறார்கள் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். பிரிட்டிஷ்
காரர்கள் ஒரு நாயைச் சுடுவதாக இருந்தால் முதலில் அதைப்
பைத்தியக்கார நாய் என்று பட்டம் சூட்டுவார்கள். அப்போது
யாரும் கேட்க மாட்டார்கள். ஏன் அந்த நாயைக் கொன்றாய்
என்று கேட்டால் அது பைத்தியக்கார நாய்; எனவே கொன்
றேன் என்று சொல்வார்கள்; அதே வழிமுறையை இன்றைக்கு
இந்திரா காங்கிரஸ் கட்சி ஒவ்வொரு மாநிலத்திலும் கடைப்
பிடிக்கிறது. ஏன் இந்த ஆட்சியைக் கலைக்க வேண்டும் என்று
காரணம் சொல்கிறார்கள். இதுதான் காரணம் என்றும் சொல்
கிறார்கள். ஏன் இந்த ஆட்சியைக் கலைக்க வேண்டும் என்றால்
தேச விரோதம் என்று உடனே ஒரு பெரிய குண்டைத் தூக்கிப்
போடுகிறார்கள். தேச விரோதம் என்கிறார்கள். சட்டம்
ஒழுங்கு இல்லை என்கிறார்கள். எங்கே சட்டம் ஒழுங்கு இல்லை?
இன்றைக்கு இந்தியாவிலேயே அமைதியாகத் திகழ்கிற ஒரு
மாநிலம் உண்டு என்று சொன்னால் அது தமிழ்நாடு தான் என்று
அத்தனை பேரும் ஒத்துக் கொள்கிறார்கள். டெல்லிக்குப் பக்கத்
தில் இருக்கிற அந்த சண்டிகாருக்குப் போக முடியுமா?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அந்த 'ர்' விகுதியை 'ன்' விகுதிக்குப் பதிலாகப் போட்டுப் பேசுங்கள்.

திரு. இரா. மோகன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்
களே, நான் கெட்ட எண்ணத்தில் அப்படிப் பேசவில்லை. ஒரு
மாவட்டத்தில் பேசுகிற பேச்சு அப்படி வந்துவிடுகிறது போல்
தெரிகிறது. 'சாரி' நான் அதைமாற்றி 'ர்'போட்டே பேசுகிறேன்.
ஏனோ தெரியவில்லை, ஒரு மாவட்டத்தின் பேச்சோ என்னவோ
தெரியவில்லை அப்படி வந்துவிடுகிறது. இந்திரா காங்கிரஸ்
காரர்கள் என்றே சொல்கிறேன். பக்கத்தில் இருக்கிற சண்டி
காரில் லா அண்டு ஆர்டர் இருக்கிறதா? இன்றைக்கு இருக்கின்
றதா? நான் பார்த்த நேரத்தில் எல்லாம் மிலிட்டரி ரூல் தான்
நடக்கிறது. டெல்லியிலே என்ன வென்கிறீர்கள்? ஒவ்வொரு
வீதிக்கும் மிலிட்டரியை நிறுத்தி வைத்திருக்கிறார்கள். எங்கே
சட்டம் ஒழுங்கு? அங்கெல்லாம் சட்டம் ஒழுங்கு நன்றாக இருக்
கிறதா? எல்லைப் புற மாநிலங்களில் எது மிஞ்சி இருக்கின்றன,
என்று சொல்லுங்கள் பார்க்கலாம். ஏதாவது ஒரு எல்லைப் புற
மாநிலம் 'பீஸ்-புல்' ஆக இருக்கிறதா என்று சொல்லுங்கள்
பார்க்கலாம். இன்னும் உள்ளே இன்டீரியராக வாருங்கள். நம்
முடைய பக்கத்தில் இருக்கிற ஆந்திரா மாநிலம் இந்திரா காங்
கிரஸ் கட்சி ஆளுகிற மாநிலம். அது ரொம்ப 'பீஸ்-புல்' ஆக
இருக்கிறதா? அங்கெல்லாம் நக்ஸலைட் கையிலே மூன்று
நான்கு டிஸ்ட்ரிக்ட்ஸ் போய்விட்டன என்று சொல்கிறார்கள்.
அங்கேயும் மிலிட்டரி வைத்துக் கொண்டிருக்கிறார்கள். போலீஸ்
வைத்துக் கொண்டு இருக்கிறார்கள். ஆக இன்றைக்கு இந்திரா
காங்கிரஸ் கட்சி ஆளுகின்ற பல்வேறு மாநிலங்களைப் பார்த்தால்

சட்டம் ஒழுங்கு அமைதி முற்றிலுமாக சீர்கெட்டுப் போன நிலைமையில் இருக்கின்றன. ஆகவே எந்தக் காரணத்தையாவது கொண்டு திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியைக் கலைக்கலாம் என்று சொன்னால் நிச்சயமாக அது பொருத்தம் இல்லாத காரணம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கடைசியாக ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். இந்த கலைப்பு-கவிழ்ப்பு நாடகம் எல்லாம் தமிழ்நாட்டிற்கு மட்டும் தான் என்று கருதக் கூடாது. பக்கத்திலே பாண்டிச்சேரி இருக்கிறது. அது ஒரு மாநிலம் கூட அல்ல. யூனியன் டெரிட்டரி. பழைய கோயம்புத்தூர் முனிசிபாலிட்டி மாதிரிதான் அது. ஒரு சுண்டைக்காய் யூனியன் டெரிட்டரி. அங்கே மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக்கு திரு. டி. இராமச்சந்திரன் அவர்கள் அங்கே சீப் மினிஸ்ட்டராக இருந்தார்கள். ஜனதா தளத்தின் துணையோடு இருந்தார்கள். அந்த சுண்டைக்காய் யூனியன் டெரிட்டரியில் மக்கள் ஆட்சி நடைபெறுவதை, காங்கிரஸ் அல்லாத ஒரு கட்சியினுடைய ஆட்சி அங்கே நடைபெறுவதை காங்கிரஸ்காரர்களால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை. கவர்னரை மாற்றினார்கள். கவர்னரை மாற்றி, பாண்டிச்சேரியிலே ஆட்சியைக் கவிழ்த்தார்கள்.

**16-45 மணி**

நான் கேட்கிறேன். எங்களுக்கு மெஜாரிட்டி இருக்கிறது என்றார்கள். இந்திரா காங்கிரஸ் பரூக்குக்குப் பின்னாலே 11 பேர், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்ற கழகம் 3 பேர், சுயேச்சை ஒருவர், ஜனதா தளத்திலே இருந்து பிரிந்த 3 பேர் இவர்களை எல்லாம் கூட்டிக்கழித்து கணக்குப் போட்டால் 16-க்கு மேல் வருகிறது. நாங்கள் தான் ஆளுங்கட்சியாகப் போகிறோம். திரு. பரூக் தான் முதலமைச்சர் என்று சொன்னார்கள். ஏன் முதலமைச்சர் ஆகமுடியவில்லை. மெஜாரிட்டி இருக்கிறது என்று சொல்கிறார்கள். ஆட்சியைக் கவிழ்த்து ஆகிவிட்டது. அந்த மெஜாரிட்டியை கவர்னர் இடத்திலே காண்பித்து, மறுநாள் அங்கே அந்த மக்கள் ஆட்சியை ஏற்படுத்த வேண்டியது தானே. ஏன் ஏற்படுத்த முடியவில்லை. 16-க்கு மேல் அந்த கட்சியின் பின்னாலே இருக்கிறார்கள் என்று சொன்னார், பத்திரிகைகாரர்கள் சேதிகளைச் சொல்கின்றார்கள். அத்தனை பேர்களும் மந்திரி பதவி கொடு என்கின்றார்களாம். இதுதான் அந்த கட்சியினுடைய



நிலைமை. தேர்ந்தெடுக்கப்பட்ட மெஜாரிட்டி ஆட்சியைக் கவிழ்த்து, இன்றைக்கு சட்டமன்றத்தை டிஸ்மிஸ் செய்யாமல், சஸ்பென்சன் செய்து வைத்திருக்கிறார்கள். எல்லாவற்றையும் சரி பண்ணிய பிறகு, அங்கே சரி பண்ணலாமா என்று இருக்கின்றார்கள். தமிழ்நாட்டில் அப்படிப்பட்ட சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறதா ? தமிழ்நாட்டில் ஆட்சியைக் கலைத்து மீண்டும் அதற்குப் பின்னாலே நீங்கள் போய் ஆட்சியிலே உட்காரக்கூடிய ஒரு சூழ்நிலை இருக்கிறதா என்பதை எண்ணிப்பார்க்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : உறுப்பினர் முடிக்கவேண்டும்.

திரு. இரா. மோகன் : கடைசியாக ஒன்றைச் சொல்லி விடுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வட இந்தியா எல்லாம் சுற்றிப்பார்த்துவிட்டு. வந்திருக்கிறீர்கள்.

திரு. இரா. மோகன் : கொஞ்சம் அனுமதியுங்கள். டெபுடி ஸ்பீக்கர், சார், முதலிலே நான் ஒரு வேதனையைச் சொல்கிறேன். அன்றைக்கு அவர்கள் பேசினார்கள். நம்முடைய இந்திரா காங்கிரஸ் கட்சியினுடைய உறுப்பினர் அன்றைக்கு சொன்னார். முதலமைச்சர் அவர்களைப் பார்த்து சொன்னார்கள். ஒரு வார்த்தை சொல்லிவிட்டு சொன்னார்கள். பிரைமினிஸ்டர் சொன்ன சீக்ரெட்ஸ் எல்லாம் லீக்கேஜ் ஆகிவிட்டன என்ற குற்றச்சாட்டு பார்லிமெண்டிலே சொல்லப்பட்டிருக்கிறது. நீங்கள் அக்னி பிரவேசம் செய்யவேண்டும் என்று. இது சாதாரண விஷயமா ? நம்முடைய தலைவர் உணர்ச்சி வசப்பட்டு அடுத்த நிமிடமே எழுந்து சொன்னார்கள். ஒரு செகண்ட் சொன்னார்கள். 'நான் அக்னி பிரவேசம் பண்ணுகிறேன், 25-ம் தேதி' என்றார்கள்.

இராமன் சீதையைப் பார்த்து சொன்னான். 'நீ அக்னி பிரவேசம் பண்ணு' என்று சொன்னான். அவள் கற்பிலே இராமன் சந்தேகப்பட்டு அல்ல. ஞாபகம் வைத்துக்கொள்ளுங்கள். இராமபிரானுக்குத் தெரியும், சீதை கற்புக்கரசி என்று. இராமனுக்கு மனதார தெரியும். ஆனால் இராமன் சீதையை 'நீ அக்னி பிரவேசம் செய்' என்று சொன்னது, கருத்துக் குருடர்களின் விழியை திறப்பதற்காக அது பயன்படட்டும் என்று. ஆகவே 'நீ அக்னி பிரவேசம் செய்' என்று சொன்னான்.

[திரு. இரா. மோகன்] [1991 சனவரி 24

இன்றைக்கு யார் எல்லாமோ தமிழ்நாட்டின் தெருவிலே இருந்துகொண்டு, தலைவரை சந்தேகிக்கிறார்கள் என்று சொன்னால், தலைவருடைய தேசப்பற்றை சந்தேகிக்கிறார்கள் என்று சொன்னால், நான் இந்த அவையிலே சொல்கிறேன். கண்ணகியின் கற்பைப் பற்றி, தெருவோரத்திலே தன் உடலை விற்று பிழைக்கின்ற ஒரு விலை மாது, உனக்கு கற்பிருக்கிறதா என்று கேட்பதற்கு சமானம் என்று நான் இங்கே தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : முடிக்கவேண்டும்.

திரு. இரா. மோகன் : கடைசியாக நான் ஒன்றைச் சொல்லி விடைபெற விரும்புகிறேன். இந்த ஆட்சி பல்வேறு நல்ல திட்டங்களை, பல்வேறு நல்ல காரியங்களை, துணிவோடு இன்றைக்கு தமிழ்நாட்டு மக்களுக்கு ஆற்றி வருகிறது. தலைவர் அவர்கள் எடுத்த உடனே சொன்னார்கள். முதலிலே எத்தனை நாளைக்கு இங்கே நாங்கள் ஆட்சியிலே இருப்போம் என்பதல்ல. இந்த பிரச்சினையெல்லாம் வருவதற்கு முன்னாலேயே சொன்னார்கள். எத்தனை நாள் என்பது எங்களுக்குப் பிரச்சினை இல்லை. ஒரு நாள், ஒரு வாரம் ஆட்சியிலே இருந்தாலும்கூட மக்களுக்கு நன்மைகளை செய்கின்ற ஆட்சியாக இருப்போம் என்று சொன்னார்கள். நான் பேசுகின்றபோது இன்றைக்கு இந்த அவையிலே இறுதியாகச் சொல்கிறேன். நெஞ்சுணர்வோடு இங்கே தலைவர் தமிழ்நாட்டு மக்களுக்கு பணியாற்றுகிறார். தமிழ்நாட்டு மக்கள் அந்தத் தலைவருக்குப் பின்னாலே அணிதிரண்டு நிற்கிறார்கள். இந்த ஆட்சி நிலைக்கும். திராவிட முன்னேற்றக் கழகம் நிற்கும். வஞ்சக எண்ணம் கொண்டவர்கள் தமிழ்நாட்டு அரசியலிலே இருந்து விரட்டப்படுவது உறுதி என்பதைக் கூறி இந்த ஆளுநர் உரையை வரவேற்று பாராட்டி, நன்றி கூறி நான் அமர்கிறேன். நன்றி.

16-50 மணி

திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மேதகு ஆளுநர் அவர்களுடைய உரையின்மீது நடைபெறுகிற இந்த விவாதத்திலே கலந்துகொண்டு அனைத்து இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் கருத்துக்களை எடுத்து வைக்க வாய்ப்புகளைப் பெற்றதிலே நான் மகிழ்ச்சியடைகிறேன். எனக்கு இருக்கிற சங்கடம், இங்கே நாம் எல்லாம் உட்காருகிறபோது, பிரதான எதிர்க் கட்சியாக இருக்கக்கூடிய காங்கிரஸ் கட்சியும், பிரதான எதிர்க் கட்சி அந்தஸ்தை இழந்து அடுத்த இடத்திலே இருக்கிற செல்வி ஜெயலலிதா தலைமையிலே இருக்கிற



[திரு. எஸ். திருநாவுக்கரசு] [1991 சனவரி 24

கட்சியும், சட்டமன்றத்திலே இருந்திருந்தால், பேசுகிறபோது இன்னும் கொஞ்சம் உற்சாகமாக பேச முடியும். இந்த உரையின்மீது முதலில் சில கருத்துக்களைச் சொல்லிவிட்டு, அதையொட்டி தமிழ்நாட்டில் இருக்கிற, எனக்கு முன்னால் உரையாற்றிய மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் சுட்டிக்காட்டியதைப் போல, அரசியல் நிலவரங்களையும் சுருக்கமாகக் குறிப்பிட விரும்புகிறேன். எங்கள் கட்சியின் சார்பில் நான் ஒருவர்தான் பேசுகிறேன் என்ற காரணத்தினால் சற்று கூடுதல் நேரம் ஒதுக்கித் தருமாறு அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

ஆளுநர் அவர்களுடைய உரையில் குறிப்பிடப்பட்டிருப்பது போல 1990 ஆகஸ்ட் மாதம் திரு. வி. பி. சிங் அவர்கள் பிரதமராக இருந்தபோது, அதற்கு முன்னாலே 10 ஆண்டு காலமாக மண்டல் கமிஷன் பரிந்துரைகள் கொடுக்கப்பட்டிருந்தும்கூட அதன்மீது எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படாமல் இருந்த அந்த அறிக்கைமீது முன்னாள் பிரதமர் திரு. வி.பி. சிங் அவர்கள் நடவடிக்கை எடுத்தார்கள். இதுவரை சுதந்திரம் பெற்றதற்குப் பின்னாலே மத்திய அரசுப் பணிகளிலே உரிய பிரதிநிதித்துவம் தரப்படாமல் ஒதுக்கி, புறக்கணிக்கப்பட்டிருந்த தென்னிந்திய மக்களுக்கு உரிய வாய்ப்பு தருகிற விதத்திலே வேலைவாய்ப்புகளிலும் 27 சதவிகிதம் தரப்படும் என்கிற அறிவிப்பை மத்திய அரசு வெளியிட்டது. அந்த அறிவிப்பையொட்டி அவருடைய ஆட்சியே கூட போகிற சூழ்நிலை ஏற்பட்டது. பின்தங்கிய மக்களுக்காகச் செய்யப்படுகிற இதை சலுகை என்று கூட நான் சொல்லமாட்டேன். அவர்களுக்கு வழங்கப்பட வேண்டிய நியாயமான உரிமைகளை வழங்கியதற்காக அவை வெளியிலே இருக்கக்கூடியவர்கள் எல்லாம் சேர்ந்து வேறு காரணங்களை காட்டி அந்த ஆட்சியைக் கலைத்தார்கள். ஏன் என்றால், இந்திய நாட்டில் அரசியல் நடத்துகிற யாரும் பின்தங்கிய, ஆதி திராவிட மக்களுக்கு எதிராக, விரோதமாக பேசி அரசியல் நடத்த முடியாது என்பதால் அதை வேறு வழியிலே செய்தார்கள். இராமர் கோயில் என்றும், பாபர் மசூதி என்றும் காரணம் காட்டி மத்திய அரசுக்குக் கொடுத்த ஆதரவை திரும்பப் பெற்று, அதன் மூலம் திரு. வி.பி. சிங் அவர்களுடைய ஆட்சி கலைக்கப்பட்டது. ஆனால் அவர் அறிவித்த அந்த அறிவிப்பை, மத்திய அரசினுடைய உத்தரவை நடைமுறைப்படுத்தாமல், உச்ச நீதிமன்றத்திலே தடை உத்தரவு வாங்கப்பட்டு இன்றைக்கு அது கிடப்பிலே கிடக்கிறது. அதை நம்முடைய ஆளுநர் உரையின்மூலம், சுப்ரீம் கோர்ட்டிலே இருக்கிற தடையாணையை ரத்து செய்ய வேண்டுமென்று சொல்லி, அந்தக் கோரிக்கையை வலியுறுத்தியுள்ளது. அனைத்து இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலேயும் விரைவிலே மத்திய அரசு அது குறித்து உரிய நடவடிக்கை

எடுத்து, உச்ச நீதிமன்றத்தினுடைய தடையாணைக்கு உட்
படுத்தப்பட்டிருக்கிற, ஏற்கனவே மத்திய அரசு அறிவித்த
ஆணையை, நடைமுறைப்படுத்த உடனடியாக துரித நட
வடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் இந்த மன்றத்தின்
வாயிலாக மத்திய அரசை வற்புறுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**16–55 மணி**

அதுபோல உச்சநீதி மன்றத்திலே இருக்கிற நீதிபதி
கள்கூட பின் தங்கிய ஆதிதிராவிட மக்களின் உணர்வுகளைப்
புரிந்துகொண்டு, தடை ஆணையை அவர்கள் ரத்து செய்ய
வேண்டுமென்பதை வற்புறுத்துவதற்காகத்தான் அனைத்திந்திய
அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம், பாட்டாளி மக்கள்
கட்சி சார்பிலே நாங்கள் ஒரு ஊர்வலம் கூட நீதிமன்றங்
களுக்கு முன்னாலே நடத்தி, அங்கிருக்கும் நீதிபதிகளிடம்
மனு கொடுத்தோம். இதை உச்ச நீதிமன்றத்திற்கு அனுப்
புங்கள் ; மக்களின் உணர்வுகளைப் புரிந்துகொண்டு எந்த
நோக்கத்திற்காக மத்திய அரசு ஆணை பிறப்பித்ததோ
அந்த நோக்கம் நிறைவேற உச்ச நீதிமன்ற நீதிபதிகளும் மனிதா
பிமான உணர்வோடு ஒரு சமூக நீதியை மக்களுக்கு வழங்க
வேண்டுமென்ற உணர்வோடு இந்தத் தடை ஆணையை
ரத்து செய்ய அவர்களும் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று
தூண்டுகிற விதத்திலே சமீபத்திலே நாங்கள் நீதிபதிகளிடம்
மனு கொடுத்தோம். எனவே இந்த மன்றத்தின் வாயிலாக
நானும் மத்திய அரசை உடனடி நடவடிக்கைக்கு வற்புறுத்து
கிறேன்.

மத்திய அரசு இதை அறிவித்தபோது இங்கே இருக்கிற
அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின்
ஒரு பகுதியைச் சேர்ந்த செல்வி ஜெயலலிதா அவர்களுடைய
தலைமையிலே இருக்கிற அந்தக் கட்சியின் சார்பிலே செல்வி
ஜெயலலிதா அவர்கள் எப்படி வட நாட்டிலே இந்த அறிவிப்புக்கு
எதிர்ப்பு கொடுத்தார்களோ அதைப்போல இந்தியன் எக்ஸ்
பிரஸ் பத்திரிகையிலே, திரு. வி. பி. சிங் அவர்கள் மண்டல்
கமிஷன் பரிந்துரையை வேகம் வேகமாகக் கொண்டு வந்து
அமல்படுத்தியவிதம் சரியில்லை என்ற விதத்தில், மண்டல்
கமிஷன் பரிந்துரை அமல்படுத்தப்பட்டதை, அந்த அறிவிப்பை
ஒரு பேட்டி மூலம் கண்டித்தார்கள். எனவே நாங்களும்
உடனடியாக, செல்வி ஜெயலலிதா அவர்கள் புரட்சித் தலைவர்
எம்.ஜி.ஆர். அவர்களுடைய வழியிலே இருந்து மாறிச் செல்
கிறார் என்றும், திராவிட இயக்க உணர்வுகளிலிருந்து மாறிச்
செல்கிறார் என்றும், பின் தங்கிய ஆதிதிராவிட மக்களுக்கு
செல்வி ஜெயலலிதா துரோகம் விளைவிக்கிறார் என்றும்
எங்கள் கருத்துக்களை வெளியிட்டபோது, உடனடியாக



அவற்றுக்கும் பதில் சொல்ல வேண்டுமென்ற அந்த உணர்
வோடும், அந்தக் கட்டாயத்தின் பேரிலும் அடுத்த நாள்
செல்வி ஜெயலலிதா அவர்கள் ஒரு அறிக்கை விடுத்தார்கள்;
தன்னுடைய கட்சியின் கருத்து 27 சதவிகிதம்கூடப் போதாது.
வேலை வாய்ப்புகளிலே மட்டுமல்ல, கல்லூரிகளிலே, பள்ளி
களிலே படிப்பதிலேகூட பிரதிநித்துவம் வேண்டும், ரிசர்வேஷன்
வேண்டும்; அதுவும் 50 சதவிகிதம் தரப்பட வேண்டுமென்று
சொல்லி தமிழ்நாடு முழுவதும் செல்வி ஜெயலலிதா கட்சி
சார்பிலே போஸ்டர்கள் ஒட்டுங்கள், துண்டுப் பிரசுரம்
வெளியிடுங்கள் என்று சொல்லி தன்னுடைய பத்திரிகை மூல
மாகவும், பேட்டி மூலமாகவும் செல்வி ஜெயலலிதா அவர்கள்
அறிக்கை விடுத்தார்கள். ஆனால் உண்மையிலேயே செல்வி
ஜெயலலிதா அவர்களுக்குப் பின் தங்கிய ஆதி திராவிட
மக்கள் மீது அக்கறை இருக்குமானால் ஒன்றைச் செய்திருக்க
வேண்டும். இன்றைக்கு அவருடைய தயவோடுதான்,
10 நாடாளுமன்ற உறுப்பினர்களுடைய தயவோடுதான் மத்தியில்
திரு. சந்திரசேகர் அவர்களுடைய ஆட்சி நிலைத்திருக்கிறது.
இன்றைக்கு இந்த 10 நாடாளுமன்ற உறுப்பினர்களுடைய
உதவியையும் நாங்கள் உங்களுக்குத் தொடர்ந்து தர வேண்டு
மென்று சொன்னால், தொடர்ந்து மத்திய அரசை ஆதரிக்க
வேண்டுமென்று சொன்னால், அதற்கு திரு. வி. பி. சிங் அவர்கள்
அறிவித்த 27 சதவிகிதம் போதாது, எங்களுடைய கட்சியின்
கொள்கை 50 சதவிகிதம் என்று சொல்லியிருக்கிறோம் ;
எனவே 50 சதவிகிதமாக உயர்த்தித் தர வேண்டும் ; அப்படி
இல்லை என்றால் எங்களுடைய 10 நாடாளுமன்ற உறுப்
பினர்களும் மத்திய அரசை ஆதரிக்க மாட்டார்கள் ; திரு.
சந்திரசேகர் அரசை ஆதரிக்க மாட்டார்கள் என்று செல்வி
ஜெயலலிதா அவர்கள் வற்புறுத்துவார்களேயானால், அல்லது
அப்படி திரு. சந்திரசேகர் அரசு 50 சதவிகிதமாக உயர்த்தித்
தரவில்லை என்றால் தன்னுடைய ஆதரவைத் திரும்பப்
பெறுவாரேயானால் உண்மையிலேயே அந்தக் கட்சிக்கு,
அதனுடைய தலைவராக இருக்கிற செல்வி ஜெயலலிதா
அவர்களுக்கு தமிழகத்தில் இருக்கிற பின் தங்கிய மக்கள் மீது
அக்கறை இருக்கிறது என்று அர்த்தமாகும்.

ஆனால் உண்மையிலேயே பின்தங்கிய ஆதிதிராவிட
மக்களை ஏமாற்றுவதற்காக, திராவிட இயக்கத்தின் எந்த
விதமான சம்பந்தமும் இல்லாத, சந்தர்ப்ப சூழ்நிலையால்
தலைமைப் பொறுப்பை ஏற்றுக்கொண்டு இருக்கிற அவர்
தமிழ்நாட்டு மக்களை ஏமாற்றுகிற விதத்திலே இந்த
அறிவிப்பை வெளியிட்டார். நான் இப்பவும் இந்த
மன்றத்தின் மூலம் அவருடைய கட்சியைச் சேர்ந்த அங்கே
இருக்கிற நாடாளுமன்ற உறுப்பினர்களைக் கேட்டுக்கொள்
கிறேன், பின்தங்கிய ஆதிதிராவிட மக்களின் வாக்குகளைப்
பெற்றுச் சென்று நாடாளுமன்ற உறுப்பினர்களாக ஆனவர்கள்
நீங்கள் ; எனவே உண்மையிலேயே உங்களுக்கு தமிழ்நாட்டின்

மீது, தமிழ்நாட்டில் இருக்கிற பின்தங்கிய ஆதிதிராவிடர்கள் மீது அக்கறை இருக்குமேயானால் மத்திய அரசை இதற்காகவும் வற்புறுத்த வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

17.00 மணி

ஆளுநருடைய அறிக்கையிலே விவசாயிகளுக்கான கடன்கள் ரூபாய் 10 ஆயிரம் வரை தள்ளுபடி செய்யப்பட்டு இருக்கிறது என்று அறிவித்து இருக்கிறீர்கள். இந்த அறிவிப்பு அரசு சார்பிலே ஆணையாக வெளி வந்து இருப்பது என்பது உண்மை தான். ஆனால் அதனுடைய பலன் முழுமையாக விவசாயிகள் அனைவருக்கும் போய்ச் சேரவில்லை என்பதை நான் இந்த அரசின் கவனத்திற்குக் கொண்டுவரக் கடமைப் பட்டு இருக்கிறேன். பொதுவாக கடந்த காலங்களில் சிறு அல்லது நடுத்தர விவசாயிகள் பல்வேறு வகையான கடன் களை — அது எந்த வகையான கடனாக இருந்தாலும் சரி, சொசைட்டியில் வாங்கிய கடனாக இருந்தாலும் சரி அல்லது கூட்டுறவு வங்கிகளில் வாங்கிய கடனாக இருந்தாலும் சரி இவற்றை எல்லாம் சில பேர் ஒழுங்காகக் கட்டிவிட்டு அடுத்த ஆண்டு கடன் பெறுகிற விவசாயிகள் உண்டு; தொடர்ச்சி யாகக் கட்டாமலே இருக்கிற விவசாயிகளும் உண்டு; முடி யாமல் அவற்றைக் கட்டாமல் இருப்பவர்களும் உண்டு; முடிந்து வேண்டுமென்றே கட்டாமல் இருப்பவர்களும் உண்டு. ஆனால் இந்த அரசால் அறிவிக்கப்பட்டு இருக்கிற நிபந்தனை கள் மூலம் என்ன ஆகி இருக்கிறது என்று சொன்னால், நல்லவர்களுக்குத் தண்டனையும், தீயவர்களுக்குச் சலுகையும் கிடைத்து இருக்கிறது. யார் ஒழுங்காகக் கடனைக் கட்டிக் கொண்டு வந்தார்களோ, இரண்டு மூன்று ஆண்டுகள் பாக்கி வைத்து இருக்கிறார்களோ அவர்களுக்கு எல்லாம் சலுகை கிடையாது; ஆனால் 7, 8 ஆண்டுகள் யார் எல்லாம் கட்டாமல் இருக்கிறார்களோ அவர்களுக்கு எல்லாம் சலுகை கிடைத்து இருக்கிறது. பலனைப் பொறுத்தவரையில், நீங்கள் 1986 ஆம் ஆண்டை வைத்து இருக்கிறீர்கள் என்று நினைக்கிறேன்; இல்லை என்றால் ஒட்டு மொத்தமாக இந்த ஆணை எந்தத் தேதியில் வெளியிட்டு இருக்கிறீர்களோ அதைக் கணக்கிலே எடுத்துக்கொண்டு, பெரிய விவசாயிகளுக்கு வேண்டியதில்லை; வசதியானவர்களுக்கு வேண்டியதில்லை; தமிழ்நாட்டில் இருக்கிற சிறிய நடுத்தர விவசாயிகள் அனைவரையும் நீங்கள் கணக்கில் எடுத்துக்கொண்டு, அது எந்த வகையான கடனாக இருந்தாலும்சரி, அவர்கள் தவணை தவறி இருந்தாலும்சரி, இல்லை என்றாலும்சரி ஒட்டுமொத்தமாக 10 ஆயிரம் ரூபாய் வரை — மேக்சிமம் 10 ஆயிரம் ரூபாய் வரை என்று சொல்லி இருக்கிறீர்கள் — எனவே அந்த 10 ஆயிரம் ரூபாய் வரை எல்லா விவசாயிகளுக்கும், சிறு, நடுத்தர விவசாயிகளுக்கும்



கடனை நீங்கள் ரத்து செய்தால் தான் இந்த அறிவிப்பின் மூலம் உண்மையான பலன் மக்களுக்குப் போய்ச் சேரும்; விவசாயிகளுக்கும் போய்ச் சேரும்; நீங்கள் எதிர்பார்க்கிற பலனும் உங்களுக்கு வந்து சேரும்; இல்லை என்றால் வெறும் பத்திரிகைச் செய்தியாகத் தான் இருக்குமே தவிர, இதிலே உங்களுக்கு அரசுக்கு எந்தப் பலனும் ஏற்படாது; விவசாயி களுக்கும் எந்தப் பலனும் ஏற்படாது.

அதுபோல எம்.ஜி.ஆர். ஆட்சிக் காலத்திலே பயிர்ப் பாது காப்புத் திட்டம், இன்ஷூரன்ஸ் திட்டம் கொண்டு வரப்பட்டது. அதை ஏன் நீங்கள் கைவிட்டீர்கள்? இந்த அரசு ஏன் கை விட்டது என்று எனக்குத் தெரியவில்லை; நீங்கள் கைவிட்டு இருக்க வேண்டிய தேவையில்லை, இப்போது கூட நான் கேட்டுக்கொள்கிறேன், அதை நீங்கள் அதிகாரிகளோடு — ஆட்சி என்றால், தி.மு.க. என்றால் தி.மு.க. தனியாகவோ; அ.இ.அ.தி.மு.க. என்றால் அ.இ.அ.தி.மு.க. தனியாகவோ உட்கார்ந்து நாமே அறிவித்து விடுவதில்லை; இன்றைக்கு உங்களிடத்திலே இருக்கிற அதிகாரிகள்தான் அன்றைக்கும் எங்களிடத்தில் இருந்தார்கள்; இதே அரசு துறை அதிகாரி களோடு கலந்து பேசி முடிவு செய்துதான் அந்தத் திட்டத்தை அறிவித்தது; அதிலே ஏதாவது குறைபாடு இருப்பதாக நீங்கள் கருதுவீர்களேயானால் அந்தக் குறைபாடுகளைக் களைந்து அந்தத் திட்டத்தை தொடர்ந்து நீங்கள் நடை முறைப்படுத்த வேண்டுமே தவிர, அந்தத் திட்டத்தைக் கைவிட்டது தவறு என்று நான் கருதுகிறேன். விவசாயிகள் பணத்தை இன்ஷூரன்ஸ் திட்டத்திலே கட்டி இருக்கிறார்கள். இத்தனை ஆண்டுகள் கடந்த பின்னாலே எந்தவிதமான வட்டியும் இல்லாமல், அவர்கள் கட்டிய பணம் மட்டும் திருப்பித் தரப்படுவதாக அறிவிக்கப்பட்டு இருக்கிறது; அதுவும் முறையாக முழுவதுமாகப் போய்ச் சேருவதில்லை; வட்டியும் தரப்படவில்லை. இவற்றையெல்லாம் கவனத்திலே கொண்டு விவசாயிகளுக்கு நன்மை பயக்கிற, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் கொண்டுவந்தத் திட்டத்தை நீங்கள் தொடர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

ஆளுநர் உரையிலே குறிப்பிட்டு இருப்பதைப் போல இன்றைக்கு வளைகுடாவிலே நடக்கிற யுத்தத்தையொட்டி இந்திய நாடு முழுவதும் பெரும் பொருளாதாரப் பாதிப்புக்கு ஆட்படுத்தப்பட்டு வருகிறது. விமானம், டிரெயின், பஸ் இவைகள் எல்லாமே இன்றைக்குக் குறைக்கப்பட்டு வருகின்றன; நிறுத்தப்பட்டு விடுமோ என்ற சூழ்நிலை ஏற்பட்டு இருக்கிறது. அங்கே ஈராக்கில் யுத்தம் துவங்கிய உடனே நம்முடைய ஊரிலே காய்கறி விலைகளை ஏற்றி விட்டார்கள். காரணம் கேட்டால் டீசல் கிடைக்க

[திரு. எஸ். திருநாவுக்கரசு] [1991 சனவரி 24

வில்லை, எண்ணெய் கிடைக்கவில்லை என்று சொல்லி, யுத்தம் தொடங்கிய அடுத்த நாளே மார்க்கெட்டிலே காய்கறியிலிருந்து எல்லாப் பொருட்களும், அனைத்துப் பொருட்களின் விலைகளும் உயர்த்தப்பட்டு இருக்கின்றன.

சிலது ஆர்டிபீஷியலாக உயர்த்தப்பட்டிருக்கிறது. சிலது யதார்த்தமாக உயர்ந்திருக்கிறது. எனவே அரசாங்கம் இதிலே உரிய கவனம் செலுத்த வேண்டும்.

17-05 மணி

மாநில அரசுக்கு விலையைக் குறைப்பதிலே, விலையைக் கட்டுப்படுத்துவதிலே உள்ள அதிகாரத்தையும், எந்த அளவிற்கு செய்ய முடியும் என்பதையும் நான் அறிவேன். இருந்தாலும் எந்தெந்த வகையிலே எல்லாம் விலைவாசியைக் குறைக்க முடியுமோ அவற்றிலெல்லாம் மாநில அரசு உடனடியாகக் கவனம் செலுத்த வேண்டும், நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நான் இந்த அரசைக் கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால் யுத்தம் எவ்வளவு நாட்கள் நீடிக்கும் என்று தெரியவில்லை. ஆரம்பிக்கும் போது, ஒரு நாள், இரண்டு நாளில் முடிந்து விடும் என்றார்கள். இப்போது ஒரு வாரம் தாண்டி நடந்து கொண்டிருக்கிறது. வருகிற அறிவிப்புகளைப் பார்த்தால் பல மாதக் கணக்கிலே இந்தப் போர் நடக்கலாம் என்று சொல்லப்படுகிறது. போரே முடிந்து விட்டாலும், மீண்டும் சகஜநிலை திரும்பி நாம் எதிர்பார்க்கும் டீசல், பெட்ரோல் நமக்கு வந்து சேருவதற்கு அதற்கடுத்து மூன்று மாதங்கள், 6 மாதங்கள் ஆன பிறகு தான் நிலைமைகள் சரியாகும். ஆகவே இன்னும் ஓராண்டைக் கணக்கிலே கொண்டு, அந்த வகையிலே கொண்டு வருகிற திட்டங்களை இந்த அரசு செயல்படுத்த வேண்டும். இல்லை என்றால் பொது மக்களுக்குச் சிரமம் ஏற்படும். ஆகவே விலைவாசி ஏற்றத்தில் நாம் குறிப்பாக கவனம் செலுத்த வேண்டும். குறிப்பாக அரிசியின் விலையில் கவனம் செலுத்த வேண்டும் புரட்சித் தலைவர் அவர்கள் பத்துப் பதினொரு ஆண்டுக் காலம் முதலமைச்சராக இருந்த போது ஏறத்தாழ ஒரே ஒரு தடவை தவிர மற்ற தடவைகளில் அரிசியின் விலையை எம். ஜி. ஆர். உயர்த்தியதே இல்லை. சாதாரண ரகத்திற்கு ரூ. 1.75, 2, 2.25 என்று மிகச் சன்ன ரகம் ரூ. 2.25-க்கு கடைசியாக புரட்சித் தலைவர் எம். ஜி. ஆர். ஆட்சிக் காலத்திலே வழங்கப்பட்டது. இப்போது இருப்பதைப் போலவே தான் அப்போதும் இருந்த மத்திய அரசு—எந்த அரசாக மத்திய அரசிலே இருந்தாலும் அப்போதைக்கப்போது ஓராண்டு, இரண்டாண்டுகள் கழித்து அவர்கள் விலையை ஏற்றிக் கொண்டுதான் இருப்பார்கள். அப்படி விலையை ஏற்றுகிற போது இங்கேயும்



1991 சனவரி 24] [திரு. எஸ். திருநாவுக்கரசு]

மாநில அரசும் விலையை ஏற்ற ஆரம்பித்தால் இங்கேயுள்ள மக்கள் தாங்க மாட்டார்கள். பொதுவாக தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில், ஒரு விவசாயக் குடும்பத்திலிருந்து வந்தவன் என்ற உணர்வோடு அந்த அடிப்படையிலே சொல்லுகிறேன். விவசாயிகள் கூட அரிசியை வாங்கித்தான் சாப்பிடுகிறார்கள்.

தமிழ்நாட்டில் பெரிய நிலச்சுவான்தார்கள், வசதியானவர்கள், விவசாயம் முடிந்த பிறகு ஓராண்டுக்கு வேண்டிய அரிசி, நெல்லை சேமித்து வைக்கிறார்கள். ஆனால் நடுத்தர, சாதாரண விவசாயிகள் என்ன செய்கிறார்கள் என்றால், விவசாயம் முடிந்தவுடனே நெல்லை விற்றுவிடுவார்கள். அதுவும் குறைந்த விலையில் விற்பார்கள். அதற்குப் பிறகு 3 மாதங்கள் 4 மாதங்கள் கழித்து அரிசியின் விலை வெளியே அதிகமாக விற்றுக் கொண்டிருக்கும் போது அவர்கள் அரிசியை வாங்கிச் சாப்பிடுவார்கள். இதுதான் தமிழ் நாட்டிலுள்ள விவசாயிகளின் நிலை. மிகப் பெரிய நிலச்சுவான்தார்கள் வேண்டுமானால் ஓராண்டு, இரண்டாண்டுகளுக்கு வேண்டிய நெல்லை, அரிசியை சேமித்து வைத்துக் கொள்வார்கள். எனவே விவசாயிகளே அரிசியை வெளியே வாங்கித்தான் சாப்பிடுகிறார்கள் என்று சொன்னால், மற்ற அத்தனை பேரும், தொழிலாளர்களாக இருந்தாலும் சரி, அரசு ஊழியர்களாக இருந்தாலும் சரி, உழைக்கிற வர்க்கம், சாதாரண ஏழை எளிய மக்கள் அரிசியை வாங்கித்தான் சாப்பிடுகிறார்கள். எனவே தமிழ்நாட்டு அரசியலைப் பொறுத்தவரையில் நமது முதலமைச்சருக்குத் தெரியாதது அல்ல. தமிழ்நாட்டு அரசியல் அரிசியோடு மிகவும் சம்பந்தப்பட்டது. பல ஆட்சி மாற்றங்கள் அரிசி விலை உயர்ந்த காரணத்தால், அரிசி கிடைக்காத காரணத்தால், உணவு பஞ்சத்தின் காரணத்தால் ஏற்பட்டிருக்கின்றன. ஆட்சிமாற்றத்திற்கு அதுவும் ஒரு காரணம். மொழிப் போர் போன்ற பல்வேறு காரணங்கள் இருந்தன என்றாலும் உணவுத் தட்டுப்பாடு 1967 ஆம் ஆண்டிலே ஆட்சி மாற்றத்திற்கு ஒரு காரணமாக அமைந்தது. எனவே அவற்றை எல்லாம் நீங்கள் கவனத்திலே கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இப்போது இந்த அறிவிப்பில் நீங்கள் அரிசியின் விலையைக் குறைத்திருப்பதாகச் சொல்லியிருக்கிறீர்கள். ரூ. 2.75, ரூ. 3.25 வரை கிடுகிடு என்று விலையை உயர்த்திவிட்டு, அந்த ஏற்றத்திற்குப் பிறகு சற்று விலையைக் குறைத்துவிட்டு, பாருங்கள் விலையைக் குறைத்திருக்கிறோம் என்று பெருமைப்படுவதிலே என்ன அர்த்தம்? ஏன் விலையை உயர்த்தினீர்கள்? பொருளாதார நெருக்கடி, அரசுக்குப் பணம் தேவை ஆகவே உயர்த்தினோம் என்றால், இப்போது விலையை இறக்க வேண்டிய சூழ்நிலை வரும்போது ஏன் அதிலே முன்பே கவனமாக இருந்திருக்கக் கூடாது? நீங்கள் என்ன செய்ய விரும்புகிறீர்களோ அதனுடைய

பலனை மக்களும் அனுபவிக்காமல் நீங்களும் அனுபவிக்காமல் போகிற சூழ்நிலை ஏற்படுகிறது. அரிசியின் விலையை ரூ. 3-75-க்கு ஏற்றிவிட்டு, அதற்குப் பிறகு ரூ. 2-75 என்று குறைத்துவிட்டு, பொதுமக்களிடத்திலே சொல்லும்போது, பாருங்கள் 50 பைசா குறைத்திருக்கிறோம், எல்லாவற்றையும், சன்ன ரகத்தையும், மிகச் சன்ன ரகத்தையும் இரண்டையும் ஒன்றாக ஆக்கியிருக்கிறோம், ஒட்டு மொத்தமாக ரூ. 2-50 ஆக ஆக்கியிருக்கிறோம் என்று சொல்லுகிறீர்கள். ஆனால் முன்னால் இருந்த விலையைவிட இது 50 பைசா கூடுதல். முன்னால் இருந்தது ரூ. 2.75, ரூ. 2.00, ரூ. 2.25. ரூ. 2.25 இப்போது ரூ. 2.50 ஆக ஆகியிருக்கிறது. மிகச் சன்ன ரகம் ரூ. 2.50 ஆக ஆகியிருக்கிறது. சன்ன ரகம் ரூ. 2.00-ல் இருந்து ரூ. 2.50 ஆக ஆகியிருக்கிறது. புரட்சித் தலைவர் எம். ஜி. ஆர். ஆட்சிக் காலத்திலே இருந்த விலையைவிட இது கூடுதல். விலை உயர்த்தப்பட்டிருக்கிறது. ஆனால் நீங்கள் ஏற்றிய விலையிலிருந்து மீண்டும் இறக்கியிருக்கிறீர்கள். அவ்வளவுதான்.

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, எம். ஜி. ஆர். அவர்கள் முதல் அமைச்சராக இருந்தபோது, மத்திய அரசு என்ன விலைக்கு நமக்கு அரிசியைக் கொடுத்தது என்பதையும், இப்போது மத்திய அரசு என்ன விலைக்கு நமக்குக் கொடுக்கிறது என்பதையும் கணக்கில் எடுத்துக் கொண்டு பார்த்தால், எம். ஜி. ஆர். அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது இருந்த விலைகள் அரிசிக்கு இப்போதிருக்கிற 2 ரூபாய், இரண்டரை ரூபாய் என்பது குறைந்த விலைதான் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

17-10 மணி

திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வேறு எதையோ சொல்லப் போகிறார் என்று நினைத்தேன். விகிதாச்சாரக் கணக்குகள் வேண்டாம். நான் அதைத்தான் முதலிலேயே சொன்னேன். மத்திய அரசு 6 மாதத்திற்கு ஒரு முறை விலையை ஏற்றிக்கொண்டு தான் இருக்கும். அப்படி ஏற்றுகிறபோது எல்லாம் நீங்களும் ஏற்றினால் அந்த விகிதாச்சாரம் என்று சொன்னால் மக்களிடம் எடுபடாது. அதற்கு முன்பு ஒரு கிலோ அரிசி விலை என்ன? இப்போது என்ன விலை விற்கிறது என்று அதைத்தான் பார்ப்பார்களே தவிர, மத்திய அரசு எவ்வளவு ஏற்றியது? நீங்கள் எத்தனை சதவீதம் ஏற்றி இருக்கிறீர்கள் என்று பார்க்க மாட்டார்கள். புரட்சித் தலைவர் எம். ஜி. ஆர். ஆட்சியிலே என்ன விலை இருந்தது, உங்களுடைய



ஆட்சியின் விலை ஏற்றத்திற்கும் என்ன சதவீதம் என்ற கணக்கெல்லாம் எடுபடாது. எனக்கு சொல்லி பிரயோசனம் இல்லை. மக்களுக்காகச் சொல்கிறேன். மக்களிடத்திலே சொல்ல வேண்டும். சில காரியங்களை இந்த அரசு செய்து கொண்டுதான் வருகிறது. இருந்தாலும் கூட கிராமப்புறங்களிலே அதற்கு பலன் கிடைக்காமல் இருப்பதற்குக் காரணம் முக்கியமாக அரிசி, சிவில் சப்ளைஸ்—அதில் மிகுந்த கவனம் செலுத்தினாலொழிய பெருத்த கெட்ட பெயர் ஆட்சிக்கு ஏற்படும் என்பதற்காகச் சொல்கிறேன், விவாதங்களுக்காக. உங்களைப் பொறுத்த வரையில், மத்திய அரசு ஏற்றினாலும் மாநில அரசு அந்த விலை உயர்வைத் தாங்கிக்கொள்ள வேண்டுமே தவிர மக்கள் மீது அந்த விலையேற்றத்தை சுமத்தக் கூடாது. எப்படி இருந்தாலும் சிவில்சப்ளைசுக்கு சப்சிடி கொடுக்கத்தான் செய்கிறோம். ஏற்கனவே 100 கோடி, 150 கோடி சிவில் சப்ளைசுக்கு மானியம் கொடுத்தோம். அது 160 கோடியாக, 170 கோடியாக உயர்ந்து கொண்டே தான் போகிறது. இப்போது 200 கோடியாக இருப்பது 220 கோடியாகலாம். வேறு வழியில்லை. எலெக்ட்ரிசிட்டிக்கு எப்படிக் கொடுக்கிறோமோ அப்படித்தான் அதை 'Essen ial Service'-ல் சேர்த்துக்கொள்ள வேண்டியதுதான். அதிலே நீங்கள் வரவு செலவைப் பார்த்து 'Profit' எல்லாம் பார்க்கக் கூடாது. மத்திய அரசு கொடுக்கிற விலையேற்றத்தை மாநில அரசு தாங்கிக்கொண்டு மக்களுக்கு அரிசி விலையைப் பொறுத்தவரையில் ஏற்றாமல் இருக்க வேண்டுமென்கின்ற கோரிக்கையை இந்த நேரத்தில் மாநில அரசுக்கு வைக்கிறேன். மாநில அரசை வற்புறுத்துகின்றேன். தயவு செய்து இனிமேல் அரிசி விலையை உயர்த்தாதீர்கள். மத்திய அரசு உயர்த்தினாலும் நீங்கள் உயர்த்தாதீர்கள். மாநில அரசு தான் பொறுத்துக்கொள்ள வேண்டும். மக்களின் மீது திணிக்கக்கூடாது என்கின்ற விதத்திலே செயல்பட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

சாலை அபிவிருத்திக்காக சுமார் 44 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது என்று அறிவித்திருக்கிறீர்கள். அதிலே 500 முதல் 1,000 பேர் வரை குடியிருக்கின்ற கிராமங்களுக்கு நிரந்தரமான நல்ல சாலை அமைத்துத் தரப்படும் என்று சொல்லியிருக்கிறீர்கள். தமிழ்நாட்டில் அப்படிக் கணக்குப் பார்த்தால், பல கிராமங்கள் விடுபட்டுப் போகும். அதிகாரிகள் கொடுக்கிற கணக்குகளை அமைச்சர்களாக இருக்கிற நாம் வாங்கி, பத்திரிகைகளில் கொடுக்கிற காரணத்தால்தான் இன்னும் பல கிராமங்கள் இப்படியே இருக்கின்றன. காங்கிரஸ் 20 ஆண்டுகள் ஆண்டது, அண்ணா தி.மு.க. 10 ஆண்டு, நீங்கள் முதலில் ஏழரை ஆண்டுகள், இப்போது வந்து 2 ஆண்டுகள், இப்படி இன்னும் 40 ஆண்டுகள் போனால் தமிழ்நாட்டில் பல கிராமங்கள், பக்கத்திலேயிருக்கிற நகர்ப்புறங்களோடு இணைக்கப்படாமல் சிறு சிறு தீபகற்பங்களாக, பல தீவுகளாக இருக்கும். அதிலும்

மழைக் காலத்தில் போனால் ஒரு கிராமத்திலிருந்து இன்னொரு கிராமத்திற்கு போகவே முடியாது. அப்படிப் பல கிராமங்கள் தமிழ்நாட்டில் இருக்கின்றன. அதிலே 500 என்று உச்சவரம்பு வைத்துவிட்டால் அதிகாரிகள் அங்கே போவார்கள், பார்த்தவுடன் 350 பேர்தான் மக்கள் இருப்பார்கள் அல்லது 450 பேர், அல்லது 499 பேர் இருந்தாலும் சரி, 500-க்கு மேற்பட்டு, 1,000 வரை மக்கள் இருக்கிற கிராமங்களுக்குத்தான் சாலை வசதி என்று சொல்லி விடுவார்கள். பக்கத்தில் இருக்கிற மக்கள் பக்கத்தில் இருக்கிற சட்டமன்ற உறுப்பினர்களிடம், அங்கே போகிற அமைச்சர்களிடம் மனு கொடுப்பார்கள். நாம் அதிகாரிகளைக் கூப்பிட்டுச் சொன்னால், இல்லை சார், 500 முதல் 1,000 பேர் இருந்தால் தான் சாலை போட முடியும் என்று சொல்வார்கள். 499 பேர்தான் இங்கே இருக்கிறார்கள் என்று எம்.எல்.ஏ.விடமும் அமைச்சரிடத்திலும் சொல்வார்கள்..

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, 500 மக்களுக்குட்பட்டு இருக்கிற இடங்களுக்கு சாலையே போடக் கூடாது என்பது இந்த அரசின் கொள்கையல்ல. 500-க்கு மேற்பட்டு 1,000-க்குட்பட்டுள்ள ஊர்களின் சாலைகளை யார் பராமரிப்பது? அதற்குக் கீழே உள்ள சாலைகளை யார் பராமரிப்பது, அதற்கு மேலும் உள்ள சாலைகளை யார் பராமரிப்பது என்பதை அறிந்து நாம் அறிவித்திருக்கிறோம். 500 மக்களுக்கு உட்பட்டு இருந்தால் ஊராட்சி மன்றம் அதை இணைப்புச் சாலையாக ஆங்காங்கு போடுகிற வாய்ப்பையும் சாத்தியக் கூறுகளையும் இந்த அரசு அளித்து வருகிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, அதைக் கூட புரிந்துகொள்ளாமல் நான் பேசவில்லை. இந்த ஆளுநர் உரையில் இருப்பதை சுட்டிக்காட்டுகிறேன். 500 முதல் 1,000 வரை என்று போட்டு, 'நிரந்தரச்சாலை' என்று போட்டு இருக்கிறீர்கள். என்னுடைய தந்தை கூட பஞ்சாயத்து பிரசிடெண்ட் ஆக 10 ஆண்டுக் காலம் இருந்தவர். இன்னும் சொல்லப் போனால், பஞ்சாயத்தில் வேலை செய்கிற கிளார்க்குகளுக்கு சம்பளம் கொடுக்க சில சமயங்களில் பணம் இருக்காது. அப்புறம் பஞ்சாயத்து எங்கே ரோடு போடுவது? பஞ்சாயத்து யூனியன் பற்றி பல பேர் தெரிந்திருப்பார்கள். நம்முடைய அமைச்சர் திரு. நேரு அவர்கள் கூட பஞ்சாயத்து யூனியன் தலைவராக இருந்தவர். பஞ்சாயத்து யூனியனில் சம்பளம் கொடுக்கவே பணம் இருக்காது. பஞ்சாயத்து யூனியனைப் பொறுத்தவரையில் பல ஊராட்சி ஒன்றியங்களில் நிதிநிலை சரியாக இருக்காது.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, அது போன்ற பஞ்சாயத்து யூனியன்களுக்கும் அரசு உதவி செய்து, அவர்கள் பஞ்சாயத்துக்கு உதவி





செய்து, அந்தத் திட்டங்களை மேற்கொண்டு நடைமுறைப் படுத்துவதற்கான ஆய்வுகளை எடுத்துக்கொண்டு அதை அறிவித்தும் வந்திருக்கிறோம்.

17-15 மணி

திரு. எஸ். திருநாவுக்கரசு : துணைத் தலைவர் அவர்களே, அரசுக்கு நல்லதுதான் சொல்கிறேன். வேறு ஒன்றுமில்லை. மற்றபடி விவாதம் நடத்திக் கொண்டிருக்க விரும்பவில்லை. நீங்கள் கவனத்தில் எடுத்துக்கொள்ள வேண்டும், அவ்வளவுதான். போகிறபோது கிராமங்களில் இருக்கிற மக்கள் தொகை 500, 1,000 என்று சீலிங் பிக்ஸ் பண்ணாமல் எத்தனை ஆயிரம் கிராமங்கள் என்று எடுத்துக் கொண்டு இது வரையில் போக்குவரத்துக்கு நிரந்தர சாலை வசதி இல்லாத கிராமங்களுக்கு சாலைகளை— சாலை என்றால் மண் ரோடு இருந்தால் கப்பி ரோடு, கப்பி ரோடு இருந்தால் தார் ரோடு என்று மாற்றி மாற்றி கேட்டுக் கொண்டே இருப்பார்கள். இதிலே நீங்கள் கவனம் செலுத்தி எல்லா கிராமங்களையும் இணைக்கிற வகையில் நிதியொதுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்லாமல் இதற்கு பணம் அதிகமாக ஒதுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். 40 கோடி என்பது போதாது. இது ஒரு அறிவிப்புதான் என்றாலும் கூட பட்ஜெட்டிலே வருகிறபோது இப்போதே நான் சொல்லி வைத்தால் அதிலே நீங்கள் கவனம் செலுத்த முடியும் என்பதற்காகச் சொல்கிறேன். இது ஒன்றும் குற்றச்சாட்டு இல்லை. 1½ வருடத்தில் நீங்கள் சாலை போடவில்லை என்று சொல்லவில்லை. 40 வருடங்களாகச் சொல்கிறேன். எங்களையும் சேர்த்துத் தான் சொல்கிறேன். காங்கிரஸ் கட்சி 20 வருடம், அதற்கு பிறகு அண்ணா தி.மு.க. 10 வருடம், நீங்கள் 1½ வருடத்தில் என்ன செய்ய முடியும்? எனவேதான் ஒட்டுமொத்தமாகச் சொல்கிறேன். இதிலே அதிகக் கவனம் செலுத்த வேண்டும். ஏனென்றால் கிராமப்புறங்கள் 40 ஆண்டுகளில் பல ஆட்சிகள் வந்த பிறகு கூட இன்னும் முன்னேற்றம் அடையவில்லை. கிராமங்கள் புறக்கணிக்கப்பட்டு இருக்கின்றன. கிராமப்புறங்களில் இருக்கிற மக்கள் நன்மை அடையவில்லை என்ற உணர்வோடுதான் இதைச் சொல்கிறேன். இதிலே இந்த அரசு கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து மின் உற்பத்தி. இந்த ஆட்சி வந்ததற்கு பிறகு தொழில் வளத்தில் நாங்கள் அதிக கவனம் செலுத்துவோம் என்று நீங்கள் சொன்னீர்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கூட மாதம் இரண்டு தொழிற்சாலைகளை நான் தொடங்கி வைப்பேன் என்று சில மாதங்கள் திறந்து வைத்தார்கள். ஆனால் கவர்னர் உரையைப் பொறுத்தவரையில் தொழில் வளர்ச்சிக்கு அதிகமான முக்கியத்துவம் தரப்படவில்லை. குறைந்தபட்சம்

[திரு. எஸ். திருநாவுக்கரசு] [1991 சனவரி 24

மத்திய அரசை, ஒவ்வொரு ஆளுநர் உரையிலும் கண்டித்துக் கொண்டு வருவோம். அதைக் கூட நீங்கள் இந்த வருடம் செய்ய வில்லை. ஏனோ விட்டுவிட்டீர்கள். ஆளுநர் உரையில், அவர் மத்திய அரசின் சார்பில் இங்கே இருப்பவர் என்ற காரணத்தால் மத்திய அரசினுடைய முதலீடு சென்ட்ரல் இன்வெஸ்ட்மெண்ட் ஸ்டேட் கவர்ன்மெண்ட் செய்கிற நிதியொதுக்கீடு தவிர, மத்திய அரசு ஒதுக்குகிற பணம் கடந்த காலங்களில் மிக மிகக் குறைந்து வந்திருக்கிறது. கடந்த காலங்களைப் பார்த்தால் 4 சதவீதம் 3 சதவீதம் என்றுதான் உள்ளது. அதிலே உத்தர பிரதேசத்தில் பார்த்தால், 20 சதவீதமாக இருக்கும். மத்திய அரசு ஆட்சி இருக்கிற உத்தர பிரதேசம், பீகார் போன்ற மாநிலங்களோடு தென் மாநிலங்களை தமிழ் நாட்டை ஒப்பிடுகிறபோது சென்ட்ரல் இன்வெஸ்ட்மெண்ட் குறைந்து கொண்டு வந்திருக்கிறது. அதை ஒவ்வொரு கவர்னர் அரசிலும் குறிப்பிட்டுச் சொல்வோம். இதிலே அதைக்கூட சொல்லவில்லை. எனவே, மத்திய அரசை அதிகமான திட்டங்களைப் பெறுவதற்கு வற்புறுத்த வேண்டும். இரண்டாவது மாநில அரசு தொழில் வளத்திலே அதிகமான கவனம் செலுத்த வேண்டும்.

இன்றைக்கு இளைஞர்கள் பல்வேறு விதங்களில் திசை திரும்பிப் போவதற்குக் காரணம் அவர்களுக்கு வேலை வாய்ப்பு இல்லாத சூழ்நிலைதான். அது ஆந்திராவாக இருந்தாலும், கர்நாடகாவாக இருந்தாலும் அவர்கள் நக்சலைட்க்ளாக, தீவிரவாதிகளாக மாறுகிறார்கள் என்றால் அதற்கு என்ன காரணம்? படித்து விட்டு வேலை வாய்ப்பு இல்லாமல் இருப்பவர்கள், அல்லது படிக்கவில்லை என்றாலும் கூட நல்ல உடல்நலத்தோடு திடகாத்திரமாக இருந்து அவர்களுக்கு வேலை தரப்படவில்லை என்றால் அவர்கள் திசைமாறுகிற பறவைகளாக மாறுகிறார்கள். பல்வேறு வன்முறைகளில் அசம்பாவிதங்களில் தங்களை ஈடுபடுத்திக் கொள்கிறார்கள். நக்சலைட்டுக்ளாக, தீவிரவாதிகளாக மாறுகிறார்கள். எனவே, வேலை வாய்ப்புக்களை அதிகமாகப் பெருக்குவதற்கு தொழில் வளத்திலே நீங்கள் அதிகமான கவனம் செலுத்த வேண்டும். ஆளுநர் உரையைப் பொறுத்தவரையில் அதிலே அதிகமான கவனம் செலுத்தப்படவில்லை. பட்ஜெட்டிற்கு முன்னாலே மாண்புமிகு முதல்வர் அவர்கள் கவனத்தில் கொள்ள வேண்டும் என்பதற்காகச் சொல்கிறேன். சுருக்கமாக முடித்து விடுகிறேன்.

கொள்கையைப் பொறுத்தவரையில் ஒன்றைச் சொல்கிறேன். சர்க்கரை ஆலைகளைப் பொறுத்தவரையில் சென்ற முறை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பட்ஜெட்டிலே அறிவிக்கின்றபோது தனியார்களுக்கு தமிழ்நாட்டிலே லைசன்ஸ் தரமாட்டோம் என்று அறிவித்தார்கள். ஏன் இதைச் சொல்கிறேன் என்றால், இது தொழில் மட்டுமல்லாமல், விவசாயிகளையும் சேர்ந்த பிரச்சினை. ஒரு சர்க்கரை ஆலை வருகிறது என்றால்



1991 சனவரி 24] [திரு. எஸ். திருநாவுக்கரசு]

அந்தப் பகுதியில் ஒரு மாவட்டமே பலன் அடையும். 10 ஆயிரம் பேர் பலன் பெறுவார்கள். 5, 6 தாலுக்காக்கள் பயன் அடையும். 2,000 அல்லது 3,000 பேர்கள் நேரடியாகவோ மறைமுகமாகவோ வேலை வாய்ப்பு பெறுவார்கள். அந்தப் பகுதியின் பொருளாதார அமைப்பு, இயற்கை அமைப்பு ஒரு சர்க்கரை ஆலை அமைவதால் மாற்றியமைக்கப்படுகிறது. 2,000 டன் அளவு என்றால் சர்க்கரை ஆலை அமைகிறபோது அதற்கு செலவு 20 அல்லது 25 கோடி ஆகிறது. ஆகவே, இந்திய நாடு முழுவதும் கூட்டுறவுத் துறையில் அனுமதிக்கிறார்கள். தனியார் துறையிலும் அனுமதிக்கிறார்கள். இதிலே ஏதோ புரட்சித் தலைவர் எம். ஜி. ஆர். ஆட்சிக் காலத்தில் தனியார்களுக்கு வழங்கப்பட்டது. அதை நிறுத்தி விட்டோம். நாங்கள் அரசுத் துறையில் தான் ஆரம்பிப்போம் பொதுத் துறையில் ஆரம்பிப்போம், இல்லையென்றால், கூட்டுறவுத் துறையில் ஆரம்பிப்போம், இதை கொள்கையாகக் கொண்டிருக்கிறோம் என்று சொல்லிக் கொள்வதற்காக அறிவித்து இருந்தாலும் கூட, அதை நீங்கள் மறுபரிசீலனை செய்ய வேண்டும். எதற்காகச் சொல்கிறேன் என்றால், லைசன்சைத் தருவது மத்திய அரசு, நாமே போட்டுக் கொள்வதில்லை. நீங்கள் லைசன்சுக்கு மனு செய்கின்றபோது, அப்ளை செய்கின்றபோது, மத்தியிலே இருப்பவர்கள் மாநிலம் வாரியாக பிரித்துத் தருவார்கள்.

17-20 மணி.

தமிழ்நாட்டிற்கு ஒன்று கொடுக்கிறார்கள் என்று வைத்துக்
கொள்வோம், கூட்டுறவுத் துறையிலே ஒரு சர்க்கரை ஆலை
தமிழ்நாட்டுக்குத் தருவார்கள். ஆனால் அதே நேரத்தில் உத்திரப்
பிரதேசத்திற்கும் தருவார்கள். தனியாருக்கு 4 கொடுப்பார்கள்.
உத்திரப் பிரதேசத்தில் இருக்கிற தொழில் அதிபர்கள் ஆங்
காங்கே கரும்பு பயிரிடக்கூடிய பகுதிகளை எல்லாம் சேர்த்து,
4, 5 தொழிற்சாலைகளைக் கொடுங்கள் என்று மனு செய்திருப்
பார்கள். அவர்கள் என்ன செய்வார்கள். 5 மனு, 6 மனு
உத்திர பிரதேசதிற்குப் போய்ச் சேரும். நீங்கள், எங்களுக்கு
அதிகமாக வேண்டும் என்று கேட்டால், நீங்கள் 2 தானே கேட்
டிருந்தீர்கள், கூட்டுறவுத் துறையிலே இரண்டு கேட்டிருந்தீர்கள்,
உங்களுக்கு ஒன்றைத் தந்திருக்கிறோம் என்று பதில் சொல்வார்
கள். அதனாலே பாதிக்கப்படுவது யார், வேலைவாய்ப்பும்
போய்விடுகிறது. விவசாயிகளும் பாதிக்கப்படுகிறார்கள். யாரோ
ஒரு தொழில் அதிபர் அந்தத்தொழிற்சாலையை அமைக்கிறார்,
எனவே நீங்கள் ஏதோ பெரிய சீர்திருத்தவாதியாக, சோசலிஸ்ட்
டாக மாறிவிட்டோம் என்று அதனாலே நினைத்துவிட முடியாது.
நீங்கள் எல்லாவற்றையும் நேசனலைஸ் பண்ணிவிடவில்லை. இன்
னும் தனியார் பஸ்கள் இருக்கின்றன. டிரான்ஸ்போர்ட் இருக்
கிறது. எத்தனையோ தனியார் துறைகள் இருக்கின்றன். எல்லா
வற்றையும் செய்துவிட்டு கடைசியில் சர்க்கரைத் துறைக்கு
வரலாம். எடுத்த உடனேயே சர்க்கரை ஆலை தனியாருக்குப்
போகக்கூடாது. கூட்டுறவுத் துறையிலேதான் உண்டு. பொதுத்
துறையிலே உண்டு என்று சொன்னால், அதனாலே நஷ்டம் அடை
வது, அதனாலே பாதிக்கப்படுவது தமிழ்நாடு ......

திரு. கோ. வீரையன் : துணைத் தலைவர் அவர்களே, தனியார்கள் லைசன்சை வாங்கி வைத்துக் கொண்டு, ஆலையை ஆரம்பிக்காமல் இருக்கிறார்கள். குறிப்பாக 5 ஆலைகளுக்கு தனியார்கள் உரிமத்தைப் பெற்று, அதிலே என்னுடைய தஞ்சை மாவட்டத்திலே ஒரு உரிமத்தை கோடிக்கணக்கான ரூபாய்க்கு விலைக்கு விற்பதற்கு அந்தத் தனியார் அலைந்து கொண்டு, ஆள் தேடிக் கொண்டு இருக்கும்போது, அப்படிப் பட்ட தனியார்களுக்குக் கொடுப்பதன் மூலம் விவசாயம் பாதிக்கப் படவில்லையா ? தொழில் பாதிக்கப்படவில்லையா ? வேலை வாய்ப்பு பாதிக்கப்படவில்லையா ? அது கூட்டுறவுத் துறையிலே அமைக்கப்பட்டிருந்தால், அந்த ஆலை இந்நேரம் ஏற்பட்டு இருக்கும். இப்படி உரிமத்தையே விலைக்கு விற்பதற்கான காரியங்கள் நடைபெற்றுக் கொண்டு இருக்கின்றன. எனவே, தனியார்களுக்குக் கொடுப்பது என்பது எப்படிச் சரியாக இருக்கும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் விளக்குவார்களா என்று நான் அறிய விரும்புகிறேன்.

திரு. எஸ். திருநாவுக்கரசு : துணைத் தலைவர் அவர்களே, கம்யூனிஸ்ட் கட்சி ஆட்சி செய்கிற மேற்கு வங்காளம் கம்யூனிஸ்ட் கட்சி ஆட்சி செய்கிற கேரளம், இவற்றிலேகூட தனியார்கள் அங்கே சர்க்கரை ஆலைக்கு அனுமதி பெற்றார்கள், பெற்று கொண்டு இருக்கிறார்கள், அங்கே ''பேன்'' பண்ணவில்லை. நிறுத்தவில்லை, யாராவது லைசன்ஸ் வாங்கியவர்களில் ஓரிருவர் தவறு செய்தால், தவறு செய்தவர்களிடமிருந்து அந்த லைசன் சினை வாங்கி வேறு நல்ல ஆளிடம் கொடுங்கள். நல்ல ஆ கிடைக்கவில்லை என்றால், வேறு மாநிலத்திற்கு வேண்டுமானா லும் கொடுங்கள். யாரோ ஒருவர் லைசன்சை வாங்கி வேறு ஒருவருக்கு விற்றுவிட்டார் என்ற காரணத்தால், தமிழ்நாட் டிலேயிருக்கின்ற எல்லா தொழில் அதிபர்களும் மோசமானவர்கள் ஆகவே, தனியாருக்கு யாருக்குமே லைசன்சைத் தரமாட்டோம் என்று சொல்ல முடியாது. கம்யூனிஸ்ட் கட்சிக்கு என்று சில கொள்கைகள் உண்டு. அதில் உள்ளே செல்ல நான் விரும்ப வில்லை. இருந்தாலும் கூட நீங்கள் ஆட்சி செய்கிற மாநிலத் திலே முடியவில்லை. நீங்கள் எல்லாம் பொதுவுடமைவாதிகள், முழுமையாக பொதுவுடமையைப் பற்றிப் பேசுகிறவர்கள்; எனவே செயல்படுத்துவது என்பது கஷ்டம் ஏன். என்றால் மேற்கு வங்கத்திலே முடியவில்லை. அதற்காகச் சொல்கிறேன். அங்கேயும் தனியார்களை அனுமதித்து இருக்கிறார்கள். எனவே, தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில், நீங்கள் எடுத்திருக்கின்ற கொள்கை முடிவின் மூலமாக பாதிக்கப்படுவது தமிழ்நாட்டில் இருக்கின்ற விவசாயிகள், வேலைவாய்ப்பைப் பெறமுடியாத இளைஞர்கள், இவர்கள்தான் பாதிக்கப்படுவார்கள். எனவே நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்திலே கேட்டுக் கொள்கிறேன். நீங்கள் விடாப்பிடியாக இதிலே பிடிவாதம் காட்ட வேண்டியதில்லை. எனவே இதைத் தளர்த்தலாம்.



தனியார்கள் வேண்டுமானாலும் போடட்டும். கூட்டுறவுத் துறையிலே எத்தனை வேண்டுமானாலும் போடுங்கள். கூட்டுறவுத் துறை இல்லாமல், அரசாங்கமே போடட்டும். கவர்ன் மெண்ட் செக்டாரிலே போடுங்கள். ஆனால் அரசாங்கத்திலே தனியாக இதற்கு அதிகமாகச் செலவைச் செய்ய முடியாது. 20 கோடி, 30 கோடி ரூபாயில் ஒரு தொழிற்சாலையை ஆரம்பிப்ப தற்குப் பதிலாக, சிறுதொழிலிலே ஆரம்பித்தால், ஒவ்வொரு ஜில்லாவிற்கும் 1 கோடி என்று போட்டால், பல தொழில்களைப் பெருக்க முடியும். ஆகவே, இதிலே அரசு கவனம் செலுத்தாமல், தனியார்களை உற்சாகப்படுத்தினால், அதனால் தமிழ்நாட் டிலே தொழில் வளம் பெருகும். இதை நான் குறிப்பாகச் சொல் வதற்குக் காரணம், மற்ற தொழில்களை விட, இதிலே அதிக மான வாய்ப்பு இருக்கிறது. அந்தப் பகுதி முன்னேற, அந்தப் பகுதி மக்கள் முன்னேற அதிகமான வாய்ப்பு இருக்கிறது. கரும்பு என்றால், அது பணப் பயிர். எனவே, உடனடியாக கரும்பைப் பயிரிடுவதன் காரணமாக விவசாயிகளுக்கு நன்மை கிடைக்கும் என்ற காரணத்தாலே விவசாயிகள் இதை மகிழ்ச்சியோடு ஏற்றுக் கொள்வார்கள். தற்போது விவசாயிகள் நெல்லைப் போட்டு அறுத்துக் கொண்டிருக்கிறார்கள் பல மாவட்டங்களிலே. எனவேதான் இந்தக் கருத்தை நான் குறிப்பிட்டேன். இதிலே நீங்கள் அதிகக் கவனம் செலுத்த வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். இந்த அரசு தன் கொள்கையை மறுபரிசீலனை செய்யவேண்டும். பட்ஜெட் வருகிறபோது, மாற்றி அறிவிக்க வேண்டும் என்று நான் இந்த அரசைக் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து தேர்தல்கள், ஏற்கெனவே உள்ளாட்சி அமைப்பு களிலே தேர்தல்களிலே வெற்றிபெற்று வந்தவர்கள் 3 ஆண்டு களுக்கு வெற்றி பெற்று வந்தார்கள். பஞ்சாயத்து யூனியன் சேர்மென்கள், முனிசிபல் சேர்மென்கள் எல்லோரும். பிறகு அதை 4 ஆண்டாக ஆக்கி, பிறகு 5 ஆண்டாக ஆக்கியிருக்கிறீர் கள். தயவு செய்து இனிமேல் நீட்டிக்காதீர்கள். ஆளுநர் உரை யிலே அறிவிக்கப்பட்டு இருப்பதைப் போன்று, ஏப்ரல் மாதம் 10-ஆம் தேதி அவர்கள் பதவி ஏற்கவேண்டும். உடனடியாக அந்தத் தேர்தலை நடத்தவேண்டும், (மணி அடிக்கப்பட்டது).

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : நீங்கள் ஏற் கனவே 45 மணித்துளிகள் எடுத்துக் கொண்டிருக்கிறீர்கள்.

திரு. எஸ். திருநாவுக்கரசு : நீங்களே பேசி என்ன செய்யப் போகிறீர்கள்? எங்களைப் பேச விடுங்கள். வேறு ஆட்களே இல்லையே பேசுவதற்கு. வேறு ஆட்கள் இருந் தால் சரி. நீங்கள் எம். எல். ஏக்கள் மீட்டிங்கிலேகூட பேசலாமே. எனவே மாண்புமிகு துணைத் தலைவர் அவர் களே, தேர்தல்களை நடத்தி ஏப்ரல் 10-ஆம் தேதி தலைவர்கள் பதவி ஏற்கிற விதத்திலே—அந்தக் காலத்தை நீட்டிக்காமல்—உடனடியாகத் தேர்தல்களை நடத்தவேண்டும். முனிசிபாலிட்

டிக்கு, பஞ்சாயத்துகளுக்கு தேர்தல்களை நடத்துகின்றபோது, அதோடு சேர்த்து மாநகராட்சிகளுக்கும், நீங்கள் நடத்த வேண்டும். அந்த வகையிலே நீங்கள் முடிவுகளை நடவடிக்கைகளை எடுக்கவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

முக்கியமான இரண்டே இரண்டு பிரச்சினைகளை மட்டும் பேசிவிட்டு முடித்துவிடுகிறேன். ஒன்று விடுதலைப் புலிகள். இன்னொன்று தமிழ்நாட்டில் சட்டம்—ஒழுங்கு. இரண்டு பிரச்சினைகள் தான். நீங்கள் சொல்வதால் மற்ற பிரச்சினைகளை எல்லாம் நான் விட்டு விடுகிறேன். அந்தந்த டிமாண்டில் நாங்கள் பேசிக் கொள்கிறோம்.

17–25 மணி

இலங்கைத் தமிழர்கள் இலங்கையிலே தங்களுடைய உரிமைகளுக்காகப் போராடுகிறார்கள். சொல்லப்போனால், அங்கே தலைவராக இருந்து போராட்டத்தை நடத்துகிற திரு. பிரபாகரன் அவர்களை உலகத்தில் தங்களுடைய விடுதலைக்காகப் போராடிய எந்த விடுதலைப் போராளிகளுடைய தலைவரோடும் சற்றும் குறைத்து மதிப்பிட முடியாத அளவிற்கு ஒரு மாபெரும் தலைவராக இருந்து, தங்களுடைய மக்களின் விடுதலைக்காகப் போராடிக் கொண்டிருக்கிறார். அங்கே வாழ்கின்ற தமிழ் மக்கள் சிங்கள அரசால் பல்வேறு தொல்லைகளுக்கு ஆட்படுத்தப்பட்டு, சிகிச்சைக்காகவும், அகதிகளாகவும் இங்கே வருகிறார்கள். இங்கே நம்மைப் பொறுத்தவரையில் அது வெளிநாட்டுப் பிரச்சினை என்று இந்தியாவோ, அல்லது தமிழ்நாடோ இதிலே கண்ணை மூடிக் கொண்டு ஏற்கெனவே இருந்ததும் இல்லை. இனிமேலும் இருக்கவும் முடியாது. அதற்குக் காரணம், ஆளுநருடைய உரையிலே குறிப்பிட்டிருப்பதைப் போன்று இதுவரை தமிழ்நாட்டிற்கு எவ்வளவு பேர்கள் வந்திருக்கிறார்கள் என்று சொன்னால், ஏறக்குறைய 1,22,000 பேர் அகதிகளாக வந்திருக்கிறார்கள். அவர்களுடைய உணவு, உடை, உறையுள் மற்றும் மருத்துவ வசதிகளுக்காக, இதுவரை மத்திய அரசும், மாநில அரசும் ரூபாய் 21 கோடியைச் செலவு செய்திருக்கிறது. மத்திய அரசு ரூபாய் 13 கோடி, மாநில அரசு ரூபாய் 8 கோடி மொத்தம் ரூபாய் 21 கோடிக்கு செலவு செய்திருக்கிறோம். தொடர்ந்து செய்ய இருக்கிறோம். அப்படி செய்துவிட்டு, இது வெளிநாட்டுப் பிரச்சினை, இலங்கைத் தமிழர் பிரச்சினை பற்றி இந்தியாவில் பேசக் கூடாது, தமிழ்நாட்டில் பேசக் கூடாது என்று யாரும் சொல்லவும் முடியாது. எதிர்பார்க்கவும் கூடாது. எனவே அவர்களைப் பொறுத்தவரையில், புரட்சித் தலைவர் எம். ஜி. ஆர். முதலமைச்சராக இருந்தபோது, வெளிப்படையாக உதவி செய்தார். அதை இந்த மன்றத்திலே நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். அரசாங்கத்தினுடைய கஜானாவிலிருந்து ரூபாய் 4 கோடி அளித்து அன்றைக்கு அவர்களுக்கு உதவி செய்தார்.



அன்றைக்கு ஆட்சியிலே இல்லாத திராவிட முன்னேற்றக் கழகம் கூட வெளியே இருந்து உங்கள் கட்சியின் சார்பில் நீங்கள் போராளிகளுக்கு, பல்வேறு குழுக்களுக்கு நிதியுதவி அளித்தீர்கள். சில பேர் வாங்கிக் கொண்டார்கள். சில பேர் வாங்காமலும் இருந்திருக்கலாம். அது வேறு பிரச்சினை. ஆனால் திராவிட முன்னேற்றக் கழகம் சார்பில் நிதி தருவதாக அறிவிக்கப்பட்டது. அதுமட்டுமல்ல. சட்டமன்ற உறுப்பினர் பதவியை அன்றைக்கு திராவிட முன்னேற்றக் கழகம் துறந்தது. மதுரையிலே மாநாடு நடத்தியது. இன்னும் சொல்லப் போனால் போராளிகளுக்காக நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பேசியது, அவர்கள் செய்ததை 10 வருஷத்திற்கு தொடர்ச்சியாக, தொடர்ந்து புத்தகங்களாகப் போடலாம். அவ்வளவு எழுதியிருக்கிறார்கள். ஆனால் இப்போது என்ன செய்கிறீர்கள்? அவர்களையெல்லாம் பிடித்து உள்ளே வைத்திருக்கிறீர்கள், கைது செய்திருக்கிறீர்கள். அதற்கு என்ன காரணம்? இந்த இக்கட்டான சூழ்நிலை ஏன்வந்தது? எப்படி வந்தது? புரட்சித் தலைவர் எம். ஜி. ஆர். சொன்ன உடனே அன்றைக்கு இருந்த மத்திய அரசும் உடனடியாக ஒத்துக்கொள்ளவில்லை. இப்படித்தான் மத்திய அரசு மாநில அரசுக்கு தொல்லை தந்தது. உடனடியாக ரூபாய் 4 கோடி இல்லை. இன்னும் கொஞ்சம் சேர்த்துக் கொடுங்கள் தமிழ் மக்களுக்கு என்றால், அன்றைக்கு இருந்த அரசு ஏற்றுக்கொள்ளவில்லை. மத்திய அரசிலிருந்து மாநில அரசுக்கு பல்வேறு விதமான எதிர்ப்புகள் அன்றைக்கும் வந்தன. அன்றைக்கு இருந்த அனைத்திந்திய அண்ணா தி. மு. க. கட்சியும் போராடிக் கொண்டிருந்தது, புரட்சித் தலைவர் எம். ஜி. ஆர். போராட வைத்தார். கட்சியினுடைய தலைவர் என்ற முறையில், இன்னொரு பிரச்சினை. எதிர்க்கட்சியாக இருந்த திராவிட முன்னேற்றக் கழகமும் தொடர்ந்து போராட்டம் நடத்திக் கொண்டு இருந்தது. நாம் செய்துதான் ஆகவேண்டுமென்று வற்புறுத்தினார்கள். அதற்கு உங்களுடைய போராட்டம் கொஞ்சம் உதவியாக இருந்தது. இலங்கையில் வாழ்கின்ற தமிழர்களுக்காக இங்கிருந்த எல்லா கட்சிகளும், ஆளும் கட்சியும் எதிர்க்கட்சிகளும் இந்தப் பிரச்சினையில் ஒன்றுபட்டு இருந்த காரணத்தினால் அன்றைக்கு மத்திய அரசு பணிந்தது. ரூபாய் 4 கோடியை கஜானாவிலிருந்து கொடுக்கவேண்டுமென்று சொன்னபோது ஒத்துக்கொண்டது என்று சொன்னால், வெளியிலே நீங்கள், ஆட்சியில் இருந்த அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் செய்தது எல்லாம் போதாது என்று சொல்லி, அதை விட அதிகமாகச் செய்யவேண்டுமென்று எதிர்க்கட்சியாக இருந்த திராவிட முன்னேற்றக் கழகம் போராட்டம் நடத்தியது. மத்திய அரசு இந்தநிலையில் எதையும் செய்ய முடியவில்லை. எனவே அன்றைக்கு ஆட்சியில் இருந்த அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் எந்த வகைகளிலே எல்லாம் போராளிகளுக்கு உதவ முடிந்ததோ அந்த வகைகளிலே எல்லாம் போராடி, உதவ முடிந்தது. இன்றைக்கு ஆட்சிக்கு திராவிட முன்னேற்றக் கழகம் வந்த உடனே உங்களுடைய நிலையும்

ஆட்சியைக் காப்பாற்றிக் கொள்ளவேண்டும். அது இயற்கையானது தான். யாராக இருந்தாலும் ஆட்சிக்கு வந்த உடனே ஒரு ஆட்சியைத் தியாகம் செய்வது முடியாதது தான். எனவே அந்த சங்கடத்திலே திராவிட முன்னேற்றக் கழகம் மாட்டிக் கொண்டிருக்கிறது. ஆட்சி இல்லையென்றால், முன்பை விட அதிகமாக நீங்கள் போராடிக் கொண்டுதான் இருப்பீர்கள். எனவே ஆட்சியைக் காப்பாற்றவேண்டும். தமிழ் மக்களையும் ஆட்சியின் மூலமாகக் காப்பாற்றி, அவர்களுக்கு நன்மைகளைச் செய்ய முடியும், ஆட்சி இருக்கிறபோது தான். இல்லாவிட்டால் அதற்காக யாரும் பெரியார் மாதிரி கட்சி ஆட்சி வேண்டாம். ஆட்சி அமைப்பே வேண்டாம் என்று சொல்லிவிட்டு, சீர்திருத்த அமைப்பாக போய் விட்டால் கவலையே இல்லை. எனவே ஆட்சி என்பது ஆட்சியின் மூலமாக மக்களுக்கு நன்மைகளைச் செய்ய வேண்டும். நன்மைகளைச் செய்ய முடியும் என்ற உணர்வோடு தான் ஆட்சிக்கு வருகிறோம். இதை நான் ஒரு குறையாகக் கூடச் சொல்லவில்லை. எனவே உங்களைப் பொறுத்தவரையில் நீங்கள் இதிலே கவனம் செலுத்துகிறீர்கள். ஆட்சியைக் காப்பாற்றிக் கொள்வதற்காக இங்கே வந்திருக்கிற விடுதலைப் புலிகளைக் கைது செய்து, அகதிகள் எல்லோரையும் சேர்த்து நீங்கள் கைது செய்து அடைக்க வேண்டிய ஒரு குழ்நிலையில், அப்படிப்பட்ட நிர்பந்தத்தை மத்திய அரசு கொடுக்கிறது.

17-30 மணி

எதிர்க்கட்சியாக இருக்கிற செல்வி ஜெயலலிதா அவர்களும், அடுத்து திரு. ராமமூர்த்தி அவர்களுடைய தலைமையிலே இருக்கிற காங்கிரசும், இந்த இரண்டும் என்ன செய்கிறார்கள் என்று சொன்னால் தினம் தினம் காலையிலே இருந்து மாலை வரை விடுதலைப் புலிகள், விடுதலைப் புலிகள் என்று அவர்களையே காரணம் காட்டி, விடுதலைப் புலிகள் இங்கே இருக்கிறார்கள் அல்லது விடுதலைப் புலிகளின் நடமாட்டம் இருக்கிறது—ஏதோ இப்போது தான் விடுதலைப் புலிகள் தமிழகத்திற்கு வந்திருப்பதை போல—அவர்களைக் காரணம் காட்டி உடனடியாக இந்த ஆட்சியைக் கலைக்க வேண்டும் என்பதற்கு, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களுடைய வழியிலே இருந்து அவருடைய பெயரைச் சொல்லிக் கொண்டு, அவருடைய வாரிசு என்று சொல்லிக் கொண்டு மக்களை ஏமாற்றுகிற ஒரு கட்சி, அவர்களுடைய தலைவியாக இருக்கிற செல்வி ஜெயலலிதா , ஆட்சியை கலைப்பதற்கு விடுதலைப் புலிகளைக் கேடயமாகப் பயன்படுத்துகிறார். ஆட்சியைக் காப்பாற்றிக் கொள்ள விடுதலைப் புலிகளை தி.மு.க. பயன்படுத்துகிறது. மொத்தத்திலே எல்லோரும் சேர்ந்து இலங்கைத் தமிழர்களை கைகழுவி விட்டு விட்டோம். அதுதான் தமிழநாட்டிலே இருக்கிற நிலைமை. அவர்களுக்காக யார் குரல் கொடுப்பது? எங்கே போவார்கள் அவர்கள். இலங்கைத் தமிழன் எங்கே போவான் ? அவர்களுக்காக எல்லோரும் சேர்ந்து ஒரு காலத்திலே அழுதோம். இப்போது எல்லோரும்



சேர்ந்து மொத்தமாக கை கழுவி விட்டு விட்டால் அவர்களுடைய கதி என்ன ஆவது ? செல்வி ஜெயலலிதா அவர்கள் இதே விடுதலைப் புலிகளைப்பற்றிப் பேசுகிறபோது........(குறுக்கீடு).

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திருநாவுக்கரசு அவர்கள் ஒரு கருத்தைச் சொன்னார் விடுதலைப் புலிகளைப் பற்றி. நண்பர் எம்.ஜி.ஆர். அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது, ஆட்சியும் எதிர்க்கட்சியும் போட்டி போட்டுக் கொண்டு விடுதலைப் போராளிகளை ஆதரித்தன என்று குறிப்பிட்டார். அந்த நிலை இன்றைக்கு இல்லை என்றும் குறிப்பிட்டார். இப்போது ஆட்சி விடுதலைப் புலிகளுக்கு அவர்களுடைய சங்கடங்களுக்கு அனுதாபம் தெரிவிக்கிற சூழநிலையிலே இருந்தாலும், எதிர்க்கட்சிகள் குறிப்பாக அ.தி.மு.க., காங்கிரஸ் கட்சி ஆகிய இரண்டு கட்சிகளும், அவர்களுடைய மொழியிலேயே சொல்வோமானால், அந்தத் தலைவர்களுடைய பெயர்களை எல்லாம் குறிப்பிட்டார், அவர்களுடைய தலைமையிலே உள்ள அந்த இரண்டு கட்சிகளும், முறையே அ.தி.மு.க., காங்கிரஸ் ஆகிய கட்சிகள் விடுதலைப் புலிகளுக்கு எதிராகவும், அல்லது விடுதலைப் புலிகளைப் பயன்படுத்திக் கொண்டு, இந்த ஆட்சியைக் கவிழ்க்க வேண்டும் என்கிற சூழ்ச்சி மனப்பான்மையோடும் அவர்கள் இன்றைக்கு இயங்குகிறார்கள் என்பதையும் எடுத்துக் காட்டினார். இத்தகைய ஒரு சூழ்நிலையை ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும். அன்றைக்கு ஆளும் கட்சியோடு எதிர்க்கட்சியும் போட்டிப் போட்டுக் கொண்டு இலங்கைத் தமிழர்களுக்கு ஆதரவாக அக்கறை செலுத்திய அந்தக் காலக்கட்டத்தையும், இன்றைக்கு ஆளும் கட்சியைக் கவிழ்ப்பதற்காகவே இலங்கைப் போராளிகளுடைய பிரச்சினையைப் பெரிதுபடுத்தி இயங்கிக் கொண்டிருக்கிற இரண்டு எதிர்க்கட்சிகளுடைய அந்தப் போக்கையும் எண்ணிப் பார்க்கும் போது, ஆளும்கட்சிக்கு மேலும் தர்ம சங்கடத்தை உண்டாக்குகிற அளவுக்கு விடுதலைப் புலிகள் நடந்துக் கொண்டிருக்கிறார்களா இல்லையா என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும்.

ஆளும் கட்சி திராவிட முன்னேற்றக் கழகம் இலங்கையில் நடைபெறுகிற உரிமைப் போராட்டத்திற்கு எதிரானது அல்ல. 50 ஆண்டுகளுக்கு மேலாக அங்கே உரிமைப் போராட்டம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அவர்களுடைய மொழிக்காக, இனத்திற்காக, அவர்களுடைய மக்கள் நேய உரிமைகளுக்காகப் போராடிக் கொண்டிருக்கிறார்கள். அதற்கு என்றைக்கும் திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஆதரவு உண்டு. இன்றைக்குக் கூட இலங்கையில் அவர்கள் நடத்துகிற அந்த எழுச்சி மிகுநத போராட்டத்திற்கு திராவிட முன்னேற்றக் கழகம் விரோதி அல்ல, இந்த ஆட்சியும் விரோதி அல்ல. அவர்கள் ஒருவேளை தமிழ் ஈழத்தையே பெறுவார்களேயானால், இன்றைக்கும் சொல்லுகிறேன் நம்மைப்போல் மகிழ்ச்சி அடைபவர்

கள் வேறு யாரும் இருக்க முடியாது. ஆனால் அதே நேரத்தில்
தமிழநாடு வன்முறைக் களமாக ஆவதற்கு போராளிகள் தங்களை,
தங்களுடைய செயல்களைப் பயன்படுத்தக் கூடாது என்பதுதான்
இந்த ஆட்சியினுடைய நோக்கம். அவர்களைக் கைது செய்திருப்ப
தாக மாண்புமிகு உறுப்பினர் திருநாவுக்கரசு அவர்கள் குறிப்
பிட்டார்கள். யாரையும் கைது செய்யவில்லை. அவர்கள்
எல்லாம் ஒரு கட்டுப்பாட்டிற்குள் இருக்க வேண்டும் என்பதற்
காகத்தான் ஸ்பெஷல் கேம்ப்ஸ்—சிறப்பு முகாம்களில் அவர்கள்
வைக்கப்பட்டு, அவர்களுக்குப் பாதுகாப்பும், அவர்களுக்கு உரிய
முறையிலே உபசாரங்களும் செய்யப்பட்டன. அப்படி இருந்தும்
கூட வேலூர் போன்ற முகாம்களில் என்னென்ன நடைபெற்றன
என்பதைப் பத்திரிகைகளில் பார்த்திருக்கிறோம். நேரிலும்
அதைப்பற்றி அதிகாரிகளிடம் கேட்டு தெரிந்து கொண்டிருக்
கிறோம். அதை அனுபவித்தும் இருக்கிறோம். எனவே, அவர்
களும் அன்றைக்கு இருந்த சூழ்நிலையையும் இன்றைக்கு இருக்
கும் சூழ்நிலையையும் எண்ணிப் பார்க்க வேண்டும். அன்றைக்கு
ஆளும் கட்சியான எம்.ஜி.ஆர். அவர்களுடைய தலைமையிலே
இருந்த அண்ணா திராவிட முன்னேற்றக் கழகமும், திராவிட
முன்னேற்றக் கழகமும் அவர்களை ஆதரிப்பதிலே போட்டிப்
போட்டுக் கொண்டிருக்கும்படியான சூழ்நிலை இருந்தது.
இன்றைக்கு அப்படி இல்லை என்பதை அவரே சொல்லும்போது
இந்த சூழநிலையிலே ஒரு தர்மசங்கடமான நிலையை ஏற்
படுத்துவதற்கு விடுதலைப் புலிகள் காரணமாக இருக்கக் கூடாது
என்பதையும் எண்ணிப் பார்க்க வேண்டும்.

17-35 மணி

திரு. எஸ். திருநாவுக்கரசு : தலைவர் அவர்களே, அதைத்
தான் நானும் சுட்டிக் காட்டினேன். சில நேரங்களிலே ஆளும்
கட்சி சொல்கிற கருத்தையே எதிர்க் கட்சி வேறே யாராவது
சொல்லிவிட்டால் அவர்கள் ஆளும் கட்சியோடு சேர்ந்துவிட்டார்
கள், தி.மு.க. ஆதரவாளர்களாக மாறிவிட்டார்கள் என்று
குற்றம் சாட்டுவது தமிழநாட்டிலே நடக்கிற துர்ப்பாக்கியமான
அரசியல். மண்டல் கமிஷனை எடுத்துக் கொள்ளுங்கள். திராவிட
முன்னேற்றக் கழகம், வி.பி. சிங் அவர்களை ஆதரிக்கிறது."
27 சதவீதம் கொடுத்தார்கள் என்று நீங்கள் பாராட்டுகிறீர்கள்.
நாங்களே, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக்
கழகமே, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆரே முதலமைச்சர் மாநாட்
டிலே பேசியிருக்கிறார்கள். மண்டல் கமிஷன் அறிக்கையை அமல்
படுத்த வேண்டும் என்று சொல்லி. அவர்களுடைய வழியிலே
நாங்களும் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக்
கழகமும் வி. பி. சிங்கை ஆதரித்தால் அல்லது மண்டல் கமிஷன்
அறிக்கையை அமல்படுத்தியது சரி என்று நாங்கள் சொன்னால்
உடனே தி.மு.க.வோடு நாங்கள் எல்லாம்—ஜெயலலிதா குருப்
பிலேயிருந்து என்ன குற்றச்சாட்டு என்றால்—தி.மு.க.வோடு
சேர்ந்துவிட்டார்கள், தி.மு.க. விற்கு பின்னணியிலே செயல்



படுகிறார்கள் என்று சொன்னார்கள். இதே மன்றத்திலே
எனக்கு ஞாபகம் இருக்கிறது. இன்றைக்கு இருக்கின்ற மாண்பு
மிகு முதலமைச்சர் அவர்கள் எதிர்க் கட்சித் தலைவராகவும்,
புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் முதலமைச்சராகவும்
இருந்தபோது இந்தியைப் பற்றிய பேச்சு வந்தபோது புரட்சித்
தலைவர் அவர்கள் எழுந்து சொன்னார், இங்கிருக்கின்ற ஆட்சி
கட்சியாக இருக்கின்ற அனைத்திந்திய அண்ணா திராவிட முன்
னேற்றக் கழகமும் எதிர்க் கட்சியாக இருக்கின்ற தி.மு.க.வும்
தமிழ்நாட்டிலே இந்தி திணிக்கப்படுமேயானால் இரட்டைக்
குழல் துப்பாக்கியாக இருந்து செயல்படும் என்று இதே மன்றத்
திலே பேசினார்கள். இன்றைக்கு இருக்கின்ற நிலைமை வேறு.
அந்தக் கட்சியிலே அதனுடைய தலைவராக இருக்கின்ற செல்வி
ஜெயலலிதா எங்களை இதுபோன்ற குற்றச்சாட்டுகளுக்கு ஆட்
படுத்தினாலும் அதுபற்றி நாங்கள் கவலைப்படவில்லை. எது
உண்மையோ அதை நாங்கள் தொடர்ந்து செய்வோம் அல்லது
சொல்வோம். எனவே, நாங்கள் வி. பி. சிங்கை ஆதரித்தோம்.
அவர்கள் கொண்டு வந்த மண்டல் கமிஷன்அறிக்கையை ப்பாராட்
டினோம்.

அதைப் போலத்தான் செல்வி ஜெயலலிதா அவர்கள் எக்ஸ்
பிரஸ் பத்திரிகையிலே அல்லதுஅவருடைய பத்திரிகையிலே பேட்டி
கொடுக்கின்றபோது அவர் சொன்னார். எல்.டி.டி.ஈ. பொறுத்த
வரைக்கும் எல்.டி.டி.ஈ. அழிக்கப்பட்டால் இலங்கைத் தமிழின
மும் அழிந்து போகும். இது ஜெயலலிதா அவர்களுடைய ஸ்டேட்
மெண்ட். அது போல இந்த மாறியுள்ள சூழ்நிலையில் தற்போ
துள்ள ஒரே வழி தமிழ் மக்கள் அனைவரும் முழுவதுமாக எல்.டி.
டி.ஈ.-ஐ ஆதரித்தே ஆகவேண்டும். இதெல்லாம் 3, 4 மாதங்
களுக்கு முன்னாலே செல்வி ஜெயலலிதா அவர்கள் கொடுத்த
பேட்டி. அப்போது வேறு காரணங்களுக்காக ஆட்சியைக் கலைக்
கலாம் என்று நினைத்துக்கொண்டு இருந்திருப்பார் போல்
இருக்கிறது. எல்.டி.டி.ஈ.-ஐ பயன்படுத்த அவர்கள் நினைக்க
வில்லை. எனவே வேறு காரணங்கள் கிடைக்காமல் போன
உடனே இப்போது எல்.டி.டி.ஈ.-ஐ பயன்படுத்தி எல்.டி.டி.ஈ.
நடமாட்டம் தமிழ்நாட்டில் இருக்கிறது என்கிறார்கள். திராவிட
முன்னேற்றக் கழக ஆட்சியை கலைத்தே ஆகவேண்டும் என்கிறார்
கள். நீங்கள் பார்த்தீர்கள். எல்.டி.டி.ஈ. -ஐ வெளியிலே விட்
டால் இதைச் சொல்கிறார்கள். எனவே ஒரே இடத்திலே
கொண்டுபோய் வைத்து விட்டீர்கள். அது சிறை என்று, கைதி
என்று சொன்னாலும் சரி, ஒரு இடத்திலே என்று சொன்னாலும்
எல்லாம் ஒன்று தான். எந்த பெயர் வைத்தால் என்ன? அவர்
கள் இதற்கு முன்னால் எல்லாம் ஒரு இடத்திலேயா இருந்தார்
கள்? தனி முகாமா கொடுத்து வைத்திருந்தோம்? அப்படியே
தான் இருந்தார்கள். அதிலே யாராவது தவறு செய்தால் தவறு
செய்கிறவர்கள் மீது அல்லது இந்திய நாட்டினுடைய சட்டங்களை
யார் மீறி நடக்கிறார்களோ, அப்படி மீறி நடக்கிறவர்கள்

யாராக இருந்தாலும் தண்டனைக்கு உரியவர்கள். அவர்கள் மீது நடவடிக்கை எடுங்கள். எல்லோரையும் கொண்டு போய் ஒரு இடத்தில் வைத்தால் அவர்கள் அங்கே நாங்கள் இருக்க மாட்டோம், நீங்கள் என்ன வசதி செய்து கொடுத்தாலும் வெளியில் இருப்பது வேறு, உள்ளே இருப்பது வேறு, நீங்கள் பிரியாணி போட்டாலும் சாப்பிடத் தயாராக இல்லை. உள்ளே சண்டை போடுகிறார்கள், போலீஸ் அடிக்கிறார்கள், ரகளை நடக்கிறது. பிரீயாக எங்களை வெளியே நடமாட அனுமதியுங்கள் என்று அவர்கள் கேட்கிறார்கள். எனவே இந்த மாதிரி சூழ்நிலை ஏற்பட்ட பிறகு, எதிர்க் கட்சியாக இருக்கின்ற ஜெயலலிதா கட்சி அதையேஅவர்கள் கேடயமாகப் பயன்படுத்திய காரணத்தினாலே நீங்கள் ஆட்சியைக் காப்பாற்றிக் கொள்ள வேண்டும் என்ற உணர்வோடும் அதே நேரத்திலே விடுதலைப் புலிகளை இங்கே. விரட்டியும் விடவில்லை, அது வரைக்கும் நான் பாராட்டுகிறேன். எனவே அவர்களையும் வைத்துக்கொண்டு நீங்கள் பாவம் சமாளிக்கிறீர்கள். தர்மசங்கடம். நீங்கள் சொன்னது போல் தர்மசங்கடம்தான்.

எனக்கு தெரியும். நீங்கள் எதிர்க்கட்சித் தலைவராக இருந்த போது 13 ஆண்டுக்காலம் இலங்கைத் தமிழர்களுக்காக நீங்கள் பேசிய பேச்சுக்கள் எல்லாம் தெரியும். திராவிட முன்னேற்றக் கழகம் நடத்திய போராட்டங்கள் எங்களுக்குத் தெரியும். ஆகவே இதுபோன்ற ஒரு சூழ்நிலை இருக்கின்றபோது எந்த அளவுக்கு திராவிட முன்னேற்றக் கழகம் வருந்தும் என்று தான் நான் நினைக்கிறேனே தவிர வேறு அல்ல. நமது முதலமைச்சராக இருந்தாலும் சரி, மற்றவர்களாக இருந்தாலும் சரி எவ்வளவு பெரிய தர்மசங்கடமான நிலையில் கஷ்டமான சூழ்நிலையில் இருந்தால் இதுபோன்ற சிக்கல் ஏற்பட்டிருக்கும், நிலைமை ஏற்பட்டிருக்கும் என்பதை எண்ணிப் பார்க்கிறேன். நான் சொல்வது உங்களுக்காவது ஆட்சி. எதிரே இருக்கின்ற எதிர்க் கட்சிக்கு என்ன வந்தது, அவர்களுக்கு என்ன கேடு, அவர்கள் ஏன் போராடக் கூடாது? இந்த அரசை ஏன் வற்புறுத்தக் கூடாது?

17-40 மணி

அப்படிச் சொல்லுகிறபோது உங்களை மத்திய அரச கட்டாயப்படுத்தினால் நீங்கள் சொல்லலாம், எங்களை கட்டாயப்படுத்துகிறார்கள் பாருங்கள். எதிர்க் கட்சியாக இருக்கின்ற செல்வி ஜெயலலிதா அங்கேயிருந்து போராடிக் கொண்டிருக்கிறார்,, விடுதலைப் புலிகளுக்காக ஆதரவு தருகிறார். நாங்கள் என்ன செய்ய முடியும் ஆட்சியை வைத்துக் கொண்டு என்று அவர்களுக்குச் சொல்லுங்கள். அப்படித்தான் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சொன்னார். அவரைக் கூப்பிட்டு நீங்கள் அளவுக்கு அதிகமாக பிரபாகரனை ஆதரிக்கிறீர்களே என்று சொன்னால் பாருங்கள் எதிர்க்கட்சியாக இருக்கின்ற தி.மு.க. நாங்கள்



செய்வது போதவில்லை என்று போராடிக் கொண்டிருக்கிறது, என்னை என்ன செய்ய சொல்கிறீர்கள் ; நாங்கள் செய்து தான் ஆகவேண்டும் என்று சொன்னார். ஆக மொத்தத்தில் ஆளுங்கட்சி, எதிர்க்கட்சி இரண்டும் சேர்ந்து இலங்கைத் தமிழர்களுக்கு உதவியாக இருந்தது. இன்றைக்கு அது போன்ற ஒரு நிலைமை இல்லாதது ஒரு துர்பாக்கியம் ஆகும். இங்கே ஆட்சி கலைப்பைத் தவிர வேறு எதிலும் கவனம் இல்லாத ஒரு தலைவி (கைத்தட்டல்) எனவே (மணியடிக்கப்பெற்றது) அப்படிப்பட்ட ஒரு தலைவியின் கீழே இருக்கிற அந்தக் கட்சி இன்றைக்கு முழுமையாக விடிந்து எழுந்தால் காலையில் கவர்னர், மத்தியானம் முன்னாள் பிரதமர், சாயங்காலம் இந்நாள் பிரதமர், அப்புறம் ராத்திரியில் ஜனாதிபதி. இப்படி இங்கே இருக்கிற ஒரு பிரதான கட்சியினுடைய தலைவியாக இருக்கக் கூடியவர்கள் மாற்றி, மாற்றி சந்திக்கிறார்.

சரி சந்திக்கட்டும். சந்தித்துப் பேசினார் ; வெளியே பத்திரிகைகளில் எல்லாம் பார்த்தேன், உண்மையிலேயே எங்களுக்கு வருத்தமாக இருக்கிறது. இப்போது இரண்டு கட்சியும் இருந்திருந்தால் நன்றாக இருந்திருக்கும். அது இல்லாதது உண்மையிலேயே சங்கடமாக இருக்கிறது. ஏன் என்றால் நான் என்ன பேச நினைத்தேனோ அதில் கால்வாசி தான் பேசிக் கொண்டிருக்கிறேன். ஏன் என்றால் அவர்கள் இல்லாதபோது பேசி பிரயோசனம் இல்லை. அவர்கள் இருந்தால் இன்னும் கொஞ்சம் வேகமாகவே பேசியிருப்பேன். அதற்காக உண்மையிலேயே நான் வருத்தப்படுகிறன். ஒரு பத்திரிகையில் பேட்டி வருகிறது. என்ன ஒரு மணி நேரம் சந்திப்பு ; என்ன பேசினீர்கள் ? அதைப் பற்றி சொல்ல விரும்பவில்லை. ஆனால் சந்திப்பு திருப்தியாக இருந்தது. இதுதான் பத்திரிகைகளில் செய்தியாக வருகின்றனவே தவிர சந்தித்ததற்குப் பின்னாலே பத்திரிகைகளில் வந்த பேட்டிகளைத் தான் சொல்கிறேன். நான் வேறு எதையும் இட்டுக்கட்டிச் சொல்லவில்லை. எனவே, இதுபோன்ற நிலைமை உண்மையிலேயே துர்பாக்கியமானது. அப்படிப்பார்க்கிறபோது என்ன கேட்கிறார்கள் ? தமிழ்நாட்டுக்கு தொழிற்சாலை வேண்டும் ; தமிழ்நாட்டுக்கு சென்டிரல் இன்வெஸ்ட்மெண்டு குறைந்து போய் விட்டது அதை அதிகரிக்க வேண்டும்; அகல ரயில் பாதை உடனே தாருங்கள்; அணு மின் நிலையத்தைத் தாருங்கள் என்று ஏதாவது கேட்கிறார்களா ? தனக்கு இருக்கிற செல்வாக்கைப் பயன்படுத்தி மத்தியில் இருக்கிற பிரதமரையோ, முன்னாள் பிரதமரையோ இந்நாள் பிரதமரையோ, கவர்னரையோ பார்க்கிறபோது தமிழ்நாட்டில் இருக்கிற பின்தங்கிய மக்களுக்காக, ஆதிதிராவிட மக்களுக்காக தமிழ்நாட்டினுடைய வளர்ச்சிக்காக ஏதாவது கேட்டால் பரவாயில்லை. காலையிலிருந்து மாலை வரை நான் ஏற்கனவே சொன்ன படி ஆட்சியை கலைக்க வேண்டும், ஆட்சியை கலைக்க வேண்டும் என்பது தான். நான் சொன்னால் உடனே

தி.மு.க. வுக்கு ஆதரவு ஆட்சியை கலைக்கக்கூடாது என்று சொல்கிறார் என்று எங்கள் மீது சொல்கிறார்கள். நாங்கள் சொல்லவில்லை புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சொன்னார். அன்றைக்கு மத்திய மாநில உறவுகள் குறித்து நீதிபதி சர்க்காரியாவினுடைய தலைமையில் ஒரு குழு இங்கே வந்திருந்த போது அனைந்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலும் மனு கொடுத்தோம்; ஆட்சியின் சார்பிலும் கொடுத்தோம்' என்ன கொடுத்தோம் என்று சொன்னால் அரசியல் அமைப்புச் சட்டத்தில் இருக்கிற 356-வது பிரிவை எடுத்து விடவேண்டும் என்று தான் அனைந்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் அன்றைக்கு மனு கொடுத்தது. அன்றைக்கு ஆட்சியினுடைய கருத்தாகவே சொன்னோம்.

மத்திய அரசினுடைய ஆளுங்கட்சி பலம் எவ்வாறு இருப்பினும் அது மாநில அரசுகளில் மாற்றுக் கட்சிகள் ஆட்சிகள் இருக்கும் போது அவற்றுக்கு எதிராக தனது அதிகாரத்தை செலுத்துகிறது என்ற உண்மையை கருத்தில் கொண்டு அரசியல் அமைப்புச் சட்டம் பிரிவு 356 நீக்கப்பட வேண்டும் என்று சொன்னவ்ர புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆருடைய கட்சியில் இருந்து கொண்டு அவருடைய வாரிசு என்று சொல்லிக்கொண்டு அதையே பயன் படுத்தி இந்த ஆட்சியை கலைக்க வேண்டும் என்று வெளியே தினம் தினம் இதே போராட்டம். இதற்காகவே ஒரு கட்சி பொழுதைப் போக்கிக் கொண்டிருக்கிறது. எனவே இந்த சூழ் நிலையில் தான் விடுதலை புலிகள் அதனால் பாதிக்கப்படுகிறார்கள். நாங்கள் கூட இலங்கைத் தமிழர்களுக்காக அவர்கள் தூதரகத்திற்கு முன்னால் ஊர்வலம் போனோம். இப்போதும் உங்களுக்குச் சொல்கிறேன். அனைந்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில்—நீங்கள் விடுதலைப் புலிகளை எல்லாம் சிலபல கட்டுப்பாட்டுக்குள் வைத்து இருப்பீர்களானால் அவர்களை எல்லாம் ப்ரீயாக விடுங்கள். தவறு செய்தால் கண்டியுங்கள் — அதற்காக அனைந்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் நாங்கள், எங்கள் தோழமைக் கட்சியும் உண்ணாவிரதம் இருக்கப் போகிறோம். இதையெல்லாம் நீங்கள் மத்திய அரசுக்கு எடுத்துச் சொல்லுங்கள். பிரதமர் கேட்டால் பிரதமரிடம் எடுத்துச் சொல்லுங்கள். தவறு செய்பவர்களை தண்டனைக்கு உள்ளாக்குங்கள். அதற்காக எல்லோரையும் கட்டுப்படுத்தி அடைத்து வைக்க வேண்டிய அவசியம் இல்லை. அதனால் தொல்லைகள் தான் வரும். இப்போது கூட அங்கே உண்ணாவிரதம் இருக்கிறார்கள், போகிறார்கள், சண்டை போடுகிறார்கள், சாப்பிட மாட்டேன் என்கிறார்கள் ; போலீசைப் பிடித்து அடிக்கிறார்கள். இப்போதும் அங்கே நடக்கத்தான் செய்கிறது. அதனால் பலருக்கும் தொல்லை. ஆனால் அவர்களை ஒரு வரம்புக்குள், கட்டுப்பாட்டுக்குள் வைக்கவேண்டாமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை நான் கேட்டுக் கொள்





கிறேன். எனவே, அந்த வகையில் இந்த அரசு இந்த உணர்வினை
எடுத்துக்கொள்ள வேண்டும். நான் ஏற்கனவே சொன்னதுபோல்
செல்வி. ஜெயலலிதா அவர்களுடைய கட்சி இதே காரணத்தை
முதலில் காண்பித்தார்கள். நீங்கள் எல்லோரையும் ஒரே இடத்தில்
வைத்த உடனே இப்போது டைகர் என்று சொல்ல முடியாது.
விடுதலைப் புலிகள், போராளிகள், என்று சொல்ல முடியாது.
உல்பா என்று இப்போது ஒன்று. என்ன உல்பாவோ தெரியாது.
மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் உல்பா எல்லாம் இங்கே
இல்லை என்று பேசிக் கொண்டே இருந்தார்கள்.

(17-45 மணி.)

அஸ்ஸாம் தீவிரவாதிகள் தமிழ்நாட்டில் இன்றைக்குக் கிடை
யாது என்று சொன்னார்கள். என்ன சொல்லியும் பிரயோஜனம்
இல்லை. அதை நிரூபித்தாலும், அதற்கு அடுத் துதாடி வைத்திருக்
பஞ்சாபிகளெல்லாம் தமிழ்நாட்டிலே இருக்கிறார்கள் என்கிற
பார்கள். பாவம் பஞ்சாபியிலேருந்து வந்து, தாடி வைத்துக்
கொண்டு அவரவர்கள் தொழில் செய்து கொண்டிருக்கிறார்கள்.
சிங் யாராவது இருப்பார்கள். (சிரிப்பு) (குறுக்கீடு) நான் அவரை
சொல்லவில்லை. அவர் தீவிரவாதியும் அல்ல. எனவே, பஞ்சாபி
லேயிருந்து வந்து இங்கே தொழில் செய்து கொண்டிருக்கிற சிங்
எல்லாம் இருக்கிறார்கள் அல்லவா ? நார்த் இண்டியன்ஸ், அவர்
களைப் பார்த்து, தமிழ்நாட்டிலே சிங் நடமாட்டம் இருக்கிறது.
பஞ்சாப் தீவிரவாதிகள் நடமாட்டம் இருக்கிறது என்று கூட
சொன்னாலும் சொல்வார்கள். இதிலே முடியவில்லை
என்றால், அடுத்து அதற்குப் போவார்கள். எனவே அவர்களுடைய
ஒரே நோக்கம் இந்த ஆட்சியை உடனடியாகக் கலைக்க வேண்டும்.
தேர்தலை நடத்த வேண்டும். எம்.எல்.ஏ. ஆக வேண்டும்.
மந்திரியாக வரவேண்டும். உடனடியாக முதலமைச்சர் நாற்காலி
யிலே வந்து உட்கார்ந்து விட வேண்டும் என்ற ஒரே கனவைத்
தவிர வேறு எந்த நிலையுமே இல்லாத, ஒரு கட்சியினுடைய
தலைவராக இருந்து கொண்டிருக்கிற செல்வி. ஜெயலலிதா,
அதனால் யார் பாதிக்கப்பட்டாலும் சரி, தமிழ்நாடு பாதிக்கப்
பட்டாலும் சரி, தமிழ்நாட்டு மக்கள் பாதிக்கப்பட்டாலும் சரி,
இலங்கை தமிழர்கள் பாதிக்கப்பட்டாலும் சரி, மொழி பாதிக்கப்
பட்டாலும் சரி, நாடு பாதிக்கப்பட்டாலும் சரி, என்ன பாதிக்கப்
பட்டாலும் சரி, நான் ஹைதராபாத்திலே நிம்மதியாக அன்டர்-
கிரவுண்டிலே தூங்கிக்கொண்டுஇருக்கிறேன். முதலமைச்சர் ஆகிற
வாய்ப்பு இருந்தால் தமிழ்நாட்டிற்கு வருகிறேன் இல்லையென்
றால் அங்கேயே இருந்து விடுகிறேன் என்றுதான் இருக்கிறார்.
இது நடக்கப் போகிறது. அவர்கள் இல்லை, எனக்கு அது வேறு
கஷ்டம் பேசும்போது. வெளியிலே இருந்தாவது பதில் சொல்லட்
டும். அவர் ஒரே எண்ணத்தோடுதான் இருக்கிறார். முதலமைச்சர்
ரானால் இங்கே வந்து உட்காருவது, இல்லயென்றால்ஹைதரா
பாத்திலே படுத்து விடுவார். அவருக்கு தமிழ் நாட்டைப் பற்றி
என்ன அக்கறை இருக்கிறது ? ஒன்றும் இல்லை.

எங்களுடைய கெட்ட நேரம். இந்த உணர்வோடு அன்றைக்கு இருந்து இருந்தால் அன்றைக்கே ஹைதராபாத்திலே பர்மனென்டாக செட்டில் ஆகி இருப்பார். (சிரிப்பு). அப்படி இல்லாத காரணத்தினாலே இவ்வளவு தொல்லைகள் தமிழ்நாட்டு மக்களுக்கு. எனவே ஆட்சி கலைப்பு என்பது எங்களைப் பொறுத்தவரையில், ஆட்சி மாற்றம். திராவிட முன்னேற்றக் கழக அரசு தொடர்ந்து இருக்க வேண்டும் என்று நான் சொல்ல மாட்டேன். என்னைப் பொறுத்த வரை அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வரவேண்டும். ஆனால் அதை முடிவு செய்ய வேண்டியது மக்கள். இந்த ஆட்சி, எவ்வளவு நாள், தி.மு.க. ஆட்சி இருக்க வேண்டுமா, அ.தி.மு.க ஆட்சி இருக்க வேண்டுமா, கம்யூனிஸ்டு இருக்க வேண்டுமா, காங்கிரஸ் இருக்க வேண்டுமா என்பதை யார் முடிவு செய்வது? ஹைதராபாத்திலே படுத்துக் கொண்டிருக்கிற செல்வி. ஜெயலலிதாவா முடிவு செய்வது? தமிழ் நாட்டிலே இருக்கிற 5 கோடி மக்கள் முடிவு செய்யவேண்டும். ஐந்தாண்டு கழித்து, தி.முக. ஆட்சி இனிமேல் தேவையில்லை என்று வேறு ஒரு ஆட்சியைக் கொண்டுவர வேண்டியது தமிழ்நாட்டு மக்கள். எனவே, மக்களிடத்திலே பிரச்சினைகளை எடுத்துச் சொல்லவேண்டுமே தவிர, அதை விட்டு விட்டு, கவர்னர் மாளிகையிலேயும், ஜனாதிபதி மாளிகையிலேயும், முன்னாள் பிரதமர் மாளிகையிலேயும், இந்நாள் பிரதமர் மாளிகையிலேயும் தவம் கிடந்து, இங்கே வன்முறையை திட்டமிட்டு உருவாக்கி–தமிழ் நாட்டிலே என்ன சட்டம் ஒழுங்கு கெட்டிருக்கிறதா? நம்முடைய பத்திரிகைகளிலேயும் சில பத்திரிகைகள் இருக்கின்றன. நான் இதையெல்லாம் பேசும்பொழுது உடனே ' தி.மு,க,-வை ஆதரித்து திருநாவுக்கரசு முழங்கினார் ' என்று போடுவார்கள். போட்டாலும் கவலையில்லை. ஒருசில பத்திரிகைகள் இருக்கின்றன, நான் யதார்த்தமாகச் சொல்கிறேன்–தமிழ்நாட்டிலே சட்டம் ஒழுங்கு கெட்டிருக்கிறது என்று சொன்னால், இந்தியாவிலேயுள்ள வேறு எந்த மாநிலத்திலேயுள்ள ஆட்சியை மட்டும் வைத்துக் கொள்வது? ஆட்சியிலே இருக்கிற குறைபாடுகளை எடுத்துச் சொன்னேன். நீங்களும் சொல்லுங்கள். எதிர்க்கட்சிகள் சொல்லட்டும். இதைச் செய்யுங்கள் என்று சொல்லட்டும், இதை செய்யக்கூடாது என்று சொல்லட்டும். எனவே, எதிர்க்கட்சிகளாக இருக்கிற கட்சிகள் அப்படித்தான் செயல்பட வேண்டுமே தவிர ஆட்சியைக் கலைக்க வேண்டுமென்பது ஒரு நியாயமான கோரிக்கையல்ல. அதற்கு தமிழ்நாட்டிலே சட்டம் ஒழுங்கு கெட்டுவிட்டது என்று சொல்வதும் நியாயமான காரணமல்ல. உண்மையிலே இந்த வன்முறைகளை யார் தூண்டுவது? சட்டமன்றத்திலே மட்டுமல்ல. நேற்று எல்லோரும் பேசி முடிவு பண்ணியாகிவிட்டது. சட்டமன்றத்திற்கு வெளியிலே எவ்வளவு வன்முறைகள். புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களுடைய நினைவு நாள், அதற்கு நாங்கள் போகிறோம். ஒவ்வொரு கட்சியின் சார்பிலேயும் போகிறார்கள். அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஆளும் கட்சியாக இருந்தபோது திராவிட முன்னேற்றக்



கழகம் எதிர்க்கட்சியாக இருந்தது. அன்றைக்கு, பேரறிஞர் அண்ணா அவர்களுடைய நினைவு நாளுக்கு எல்லோரும்தான் போனோம். யாரும் கல்லை எடுத்து அடித்துக்கொள்ளவில்லை. நாங்கள் பாட்டுக்கு நாங்கள் போனோம்; நீங்கள் பாட்டுக்கு நீங்கள் போனீர்கள், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆரும் போனார். இப்போது இருக்கிற முதலமைச்சர் அவர்களும் போனார்கள். எல்லோரும் போய்விட்டு, அவரவர்கள் வீட்டுக்குப் போனோமே தவிர, கல்லை எடுத்துக்கொண்டோ செருப்பை எடுத்துக்கொண்டோ சமாதிக்கு முன்னால் இதுவரையிலே அடித்துக்கொண்ட வரலாறு இருந்ததா தமிழ்நாட்டிலே?

இன்றைக்கு, செல்வி ஜெயலலிதா கட்சி என்ன செய்கிறது? மறைந்த முதலமைச்சர் புரட்சித் தலைவர் அவர்களுடைய நினைவிடத்திற்குப் போகும்போது தரக்குறைவான வார்த்தைகளாலே அவர் திட்டப்பட்டார். வன்முறை. சிறிது நேரம் கழித்து நாங்கள் போகிறோம். நாங்கள் போகிறபோது, அவர்களுடைய திட்டம் என்னவென்றால், எங்களையெல்லாம் தாக்குவது, குறிப்பாக எங்களோடு வந்த முக்கிய தலைவர்களை எல்லாம் தாக்குவது அடிப்பது, அவமானப்படுத்துவது என்பது. இது அவர்களுடைய நோக்கம். நாங்கள் ஏதோ 10,50 பேர் போவோம் என்று எதிர்பார்த்தார்கள். ஜெயலலிதா எவ்வளவு கூட்டத்திலே போனாரோ அவ்வளவு கூட்டத்திலே நாங்கள் போன காரணத்தினாலே பக்கத்தில் வந்து தாக்கவோ கிட்டத்திலே வரவோ முடியவில்லை. நாங்கள் மாலை வைத்துவிட்டு, மலர் வளையத்தை வைத்து விட்டு, திரும்பிப் போகிறபோது ஒரு கட்டிடத்தின் வளாகத்தினுடைய உள்ளேயிருந்து, காம்பௌண்டுக்குப் பக்கத்திலேயிருந்து செருப்பு வந்து விழுகிறது. கல் வந்து விழுகிறது.

நாங்கள் போனதற்குப் பின்னாலே கடைசியாக வந்த வண்டி, ஆட்டோவெல்லாம் அடித்து நொறுக்கப்படுகிறது. இதற்கு யார் பொறுப்பு? செல்வி ஜெயலலிதா கட்சிதான் பொறுப்பு. அவர் இல்லையென்று சொல்ல முடியுமா? எங்களை கட்சியிலேயிருந்து நீக்குவதாக செல்வி ஜெயலலிதா அறிவித்தார். நானும், கே.கே.எஸ்.எஸ்.ஆரும் மதுரைக்கு போகிறோம். ஒரு திருமணத்திற்குப் போகிறோம், அதற்காக போகிற இடத்திற்கெல்லாம் கூடவே 100 அடியாட்களை கூட்டிக்கொண்டா போக முடியும்? அதையும் செய்யலாம், முடியும். ஆனால் ஜெயலலிதாவும் அப்படி செய்தால் பரவாயில்லை. நம்மைப் போல, கல்யாணமோ, கருமாதி, காட்சி எல்லாவற்றுக்கும் வந்தால், அவரும் 100 பேரைக் கூட்டிவந்தால் நாமும் 100 பேரைக் கூட்டிக் கொண்டு போய்க்கொண்டு இருக்கலாம். அவர் பாட்டுக்கு ஹைதராபாத்திலே நிம்மதியாகப் படுத்துத் தூங்கிக் கொண்டிருக்கிறார். இங்கே இருக்கின்ற அப்பாவித்

தொண்டர்களிடம் போய் அடித்து விட்டு வாருங்கள் என்று சொல்லி, இங்கே அடித்துக் கொண்டு சாவது யார்? புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களால் வளர்க்கப்பட்ட தம்பிமார்கள்தான் அடிக்கப்படுகிறார்கள். இங்கே இருக்கின்ற, தமிழ் நாட்டிலே இருக்கின்ற தம்பிகள் அடித்துக் கொண்டிருக்கிறார்கள் ஒவ்வொருவரும். ஜெயலலிதா நிம்மதியாக அங்கே தூங்கிக் கொண்டிருக்கிறார்.

17-50 மணி

நான் போகிறபொழுது மறைந்திருந்த நான்கைந்து பேர் காரிலே வந்து நின்று, ஒரு மூலையிலே காரைப் போட்டு விட்டு, ஐந்து பேர் வந்து கல்லை விட்டு வீசினார்கள். நானும், கே. கே. எஸ்.எஸ்.ஆரும் வண்டியை அங்கே நிறுத்திவிட்டு அவர்களை விரட்டிக்கொண்டே ஓடினோம். ஓடி, இரண்டு பேரைப் பிடித்துவிட்டோம். பிடித்து போலீசிலே கொடுத்து விட்டு வந்தோம். இதற்கு யார் பொறுப்பு?

அதைப் போல, இங்கே இருக்கிற, பி. எச். பாண்டியன் அவர்கள், முன்னாள் சபாநாயகர். புரட்சித் தலைவருடைய நினைவகம் திறக்கப்படுகிறது. அவர் உயிலிலே எழுதி வைத்து விட்டுப் போயிருக்கிறார். நான் வாழ்ந்த இந்த வீட்டை, இந்த தி.நகர் வீட்டை, எம்.ஜி.ஆர். நினைவில்லம் என்று ஆக்குங்கள் என்று எழுதி வைத்து விட்டுப் போய் இருக்கிறார். ஜெயலலிதா கட்சியிலேயிருந்து அன்றைக்கு யாருமே போகக் கூடாது என்று சொல்லி, நினைவகத்தை ஜானகி அம்மையார் அவர்கள் திறந்து வைக்கிறார்கள். புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களுடைய நினைவகத்திற்குப் போகக் கூடாது என்று ஜெயலலிதா கட்சியிலே கட்டளை, நான் மீறிப் போனேன். புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். நினைவகம், அவர் இருந்த இடம், அங்கே போகக் கூடாது என்றால் என்ன செய்ய முடியும் என்று நினைத்து, போனேன். பி. எச். பாண்டியன் அப்பொழுதும் வேறு கட்சியாகத்தான் இருந்தார்கள். மாண்புமிகு முன்னாள் பேரவைத் தலைவரவர்கள். அவரும் வந்திருக்கிறார். நிகழ்ச்சி முடிந்தது. ஜானகி அம்மையார் அங்கே போய், சாப்பாடு போடுகிறார்கள். வந்திருக்கின்றவர்களுக்கு, அங்கே இருக்கிற கல்யாண மண்டபத்தில். நான் அங்கேயும் போய் நின்றேன். சாப்பாடு போட்டு அவரை வண்டியிலே ஏற்றிவிட்டு, உடனே ஒரு ஆள் ஓடி வந்தான் வேகமாக. ஓடி வந்து, பி. எச். பாண்டியன் உள்ளே மாட்டிக் கொண்டிருக்கிறார், வெளியே 100 பேர் தண்ணீர் போட்டுக் கொண்டு, சாராயத்தோடு நின்று, அவரை அடிக்க வேண்டுமென்று பிளான் போட்டு சப்தம் போடுகிறார்கள் கட்சிக்காரர்கள் என்று சொன்னான்.

அவர்வேறே கட்சியிலேதான் இருந்தார். அவருக்கும் எனக்கும் சண்டைதான். இருந்தாலும் என்னுடைய மனச்சாட்சி



இடம் கொடுக்கவில்லை, அங்கேயிருந்து போவதற்கு. சரி, பரவாயில்லை, நேராகக் காரை எடுத்துக்கொண்டு நீ வா ஐயா என்று சொல்லி விட்டு, நான் நேராகப் போனேன். போய் அங்கே வெளியே இறங்கி, அங்கே இருந்தவர்களைக் கூப்பிட்டு, எதற்காக ஐயா இங்கே நிற்கிறீர்கள், ஏன் சப்தம் போடுகிறீர்கள் என்று சொல்லி போகச் சொன்னேன். இல்லை, இல்லை, நீங்கள் போங்கள் என்று என்னைச் சொல்லிக் கொண்டிருந்தார்கள். நான் ஏன் என்று கேட்டேன். பி. எச். பாண்டியனை அடித்து விட்டுத்தான் வருவோம் என்றார்கள். வீட்டிலே இருக்கிறார் போய் அடி, இல்லையென்றால் கோர்ட்டுக்குப் போகிறார் அங்கே போய் அடி, இங்கே நினைவகத்திற்கு வந்திருக்கிறார், சாயந்திரம் பத்திரிகையிலே வந்து, எம்.ஜி.ஆர். நினைவகம் முன்னர்லே தகராறு என்று வரும். புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆரை நீங்கள் கேவலப்படுத்துகிறீர்கள். அசிங்கப்படுத்துகிறீர்கள், யார் உங்களைத் தூண்டி விட்டார்கள் என்று சப்தம் போட்டேன். இல்லை, நீங்கள் போங்கள், நீங்கள் போங்கள், நீங்கள் ஏன் பி. எச். பாண்டியனுக்கு சப்போர்ட் செய்து கொண்டிருக்கிறீர்கள் என்று சொல்லி, கடைசியாகக் காதுக்குள் வந்து, நான் சொன்னால், இப்பொழுது சொல்வதாலே சில நேரங்களில் ...ம்தான், இருந்தாலும் உண்மையைச் சொல்வதில் தப்பு இல்லை, அவன் சொல்கிறான், நாங்கள் இன்ஸ்ட்ரக்ஷனிலே வந்திருக்கிறோம், அடித்து விட்டுத்தான் வருவோம் என்று. யார் இன்ஸ்ட்ரக்ஷன்? ஜெயலலிதா இல்லை. அவர் ஹைதராபாத்திலேதான் இருந்தார். இங்கேயிருக்கிற நடராஜன் சொல்லிவிட்டிருக்கிறார் அடித்து விட்டு வாருங்கள் என்று. ஜெயலலிதாவினுடைய குடும்ப நண்பர். ஒரு நேரத்தில் குடும்ப நண்பர். ஒரு நேரத்திலே உதவியாளர், சில நேரங்களில் எல்லாயிடத்திலும் ஒன்றுமே இல்லை என்பார். அது வேறே. அவர் சொல்லிவிட்டிருக்கிறார். அவர்கள் வீட்டிலேயிருந்து சாராயத்தைக் குடித்துவிட்டு வந்திருக்கிறான், 100 பேர் நின்று கொண்டு பி. எச். பாண்டியனை அடித்துவிட்டு வருவோம், அசிங்கப்படுத்திவிட்டு வர வேண்டுமென்று வெளியே நிற்கிறார்கள். நான் சப்தம் போட்டேன். அங்கே போலீஸ் ஆபிசர்கள் இரண்டு மூன்று பேர் நின்று கொண்டிருந்தார்கள். நான் மேலே உட்கார்ந்திருக்கிறேன். அவர்களைக் கூப்பிட்டு சப்தம் போட்டேன். நீங்கள் என்ன ஐயா வேடிக்கையா பார்க்கிறீர்கள், முன்னாள் சபாநாயகர் உள்ளே உட்கார்ந்திருக்கிறார், 100 பேர் சாராயம் போட்டு விட்டு வெளியே நின்று தகராறு செய்து கொண்டிருக்கிறார்கள். எப்போது நடவடிக்கை எடுப்பீர்கள்? அவர்களெல்லாம் அடித்து விட்டு, அசிங்கப்படுத்தி, வன்முறை நடந்த பிறகுதான் நீங்களெல்லாம் டிஸ்போஸ் செய்வீர்களா? ஆளை அனுப்புவீர்களா என்று அந்த போலீஸ் ஆபீசர்களைக் கூப்பிட்டு சப்தம் போட்டேன். பிறகு, இல்லை இல்லை, நாங்கள் சொல்கிறோம் என்று ஒயர்லெஸ்ஸில் சொல்லி ஒரு வேன் வந்து, வெளியேஇருந்தவர்களையெல்லாம் கிளியர் செய்து, அப்படியும் 10, 50 பேர்

அவர் போகும் வரைக்கும் நின்றுகொண்டிருந்திருக்கிறார்கள் அவர் வண்டியை அடுத்து. யார் காரணம்? யார் செய்யச் சொல்வது?

இம்மாதிரி மாவட்டத்திற்கு மாவட்டம் எல்லாயிடங்களிலும் வன்முறை, அடி, வெட்டு, குத்து, எங்கேயாவது அசம்பாவிதம் நடக்க வேண்டும், லா அண்ட் ஆர்டர் கெட வேண்டும், சட்டம் ஒழுங்கு கெட வேண்டும், அவ்வளவுதான்.

இப்பொழுதுகூட நான் கேள்விப்படுகிறேன், செல்வி ஜெயலலிதாவினுடைய கட்சியின் சார்பிலே, அவர்களுடைய வீட்டிலே மாவட்டச் செயலாளர்கள் கூட்டம் நடந்திருக்கிறது. அதிலே என்ன இன்ஸ்ட்ரக்ஷன் என்றால் ஒவ்வொரு மாவட்டச் செயலாளருக்கும், வருகிற 28ஆம் தேதி ஒரு மாவட்டத்திலே குறைந்தது 10 பஸ்களாவது எரிக்கப்பட வேண்டும்; அப்படி இல்லை என்றால் மாவட்டச் செயலாளர்கள் மாற்றப்பட்டு விடுவார். மாவட்டச் செயலாளருக்கு அதுதான் உத்தரவு. குறைந்தது, பத்து, ஒரு மாவட்டத்திலே பத்து பொது வண்டிகள், பொது மக்களையும் சேர்த்து எரித்தாலும் சரிதான், பொதுமக்கள் சாக வேண்டும், பஸ்கள் எரிக்கப்பட வேண்டும், லாரிகளை எரிக்க வேண்டும், அப்படி இல்லையென்றால் மாவட்டச் செயலாளர் மாற்றப்படுவார், வேறு ஆள் போடப்படுவார்.

அப்படி, மதுரையிலே ஒரு மாவட்டச் செயலாளர் மாற்றப்பட்டார். எதற்காக? காளிமுத்து கூட்டத்திலே கல் வீசவில்லை, அதற்காக, நாடாளுமன்ற உறுப்பினர் முத்தையாவுக்கு என்ன உத்தரவு என்றால், டாக்டர் காளிமுத்து அவர்களுடைய கூட்டத்தை நிறுத்த வேண்டும், அடிதடி நடத்த வேண்டும் என்று உத்தரவு. அவரால் முடியவில்லை, பாவம். அதை நடத்த முடியவில்லை என்றவுடன் மாவட்டச் செயலாளர் பதவியிலேயிருந்து தூக்கி விட்டார்கள். என்ன கட்சி? என்ன ஜனநாயகம்? அறிக்கையிலே பார்த்தீர்கள் என்றால், சாத்தான் வேதம் ஓதுவதைப் போல, ஜனநாயக முறைப்படி, ஜனநாயக முறைப்படி, ஜனநாயக முறைப்படி என்று இருக்கும். ஒவ்வொரு அறிக்கையிலேயும் 100 தடவை இருக்கும் ஜனநாயகம்.

எதற்காகச் சொல்கிறேன் என்றால், ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். பொது மக்கள் தொல்லைக்கு ஆட்படுவார்கள். அரசாங்கத்தின் பொது சொத்துக்கள் நாசம் ஆகும். அதற்குத் திட்டம் தீட்டப்பட்டிருக்கிறது. சதி பின்னப்பட்டிருக்கிறது. சதி உருவாக்கப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு மாவட்டத்திலேயும் பொது மக்களைத் தொல்லைக்கு உட்படுத்துவது, பேருந்துகளை அழிப்பது, நாசப்படுத்துவது, தீ வைப்பது, அதற்குப் பின்னால், தமிழ்நாடு முழுவதும் சட்டம்-ஒழுங்கு கெட்டுவிட்டது. பஸ் எரிக்கப்பட்டது, லாரி எரிக்கப்பட்டது, நடமாட்டம்



இல்லை, பொதுமக்கள் தொல்லைக்கு உட்படுகிறார்கள் என்று சொல்லி, ஆட்சியைக் கலைக்க வேண்டுமென்று மத்திய அரசுக்குப் போவது. அதுதான் திட்டம்.

எனவே, நீங்கள் பாரபட்சம் பார்க்காமல் உரிய முறையிலே நடவடிக்கை எடுக்க வேண்டும், வன்முறையைத் தடுக்க வேண்டுமென்று நான் வற்புறுத்திக் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்த அளவோடு இந்த கவர்னர் உரையிலே என்னுடைய கருத்துக்களைக் கூறுவதற்கு வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி, இன்னும் பட்ஜெட் எல்லாம் இருக்கிறது, மற்ற வாய்ப்புகள் எல்லாம் இருக்கின்றன, அவர்களும் வந்து பேசினால்தான் நன்றாக இருக்கும் என்ற காரணத்தினாலே இந்த அளவோடு நிறைவு செய்கிறேன், வணக்கம்.

திரு. மா. மணிமாறன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மேதகு ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் என்னுடைய கருத்துக்களைத் தெரிவிக்க வாய்ப்பு அளித்தமைக்காக முதலில் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

17–55 மணி

எந்த அளவுக்கு தமிழ்நாடு பொருளாதாரத்தில் பாதிக்கப்பட்டிருக்கிறது என்பதை எல்லோரும் அறிவார்கள். அந்தப் பொருளாதார சீர்கேட்டை சீர்செய்து, இருக்கின்ற ஏற்றத் தாழ்வை சரிசெய்து, இந்த அறிக்கையை அளித்திருக்கிறார்கள் என்பதைப் பார்க்கும்போது அரசியலிலே ஆர்வம் உள்ளவர்கள், ஜனநாயக எண்ணம் படைத்தவர்கள், மக்கள் நலனிலே அக்கறை கொண்டவர்கள் கட்டாயமாகப் பாராட்டாமல் இருக்க முடியாது.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை)

மாண்புமிகு டாக்டர் கலைஞர் ஆட்சி பொறுப்பேற்றிருந்த போது, 1976-77-ஆம் ஆண்டில் அந்த ஆட்சி பதவியிலிருந்து நீக்கப்பட்டபோது, தமிழ்நாட்டிலே ஒட்டுமொத்தமாக உள்ள நிதி ஆதாரத்தைப் பார்த்தால்; அன்றைக்கு சமர்ப்பித்த பட்ஜெட்டில் 5.4 கோடி ரூபாய் இழப்பாகக் காட்டியிருந்தார்கள். ஆனால் ஆட்சியைவிட்டு செல்லும்போது ஏறத்தாழ 9 இலட்சம் ரூபாய் கையிருப்பாக இருந்தது. எவ்வளவு இக்கட்டான நிலைமை ஏற்பட்டிருந்தபோதிலும் 5.4 கோடி ரூபாய்தான் இழப்பாக காட்டப்பட்டிருந்ததே தவிர, அந்த நேரத்திலும் ஆளுநர் ஆட்சியிலே 61 இலட்சம் ரூபாய் உபரியாக இருந்தது. அந்த அளவுக்கான ஒரு நல்ல நிதிநிலை அறிக்கையைத் தந்தார்கள். சிறந்த முறையிலே நிதி ஆதாரங்களுக்கான வழிவகை காணப்பட்டிருந்ததால் 61 இலட்சம் ரூபாய் கூடுதலாகத் திரட்டப்பட்டிருந்தது.

எந்த ஆட்சியிலும் வரி போடாமல் திட்டம் போட முடியாது. வரி போட்டாலும் நிதி ஆதாரத்தைப் பெருக்குவதற்கான வழி முறைகள் இருக்கவேண்டும். அந்த வழிமுறைகள் இருந்ததால் தான் ஆட்சியைவிட்டு போனாலும் 61 இலட்சம் ரூபாய் உபரி காட்ட முடிந்தது. ஆனால் இன்றைய நிலைமை என்ன? டாக்டர் கலைஞர் அவர்கள் மீண்டும் பொறுப்பேற்கும்போது களஞ்சியம் காலியாக இருந்ததை எல்லோரும் அறிந்திருப்பீர்கள். ஏறத்தாழ 308 கோடி ரூபாய் பற்றாக்குறையான நிதி ஆதாரத்தோடுதான் பொறுப்பேற்றார்கள். இன்றைக்கு அந்தப் பற்றாக் குறையையும் சீர்செய்து, இந்த மாநில மக்களுக்கு தேவையான அளவுக்கு உணவு அளிக்க வேண்டுமென்றால் சிரமமாகத்தான் இருக்கும் என்பதை அனைத்து அரசியல்வாதிகளும் நிச்சயமாக அறிவார்கள். இருந்தபோதிலும், இத்தகைய சிரமங்கள் ஏற்பட்டாலும் அந்தப் பொறுப்பை சிறப்பாக நிறைவேற்றி வருகிறார்கள்.

பேரறிஞர் அண்ணா அவர்கள் ஆட்சியில் இருந்தபோது ஏறத்தாழ 20 கிலோ அரிசி குறைந்த விலையில் அளித்தார்கள். கலைஞர் அவர்களும் அந்த அளவுக்கு குறைந்த விலையில் ஏறத்தாழ 20 கிலோ அரிசி வழங்கி வந்தார்கள். அந்த 20 கிலோ அரிசி என்பது பின்னாலே ஒரு காலத்தில் 6 கிலோவாக குறைக்கப்பட்டது. இன்றைக்கு எனக்கு முன்னாலே இங்கே பேசிய முன்னாள் உணவு அமைச்சர் திரு. திருநாவுக்கரசு அவர்கள் அந்தத் துறையை நிர்வகித்து வந்தார்கள். 6 கிலோ அரிசி அளிக்கப்பட்டதை ஒத்துக்கொண்டார்கள். 1980 ஆம் ஆண்டில் 6 கிலோ அரிசி அளிக்கப்பட்டதாக நினைவு.

மீண்டும் கலைஞர் அவர்கள் அரசு வந்த பின்னால் 12 கிலோ அரிசி வழங்கப்பட்டது. பின்னர் கூடுதலாக 8 கிலோ பச்சையரிசி அதே விலையில் அளிக்கப்பட்டது. ஒட்டுமொத்தமாக தற்போது ஒருவருக்கு 20 கிலோ அரிசி வழங்கக் கூடிய சூழ்நிலையை டாக்டர் கலைஞர் அவர்கள் உருவாக்கியிருக்கிறார்கள். ஆனால் முன்னால் இருந்த விலையைவிட சிறிது உயர்த்தியதற்கு, அதை ஒரு அரசியலாக வைத்து இந்த ஆட்சிக்கு எதிர்ப்பு தெரிவித்துக் கொண்டிருக்கிறார்கள் சிலர். ஏழை எளிய மக்களின் ஏழ்மையைப் பயன்படுத்தி அரசியல் வளர்க்கலாம் என்று எண்ணிப் பார்க்கிறார்கள்.

சூழ்நிலையின் காரணமாக விலை ஏற்றாமல், வரி போடாமல் ஆட்சி செய்ய முடியாது. பொருளாதாரத் திட்டங்கள், சாலை மேம்பாட்டுப் பணிகள், சமுதாய நலத் திட்டங்கள் போன்ற நலத் திட்டங்களை எல்லாம் நிறைவேற்ற வேண்டுமென்றால் அதற்கு நிதி ஆதாரம் என்ன? வருமானம் எப்படி வரும்? இப்படிப்பட்ட ஆக்கப்பூர்வமான பணிகளுக்கு எதிர்க்கட்சியிலே இருக்கக்கூடியவர்கள் நல்ல ஆலோசனைகளை வழங்குவார்கள்



என்று எதிர்பார்த்தேன். இரண்டு எதிர்க்கட்சிகளும் சரி, ஆக்கப் பூர்வமான ஆலோசனைகளை வழங்கவில்லை. வரவிருக்கின்ற நிதிநிலை அறிக்கைக்கு ஆக்கப்பூர்வமான ஆலோசனைகளை வழங்குவார்கள் என்று எதிர்பார்த்தேன். அப்படிப்பட்ட ஆலோசனைகள் எதையும் அவர்கள் சொல்லவில்லை. ஆக்கப்பூர்வமான ஆலோசனைகளைச் சொல்வதன் மூலம், நிதி ஆதாரத்தைப் பெருக்குவதன் மூலம் இந்தத் திட்டங்களை, மக்களுக்கு நலன் பயக்கும் திட்டங்களை நிறைவேற்றலாம் என்று சொல்வார்கள் என்று எதிர்பார்த்தேன். அப்படிப்பட்ட திட்டங்கள் எதையும் அவர்கள் சொல்லாதது பெருத்த ஏமாற்றம்தான்.

எதிர்க்கட்சியிலே இருந்து பேசியவர்கள் எல்லாம் குழப்பம், குழப்பம் என்று சொன்னார்களே தவிர வரவிருக்கின்ற நிதிநிலை அறிக்கைக்கு ஆக்கப்பூர்வமான கருத்துக்களைச் சொல்லவில்லை. குறிப்பாக தஞ்சை மாவட்டத்திலிருந்து வந்திருக்கிற ஒரு சட்ட மன்ற உறுப்பினர்—அவர் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்—இங்கே பேசினார். அவர் பேசுவதற்கு முன்னாலே குழப்பம், குழப்பம் என்று சொன்னாரே தவிர, தஞ்சை மாவட்டத்திலுள்ள சாலை வசதி, அமைக்கப்பட்ட பாலங்கள் பற்றி எதுவும் சொல்லவில்லை. அவருக்கு அதைப்பற்றிய அக்கறை இருப்பதாகவும் தெரியவில்லை. ஆனால் இந்த வசதிகள் இல்லாமல் மக்கள் அவதிப்படுகின்ற நிலைமைகளை உணர்ந்திருக்கின்ற திரு. இராமச்சந்திரன் அவர்கள் சாலைகள் வேண்டும், பாலங்கள் வேண்டுமென்று வற்புறுத்தினார்கள். அந்த மாவட்டத்திற்கு நிதி ஆதாரத்தை கூடுதலாக வழங்க வேண்டுமென்று கேட்டார்கள். அதன் காரணமாக இன்றைக்கு தஞ்சை மாவட்டத்திலே பல்வேறு இடங்களில் சாலைகள் அமைக்கப்பட்டுள்ளன; பாலங்கள் கட்டப்பட்டுள்ளன. தஞ்சை மாவட்டம் "குவாரி" இல்லாத ஒரு மாவட்டம். அங்கே குவாரி இல்லாத காரணத்தினால் பாலங்கள் கட்டுவதற்கும் சாலைகள் போடுவதற்கும் ஆகின்ற செலவு மிகவும் அதிகமாகிறது. ஆகவே, மற்ற மாவட்டங்களைவிட அங்கே அதிகமான நிதி ஆதாரத்தை அளிக்க வேண்டுமென்று கேட்டார்கள். ஆனால் எதிர்க்கட்சியைச் சேர்ந்தவர்கள் அப்படிப்பட்ட பணிகளிலே முயற்சி செய்யவில்லை; ஆர்வம் காட்டவில்லை. மாறாக அரிசி விலை ஏறிவிட்டது என்று சொல்கிறார்கள். நான் பணிவன்போடு அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். ஏற்றிய விலை 25 காசுதான் என்பதைத் தயவு செய்து மறந்துவிடாதீர்கள்.

18-00 மணி

ஒரு கிலோ அரிசிக்கு 25 காசு ஏற்றியிருக்கிறார்கள். இன்றைக்கு இருக்கிற நிலவரத்தை அனுசரித்து, ஒரு கிலோவிற்கு 25 காசு ஏற்றியதன் காரணமாக, ஒரு மாதத்திற்கு ஒட்டு மொத்தமாக 12 கிலோ அரிசியை விலைக்கு வாங்குகிற ஏழை எளியவர்கள், 12 கிலோவிற்கு அதிகமாக கொடுப்பது மூன்று

ரூபாய்தான். அதுதான் கூடுதலான செலவு. அரிசியைப் பெறுகின்ற விவசாயத் தொழிலாளர்கள், ஏழை எளியவர்கள், மூன்று ரூபாய் கூடுதலாகச் செலவு செய்கிறார்கள். ஆனால் கலைஞர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்றதற்குப்பின், விவசாயத் தொழிலாளிகளுக்கு கூலியாக ரூ. 11 என்றிருந்ததை ரூ. 16 ஆக ஆக்கி-உயர்த்தி உத்தரவு பிறப்பித்தார்கள். சராசரியாக ஒரு நாளைக்கு 5 ரூபாய் கூலி அதிகமாக ஆக்கி கலைஞர் அவர்கள் உத்தரவு பிறப்பித்தார்கள். 5 ரூபாய் அதிகமாக ஆக்கி உத்தரவு பிறப்பித்ததன் காரணமாக, சராசரியாக 15 நாள்தான் ஒரு மாதத்திலே வேலை கிடைக்கும் என்று வைத்துக் கொண்டாலும்கூட, 15 நாளைக்கு 75 ரூபாய் கூடுதலாக சம்பளம் பெறுகின்ற வாய்ப்பை, கலைஞர் அவர்கள் உருவாக்கித் தந்தார்கள். வாங்குகின்ற சக்தியை, அதாவது 75 ரூபாயைக் கொடுத்துவிட்டுத்தான், வெறும் 3 ரூபாயை அரிசியிலே அதிகரித்து ஆக்கினாரே தவிர, அப்பாவி ஏழை எளிய மக்கள் எல்லாம் சிரமப்படுகின்ற அளவுக்கு அவர்கள் காரியங்கள் ஆற்றவில்லை. இதை எதிர்க்கட்சியிலே இருக்கக் கூடியவர்கள் எல்லாம் உணர்ந்து பார்த்து, ஏழை மக்களுடைய எதிர்காலத் திட்டங்களுக்கு, அவர்களின் நல்வாழ்விற்காக ஏற்றப்பட்ட இந்த சிறிய தொகையைகூட, ஒப்புக்கொள்வதற்குப் பதிலாக, ''ஏற்றி விட்டார்; கலைஞர் அரிசி விலையை ஏற்றி விட்டார்'' என்ற குறையை இன்றைக்கு எல்லாப் பக்கத்திலேயும் பேசுவதன் காரணமாக, எதிர்காலத்தில் நல்ல பல திட்டங்களை உருவாக்குவதற்கு இது இடையூறாக இருக்குமா இருக்காதா என்பதை ஏன் அவர்கள் எண்ணிப் பார்க்கத் தவறுகிறார்கள் என்பதை நான் மெத்தப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்குக்கூட பல்வேறு தொழிற்சாலைகள் வேண்டுமென்றெல்லாம் சொன்னார்கள். கலைஞர் அவர்களுடைய கடந்தகால ஆட்சியிலே நீங்கள் பார்த்தால், 'ஸ்பிக்' தொழிற்சாலைக்கு ஈடாக எந்தத் தொழிற்சாலை உருவாகியிருக்கிறது? அதேபோல, சேலம் திட்டத்திற்கு ஈடாக எந்தத் தொழிற்சாலையை, பொதுத் துறையிலே, மத்திய அரசாங்கம், தமிழகத்திலே உருவாக்கியிருக்கிறது? இந்தத் தொழிற்சாலைகள் எல்லாம் உருவாவதற்கு என்னென்ன சிரமங்கள் ஏற்பட்டன? திராவிட முன்னேற்றக் கழகம் எதிர்க்கட்சியாக இருந்த நேரத்தில் மத்திய அரசாங்கத்தை வற்புறுத்திப் போராடினார்கள். ஆட்சிக்கு வந்ததற்குப் பின்னாலேயும் போராடி இந்தமாதிரி திட்டங்களையெல்லாம் பெற்றார்கள்.

ஒரு முறை அம்மையார்—முன்னாள் பிரதமர் இந்திராகாந்தி அவர்கள் தமிழ்நாட்டிற்கு வருகைதந்த நேரத்திலே கலைஞர் அவர்களைக் குற்றம் சாட்டினார். தமிழ்நாட்டினுடைய மின்சாரப் பற்றாக்குறைக்கு அவர்தான் காரணம், தமிழகத்திலே



ஆட்சிப் பொறுப்பை ஏற்றதற்குப் பின்னாலும் மின்சாரம் பாதிக்கப்பட்டு விட்டது; திட்டங்கள் இல்லை'' என்று குற்றம் சாட்டினார். அன்றைக்கு கலைஞர் அவர்கள் அமைதியாக எடுத்துச் சொன்னார்கள். தூத்துக்குடி அனல்மின் நிலையத் திட்டத்திற்கு நாங்கள் இந்தத் தேதியில் அனுப்பியிருந்தோம்; இரண்டாண்டுக்கு மேலாகியும் உங்களுடைய ஒப்புதல் வராத காரணத்தினால், திட்டம் தொடங்கப்படவில்லை என்று மறுப்பு சொன்னார்கள். இரண்டாவது மாதத்திலே திட்டங்கள் தந்தார்கள். அந்தத் திட்டத்தை உருவாக்கினார்கள். தூத்துக்குடி அனல் மின்நிலையத் திடடத்திற்கு ஈடாக எந்தத் திட்டத்தையாவது நாம் பின்னாலே பார்த்திருக்கிறோமா? அதேபோல், ரூ. 1,400 கோடிக்கு திட்டத்தினை. 'ஆரோமேட்டிக்' வேதியப் பொருட்கள் உருவாக்குவதற்கு அளித்தார்கள். இன்றைக்கு அது ஊசலாட்டத்தில் நின்று கொண்டிருக்கிறது. ஆளுங்கட்சிக்குப் பொறுப்பேற்றிருக்கிற-டெல்லியில் ஆதரவாக இருக்கக்கூடிய காங்கிரஸ்காரர்களாக இருந்தாலும் இன்றைக்கு கலைக்க வேண்டுமென்று அறிக்கை விடுத்துக் கொண்டிருக்கிற அவர்களாக இருந்தாலும், இவர்களெல்லாம் கூட்டு முயற்சியோடு இந்தத் திட்டத்தைப் பெறுவதற்கு என்ன வழிவகைகளை மேற்கொண்டிருக்கிறார்கள்? தொழிற்துறையிலே முன்னேற்றம் தமிழகத்திலே இல்லை என்பதை நாம் மறுக்கவில்லை. அதை மேலும் பெறுவதற்கு ஆக்கபூர்வமாக இவர்கள் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள் என்பதை நான் கேட்கக் கடமைப்பட்டவனாக இருக்கிறேன். அவர்களைப் பொறுத்தவரை, இன்றைக்கு நாட்டினுடைய முன்னேற்றங்கள், சமூக நலத் திட்டங்கள் ஆகியவற்றிலே அக்கறை இல்லை. உடனடியாக ஆட்சிக்கு வரவேண்டுமென்ற அரிப்பே தவிர, நாட்டு மக்கள் மீது, அவர்களுடைய முன்னேற்றங்கள் மீது, இந்த நாட்டிலே ஜனநாயகம் நீடிக்க வேண்டும்; தழைக்க வேண்டும் என்ற அக்கறை கிடையாது என்பதையும் நான் வற்புறுத்திச் சொல்லக் கடமைப்பட்டவனாக இருக்கிறேன். எனவே, இப்படிப்பட்ட நிலையில் இன்னும் ஏராளமான திட்டங்கள்ள உருவாக்கினார்கள். கலைஞர் அவர்கள் இன்றைக்கு அதனை அறிக்கை வாயிலாக அறிவித்திருக்கிறார்கள். 44.25 கோடி ரூபாய் கிராமப்புற சாலைக்காக ஒதுக்கியிருக்கிறார்கள். 44.25 கோடி ரூபாய் நடப்பு ஆண்டுக்கு என்று சொல்லியிருக்கிறார்கள்.

கடந்த ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் எந்த அளவுக்குப் பணம் ஒதுக்கினார்கள்? கடந்த ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்கு மொத்தமாகவே ரூ. 60 கோடிதான் கிராமப்புறச் சாலைக்கு ஒதுக்கினார்கள். வெறும் 60 கோடி ரூபாய் கிராமப்புறச் சாலைக்கு 5 ஆண்டிற்கு என்று ஒதுக்கினார்கள். 5 ஆண்டிலே, மூன்று ஆண்டிற்கு செலவு செய்த ஒட்டுமொத்த தொகையே ரூ. 12 கோடிதான். எனவே, ஐந்தாண்டுத்

திட்டத்திலே ஒப்புதல் வாங்கி, 60 கோடி ரூபாயைச் செலவழிக்க முடியாதவர்கள், வெறும் 12 கோடி ரூபாயை 3 ஆண்டிற்குச் செலவு செய்தவர்கள், அவர்களும் இந்த நாட்டிலே இருக்கிறார்கள். அவர்களும் மக்களுக்காக இருப்பதாக அறிவித்துக் கொள்கிறார்கள்.

இன்றைக்கு, கலைஞர் அவர்கள் நாட்டு மக்களுக்காக சாலைகளைச் சீர் செய்யத் திட்டமிட்டிருக்கிறார்கள். சென்ற ஆண்டு, 1,500-க்கும் கூடுதல் மக்கள் தொகை வாழ்கின்ற இடத்திற்கு, கிராமப்புற நெடுஞ்சாலைத் துறை வாயிலாக சாலையைச் சீர் செய்தார்கள். இந்த ஆண்டு, 1,500-லிருந்து இறங்கி 500-க்கும், 1,000-க்கும் இடையிலே மக்கள் தொகை இருக்கின்ற இடத்திற்கும் இத்திட்டத்தினை மேற்கொண்டிருக்கிறார்கள். எனவே, இந்த நீண்டகாலத் திட்டத்தினை கலைஞர் அவர்கள் உருவாக்குவதற்கு—இதற்கு முன்னாலே, கிராமப்புற நெடுஞ்சாலைகளை அவர் இருக்கிற காலத்திலேதான் உருவாக்கினார்; இடையிலே அந்தத் திட்டங்கள் பாழ்பட்டன. இன்றைக்கு மீண்டும் உயிர்ப்பித்திருக்கிறது. எனவே, அப்படிப்பட்ட திட்டங்களை, சாலைகளாக இருந்தாலும், அவர்கள் பார்க்கின்ற பார்வை, எதிர்காலத்தில் நல்லத் திட்டங்கள் உருவாக வேண்டுமென்ற நல்ல எண்ணத்தோடு—எதிர்கால சந்ததியினர் சீர்பட வேண்டுமென்ற நோக்கத்தோடுதான் அணுகுகிறார்களே தவிர, ஓட்டு பெறுவதற்காக, 'இது, அது' என்று சொல்லி, 'ஏனோ-தானோ'வாக என்று ஆகிவிடவில்லை. இன்றைக்கு நிதியாதாரங்களை எண்ணிப்பார்த்து செலவு செய்கிறார்கள். எந்தெந்த வகைக்கு செலவு செய்தால், மக்களுக்குப் பலன் அளிக்குமென்று எண்ணிப்பார்த்து செலவு செய்கிறார்கள். அதிலே ஏழைகளாக இருக்கக்கூடியவர்களுக்கு வீடு கட்டக்கூடிய திட்டத்தை உருவாக்கி இருக்கிறார்கள். சென்ற ஆண்டும், இந்த ஆண்டும் சேர்த்து ஒட்டுமொத்தமாக ஒரு இலட்சம் வீடுகள் கட்டுவதாக அறிவித்திருக்கிறார்கள்.

18-05 மணி.

பழைய காலத்தில், முன்பு திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி இருந்த காலத்தில் திட்டமாக ஒரு இலட்சம் வீடுகள் கட்டப்படும் என்று அறிவித்தார்கள், ஆனால் இன்றைக்கு இரண்டே ஆண்டில் ஒரு இலட்சம் வீடுகள், கான்க்ரீட் வீடுகளைத் தாழ்த்தப்பட்ட மக்களுக்குக் கட்ட இருப்பதாக அறிவித்து இருக்கிறார்கள். இதுபற்றிக் கூட அரசியல் காழ்ப்புணர்ச்சி காரணமாக வெளியே பேசுகிறார்கள் இது கலைஞர் வீட்டுப்பணமா, மத்திய அரசின் பணம்தானே என்று கேட்கிறார்கள். மத்திய அரசின் ஜவஹர் திட்டத்திலிருந்து வீட்டைக் கட்டிவிட்டு அவர் எப்படி, தான் கட்டியதாகச்



சொல்லலாம் என்று வெளியே கேள்வி எழுப்புகிறார்கள். அப்படி எழுப்பியதோடு மட்டுமல்ல. ஏஜெண்டுகளைப் பிடித்து அதாவது ஏதாவது காசு கொடு என்று கை நீட்டக்கூடிய ஏழை எளியவர்களாக இருக்கக்கூடியவர்களைப் பார்த்துப் பிடித்து அவர்களுடைய போஸ்டர்களைப் போட்டு ஒட்டி வைக்கிறார்கள். அவர்களை மெத்தப் பணிவாக நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். இந்தத் திட்டம் ஜவஹர் ஸ்கீமிலே இருந்து உருவாக்கப்பட்ட திட்டம் அல்ல. ஜவஹர் ஸ்கீம் வருவதற்கு முன்னாலே டெல்லியிலே ஜனதா கட்சி ஆளுகிற நேரத்திலே என்.ஆர்.இ.பி. திட்டத்தை உருவாக்கினார்கள். அவர்களும் உருவாக்கி, தாழ்த்தப்பட்டவர்களுக்கு வீடு கட்ட வேண்டும் என்று ஜனதா அரசாங்கம் வற்புறுத்தியதன் காரணமாகத்தான் கடந்த கால அரசு கூட இந்தத் திட்டத்தை மேற்கொண்டது. அதிலும் கூட ஒரு ஆண்டு கடந்துதான் அவர்கள் மேற்கொண்டார்கள். ஒரு ஆண்டை அவர்கள் பாழ்படுத்தினார்கள். அப்படி காலம் கடந்து கட்டியவர்களைத் தண்டிக்கத் தவறிவிட்டார்கள்.

அதேபோல் கலைஞர் ஆட்சி இருக்கின்ற நேரத்தில் 536 கோடி ரூபாய் 1975-76-லே நிதிநிலை அறிக்கையாக இருந்தது. அப்படி 536 கோடி ரூபாயாக இருந்த நேரத்தில், தாழ்த்தப்பட்டவர்களுக்காக வீடு கட்டுகிற நேரத்தில், மத்திய அரசில் இந்தத் திட்டம் இல்லாத நேரத்தில் 14 கோடி ரூபாய் ஒதுக்கினார்கள். அப்படி ஒதுக்கிய அந்த 14 கோடி என்ற விகிதாச்சாரப்படி பார்த்தால் 1977-லே இருந்து 1989 வரையில் ஏறத்தாழ 640 கோடி ரூபாய் செலவழித்து இருக்க வேண்டும். ஆனால் அவர்கள் செலவழித்தது எல்லாம் வெறும் 17 கோடி ரூபாய்தான். 1977-லே இருந்து 1989 வரை வெறும் 17 கோடி ரூபாய்தான் செலவழித்து இருக்கிறார்கள். அப்படி 17 கோடி ரூபாய் மட்டுமே செலவழித்துவிட்டு இன்றைக்கு யார் பணம் என்று கேட்கிறார்கள். அந்தத் திட்டம் ஜனதா அரசு தந்த திட்டம்தான். அவர்கள் ஒரு வீட்டிற்கு 6 ஆயிரத்துச் சொச்சம் ரூபாய் பணம் வேண்டும் என்று கேட்டார்கள். அந்தப் பணத்தைப் பொறுத்தவரையில் மத்திய அரசினுடைய நிதி மட்டும் அல்லாமல் தமிழ்நாடு அரசாங்கத்தினுடைய பணம், மத்திய அரசின் பணம் ஆக இரண்டும் சேர்ந்துதான் கான்க்ரீட் வீடுகளாக இருக்கிறதே தவிர ஜவஹர் திட்டம் கூட அல்ல.

இன்னும் சொல்ல வேண்டும் என்றால் கட்டாயமாக அந்தத் திட்டத்தைக் கலைஞர் திட்டம் என்று அறிவிக்க வேண்டிய திட்டம் அது. ஏனோ தெரியவில்லை. ஜவஹர் திட்டம் என்று அறிவிக்கிறார்கள். அப்படி பெருந்தன்மை காரணமாக ஜவஹர் திட்டம் என்று அறிவிக்கப்பட்ட காரணத்தால்

அந்தத் திட்டம் தொடர்ந்து இருக்கட்டும் என்ற பெருந்தன்மை காரணத்தால் இந்த அரசும் அந்தப் பெயரைக்கூட மாற்றாமல் வைத்திருக்கிறார்கள். எனவே இது புதுமையான திட்டம் அல்ல. கலைஞர்தான் இந்தத் திட்டத்திற்கு அடிக்கல் நாட்டினார்கள். ஆதிதிராவிடர்களுக்கு அவர்தான் கான்க்ரீட் வீடு கட்ட வேண்டும் என்று கருதினார்கள். அவர் ஆட்சியை விட்டுச் சென்ற பின்னாலே 1980-லே எதிர்க்கட்சி தலைவராக இருந்த நேரத்தில் இதே சட்ட மன்றத்திலே கேட்டார்கள். ஏன் தாட்கோ மூலமாக வீடு கட்டவில்லை என்று கேட்டார்கள். அன்றைக்கு இருந்த அரசு அவர்களுக்கு பதில் அளித்தார்கள். தாழ்த்தப்பட்டவர்களுக்கு மட்டும் வீடு அல்ல. வீடு இல்லாத குடியானவர் ஜாதிக்காரர்களும் இருக்கிறார்கள் ; அவர்களும் வீடு வேண்டும் என்று கேட்டுப் போராட்டம் நடத்தினால் தமிழகம் புரட்சி எல்லையாக மாறும் ; எனவே தாழ்த்தப்பட்டவர்களுக்கு மனைதான் என்று அறிவித்தார்கள். அப்படி மனைதான் என்று அறிவித்துவிட்டு வீடு இல்லை என்று அறிவித்த பின்னாலே மத்திய அரசினுடைய வற்புறுத்தல் காரணமாக அந்தத் திட்டத்தை மேற்கொண்டார்கள். அன்றைக்குக் குடியான ஜாதிக்காரர்களும் வீடு வேண்டும் என்று கேட்பார்கள் என்று சொன்னார்கள். ஆனால் இன்றைக்கு கலைஞர் அவர்கள் குடியானவர்கள் என்று சொல்லவில்லை மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்கள், சீர் மரபினர் ஆகிய இப்படிப்பட்டவர்களுக்கும் வீடு கட்டிக் கொடுக்கிற திட்டத்தை அறிவிக்கிறார்கள்.

ஒரு காலத்திலே வீடு கட்டக்கூடாது என்று இருந்தவர்கள், அப்படி வீடு கட்டுவதற்குத் தடையாக இருந்தவர்கள் என்ன காரணத்தைக் கண்டார்களோ அதையே இன்றைக்குக் கலைஞர் அவர்கள் போக்கி சீர் மரபினருக்கும், மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கும் வீடு கட்டித் தருகிறேன் என்று அறிவித்து இருக்கிற அறிவிப்பு மிகவும் பாராட்டக்கூடிய அறிவிப்பு. அதற்காக அந்தச் சமுதாயம் நன்றி செலுத்தக் கடமைப்பட்டது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இப்படி கலைஞர் அவர்களே இந்தத் திட்டத்தை உருவாக்கக் காரணமாக இருந்திருக்கிறார்கள்.

இன்றைக்கு சட்டம் ஒழுங்கு பற்றி வானளாவப் பேசுகிறார்கள். ஒன்றே ஒன்றை மட்டும் நான் சொல்ல விரும்புகிறேன். கலவரங்களை உருவாக்கக் காங்கிரஸ் காரணமாக இருக்கிறார்கள். எங்கெங்கே பிடிக்காத ஆட்சி இருக்கிறதோ அந்த ஆட்சியைக் கலைப்பதற்குக் காரணமாக இருக்கிறார்கள். இன்னும் சொல்லப் போனால் எதிர்க்கட்சியை மட்டும் அல்ல. அவர்கள் கட்சியைச் சேர்ந்தவர்கள் முதலமைச்சராக இருந்தால், அவர்களுக்குப் பிடிக்காதவர்கள் முதலமைச்சராக இருந்துவிட்டால் அங்கே கலவரங்களை உருவாக்கிவிடத் தயங்கு



வதில்லை அவர்கள். அப்படித்தான் கர்நாடகாவில் நடந்தது. ஆந்திராவிலும் நடந்தது. அவர்கள் கட்சி முதலமைச்சரையே அவர்கள் மாற்றிவிட்டார்கள். அதேபோல் எதிர்க்கட்சி ஆளுகிற மாநிலத்திலும் உண்டாக்கினார்கள். திரிபுராவில் என்ன நடந்தது என்பதை இன்றைக்கு அமைச்சராக இருக்கிற யஷ்வந்த் சிங் அவர்கள் திரிபுராவிற்கே சென்று வந்து அறிக்கையைத் தாக்கல் செய்தார்கள். காங்கிரஸ்காரர்கள் குழப்பம் விளைவித்தார்கள் ; தேர்தல் களத்தைப் போர்க்களமாக மாற்றினார்கள் ; கள்ள ஓட்டுப் போட்டார்கள் ; உண்மையான ஓட்டெடுப்பு நடக்கவில்லை என்று குற்றம் சுமத்தி யஷ்வந்த் சிங் அவர்கள் அறிக்கை தந்தார்கள். அவர் இன்றைக்கு அமைச்சராக இருக்கிறார்; எனவே அவருக்குத் தெரியும். காங்கிரஸ் ஜனநாயகத்தை நம்பக்கூடிய சக்தி அல்ல. காங்கிரஸ் ஒரு சர்வாதிகார சக்தி. அவர்கள் நினைப்பதுதான் நடக்கவேண்டுமென்று கருதக்கூடியவர்கள். எனவே அப்படிப்பட்ட ஆட்சியைக் கலைத்து அவர்கள் சொல்வதை கேட்கக்கூடாது என்பது பாரத பிரதமருக்கு நன்றாகத் தெரியும்.

18–10 மணி

[மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை]

அதேபோலத்தான் அஸ்ஸாமிலே செய்தார்கள். அன்றைக்கு அஸ்ஸாமிலே அவர்கள் ‘ ரா ’ மூலமாக நடத்தியதற்கு ஒரு ஆப்பிரேஷனுக்கு பெயரே கொடுத்தார்கள். உங்களுக்கெல்லாம் நன்றாகத் தெரியும். பஞ்சாபிலே பொற்கோயில் உள்ளே நுழைகின்ற நேரத்தில் அதற்கு பெயர் கொடுத்தார்கள். அந்த இயக்கத்திற்கு ‘ புளூ ஸ்டார் ஆப்பரேஷன் ’ என்று பெயர் கொடுத்தார்கள்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. எம். இராமச்சந்திரன்):** முடியுங்கள். போதும்.

**திரு. மா. மணிமாறன்** : மாற்றுத் தலைவர் அவர்களே, அதற்கு புளூ ஸ்டார் ஆப்பிரேஷன் என்று பெயர் கொடுத்தார்கள். அதே போல் இலங்கையில் நடந்த இயக்கத்திற்கு ‘ வான் ஆப்பரேஷன் ’ என்று பெயர் கொடுத்தார்கள். அதே போலத்தான் ‘ அஸ்ஸாமிலே காங்கிரஸ்காரர்கள், அரசாங்கத்துக்கு எதிராக நடத்திய போராட்டத்திற்கு ‘ ஜூம், ஜூம் ’ என்று பெயர் போட்டு ஒரு இயக்கத்தை நடத்தினார்கள். இன்றைக்கு வேண்டுமென்றே திட்டமிட்டு கலவரத்தை உருவாக்குவதற்கு காங்கிரஸ்காரர்கள் காரணமாக இருக்கிறார்கள். அவர்களுக்குக் கை கொடுப்பதற்கு எங்கேயும் யாரும் இல்லாமல், இங்கே அம்மையார் அவர்கள் கிடைத்திருக்கிறார்கள். இரண்டு பேரும் கை கோர்த்துக்கொண்டு கலவரங்களில் ஈடுபடுகின்ற

நிலையை கட்டாயமாக ஜனநாயகவாதிகள் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். அதன் காரணமாக பிரதமர் அவர்கள் இதை தவிர்த்து வருகிறார் என்பது நன்றாக அறிந்ததற்கு பின்னாலே மீண்டும் ஒரு கலவரத்தை உருவாக்க இருக்கிறார்கள். அந்த கலவரத்தை கட்டாயமாக தமிழக அரசு தடுத்து நிறுத்தும் என்ற நம்பிக்கையோடு உரையை முடிக்கிறேன்.

திரு. எம். அப்துல் லத்தீப் : மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, மேதகு ஆளுநர் அவர்கள் நிகழ்த்திய உரைக்கு நன்றி தெரிவிக்கும் முகத்தான் மாண்புமிகு உறுப்பினர் திரு. சின்னசாமி அவர்கள் முன்மொழிந்த இந்த தீர்மானத்தை ஆதரித்து ஒருசில கருத்துக்களை சொல்ல முன் வந்திருக்கிறேன்.

இன்றைக்கு ஆளுநருடைய உரையில், நடந்து வருகின்ற வளைகுடா போரைப் பற்றி குறிப்பிட்டிருக்கிறார்கள். தவிர்க்கப் படவேண்டிய ஒரு போரை வேண்டுமென்றே இன்றைக்கு அமெரிக்க ஏகாதிபத்தியம் தொடங்கியிருக்கிறது. அதனுடைய விளைவாக உலகத்தின் பொருளாதாரத்திற்கு எவ்வளவு பெரிய சவால்கள் ஏற்பட்டிருக்கின்றன என்பதை நாம் நினைத்துப் பார்க்கும்போது வேதனையடையாமல் இருக்க முடியாது.

ஐக்கிய நாட்டு சபையினுடைய தீர்மானத்தை நிறைவேற்ற வேண்டுமென்ற அடிப்படையில் உலகத்தில் இருக்கின்ற பல நாடுகள் ஒன்று சேர்ந்து ஒரு நாட்டை வளைத்துக்கொண்டு இருப்பது எந்த அளவுக்கு நியாயமானது என்பதை உலக மக்கள் சிந்தித்துப் பார்த்துக் கொண்டிருக்கின்றார்கள்.

ஐக்கிய நாடு என்று சொன்னால் பலஹீனமான நாடுகளுக்கு தன்னுடைய தீர்மானத்தைக் கட்டுப்படுத்துவதற்கான சூழ் நிலையை உருவாக்குவது, பலஹீனமான நாடுகளை வளைத்துப் போடுவது ஏகாதிபத்திய பேரரசு நாடுகளோடு வளைந்து போவது என்ற வகையிலே தான் ஐக்கியநாடு சபை செயல்பட முடியும் என்று சொன்னால் ' லீக் ஆப் நேஷன்ஸ் ' என்று சொல்லக்கூடிய அந்த அமைப்புக்கு என்ன கதி ஏற்பட்டதோ அதுதான் இந்த ஐக்கிய நாடு சபைக்கும் ஏற்படும் என்பதை காலம் நிச்சயம் உணர்த்தும். அமெரிக்க ஏகாதி பத்தியம் இன்றைக்கு பல நாடுகளை தன் கையிலே வைத்துக் கொண்டு அந்த ஏகாதிபத்தியம் தன்னுடைய வளாகத்தை விரிப்பதற்கு அமெரிக்கா முன் வந்திருக்கிறது என்பதைத் தவிர இன்றைக்கு வேறு விளக்கம் தேவையில்லை. எனவே அந்த ஏகாதிபத்தியத்திடம் எலெக்ட்ரானிக் வெப்பன் இருக்கலாம். வெப்பன்ஸ் ஆப் மாஸ் டெஸ்ட்ரக்ஷன்ஸ் இருக்கலாம். ஆனால் அமெரிக்க ஏகாதிபத்தியம் நினைப்பதைப்போல் எல்லா நாடுகளும் அடங்கி நடக்கத் தயாராக இல்லை. வாழ்ந்தால் மானத்தோடு, கொள்கையோடு வாழ்வோம் என்று உணர்த்திக்



காட்டுகின்ற ஒரு முறையிலேதான் ஈராக் இன்றைக்கு இந்த தற்காப்பு போரை நடத்திக்கொண்டிருக்கிறது என்பதை புஷ் அவர்கள் தெரிந்துகொள்ள வேண்டும். அமெரிக்க நாட்டி லேயே இன்றைக்கு ' புட்ச்சர் புஷ் ' என்று மக்கள் சொல்லத் தொடங்கியிருக்கக்கூடிய அளவுக்கு இருக்கிறது. வளைகுடா போர் தேவை இல்லாத ஒன்று. 40 ஆண்டுகளில் ஐக்கிய நாட்டு சபையிலே ஏற்படுத்தப்பட்ட தீர்மானம். ஆனால் இன்றையதினம் பாலஸ்தீன நாடு குறித்த அந்தத் தீர்மானம், பாலஸ்தீன விடுதலைக்காக போராடிக் கொண் டிருக்கிற மக்களுக்காக, அவர்களுக்கு வழங்கப்பட வேண்டிய அடிப்படை உரிமை குறித்த அந்தத் தீர்மானத்தைப் பற்றி ஐக்கிய நாடுகள் சபை கடந்த 50 ஆண்டுகளாக ஒன்றுமே செய்யாமல், காலித்தனத்தை வெளிப்படுத்திக் கொண்டிருக்கும் ஐக்கிய நாட்டு ஸ்தாபனம், நான்கு மாதங்கள் கூட பொறுத்துக் கொள்ளாமல், பேச்சுவார்த்தை மூலம் தீர்த்துக் கொள்ளலாம் என்கிற எண்ணம் இல்லாமல், ஐக்கிய நாடுகள் ஸ்தாபனம் ஒரு ஐக்கிய நாட்டுப் படையாக மாறி விடுமேயானால் அதற்கு சில வெளிநாடுகள் கூட துணை போகிற நிலை ஏற்படுமானால், ஈராக் என்கிற நிலப் பரப்பு குண்டுமழை பொழிகின்ற ஆக்கிர மிப்புக்கு ஆளாகுமேயானால் குண்டு மழை பொழிகின்ற ஏகாதிபத்திய அமெரிக்க நாட்டுக்கும், ஐக்கிய நாட்டு சபைக்கும் எச்சரிக்கை விடுவது நம் எல்லோருடைய கடமையும் ஆகும். இது நம்முடைய பொருளாதாரத்தை நேரடியாகவும், மறைமுகமாகவும் பாதிக்கக் கூடிய ஒன்றாக அமைந்து விட்ட காரணத்தினால் மத்திய அரசுக்கு இதில் மிகப் பெரிய பொறுப்பு இருக்கிறது.

18-15 மணி

இந்தப் போரைப் பொறுத்தவரையில், நம்முடைய நாட்டினுடைய நிலை வரவேற்கப்படக் கூடிய ஒன்று. நடுநிலை நாடு என்பதை நிச்சயமாக நாம் நிலைநாட்டியிருக் கிறோம். அதே நேரத்தில் இந்தப் போர் விளைவுகளால் நம்முடைய நாடு பாதிப்பு அடையக் கூடிய அளவுக்கு இன்றைக்கு நாட்டில் பல சூழ்நிலைகள் உருவாகி வருகின்றன. குறிப்பாக தமிழ் நாட்டிலே கூட விலைவாசி விஷம் போல ஏறியிருப்பதால் நாமும் பாதிக்கப்பட்டிருக்கிறோம். நான் இச்சந்தர்ப்பத்தில் வேண்டி கேட்டுக் கொள்வதெல்லாம், ஏற்கெனவே விலைவாசி விஷம் போல ஏறிக் கொண்டிருக்கிறது. இன்றைக்கு இந்தப் போரை சாக்காகக் கொண்டு, அடிப்படையாகக் கொண்டு பதுக்கல்காரர்கள், கள்ள வியாபாரிகள் எல்லாம் இச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டு சுலபத்தில் அதிகமாக லாபம் சம்பாதிப்பதில் இறங்கியிருக்கிறார்கள் என்கிற தகவல்கள் இப்பொழுதே வந்து கொண்டிருக்கின்றன.

உற்பத்தித் துறையிலே நாம் செலுத்துகின்ற கவனத்தை விட பன்மடங்கு அதிகமான கவனத்தை இப்பொழுது பங்கீட்டுத் துறையிலே செலுத்த வேண்டிய கட்டாயம் நமக்கு ஏற்பட்டிருக் கிறது. ஆகவே, அரசாங்கமும் மக்களும் இதில் எச்சரிக்கை யாக இருக்க வேண்டும். எனக்குத் தெரியும், ஒரு பொருள் கடந்த மாதம் 6 ரூபாய்க்கு விற்கப்பட்டது. இப்போது ரூ. 7.75 என்று விற்கிறார்கள். ஒரு மாதத்திலே ஒரு பொருளுக்கான விலை ரூ. 1.75 உயர்ந்திருக்கிறது. இப்படியே போய்க் கொண்டிருந்தால் சாதாரண மக்கள் எப்படி வாழப் போகிறார் கள் என்றே தெரியவில்லை. ஆயிரம் ரூபாய் மாதச் சம்பளம் வாங்கினாலும் கூட 10 நாளைக்குக் கூட அது போதாது என்கிற சூழ்நிலை இருக்கிறது: அந்த அளவுக்கு இன்றையதினம் விலைவாசி உயர்வு வானளாவ உயர்ந்து கொண்டிருக்கிறது. ஒரு பக்கத்தில் லாபம் சம்பாதிக்கிறவர்கள், மறுபுறம் உபயோகிப்பவர்கள் எண்ணிக்கை ஏறிக் கொண்டிருக்கும் நிலை. இதனால் கோடிக்கணக்கான மக்கள் இன்றைக்கு இந்தியாவிலும், தமிழ் நாட்டிலும் பாதிக்கப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். இந்த நிலையில் விலைவாசியை உயர்த்துவது, பதுக்குவது எல்லாமே மிகப் பெரிய குற்றம் என்ற அடிப்படையில், அவர்களை எல்லாம் தேசிய பாதுகாப்புச் சட்டத்தில் கைது செய்ய இந்த அரசு முன்வர வேண்டுமென்று இச்சந்தர்ப்பத்தில் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

தமிழ் நாட்டிலே டீசல் பாரல் பாரலாக பதுக்கி வைக்கப் பட்டிருந்ததை போலீஸ்காரர்கள் கண்டுபிடித்தார்கள் என்கிற தகவல் பத்திரிகைகளில் வந்தது. ஆனால் அது குறித்து என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது என்பதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவிப்பதுடன், மக்களுக்கு ஒரு எச்சரிக்கையாக, உணவுப் பொருட்களைப் பதுக்குபவர் களுக்கு ஒரு எச்சரிக்கையாக இருக்கின்ற வகையில் அதுபற்றி அறிவிப்பு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். போலீஸ்காரர்கள் கண்டுபிடித்தார்கள். பதுக்கல் எண்ணெயை பிடித்தார்கள் என்கிற அளவில் இல்லாமல் இப்படிப்பட்டவர் கள் எல்லாம் தேசிய பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டார்கள் என்கிற அளவில் செய்திகள் வந்தால் அது உணவுப் பங்கீட்டுத் துறையிலே ஒரு செம்மையை, ஒரு தூய்மையை மக்களுக்கு திருப்தி ஏற்படுகிற அளவுக்கு விளைவு களை ஏற்படுத்தும் என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டவனாக இருக்கிறேன்.

அடுத்தபடியாக, ஆதி திராவிடர்களுக்கு கான்கிரீட் வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. மாண்புமிகு முதல்வர் அவர்கள், தாமாகவே சென்று அவைகளை எல்லாம் திறந்து வைத்திருக்கிறார்கள். கடந்த காலத்திலே, கடந்த 10 ஆண்டு களில் கட்டப்பட்ட வீடுகளையும் நாம் பார்க்கிறோம். இப்போது கட்டப்பட்டிருக்கின்ற வீடுகளையும் நாம் பார்க்கிறோம். அந்த வீடுகள் எல்லாம் 10 ஆண்டுகளுக்கு



முன்னாலே கட்டப்பட்ட வீடுகள். கட்டப்பட்டதாகச் சொல்லப்பட்ட அந்த வீடுகளில் எல்லாம் மக்கள் குடி யிருக்கிறார்களா? அந்த அளவுக்கு பலகீனமான நிலையில் பல இடங்களில் கூறைகள் விழுந்து காணப்படுகின்றன. ஆனால் இன்றைக்கு பார்ப்பதற்கு அழகாகவும், உறுதியானதாகவும், இருப்பதற்கு ஏற்புடையதாகவும் உள்ள பல ஆயிரம் வீடுகளை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தாழ்த்தப்பட்ட மக்களுக் காகக் கட்டிக் கொடுத்திருப்பது எங்களுக்கு மன நிறைவு ஏற்படுத்தி இருப்பதோடு, இந்த அரசாங்கத்தைப் பாராட்டு வதற்கு நாங்கள் கடமைப்பட்டவர்களாகவும் இருக்கிறோம்.

18–20 மணி

அது மட்டுமல்லாமல், மிகவும் பிற்படுத்தப்பட்டவர் களுக்கும், சீர் மரபினருக்கும் கூட இத்தகைய வீடுகள் கட்டிக் கொடுக்கப்படும் என்று மாண்புமிகு முதலமைச்சரவர்கள் அறிவித்திருப்பது எங்களுக்கு மேற்கொண்டு திருப்தியையும் மன நிறைவையும் ஏற்படுத்தி இருக்கிறது. இதோடு பிற் படுத்தப்பட்டவர்களில் யாராக இருந்தாலும், நலிந்த ரிவினருக்கும் இந்தத் திட்டத்தில் ஓரளவுக்கு நன்மை கிடைக்கும் வகையில் அவர்களுக்கும் ஒதுக்கீடுகள் செய்யப்பட வேண்டும். அவர்களைப் பற்றியும் நாம் சிந்திக்க வேண்டு மென்று தெரிவித்துக் கொள்கிறேன். நான் சார்ந்துள்ள முதாயத்தில் ஏழ்மை எவ்வளவு தூரம் ஏற்றம் பெற்றிருக் கிறது என்று சொல்ல வேண்டியதில்லை. கல்வியில் ஏற்றம் இல்லை, பொருளாதாரத்தில் ஏற்றம் இல்லை, சமூகத் துறையில் ஏற்றம் இல்லை. அவர்களுடைய வாழ்க்கை முறை களிலே ஏற்றம் இல்லை. ஆனால் அவர்களுடைய வாழ்க்கை யிலே ஏற்றம் எது என்று சொன்னால் கல்லாமையில் ஏற்றம், இல்லாமையில் ஏற்றம், இயலாமையில் ஏற்றம் என்ற அளவுக்கு இஸ்லாமிய சமுதாயத்தில் பலர் ஏழைகளாக இருக்கிறார்கள். இன்னும் சொல்லப் போனால் பக்கிரி என்ற வார்த்தை வந்ததே இஸ்லாமியர்களுக்காத்தான். பிச்சை எடுப்பவர்களில் அதிகம் யார் என்றால் முஸ்லீம்களில் தான் என்று கணக்கு சொல்லுகிறார்கள். அண்மையில் வந்த புள்ளிவிவரப்படி ஐதராபாத்தில் ஒரு தொழிலில் மிகவும் முன்னேறி இருக்கிறார் கள், அவர்கள்தான் மெஜாரிட்டி என்று குறிப்பிட்டிருக் கிறார்கள். என்ன தொழில் என்றால் 47 சதவிகிதம் மக்கள் ஐதராபாத்தில் இருக்கிற முஸ்லீம்கள் பிச்சைத் தொழிலில் முன்னேற்றம் அடைந்திருக்கிறார்கள் என்ற செய்தி வந்திருக் கிறது. எனவே மாண்புமிகு முதலமைச்சரவர்கள் எல்லாத் தரப்பு மக்கள் மீதும் கொண்டிருக்கிற கனிவு எங்களுக்குத் தெரியும். எனவே அத்தகைய நல்வாழ்வுத் திட்டங்களில் அவர்களுக்கும் உரிய பங்கை அளிக்க வேண்டுமென்று நான் இந்த நேரத்தில் அவர்களை வற்புறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. எம். அப்துல் லத்தீப்] [1991 சனவரி 24

என்னுடைய தொகுதியான சேப்பாக்கம் தொகுதியில்
நெடுஞ்செழியன் நகர், பார்டர் தோட்டம், காக்ஸ் காலனி,
எல்லிஸ்புரம் போன்ற இடங்களில் எல்லாம் ஏழைகள்
இருக்கிறார்கள். நெடுஞ்செழியன் நகரில் இப்போது புதிதாக
குடிசை மாற்று வாரியம் வாயிலாக வீடுகள் கட்டப்பட்டு
வருகின்றன. ஏற்கெனவே அந்தப் பகுதியில் இருந்த
மக்களுக்குக் கார்டுகள் வழங்கப்பட்டு, கட்டப்படுகின்ற
புதிய இடத்தில் இடம் ஒதுக்கப்படுமென்று சொல்லப்
பட்டிருக்கிறது. ஒரு வேதனை என்னவென்றால் வெளிப்
படையாகச் சொல்கிறேன். இது திராவிடமுன்னேற்றக் கழக
ஆட்சி. திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் தி.மு.க.
காரன், கட்சிக்காக உழைத்து ஓடாகிப் போன அந்த தி.மு.க.
காரர்கள், ஊழியர்கள்——இவர்களில் ஏழைகளாக
இன்றைக்கும் தாழ்த்தப்பட்டவர்களாக காலனிகளில் வாழக்
கூடியவர்கள், நம்முடைய ஆட்சி வந்திருக்கிறது,
வீடுகள் கட்டப்படுகின்றன, நமக்கும் இடம் கிடைக்கும்
என்று நினைப்பது இயற்கையானது. இன்றைக்கு
கார்டுகள் வழங்கப்பட்டிருக்கிறவர்கள் எல்லாம் திராவிட
முன்னேற்றக் கழகத்தை எதிர்க்கக் கூடியவர்கள். அவர்
களுக்குக் கொடுக்க வேண்டாமென்று சொல்லவில்லை. நட
கின்ற ஆட்சி திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி. அந்தத்
தொகுதிக்கு சட்டமன்ற உறுப்பினராக இருக்கக்கூடியவன்
திராவிட முன்னேற்றக் கழகத்தை ஆதரிக்கக்கூடியவ
எனவே அந்தத் தொகுதியிலே வீடுகளை ஒதுக்கீடு செய்
போது மாண்புமிகு அந்தத் துறை அமைச்சரவர்களிடம் ஒன்று
கேட்டுக் கொள்வேன். கார்டுகள் அடிப்படையில் அவர்களுக்குக்
கொடுத்து விடுங்கள். மிச்சமிருக்கிற வீடுகளை, ஏழைகளாக
சமூக சேவையிலே ஈடுபட்டு எந்தவிதத் தொழிலும் இல்லாமல்,
வியாபாரத்தை எல்லாம் விட்டு, கட்சிக்காகவும், சமூகத்
தொண்டுக்காகவும் தங்களை அர்ப்பணித்துக் கொண்டிருக்கிற
நம்முடைய சகோதரர்களுக்குக் கொடுப்பது நியாயத்தின்பால்
இருக்கும். எனவே, அரசு அவர்களுக்காக ஒரு குறியீட்டை
வைத்து, சதவிகிதம் வைத்து, அவர்களுக்கு வீடுகளைக்
கொடுக்க வேண்டுமென்று வற்புறுத்திக் கேட்டுக் கொள்கிறேன்.
எல்லிஸ்புரம், பார்டர் தோட்டம், காக்ஸ் காலனி— இந்தக்
காலனிகளுக்குச் சென்று மக்களைப் பார்த்தால் தெரியும்.
மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குத் தெரியாதது அல்ல.
அவர்கள் வாழ்கின்ற பகுதி, மக்கள் வாழ்கின்ற பகுதி
தானா என்று நாம் சிந்திக்கக்கூடியவர்களாக இருக்கிறோம்.
நம்முடைய மாளிகைகளிலே எல்லாம் வாழும் போது கூட
கொசுக் கொல்லிகளை வைத்து நாம் தூங்குகிறோம்; ஃபேன்
போடுகிறோம்; மின்சார கொசுக் கொல்லிகளை வைத்து
தூங்குகிறோம். ஆனால் கொசுக்கள் உற்பத்தி ஆகிற அதே
இடத்திலே, கொசுக்களோடு வாழக்கூடிய மக்கள் அவர்கள்.
எனவே அவர்களுக்கு வேறு எந்த அதிகமான சலுகை செய்யா



1991 சனவரி 24] [திரு. எம். அப்துல் லத்தீப்]

விட்டாலும், நான் அமைச்சரைக் கேட்டுக் கொள்வது, தயவு
செய்து அந்த பார்டர் தோட்டம், காக்ஸ் காலனி, எல்லீஸ்புரம்
போன்ற பகுதிகளில் எல்லாம் புதிய திட்டங்களை வகுக்கும்
போது அங்கேயும் குடிசை மாற்று வாரியத்தின் வாயிலாக
வீடுகளைக் கட்டி, அந்தத் தொகுதி மக்களுக்கு வழங்க வேண்டு
மென்று நான் கேட்டுக் கொள்கிறேன். என்னுடைய தொகுதிக்
காக மட்டும் நான் பேசவில்லை. பொதுவாக சென்னையில்
இருக்கிற தொகுதிகள் எல்லாம் அப்படித்தான்; சென்னையில்
இருக்கிற எல்லாத் தொகுதிகளுக்கும் நான் பேசுகிறேன்.
தயவு செய்து ஒருமுறை வந்து பார்த்து, ஒரு கால நிர்ணயம்
செய்து, ஒரு டைம்-பவுண்ட் புரோகிராம் வைத்து செய்ய
வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

18-25 மணி

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை).

அதே நேரத்தில் குடிசை மாற்று வாரியத்தின் வாயிலாக
வீடுகள் கட்டுவதற்காக நிலங்கள் ஆர்ஜிதம் செய்யப்படுகின்
றன. அது தேவையானது தான். நிலம் இல்லாமல் வீடுகள் கட்ட
முடியாது. ஆனால் சென்னையிலே வக்ஃப் வாரியத்துக்குச் சொந்
தமான, அறக்கட்டளைகளுக்குச் சொந்தமான பல நிலங்களை
ஆர்ஜிதம் செய்து இருக்கிறார்கள். 20 ஆண்டுகளுக்கு முன்னர்
ஆர்ஜிதம் செய்யப்பட்ட நிலங்களுக்கு இதுவரையிலே நஷ்ட
ஈடு கொடுக்கப்படவில்லை; 20 ஆண்டுகளுக்கு முன்னர்
எடுக்கப்பட்ட நிலத்துக்கு காம்பென்சேஷன் என்ற ஒரு
தொகையை நிர்ணயித்தார்கள்; ஆனால் அந்த காம்பென்
சேஷன் இதுவரையிலே ஒரு சல்லி பைசா கூட உரிய
வக்ஃபுக்கு—வக்ப் வாரியத்துக்கும் வரவில்லை—உரிய வக்ஃபுக்கு
செலுத்தப்படவில்லை. இப்படி சென்னையிலே பல இடங்
களிலே வக்ஃபுக்கு செலுத்தப்படவில்லை. இப்படி சென்னை
யிலே பல இடங்களிலே ஆர்ஜிதம் செய்து, கொடுக்க வேண்
டிய பணத்திலே ஒரு பைசா கூட கொடுக்கப்படவில்லை
என்பது வேதனைக்கு உரிய ஒன்று. எனவே தான் இந்த
நஷ்ட ஈடு கிடைக்காமல் எப்படி வக்ஃப் வாரியத்தி
னுடைய நிலத்தை இந்தத் துறைக்கு கொடுக்க முடியும் என்
பதை நீங்கள் தான் விளக்கிச் சொல்ல வேண்டும். 20 ஆண்டு
களுக்கு முன்னர் கொடுக்க வேண்டிய அந்த நஷ்ட ஈட்டுத்
தொகைக்கு அதற்குத் தேவையான வட்டியோடு கொடுத்
தால் தான் இனிமேல் அந்த வக்ஃப் துறையில் இருக்கக்கூடிய
நிலங்களை—அதனுடைய நிலம் எல்லாம் போய்விட்டது,
என்னுடைய கருத்து முழுவதுமே வக்ஃப் வாரியத்தின் நிலம்
தான்; அதனால் தான் 'சே பாக்' என்று, ஆறு நந்தவனங்கள்—
'சே பாக்' என்பது தான் 'சேப்பாக்கம்' என்று ஆகி இருக்

கிறது; அத்தனை நிலத்தையும் நாங்கள் அரசுக்கு வழங்கி இருக்கிறோம்; அரசுத் தோட்டமே எங்களுடைய நிலம் தான்; சென்னையில் 3 அடி எடுத்து வைத்தால் 2 அடி வக்ஃப் நிலத்தில் தான் வைக்க வேண்டும்; வேறு நிலத்திலே நீங்கள் வைக்க முடியாது; மவுண்ட் ரோடு பூராவும் எங்களுடையது தான். ஆற்காடு நவாப்புகள் ஆண்ட அந்த இடத்திலே இருக்கக்கூடிய அந்த நிலத்தை........

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** அண்ணா சாலை முழுவதுமா?

**திரு. எம். அப்துல் லத்தீப் :** எல்லாம் எங்களுக்குச் சொந்தமானது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** ஆற்காடு நவாப் வருவதற்கு முன்னாலே?

**திரு. எம். அப்துல் லத்தீப் :** அவர்கள் கொடுத்தது. எனவே அவர்கள் மசூதிகளுக்கு மட்டும் கொடுக்கவில்லை; தர்காக்களுக்கு மட்டும் கொடுக்கவில்லை; இங்கே இருக்கிற அருள்மிகு கபாலீஸ்வரர் கோயில், திருவொற்றீஸ்வ... கோயில், கோமளீஸ்வரர் கோயில், கார்னீஸ்வரர் கோயில், பார்த்தசாரதி கோயில், சென்ன கேசவப் பெருமாள் கோயில், கந்த கோட்டம் என்று எல்லாம் நீங்கள் அவைக... எடுத்துக்கொண்டாலும், அவைகளுக்கு வழங்கி இருக்கிற நி... அனைத்தும் ஆற்காடு நவாப்புகள் கொடுத்த நிலம், அது மாதிரியாக சென்னையிலே முழுக்க முழுக்க மூன்றிலே இரண்டு பகுதி வக்ஃபுக்குச் சொந்தமானது. தயவு செய்து நீங்கள் சிந்தித்துப் பார்க்கவேண்டும். இப்போது முஸ்லீம்கள் இருக்க வீடு இல்லை. எங்களுடைய மசூதிகளை ஒரு இடத்திலே கட்டினால்—நீங்கள் இவ்வளவு நிலங்களை எடுத்துக் கொண்டு இருக்கிறீர்கள்; ஆனால் அண்ணா நகரிலே ஒரு டாங்க் பகுதி என்று சொல்லக்கூடிய அந்தப் பகுதியிலே பொதுப்பணித்துறைக்குச் சொந்தமான ஒரு சின்ன இடத்திலே, 2 அல்லது 3 சென்ட் இருக்கும், அதிலே ஒரு மசூதி கட்டுகிறோம். புல்டோசர் கொண்டு வந்து அதை உடைப்போம் என்று அதிகாரிகள் சொன்னார்கள் என்று என்னிடத்திலே ஓடி வந்தார்கள். நான் அதை தடுத்து நிறுத்துங்கள் என்று சொன்னேன். உங்களுடைய நிலமாக இருந்தால் கூட, இங்கே என்ன நடந்து இருக்கிறது? நம்முடைய அரசினர் தோட்டம், பொதுப்பணித்துறை அலுவலகம் இருக்கிற இடத்திலே ஒரு சின்ன மசூதி கட்டுவதற்கு அங்கே இருக்கிற பிரதமப் பொறியாளர் அவர்கள் மறுத்து அதை உடைத்துவிட்டார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்திலே, அமைச்சர் அவர்களிடத்திலே சொன்னபோது அதற்கு



மறுபடியும் ஒரு ஏற்பாடு செய்யப்பட்டது. இந்தமாதிரியாக நிலத்தை—எங்கள் நிலம் அது; இருக்கிற நிலம் பூராவும் எங்கள் நிலம். ஆனால் அந்த நிலத்திலே ஒரு சின்ன இடத்திலே மசூதி கட்டிக் கொண்டால் உடை என்று சொல்லுகிறார்கள். தயவு செய்து அப்படியெல்லாம் வேண்டாம். நாங்கள் மசூதி யை எல்லா இடத்திலேயும் கட்டுவது இல்லை; அதற்கு ஏற் புடைய இடத்திலே தான் கட்டுகிறோம்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன் :** மாண்புமிகு உறுப்பினர் ஏதோ ஒரு பூதாகரமான செய்தியைச் சொல்லுகிறார்கள். சேப்பாக்கிலே அப்படி ஏதோ ஒன்றை உடைத்துவிட்டார்கள் என்று சொன்னார்கள் ; உடனடியாக முதலமைச்சர் சொன் னார்கள்; முதலமைச்சர் என்னை நேரிலே போய் பார்க்க சொல்லி அதை நாங்கள் சரி செய்தோம் என்று நீங்களே சொல்லுகிறீர்கள். பிறகு, இப்போது எங்கேயோ டாங்க் பகுதியிலே இப்படி நடந்தது என்று சொல்கிறீர்கள். இத் தனை நாட்களாக உட்கார்ந்து கொண்டிருக்கிறீர்கள்; எதிரிலே தான் இருக்கிறீர்கள். அந்த டாங்க் பகுதியிலே இப்படி நடக்கிறது என்று ஒரு வார்த்தை சொல்லி இருந்தால் 24 மணி நேரத்திலே அதை சரி செய்து இருக்கலாம். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நீங்கள் இரண்டு பேரும் பேசிக்கொண்டு இருக்கிறீர்களே?

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** ஆக என்னுடைய கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறீர்கள். அது என்னதென்று விசாரித்துப் பார்க்கிறேன்.

18-30 மணி

**திரு. எம். அப்துல் லத்தீப் :** அரசினுடைய, அமைச்சர் களுடைய, முதலமைச்சர் அவர்களுடைய அணுகுமுறை என்ன என்பது எனக்கு நன்றாகத் தெரியும். சட்டமன்றத்திலே பேசித்தான், கோரிக்கையை வைத்துத்தான் நிறை வேற்றிக்கொள்ள வேண்டும் என்பதல்ல. நேரிடையாகச் சொன்னால் எல்லாம் நடக்கும். ஆனால் அதிகாரிகள் மட்டத் திலே சில காரியங்கள் நடக்கின்றன. அதை சட்டமன்றத்திலே சொல்லும்போது குறிப்பில் ஏற்றி அது அவர்களுக்கு வழி காட்டுதல் போல இருக்கும் என்பதால்தான் சொல்லுகிறேன். மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் எடுத்துக் கொண்ட நடவடிக்கைக்கு நான் அன்றைக்கே நன்றி சொல்லியிருக்கிறேன். இன்றைக்கும் சொல்லுகிறேன்.

கே.கே. நகரில் மசூதி கட்டுவதற்கு ஒரு இடம் ஒதுக்கப் பட்டது. மசூதி என்பது முஸ்லீம் மக்கள் குடியிருப்பு இருக்கிற இடத்திலே இருந்தால் அவர்கள் ஐந்து வேளை தொழுகைக்குப்

போக முடியும். காலையில் 5 மணிக்கும், இரவு 9 மணிக்கும் தொழுகைக்குப் போய் வீட்டுக்கு வருகிறவர்கள். ஆகவே அவர்களுக்கு ஒதுக்கப்பட்ட இடத்தை மாற்றிக் கொடுக்க முடியாது; ஏற்கெனவே போட்ட அரசாணையையும் மாற்றி கொடுக்க முடியாது என்று சொல்லக் கூடிய அளவிற்கு இருக்கிறது. ஊருக்கு ஒரு கிலோ மீட்டர். இரண்டு கிலோ மீட்டர் தள்ளி இடம் அளிக்கப்பட்டிருக்கிறது. தேவாலயங்களுக்கு இடம் அளிக்கப்பட்டிருக்கிறது. அதிலே குறைபாடுகள் நான் சொல்லவில்லை. அப்படித்தான் அளிக்க வேண்டும். ஆனால் தயவு செய்து மசூதி எந்த இடத்திலே இடம் இருந்தாலும் கொடுக்க வேண்டும். கே.கே. நகரில் இப்படிப்பட்ட நிலைமை ஏற்பட்டிருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள், குறிப்பாக போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் இதைக் கவனிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்றைக்கு தமிழ்நாட்டில் உள்ள உண்மை நிலைமையைச் சொல்லுகிறேன். நான் கடவுள் நம்பிக்கை உள்ளவன் என்பது உங்களுக்குத் தெரியும். தவறாகப் பேசி, பொய் பேசி யாருடைய திருப்தியையோ பெற்றுக் கொள்ள வேண்டும் என்று பேசக் கூடியவன் அல்ல நான். திருவருளுடைய திருப்தி இருந்தாலே போதும் என்று நினைப்பவன். நான் சொல்லுகிறேன்—இந்தியாவிலேயே சட்டம் ஒழுங்கு என்று இருந்தாலும் சரி, அமைதி என்று இருந்தாலும் சரி, இங்கே குண்டுச் சட்டியில் குதிரை ஓட்டுகின்ற ஒரு சிலர் எப்படி வேண்டுமானாலும் சொல்லலாம். —நான் இந்தியா முழுவதும் சுற்றுபவன். உத்திரப் பிரதேசம், பீகார், வங்காளம், ராஜஸ்தான், அரியானா, பஞ்சாப், மகாராஷ்டிரம் போன்ற ஒவ்வொரு மாநிலத்திலும் ஊர் ஊராகப் போகக் கூடியவன் நான். அங்கேயெல்லாம் உள்ள நிலைமைகளை அறிந்தவன் நான், தெளிவாக, உறுதியாக, அறுதியாகச் சொல்லுகிறேன்—இன்றைக்கு இந்தியாவிலேயே சட்டம் ஒழுங்கு சிறப்புக்குரிய முறையில் வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத அளவிற்கு மிக பாராட்டக் கூடிய அளவிற்கு இருக்கக்கூடிய மாநிலம் தமிழகம் ஒன்றுதான் என்று சொன்னால் அதை நான் யாருக்காகவும் சொல்லவில்லை. (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) நான் வாழ்கிற தமிழகம் அப்பேற்பட்ட சிறந்த அரசையும், சிறந்த சூழ்நிலையையும், சிறந்த மக்களையும் பெற்றிருக்கிறது என்று பெருமையோடு சொல்லுகிறேன். தவிர தயவு செய்து அரசியலுக்காகக் கொச்சைப்படுத்த வேண்டாம். அரசியல் லாபம் தேட வேண்டும் என்பதற்காக இல்லாததையெல்லாம் இருப்பதாகக் கற்பனை செய்து பேச வேண்டாம் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

திரு. கோ. வீரையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உத்திரப் பிரதேசம், ராஜஸ்தான், பீகார் என்று



சொல்லும்போது வங்கத்தையும் சேர்த்து பட்டியலைக் குறிப்பிட்டார்கள். அப்படிக் குறிப்பிடுவது பொருத்தமானதல்ல என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எம். அப்துல் லத்தீப் : மேற்கு வங்காளத்திலே இருக்கக் கூடிய அரசு, அதனுடைய முதலமைச்சர் திரு. ஜோதிபாசு அவர்களைத்தனிப்பட்ட முறையில் நான் அறிந்திருக்கக் கூடியவன், மிகவும் பாராட்டக் கூடியவன். உத்திரப் பிரதேசம் வேறு, வங்காளம் வேறு. வங்காளத்திலேயும் காங்கிரஸ்காரர்கள் இருக்கிறார்கள். அதனாலேதான் சொல்லுகிறேன். இப்போது அங்கே நடந்து கொண்டிருப்பது திரு. ஜோதிபாசுவின் ஆட்சி. அது சிறப்புக்குரியதாக இருந்தாலும் கூட அங்கேயும் காங்கிரஸ்காரர்கள் இருந்து கொண்டு, ஆட்சிக்கு மீண்டும் வர வேண்டும் என்று அவர்கள் கண்டு பிடித்திருக்கிற ஒரே வழியான இனக் கலவரத்தை ஏற்படுத்த வேண்டும் என்பதுதான். நான் மேலும் வெளிப்படையாகப் பேசுவது பொது நன்மைக்கு உகந்ததாக இருக்காது என்பதால் என்னைக் கட்டுப் படுத்திக் கொள்கிறேன்.

கேரளாவிலே எப்படி மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி ஆண்டுக் கொண்டிருக்கிறது, எப்படி எல்லோரையும் பொது நோக்கோடு அணுகிக் கொண்டிருக்கிறது என்பது எனக்குத் தெரியும்.

திரு. நாயனார் ஆட்சியை நான் பாராட்டக் கூடியவன். அதே போல, இந்தியாவிலே இருக்கிற முதலமைச்சர்களுள் சிறப்புக்குரிய முதலமைச்சராக இன்றைக்கு ஏற்றம் பெற்றுத் திகழக்கூடியவர் ஜோதிபாசு அவர்கள் என்பதையும் நான் ஏற்றுக் கொண்டிருக்கிறேன். ஆனால் தமிழகத்திலே கூட இன்றைக்கு இப்பேர்ப்பட்ட அமைதி தவழுகிற தமிழகத்திலே கூட அமைதி யைக் கெடுக்கிற சக்திகள் இல்லை என்று சொல்வதற்கு நான் தயாராக இல்லை. அதே மாதிரியாக வங்காளத்திலும் இருக் கிறார்கள். மற்ற இடத்திலும் இருக்கிறார்கள் என்ற கருத்தில் தான் நான் சொன்னேன்.

18-35 மணி

மக்களுடைய அணுகுமுறையும் அதிலே மிக முக்கியமாக அமைந்து விடுகிறது. எனவேதான் தமிழகத்தில் இவர்கள் எவ்வளவு முயன்றும் மக்கள் அதற்குப் பலியாகவில்லை, அதையும் நாம் கவனித்துப் பார்க்க வேண்டும். இனக்கலவரம் என்பது ஏதோ ஆங்காங்கு சில கிராமங்களில் அரசியல் காரணங் களுக்காக நடக்கிறதே தவிர, தமிழகத்திலே பொது உணர் வோடு இணக்கத்தோடு மக்கள் வாழ்கிறார்கள். அதே நேரத்தில் அவர்களை வழி நடத்திச் செல்கிற அரசு இந்தியாவிலேயே இந்த அரசு இன்றைக்கு ஒரு எடுத்துக் காட்டான அரசாக இருக்கிறது என்பதிலும் எந்தவிதமான சந்தேகமும் எழவில்லை என்பதையும் தெரிவித்துக் கொள்வதோடு, தீய முயற்சிகள்

நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன என்பதையும் நான் மாண்பு
மிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவது
என்னுடைய கடமை.

எப்படியாவது இங்கேயும் இனக் கலவரத்தை ஏற்படுத்த
வேண்டும் என்று, யார் உடனடியாக ஆளவேண்டும், 20 ஆண்டு
களாக, 21 ஆண்டுகளாக நமக்கு அந்த வாய்ப்பு இல்லாமல்
போய்விட்டதே என்று அலமலந்து இருக்கிறார்களோ, அவர்
களும், வந்தால் ஆளுவதற்குத்தான் வருவேன், இல்லாவிட்டால்
அடங்கி அடங்கி ஹைதராபாத்தில் வாழ்வேன் என்று யாரோ
சொல்வதாக திருநாவுக்கரசு அவர்கள் சொன்னார்களே—
அவர்களுக்குத்தான் அதிகமாகத் தெரியும், எனக்குத் தெரியாது
அவர்களும் இப்பேர்ப்பட்டவர்கள் எல்லாம் ஒன்று சேர்ந்து
இன்றைக்கு தமிழகத்தில் நிலைமையைச் சீர்குலைக்க முயற்சி
செய்து கொண்டிருக்கிறார்கள். அதனுடைய தொடர்ச்சியாகத்
தான் சட்டமன்றத்தில் நடக்கும் நிகழ்ச்சிகளும் அமைந்து
விடுகின்றன..

அதே நேரத்தில் அவர்கள் சுட்டிக் காட்டியதைப் போல
28-ந் தேதி சாலை வழிமறிப்புப் போராட்டம் என்பதில் அரசு
மிகக் கவனமாக இருக்க வேண்டும். ஏனென்றால், இன்றைக்கு
அவர்கள் அடியெடுத்துக் கொடுக்க நினைக்கிறார்கள். யாருக்கோ
அடியெடுத்துக் கொடுக்க வேண்டும். அவர்கள் பாடிக்
முடிக்க வேண்டும் என்று அடி அமைத்து சில பேர் பாடுவார்கள்,
ஓடுவார்கள், ஆடுவார்கள் என்று நினைத்துக் கொண்டு சில
பேருக்கு அடியெடுத்துக் கொடுக்க வேண்டுமென்பதற்காகத்
தான் 28-ந் தேதி காலையிலேயே உபாதைகளை ஏற்படுத்து
வதற்கான திட்டம். அதுமட்டுமல்ல, வாழ்கிற பகுதிகளிலும்
நினைத்துக்கூட பார்க்க முடியாத பல சதித் திட்டங்களைச்
செய்ய வேண்டுமென்று அவர்கள் முடிவு செய்திருக்கிறார்கள்.
அது அவர்களுக்கு மட்டுமல்ல, எங்களைப் போன்ற சாதாரண
மாணவர்களுக்குக் கூட தகவல்கள் கிடைத்துக் கொண்டிருக்கின்
றன. எனவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்குக்
கிடைத்திருக்காது என்று நான் கருதவில்லை. இருந்தாலும்
நான் தமிழகத்தின் சார்பாக, மக்களின் சார்பாக மாண்புமிகு
முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்வது. தயவுசெய்து
முறையான நடவடிக்கைகளை எடுக்க நீங்கள் முயற்சி செய்ய
வேண்டுமென்று நான் இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்

தமிழ்நாட்டில் அமைதிக் குழுக்களை Peace Commitees-State-
l v l peac Committees as well as District level peace-Committees
ஏற்படுத்த வேண்டுமென்று முதலமைச்சர் அவர்கள் ஏற்
கெனவே தெரிவித்திருக்கிறார்கள். எனவே அவைகளைக்
குறித்து ஆழ்ந்து சிந்தித்து உடனடியாக நடவடிக்கை எடுக்க
வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைக் கேட்



டுக் கொள்கிறேன். கொள்கையளவில் அண்மையில் வடபுலத்
திலே கொலை பாதகங்கள் நடந்த இடங்களில், மத்திய
அரசாங்கம் Riot police ஏற்படுத்த வேண்டுமென்ற கருத்தை
வெளியிட்டு இருக்கிறது. அந்த Riot Police அல்லது Peace
force என்ற முறையில் அந்த riot police or peace force-ஐ
வைத்தாவது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இது குறித்து
சிந்தித்துப் பார்க்க வேண்டுமென்று நான் இந்த நேரத்தில்
கேட்டுக்கொள்கிறேன்.

Centre State Relationship பற்றி நாம் தொடர்ந்து
பேசிக் கொண்டிருக்கிறோம். இந்தியாவிலே பல விஷயங்கள்
தவறாகப் புரிந்து கொள்ளப்படுவதைப் போல, இந்த மத்திய
மாநில உறவுகள், மத்திய மாநில அரசுகள், நம்முடைய சமஷ்டித்
தத்துவம் இவைகளையெல்லாம் புரிந்து கொண்டு தவறாக
நடக்கிறார்களா, அல்லது தவறாகப் புரிந்துக் கொண்டிருக்
கிறார்களா என்பதையெல்லாம் நாம் விவாதிக்காமல் இன்
றைக்குத் தவறான முறையில் மத்திய அரசினுடைய சில அணுகு
முறைகளில் மாநில அரசுகளையும், எல்லா மாநில அரசுகளையும்
மிரட்டிக் கொண்டிருப்பது ஏற்புடையதல்ல. அது இந்தியாவின்
ஒருமைப்பாட்டுக்கு வழி வகுக்காது என்பதை சிந்திக்க வேண்டிய
காலம் வந்து விட்டது என்று நான் சொல்லிக் கொள்கிறேன்.
ஏனென்றால் மத்திய அரசாங்கமும் மாநில அரசாங்கமும்,
அரசமைப்புச் சட்டத்தின் படைப்புகள். இது ஏதோ Statutory
Bodies அல்ல. Municipalities போன்ற Statutory Bodies
அல்ல. மாநில அரசு, அல்லது முனிசிபல் கவுன்சில் போன்று
அல்ல நம்முடைய சட்ட மன்றம். இந்தச் சட்ட மன்றத்தை
உருவாக்கி இருப்பதே அரசமைப்புச் சட்டம்தான். பாராளு
மன்றத்தை உருவாக்கி இருப்பதும் அரசமைப்புச் சட்டம்தான்.
மத்திய அரசாங்கம் தான் பெற்றிருக்கிற அதிகாரங்களையும்,
அதே அரசமைப்புச் சட்டத்திலிருந்துதான் பெறுகிறது.
மாநில அரசாங்கமும் அதே அரசமைப்புச் சட்டத்திலிருந்து
தான் பெறுகிறது.

18-40 மணி.

The source is common. The repositary of all sovereign
powers as are enunciated by the constitution trace their origin
and source only through the common source of the Constitution
of India and therefore in the respective share of their sovereing-
nity and authority nobody should over-extend their limits as they
have been prescribed by the Constitution,

என்பதை எப்போது வரையில் நாம் ஏற்றுக் கொள்ள மாட்டோமோ அப்போது வரையில் இந்தியாவில் ஒருமைப்பாட்டு உணர்வு வராது என்பதைத் தெளிவாகச் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

ஒரு கருத்து சொல்லப்பட்டது. மெட்ராசிலிருந்து ஆண்ட காலம் போனது. டெல்லிதான் ஆளும் என்று சொன்னார்கள். ஏன் அப்படி ஏதாவது விதி இருக்கிறதா? ஒரு நாடு என்று சொன்னால் பல மாநிலங்களைக் கொண்டிருக்கும். அதை டெல்லி தான் ஆளும். மெட்ராஸ் ஆளக் கூடாது; திருவனந்தபுரம் ஆளக் கூடாது, பெங்களூர் ஆளக் கூடாது, ஹைதராபாத் ஆளக்கூடாது என்று சொன்னால், இது இந்த நாட்டினுடைய ஒருமைப்பாட்டு உணர்வுக்கு ஆக்கம் அளிக்கக் கூடிய பேச்சா? நான் சொல்கிறேன். தமிழ்நாட்டு அரசாங்கத்தினுடைய கொள்கை எதுவாகவும் இருக்கலாம். பொறுப்புமிக்க அவர்களுடைய அணுகுமுறை எதுவாகவும் இருக்கலாம்.

As a citizen of this country I say that when you say Delhi is the only proper place to rule this country I refuse to accept that position, I say that Madras is also equally competent and equally entitled to rule this country,

ஏன் மெட்ராஸ் ஆளக் கூடாது? ஒரு பெரும் பொறுப்பில் இருக்கக் கூடியவர் பேசக்கூடிய பேச்சா அது? நான் மிகுந்த வேதனை அடைகிறேன். பாரதத்தினுடைய மாண்புமிகு பிரதமர் அவர்களுக்கு அவ்வளவு தான் சொல்ல முடியும். இங்கே யாராவது அவர்களுடைய ஆட்கள் இருந்தால் எடுத்துக் கொள்ளுங்கள். 'ஆதர்னீய பிரதான் மந்த்ரி ஜீ'.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதை எடுத்துக் கொள்வதற்கு சிரமப்படும் போல இருக்கிறது. (சிரிப்பு).

**திரு. எம். அப்துல் லத்தீப் :** ஆதர்னீய பிரதான் மந்த்ரி ஜீ! மை(ன்) கஹ்தா ஹூ(ன்) கெ யதி ஆப்கோ பாரத் கீ ஏக்தா ததா (ஹ்) அண்டதா பர் விஸ்வாஸ் ஹை தோ டில்லி அளர் மத்ராஸ் கோ ஏகீ தூஸ்ரே ஸே அலக் ந கரே (ன்) யதி டில்லி ஹூகூமத் கர் ஸக்தா ஹை தோ மத்றாஸ் பீ(ஹ்) ஸத்தா மே(ன்) ஸமபாகி ஹை. மிஸல் மஷ்ஹூர் ஹை கே 'டில்லி தூர் அஸ்த்'.

மை(ன்) மந்த்ரீ கோ ராஷ்ட்ர கவி ஹரிஅளத் கே நிம் நாங்கித் ஷப்தோ(ன்) கோ யாத் திலாஊங்கா கே. "இஸ்தேஷ் கோ ஹே தீன பந்தோ ஆப் ஃபிர் அப்னாயியே பக்வான் பாரத் பாரத வர்ஷ் கோ-ஃபிர் புண்ய பூமி பனாயியே ஸப்கீ நஸோ(ஸ்) மே(ன்) பூர்வஜோ (ன்) கா புண்ய ரக்த் பிரவாஹ் ஹோ தும்கோ ஹமாரி சாஹ் ஹோ ஹம்கே தும்ஹாரி சாஹ் ஹோ!





Delhi is in a far off place. Even our Honourable Prime Minister of this country knows very well the famous dictum of Delhi is in a far off place. I am in a far off place at Madras. But onee you reconcile to the idea of equal right the Prime Minister of this country has got the same right as this ordinary ci izen of this country, Abdul Latheef, is having. If you say that all rights are concentrated only in Delhi, I refuse toaccept the same. I say this is a puasi-federal structure. In that puasi-federal structure I have got every right to say that I must have a day in the governance in the matter of governance. Therefore from the seat of high esteem: the Prime-ministership, if such an idea such an opinion emanates it hurts my feeling, it hurts my self-respect that I have been ruled only by Delhi and not by Madras: I say that I am ruled not by Delhi or by Madras but I am ruled by the, Constitution oi India. The rule of law—it is the paramount power. The rule of law is the source which rules Chandrasekhar,which rules Latheef, which rules Kalaignar, which rules Perasiriyar. If you say 'Delhi rule' I refuse. If you say 'constitution rules' I accept Therefore the unity of the country cannot be maintained by making tuch utterauces which would lead to fissiparous tendencies. I change shat such talks should be avoided and that too that idea should not emanate from a place wherein the people have reposed full confidenee the Prime Minister of India.

ஆகவே ........(மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இந்த மூன்று மொழிகள் தான் தெரியுமா ? வேறு மொழிகளும் தெரியுமா ? (சிரிப்பு)

*18–45 மணி*

**திரு. எம். அப்துல் லத்தீப் :** ஆர்டிகிள் 356 இருக்கிறதே அது ஒரு புது ஜன்மமாக உருவெடுத்திருக்கிறது. சில நாட்களாக, அம்பேத்கார் அவர்கள் சொன்னார்கள், எந்தச் சூழ்நிலைகளிலே இந்த 356 பயன்படுத்தப்படவேண்டும் என்பதை அவர்கள் மிகத் தெளிவாக எடுத்து தெரிவித்திருக்கிறார்கள். உண்மையைச் சொல்லப்போனால்....

Article 356 of the Constitution of India is nothing but a copy of section 93 of the Government of India Act and Section 45 of the Government of India Act.

Government of India Act-னுடைய Section 93.

Government of India Act-னுடைய Section 45

[திரு. எம். அப்துல் லத்தீப்] [1991 சனவரி 34

Section 45 will be invoked by the then Central Government, Sec.ion 93 will be used by the Governor of a State as against the State Governments. என்ற முறையிலே, 1935 ஆம் ஆண்டு ஆக்டிலேயிருந்து எடுத்தது. 1935 ஆம் ஆக்டினுடைய சிச்சுவேஷன் என்ன ?

'British Rule'--காலனி ஆதிக்கம் நடந்து கொண்டிருந்தபோது, பிரிட்ஷ்காரர்கள், 1935 ஆம் ஆண்டு Gov.rnmen. of India ஆக்டிலே கொண்டு வந்த சட்டம் தான் Section 45 and Section 93. இந்த 356 இருக்கிறதே. It is nothing but a copy, a replica of the Sec ion 45 and S ction 93 of th Gov rnmen of India Ac . நான் றேட்கிறேன், அன்றைக்கே, Cons ituent Assembly-லே, இதைக் கொண்டு வந்தபோது பலத்த எதிர்ப்புகள் வந்தன. ஆனால், அதை எப்படிப் பயன்படுத்தவேண்டும் ? இந்தமாதிரியான ஒரு ஸ்கீம் Am rioan Consti utiou-லே கிடையாது. இந்த மாதிரியான ஒரு ஸ்கீம் Britrsh Unwrit n Constitution-லே கிடையாது. வேறு எந்த நாட்டிலேயும் கிடையாது. Poponnd rs of the heory'? என்ன சொல்லுகிறார்கள் என்றால். Unlees and Untill the S.ate Gov rm nt declares a War againet the Central Gcvrr mcnt'—மாநில அரசு மத்திய அரசுக்கு விரோதமாக ஒரு வார் டிக்லேர் பண்ணவேண்டும். அந்த மாதிரியான சூல்நிலைகளில் இந்த மாதிரியான ஆர்ட்டிகிள் பயன்படுத்தவேண்டுமே தவிர, நார்மல் கோர்சிலே சாதாாண நிலையிலே, இந்த மாதிரியான சூழ்நிலைகள் எலலாம் இல்லபத நிலமையிலே, மாநி அரகாங்கத்தினுடைய அதிகாரத்திலே கை வைப்பதற்கு எந்த ஏற்பாடுகளிலும் அதிகாரம் இல்லை. ஏன் என்றால்,

If you are the Central Gcvernment, you receive your rights, privileges and powers only from the Constitution. If I am the State Government my souroe. Wil be the same as your souron. therefore don't touch our Asembly. I don't want to say anything about the Government. But, I am a member of the Assembly Which has been elected by the People of Tamil Nadu. As the Parliament has been elected by the People of Tamil Nadu, the People have ordered you to rule the coun ry as a Whole, Within the spheres stipulated by the Cons itution and he People of Tamil Nadu—all of them—have given me this basic aright of representing the people in total and to have their aspi atlons Ven ilated in this House as is stiputated in the Constitutiof If you say that you can invoke Artical 356, that is atrocious, a constition fraud, a consiitutonle atroc ty. That can never be accepted by any Court of Law, and by the people's Court ultimately, என்பதை நான் தயவு செய்து அவர்களுக்குச் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். எனவே இறுதியாக ஒரு கருத்தை நான் சொல்கிறேன்.



1991 சனவரி 24] [திரு. எம். அப்துல் லத்தீப்]

சில கருத்துக்கள் நீதிமன்றங்களிலே இன்றைக்கு உருவாகி வருகின்றன. நான் நீதிமன்ற விவகாரங்களிலே செல்ல விரும்பவில்லை. Because I am also a part of the Court. I am an Officer of the court. ஆனால் நேற்றைய தினம் ஒரு பத்திரிகைச் செய்தி வந்தது. அதிலே ஒரு மாண்புமிகு நீதிபதி அவர்கள் ஒரு கருத்தைச் சொல்லி இருக்கிறார்கள். எனக்கு ஏற்புடையது. 'Judiciary, Court also is equally important என்று சொல்லியிருக்கிறார்கள்.

There is no doubt about it. Judiciary is important in its own sphere. The Legislature is important in its own sphere. Ther is no conf ontation. There is no conflict, whatsoever. But, at the same time, about the function of an Officer or a function of a public utili y department like the Police department, the observation made by or the restriction sought to be imposed by His Lordship I think is a subject to discussion and a subject to comments. That is all I can say. whether that observation is within the limits of judicial Majesty and prop iety, it is a matter to be decided by His Lordship himself. It is not for me to make any comments. But, at the same time, when a Police Officer specifically says that the Assembly Session is going on and his presence is requird there, then it is not necessary that only the Police Commissioner should represent the Police.

18-50 மணி

Anybody can represent. A Deputy Commissioner can represent. Or, for that matter, anybody authorised by the Commissioner of Police can represent. It is not necessary that one officer should be made to sit for hours together in Court. I think that it is not proper, because it is more or less a sort of punishment to the Officer. There was nothing wrong done by the officer. If there was anything wrong, the Department is answerable. That is different. The Police Departm nt can be represented not by the Commissioner of Police alone but by any body else authorised by the Commissioner.The Commissioner of Police was made to sit there for hours together. Not only that. The entire department has been charged with indulging in telling falsehood and the Court would not tolerate any more lies from the Department. If a bundle of lies was presented before the Court, the Court would be compelled to constitute an Enquiry Commission to enquire into the activities of the Police Department not only in the City of Madras but also in the entire State. I think that such an observation could have been avoided but at the sametime, I have got a right to know from the Government as to what the activities are that made his Lordship to make such sweeping remarks against the Police and the functioning of the Police Department in this State. This is a matter to be explained by the Government.

[1991 சனவரி 24

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, ஒரு நீதிமன்றத்தையும், அதிலே நீதிபதி கூறிய வார்த்தைகளையும் வைத்து நீண்ட நேரம் விவாதிப்பது நல்லதல்ல என்று நான் கருதுகிறேன். இருந்தாலும் மிகுந்த எச்சரிக்கையோடு மாண்புமிகு திரு. லத்தீப் அவர்கள் இங்கே அந்தக் கருத்தைக் கூறியிருக்கிறார்கள். இது ஒரு நீதிபதி அளித்த தீர்ப்பு அல்ல. நேற்றையதினம் பத்திரிகைகளில் வந்த செய்தியை வைத்துத் தான் அவர்கள் பேசுகிறார்கள் என்று கருதுகிறேன். ஆங்கிலப் பத்திரிகைகளில் பெரிய அளவிலே அதைப் போட்டு இருந்தார்கள். அது ஒரு நீதிபதியினுடைய தீர்ப்பு அல்ல. போலீஸ் தரப்பில் வாக்குமூலத்தை, அவர்கள் சார்பாக 'அபிடவிட்' தருவதற்கு முன்பாக அல்லது அரசுத் தரப்பிலே வழக்கறிஞர் அதைப்பற்றி அந்த வழக்கைக் குறித்துப் பேசுவதற்கு முன்பாக எங்களை எதையும் கேட்காததற்கு முன்பு நீதிபதி சொன்ன கருத்தாகும் அது. அப்படிச் சொல்லலாமா, கூடாதா என்பது கூட என் அளவில், நான் அந்த அளவிற்கு சட்டம் பயிலாத காரணத்தால் எனக்குத் தெரியவில்லை. ஆனாலும் நீதிபதிகள் தங்களுடைய நிலையை உணர்ந்தும், அப்படி உணராத பட்சத்தில் அவர்கள் உணரவேண்டும் என்கின்ற அளவிற்கு அவர்களை உணர்த்தக் கூடிய இடத்தில் தலைமை நீதிபதி இருக்கிறார் என்ற நம்பிக்கையோடு இந்த அரசு இருக்கிற காரணத்தால், அவர் நேற்றைய தினம் வழங்கியது தீர்ப்பு அல்ல என்ற விளக்கத்தையும், போலீஸ் தரப்பிலேயும், அரசுத் தரப்பிலேயும், அந்த வழக்கைப் பற்றி எந்தவிதமான வாக்கு மூலங்களையும் தராத நிலையிலும், சொல்லப்பட்ட கருத்துக்களே தவிர, வேறு அல்ல என்பதைக் கூறி இதற்கு மேல் இந்த விவாதத்திலே நான் அதிகமாக நுழையத் தேவையில்லை என்ற கருத்தை எடுத்துக் கூற விரும்புகிறேன்.

திரு. எம். அப்துல் லத்தீப் : I leave that matter. ஒரேயொரு சப்மிஷன். இந்த உல்பா பற்றி. உல்பா உல்பா என்று சொல்லி, இப்போது புதியதாக ஒரு புல்பா வந்திருக்கிறது. ஆனால் அது என்ன என்பதை நான் மாண்புமிகு இந்த அவைக்கு தெரிவிக்கக் கடமைப்பட்டவனாக இருக்கிறேன். இது அஸ்ஸாம் மாநிலத்திலே இருக்கக்கூடியது. அது அஸ்ஸாம் மாநிலத்தில் எப்படி உருவானது என்பதை நான் சொல்லவில்லை. பத்திரிகைகள் சொல்லுகின்றன. அதில் தங்களுடைய அனுமதியைப் பெற்று, நான் சில வாசகங்களை அதிலேயிருந்து படிக்கிறேன். இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிகையில், கடந்த 19 ஆம் தேதி என்று நான் கருதுகிறேன். ஒரு வேளை 18 ஆம் தேதியாகவும் இருக்கலாம். அதில் தேதி இல்லை. அதில் என்ன சொல்கிறார்கள் என்று சொன்னால்,

One of the ULFA workers was executed for receiving large sums of money from the Congress-I leader Mr. Hiteshwar Saikia.



1991 சனவரி 24] [திரு. எம். அப்துல் லத்தீப்]

18-55 மணி

காங்கிரஸ் கட்சியினுடைய தலைவராக இருக்கக்கூடிய முன்னாள் முதலமைச்சர், இப்போதும் காங்கிரஸ் கட்சியினுடைய தலைவராக இருக்கக்கூடியவர், அஸ்ஸாம் கனபரிஷத்தினுடைய ஆட்சி அங்கே இருக்கும்போது பிரபல்லகுமார் மெஹந்தா அவர்கள் முதலமைச்சராக இருக்கும்போது, அந்த ஆட்சிக்குத் தொந்திரவு தரவேண்டும், மெத்த கஷ்டங்களை ஏற்படுத்த வேண்டும் என்று காங்கிரஸ் கட்சியினரால் உற்சாகப்படுத்தப்பட்டு உருவாக்கப்பட்ட இயக்கம் தான் , அவர்களிடத்திலேயிருந்து பணத்தை மட்டும் அல்ல திட்டங்களையும் பெற்று அந்த உல்பா இயக்கத்தினர் இயங்கினார்கள். வலிமை பெற்றார்கள். அதற்கு முக்கியமாக தொடர்பு உடையவராக இருந்தவர் அஸ்ஸாம் மாநிலத்தினுடைய முதலமைச்சர் ஹிதேஷ்வர் சைக்கியா என்பவர் என்று இந்தப் பத்திரிகையில் போட்டு இருப்பதை சுட்டிக்காட்டுவதோடு, இது எப்படி நடக்கிறது அங்கே என்று சொன்னால், அவர்கள் எல்லாம் அஸ்ஸாம் மாநிலத்திலேயிருந்து, வங்காள தேசத்திற்கும், பர்மா தேசத்திற்கும் மிக எளிதாக எந்தவிதமான தங்கு தடையும் இன்றி சென்று வருவதற்கும் அங்கே இருந்து ஆயுதங்களைப் பெறுவதற்கும் காங்கிரஸ்காரர்கள் உதவி செய்தார்கள்.

அதே நேரத்தில் பி.எஸ்.எப். என்று சொல்லப்படுகிற பார்டர் செக்யூரிட்டி போர்ஸ் என்கிற அந்த போர்ஸ் அவர்களை தடுத்து நிறுத்தக்கூடிய நிலைமையில் இல்லாமல் முடமாக்கப்பட்டு இருந்தார்கள். அங்கே மிக எளிதாக பார்டர் கிராசிங் நடந்து கொண்டிருந்தது. அங்கேயிருந்துதான் ஆயுதங்களை அவர்கள் பெற்றுக் கொண்டிருந்தார்கள் என்ற விவரத்தை ULFA note on links with Saikia sparks controversy என்ற தலைப்பில் இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிகை வெளியிட்டு இருக்கிறது. இரண்டு தினங்களுக்கு முன்பு வந்திருக்கிறது. அதை நாம் கவனத்தில் கொள்ளவேண்டும். அதே நேரத்தில் இங்கே யாரோ உல்பா இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் அஸ்ஸாம் தேசத்திலிருந்து வந்திருக்கிறார்கள் தமிழகத்திற்கு என்ற ஒரு செய்தி இரண்டு நாட்களுக்கு முன்பு வந்தது. 19 ஆம் தேதி வந்த செய்தி இது. அதுவும் இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிகையில் வந்திருப்பதுதான். இதிலே அவர்கள் சொல்வது The ULFA activists while crossing over freely to Burma and Bangla Desh for arms trainng அதிலே along with L.T.T.E. activists என்று போட்டிருக்கிறார்கள். அதுதான் கவனிக்க வேண்டியது. ULFA activists along with L.T.T.E. activists ஆக எல்.டி.டி.இ. ஆக்டிவிட்ஸ், அதிலே இருக்கக்கூடிய தீவிரவாதிகள் மற்றும் உல்பா இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் பர்மா தேசத்திற்குச் சென்று டிரெயினிங் பெற்று வந்திருக்கிறார்கள்.

The Border Security Force (BSF) and the local Government did not take ad quate measures to check their movement consequently large quantities of arms and ammunition including the sophisticated A.K. 47 infiltrated the region causing terror among the local populat on இப்போது மிக நன்றாக தயவுசெய்து சிந்தித்துப் பார்க்கவேண்டும். என்னுடைய அருமை நண்பர், இன்னும் சொல்லப்போனால் He is a coll gue in my profession, brother in my profession Mr. Chidambaram. அவர்கள் சொல்லியிருக்கக்கூடிய கருத்துக்கள் எவ்வளவு தூரம் அரசியல் நோக்கத்தோடு, அரசியல் காழ்ப்புணர்ச்சியை தன்னகத்தே கொண்டது? இல்லாத ஒன்றை தமிழ்நாட்டில் புகுத்தி தமிழ்நாட்டினுடைய நிலைமையை சீர் கெடுக்க வேண்டும் என்ற நோக்கம் உடையது என்பதை என்னுடைய அருமை நண்பர் சிதம்பரம் அவர்கள் எண்ணிப் பார்க்க வேண்டும். அவர்கள் வெளிப்படையாக ஒத்துக் கொள்ளாவிட்டாலும் தனியாக இருக்கும் போதாவது உண்மைதான் என்று நினைத்துக் கொள்வார் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. ஏனென்றால் சிதம்பரம் அவர்களை நான் மிக நன்றாக அறிவேன். வழக்கறிஞர்கள் என்ற முறையில் நாங்கள் இரண்டுபேரும் சேர்ந்து பணியாற்றியிருக்கிறோம். அவரைப் போன்றவர்கள் இப்போது இவ்வளவு ஒரு பொறுப்பற்ற முறையிலே என்று சொல்லவில்லை, பொறுப்பை உணர்ந்து பார்க்காமல் பேசுவது அவ்வளவு முறையாக இருக்காது என்பதை நான் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். (மணியடிக்கப்பெற்றது).

நான் ஒன்று சொல்கிறேன். நான் அஸ்ஸாமி அறிந்தவன். இந்த அஸ்ஸாம், நாகாலேண்டு, ஈவன் வெஸ்ட் பெங்கால் போன்றவற்றில் இருப்பவர்களுக்கு எல்லாம் ஒரு நம்பிக்கை என்னவென்றால், நான் பல இடங்களில் பார்த்திருக்கிறேன். எங்கே போனாலும் சி.எம்.சி. ஆஸ்பத்திரியைப்பற்றி அவர்கள் கேட்பார்கள். அந்த மாநிலத்திலே இருப்பவர்கள் எல்லாம் எது வந்தாலும், முக்கியமான சிகிச்சைக்காக வேலூரிலே இருக்கக்கூடிய சி.எம்.சி மருத்துவ மனைக்கு சிகிச்சைக்காக வருவார்கள். கல்கத்தாவிலே இருக்கக்கூடிய ந ண்பர்களும், ஒரிஸ்ஸாவில் இருக்கக்கூடிய நண்பர்களும் கூட வருவார்கள். அவர்களிலே யாரோ ஒருவர் இங்கு வந்ததாகச் சொல்லுகிறார்கள். அது வழக்கத்திற்கு மாறானது அல்ல. வட கிழக்கு மாநிலங்களில் உள்ள மக்கள் எல்லாம் இங்கு வருகிறார்கள். அதிலே எவராவது ஒருவர் வந்திருக்க வேண்டும். அதிலே ஏதோ கண்டு பிடிக்க வேண்டும் என்று புதிய ஆயுதம் வந்திருப்பதாக சொல்லுகிறார்கள். அந்த ஆயுதம் மத்திய அரசிடம் தான் இருக்கிறது. தமிழக அரசுக்கு கொடுக்கலாம். ஏதோ அஸ்ஸாம் மாநிலத்திலேயிருந்து வருபவர்களில் உல்பா யார் என்று சொல்லி கண்டு பிடிக்க விமான நிலையத்திலே ஏதோ ஆயுதம் வைத்திருப்





பவர்களைக் கண்டுபிடிக்க ஒரு ஆயுதத்தை பயன்படுத்துகிறார்களே அப்படி ஒரு ஆயுதம் தேவை. ஆனால் இதெல்லாம் அவசியமா? இப்படி எல்லாம் பேசலாமா? தயவுசெய்து அவர்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

19-00 மணி

நான் அவர்களைக் கேட்டுக்கொள்வது நல்ல பாரம்பரியங்
களை உருவாக்குங்கள். ஸ்டேட்ஸ்மென்னாக வாழுங்கள்.
அடுத்த தலைமுறையைப் பற்றி எண்ணிப் பாருங்கள். அடுத்த
தேர்தலைப்பற்றி சிந்தித்துப் பார்க்காதீர்கள். நான் காங்கிரஸ்
காரர்களையும் மற்றவர்களையும் கேட்டுக்கொள்வது உங்க
ளுக்கு வாய்ப்பு வரும்போது — அந்த வாய்ப்பு நிச்சயம் வரும்
ஆனால் மக்கள் விரும்பினால், மக்கள் விரும்பினால் அந்த
வாய்ப்பு வரும். அதற்காக ஒரு மாநில அரசாங்கத்தை இன்
றைக்கு நீங்கள் கலைக்க வேண்டுமென்று சொன்னால் நான்
அவர்களைப் பார்த்து மரியாதையோடு கேட்கிறேன். அடுத்த
பாராளுமன்றத் தேர்தல் நடந்து, அந்தத் தேர்தலிலே வி.பி.சிங்
அவர்களே — நிச்சயமாக வருகிறார்கள். அதிலே எனக்கு
எந்தவிதமான சந்தேகமும் இல்லை. 100-க்கு ஒரு புள்ளி
சந்தேகம் கூட எனக்குக் கிடையாது. The next Prime Minister
will be Thiru V. P. Singh again. There is no doubt whatsoever That
is not my decision but the decision of the people of India. That
cannot be altered by any force whatsoever and whoever comes.
ஆகையினால் அதைப்பற்றி பேசவில்லை. அவர்கள் வந்தபிறகு
தமிழ்நாட்டிலே நீங்கள் வருகிறீர்கள் என்று வையுங்கள்.
அத்தைக்கு மீசை முளைக்கின்ற மாதிரி நீங்கள் வந்தால் நாங்க
ளும் இதே நடவடிக்கையில் ஈடுபட்டால் இது நாடா இருக்குமா?
நம்முடைய பாரம்பரியங்கள் நிலைக்குமா? நீ என்னை வீட்டிற்கு
அனுப்பினே; கான்ஸ்டியூஷனை ரேவிஷ் பண்ணினே. "You raped
the Constitution and ravished the Constitution; therefore, I will also
rape and ravish" அப்படி என்று சொல்லி நான் வந்தேன் என்றால்
என்ன நடக்கும்? ஏதாவது நடக்குமா? ஆகையினால் தயவுசெய்து
நான் நல்ல பாரம்பரியம் உள்ள காங்கிரஸ் கட்சியையும் என்
னுடைய அருமை சகோதரி அவர்களையும் (சிரிப்பு)—I cannot use
any other word, I say— அருமை சகோதரி ஜெயலலிதா, my
colleague : செல்வி ஜெயலலிதா அவர்களையும் நான் கேட்டுக்
கொள்வது தயவுசெய்து — நான் ட்ரெயினில் வந்து கொண்
டிருக்கும்போது பார்க்கும்போது பாத் ரூமுக்கு போய் ஒருவன்
தடதட என்று அடித்துக்கொண்டே இருப்பான் ; அவன் வெளியே
வந்து என்னடா இது, யார் நீ என்று அவனிடம் சண்டைக்குப்
போவான் ; என்னமோ பாத்ரூமுக்கு போகிறவனுக்கு இருக்கிற
அவசரம் மாதிரி இங்கே சில பேர் அவசரப்பட்டுக்கொண்டிருக்
கிறார்கள். எனவே அந்த மாதிரி நிலைமை இருந்தது என்று
சொன்னால் அதற்கு சட்டமன்றம் இடம் இல்லை ; வேறு இடம்

யைப் புறக்கணித்து காங்கிரஸ் கட்சியினுடைய உறுப்பினர்கள் வெளியேறியிருக்கிறார்கள். மீண்டும் வருவது இல்லை என்றும் முடிவு எடுத்து இருக்கிறார்கள். இதுவும் ஜனநாயக விரோத அணுகுமுறை என்று சுட்டிக்காட்டி, இந்த முடிவை அவர்கள் மறுபரிசீலனை செய்து இந்த அவையின் நிகழ்ச்சிகளில் நேற்று பங்கேற்றது போல தொடர்ந்து பங்கேற்க முன்வர வேண்டும் என்ற வேண்டுகோளை விடுக்கிறேன்.

காங்கிரஸ் அல்லது திரு. எஸ். ஆர். இராதா தலைமையில் உள்ள அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு மாண்புமிகு தலைவராகிய தங்களுடைய தீர்ப்பு பற்றி அவர்களுக்கு ஏதேனும் முறையீடு இருக்குமானால் தங்களிடம் முறையாக முறையீடு செய்யலாம். அந்த முறையீட்டின் அடிப்படையில் பரிசீலிக்க வேண்டிய அவசியம் இருக்குமானால் தாங்கள் பரிசீலிக்கலாம். பரிசீலிக்கத் தயாராக இருப்பீர்கள் என்பதை நான் அறிவேன். ஆனால் இதைக் கூட அவையில் கலந்துகொள்வதற்கு முன் நிபந்தனையாக அவர்கள் விதிப்பது என்பது சரியல்ல. எனினும் நேற்று நடந்த சம்பவங்களுக்கு மாண்புமிகு தலைவராகிய தாங்கள் தண்டனை விதித்து இருக்கிறீர்கள். தண்டிக்கக்கூடிய செய லில் அவர்கள் ஈடுபட்டனர் என்பதை காங்கிரஸ் உட்பட இந்த அவையில் அனைவரும் ஏற்றுக்கொண்டு கண்டித்து இருக்கிறார்கள். என்றாலும் நேற்று வழங்கிய தண்டனையின் கடுமையைக் குறைத்து வரவு-செலவுத் திட்டக் கூட்டத்தின் போதாவது அவர்கள் கலந்து கொள்ள வழிவகை செய்ய வேண்டுமென்று தங்களை நான் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியின் சார்பில் கேட்டுக்கொள்கிறேன். அப்போதும் கூட அவர்கள் வராமல் இருக்கலாம், ஆனால் ஜனநாயகத்தை அவர்கள்தான் மதிக்கவில்லை; நாம் ஜனநாயகத்திற்கு மதிப்பு அளிக்கிறோம் என்பதை அது எடுத்துக்காட்டும். எனவே தவறுக்கு தண்டனை தரப்பட்டுவிட்டது. தண்டனை யினுடைய கடுமையைக் குறைக்க மறுபரிசீலனைச் செய்யலாம் என்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியின் சார்பில் வலியுறுத்தி அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது குறித்து 2—2—1991 சனிக்கிழமை 11.00 மணி அளவிலே வரவு-செலவுத் திட்ட அறிக்கை இந்த அவையில் படைக்கப்பட்ட பிறகு நடைபெறுகின்ற அலுவல் ஆய்வுக் குழுக் கூட்டத்தில் பேசி முடிவு செய்ய நான் வாய்ப்பு அளிக்கிறேன்.

பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளை (25—1—1991) 9:00 மணிக்குப் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை 19.08 மணிக்கு ஒத்தி வைக்கப் பெற்றது.



## 11. பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள்.

### அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

91. டால்கோ நிறுவனத்தார் விற்கும் கச்சாப் பொருட்களுக்கும் மற்றும் முதலமைச்சர் சமூக நலத் திட்டத்தின் கீழ் பள்ளி சிறுவர்கள், கிராமப் பெண்கள் ஆகியோருக்கு டால்கோ, காதி மற்றும் கிராமத் தொழில் வாரியம் மற்றும் சமூக நலத்துறை ஆகியோரால் விற்பனை செய்யப்படும் காலணிகளுக்கு விற்பனை வரியிலிருந்து விலக்களிப்பது குறித்து வணிகவரிகள் மற்றும் சமய அறக்கட்டளைகள் துறையின் 17—5—1990 ஆம் நாளிட்ட 301 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடுச் சட்டம் 1/1959) 53 (5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.]

92. 1959ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து வணிகவரிகள் மற்றும் சமய அறக்கட்டளைகள் துறையின் 26—9—1990ஆம் நாளிட்ட 557 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1959ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1[1959) 53 (5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.]

93. மதுரை திருவாளர்கள் ஹெலன் கெல்லர் பார்வையற்றோர் கழகத்தினரால், வாங்கப் பெறும் கட்டிடப் பொருட்கள், மரச் சாமான்கள் மற்றும் மின் சாதனங்களுக்கு விற்பனை வரியிலிருந்து விலக்களிப்பது குறித்து வணிகவரிகள் மற்றும் சமய அறக்கட்டளைகள் துறையின் 23—7—1990 ஆம் நாளிட்ட 455 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.]

94. மதுரை திருவாளர்கள் தேசிய சிறு தொழில் கழகத்தின் பயிற்சியாளர்களால் உற்பத்தி செய்யப்பெறும் பொருட்களின் விற்பனைக்கு வரியிலிருந்து விலக்களிப்பது குறித்து வணிகவரிகள் மற்றும் சமய அறக்கட்டளைகள் துறையின் 23—7—1990 ஆம் நாளிட்ட 457 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

95. சென்னை, கேம்பிரிட்ஜ் மெட்ரிகுலேஷன் மேல்நிலைப் பள்ளிக்கு சொந்தமான எஸ்.எஸ்.ஆர். 1236 மோட்டார் வண்டி (மினி பஸ்)க்கு வரிவிதிப்பில் சலுகை அளிப்பது குறித்து உள்

இருக்கிறது ; அந்த இடத்திற்கு போங்கள் ; — நல்ல பாரம்பரியத்தை உருவாக்குங்கள். நான் யாருக்கும் இது ரைட் என்று சொல்லவில்லை. யார் மக்களால் ஆதரிக்கப்படுகிறார்களோ அவர்கள் வருகிறார்கள். எனவே, 5 ஆண்டுக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட அரசாங்கத்தை நீங்கள் கலைப்பதற்கு முயற்சி செய்கிறீர்கள் என்று சொன்னால் இதே நிலைமை—

" காலம் என்பது கறங்கு போல் சுற்றி
கீழது மேலும் மேலது கீழும்
மாறிடும் தன்மை உடையது என்பதை மறந்தனை "

என்று நம்முடைய சுந்தரம்பிள்ளை சொல்வதைப் போல நான் சொல்கிறேன். தயவுசெய்து நல்ல பாரம்பரியங்களை ஏற்படுத்துங்கள்.

நாம் இன்றைக்கு இருக்கலாம் நாளைக்குப் போகலாம். நாம் எல்லாம் ஸ்டேட்ஸ்மென்னாக வரணும். ஆகையினால் நல்ல பாரம்பரியங்களை ஏற்படுத்தி மக்கள் உங்களுக்கு ஆதாவு அளித்தால் நீங்கள் வாருங்கள். நாங்கள் உங்களை வரவேற்கிறோம். எங்களையும் மக்கள் இங்கே அனுப்பினால் அதே இடத்திலே உட்கார்ந்து நாங்கள் எதிர்க்கட்சியாக இருக்கத் தயார் ; உங்களைப் போல் ஓடுபவர்கள் அல்ல. எதிர்க்கட்சியாகவும் இருந்து, எதிர்க்கட்சித் தலைவராகவும், பல நாள் முதலமைச்சராகவும் இருந்த ஒரு பெருந்தகை எதிரிலே உட்கார்ந்தும், எதிர்க்கட்சித் தலைவர் என்ற பணியையும் செய்து காட்டியவர்கள் தான், அந்த பாரம்பரியத்திற்குச் சொந்தக்காரர்கள்தான் இங்கே வீற்றிருக்கிறார்கள். மக்களுடைய தீர்ப்பு அதுவாக இருக்குமேயானால் உங்களை அந்த இடத்தில் உட்கார வைத்து இந்த இடத்தில் ஜனநாயக முறையிலே உங்களிடத்திலே கேட்க வேண்டிய கேள்விகளை கேட்கக் கூடிய தெம்பும், திராணியும், தெளிவும் பெற்றவர்கள்தான் இங்கே இருக்கிறார்கள். ஆனால் அதற்கு முந்தி ஏதாவது நடந்தால் இனிமேல் தமிழகத்திலே யார் வந்தாலும் 5 ஆண்டுகள் நீடிக்க விட மாட்டோம் என்பதை மட்டும் அவர்களுக்கு மிகத் தெளிவாகச் சொல்லி, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் இவ்வளவு நேரம் ஒதுக்கியதற்கு நன்றி தெரிவித்து, நான் இந்த ஆளுநர் உரையை மனதார பாராட்டி வரவேற்று, மாண்புமிகு சின்னசாமி அவர்கள் முன் மொழிந்த இந்த தீர்மானத்தை வழிமொழிந்து அமர்கிறேன். நன்றி.



5. அறிவிப்பு—தொடர்ச்சி.

(இ) 1991–92ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையைப் பேரவைக்கு அளிக்கும் நாள்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. இந்திய அரசியல் அமைப்பு சட்டப் பிரிவு 202 (1) மற்றும் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 181 ஆகியவற்றின் கீழ் 1991–92 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையை 1991 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 2 ஆம் நாள் சனிக்கிழமை சட்டமன்றப் பேரவைக்கு அளிக்க வேண்டும் என்று ஆளுநர் அவர்கள் குறித்துள்ளார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அன்று பேரவை 11-00 மணிக்குக் கூடும்.

19-05 மணி

10. அ.இ.அ.தி.மு.க. உறுப்பினர்களுக்கு அளிக்கப்பட்டுள்ள தண்டனையைக் குறைக்க வேண்டுமென்று பேரவைத் தலைவருக்கு வேண்டுகோள்.

*திரு. உ.ரா. வரதராசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களுக்கு ஒரு முறையீட்டைச் செய்வதற்காக நான் எங்கள் கட்சியின் சார்பில் எழுகிறேன். நேற்றும் இன்றும் இந்த அவையில் நடந்த சம்பவம் தொடர்பாக ஒரு சிலவற்றை இந்த அவைக்குத் தெரிவிக்க விழைகிறேன். நேற்று பேரவைத் தலைவராகிய தாங்கள் திட்டமிட்டு தாக்கப்பட்ட செயல் வன்மையாகக் கண்டிக்கக்கூடியது. அதைத் தொடர்ந்து அந்தக் கட்சியினுடைய பொதுச் செயலாளர் இந்தச் சட்டப் பேரவையினுடைய பதவிக் காலம் முழுமைக்கும் அவர்களது உறுப்பினர்கள் இந்த அவைக்கு வரமாட்டார்கள் என்ற முறையில் அறிவித்திருக்கிறார்கள். இது ஜனநாயகத்திற்கு மதிப்பு அளிப்பதாகாது. தேர்ந்தெடுக்கப்பட்ட மக்களுக்கும் மதிப்பு அளிப்பதாகாது. அதோடு அவர்களைத் தேர்ந்தெடுத்தத் தொகுதி வாக்காளர்களுக்கும் நியாயம் தருவதாகாது. தவறான முடிவு. இன்றைக்கு ஜனநாயகம் செத்துவிட்டது என்ற குற்றச்சாட்டை அவர்கள் சொல்லுவது முறை அல்ல. உண்மையிலேயே ஜனநாயகத்தைச் சீர்குலைக்கச் செய்யப்பட்ட முயற்சியினுடைய ஒரு தொடர்ச்சி தான் நேற்றைய தினம் இங்கே நடைபெற்றது. அதை நேற்றைய தினம் காங்கிரஸ் கட்சியினுடைய உறுப்பினர்கள் எங்களோடு சேர்ந்து இந்த அவையில் முழுமையாக கண்டித்தனர். ஆனால் இன்றைக்கு சபாநாயகர் ஆகிய தாங்கள் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் (2); என்று சொன்ன தீர்ப்பை மறுபரிசீலனைச் செய்யவேண்டும் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் திரு. எஸ். ஆர். இராதா தலைமையில் உள்ள அந்தக் கட்சியினுடைய உறுப்பினர்கள் மீது நீங்கள் அளித்த தண்டனையைக் குறைக்கவேண்டும் என்ற கோரிக்கையை வைத்து இந்த அவை

## LIST OF AGENTS FOR THE SALE OF TAMIL NADU GOVERNMENT PUBLICATIONS.

### IN MADRAS CITY.

1 Account Test Institute, Egmore, Madras-8.
2 The City Book Company, Madras-4.
3 Higginbothams (Private) Limited, Madras-2.
4 P. Varadachary and Company, Madras-1.
5 C. Subbiah Chetty and Company, Madras-5.
6 The Universal Book House, Moore Market, Madras-3.
7 C. Sitharaman and Company, Madras-14.
8 Mohan Pathippagam and Book Depot, Madras-5.
9 C. Venkatesan Chetty and Company, No. 8-C, Pycrofts Road, Madras-5.
10 The South India Saiva Siddhanta Works Publishing Society (Tirunelveli) Limited, Madras-1.
11 The Sangam Publishers, No. 11, Sunkurama Chetty Street, Madras 1.
12 New Century Book House (Private) Limited, Madras 2.
13 Kalaivani Book Centre, No. 1, Ponniamman Koil Street, Egmore, Madras-8.

### IN MOFFASIL OF TAMIL NADU

1 A. Venkatasubban & Company, Vellore (North Arcot) District
2 Bharathamatha Book Depot, Thanjavur (Tanjore District).
3 P. V. Nathan & Company, Kumbakonam (Tanjore District)
4 Appar Book Stall, Thanjavur.
5 P. N. Swaminathan and Company, Bazaar Street, Pudukkottai.
6 Palaniappa Brothers, Tiruchirappalli-2.
7 S. R. Subramania Pillai, Tirunelveli Junction.
8 B. Aruldoss, Villupuram (South Arcot District).
9 Vasantham Stores, Booksellers, 9/31, Cross Cut Road, Coimbatore-12.
10 Mercury Book Company, 20, Karuppa Gounder Street, Coimbatore 1.
11 S. M. Jegannatham Book House, 55, Nandhi Koil Street, Tiruchirappalli-1.
12 Ganesh Stores, South Car Street, Sivakasi
13 Mary Martin, Booksellers, Kotagiri (The Nilgiris).
14 A. K. Chandriah Chettiar & Sons, Salem-1
15 Parameswari Book Shop, No. 461, Old Market Street, Salem.
16 Meenakshi Pathipagam, Pudukkottai
17 K. V. Narayana Iyer & Sons, Dindigul, Madurai District.
18 Jayakumari Stores, Nagercoil (Kanyakumari District).
19 Baby Stores, Booksellers, Villupuram (South Arcot District).
20 Dinamani Stores, No. 3/1, Old Post Office Road, Coimbatore-14.
21 Kumaran Book Depot, Booksellers, Erode-1
22 Vela Book Company, No. A, Annaji Rao Street, Erode-1.
23 Radhamani Stores, 6-A, Raja Street, Coimbatore-1.
24 Ajantha Book Centre, Salem-1.
25 Sri Vidya, 63, Tennure High Road, Tiruchirappalli-2.
26 Sri Ramavilas Book Shop, 90, Amman Sannathi, Madurai-1.

### IN OTHER STATES.

1 Jain Book Agency, New Delhi.
2 International Book House, Trivandrum.
3 The Book Syndicate, Hyderabad-1.
4 Labour Law Publications, Hyderabad.
5 Puthaghalayam, Pondicherry.
6 Prabu Book Service, Gurgaon, Haryana.
7 K. P. Bachi & Company, 286, B.B. Gandhi Street, Calcutta-12.

© Published under Rules 280 and 283 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the Director of Stationery and Printing Madras.

(பொ.அ.) துறையின் 26—7—1990 ஆம் நாளிட்ட 1754 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை (தமிழ்நாடு 1974 ஆம் ஆண்டு இயக்கூர்திகள் வரிவிதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25 (2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.

96. சென்னை, திருவாளர்கள் சேனிடேஷன் சிஸ்டம் நிறுவனத்தாருக்குச் சொந்தமான டி.எம்.ஜே. 8249 மோட்டார் வண்டிக்கு செலுத்த வேண்டிய தண்டத் தொகையினை தள்ளுபடி செய்வது குறித்து உள் (போ.) துறையின் 22—8—1990 ஆம் நாளிட்ட 1927 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1974 ஆம் ஆண்டு இயக்கூர்த்திகள் வரிவிதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25 (2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.

97. தமிழ்நாடு அரசு பண்ணைகள் கழகத்தின் 1985-86ஆம் ஆண்டிற்கான பதினொன்றாவது ஆண்டு அறிக்கை [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்.)

98. தமிழ்நாடு அரசு பண்ணைகள் கழகத்தின் 1985-86ஆம் ஆண்டிற்கான பன்னிரண்டாவது ஆண்டு அறிக்கை (1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது). (தமி ஆங்கிலம்.)

99. தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மே பாட்டுக் கழகத்தின் 1988–89 ஆம் ஆண்டுக்கான ஏழாவது ஆண்டு அறிக்கை [1956ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம்) 1/1956] 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்).

100. தளபதி அழகிரி போக்குவரத்துக் கழகத்தின் 1989–90 ஆம் ஆண்டிற்கான எட்டாவது ஆண்டு அறிக்கை [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்).

101. ஜீவா போக்குவரத்துக் கழகத்தின் 1989–90ஆம் ஆண்டிற்கான ஏழாவது ஆண்டு அறிக்கை [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்).

102. தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகத்தின் 1988-89 ஆம் ஆண்டிற்கான இருபத்தி நான்காவது அறிக்கை [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்).



ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள், ஏனைய தாள்கள்.

33. தமிழ்நாடு எரிசக்தி வளர்ச்சி நிறுவனத்தின் 1988-89ஆம் ஆம் ஆண்டிற்கான ஆண்டு அறிக்கை. (தமிழ், ஆங்கிலம்).

34. பொதுக் கணக்குக் குழுவின் ஐம்பத்தொன்றாவது அறிக்கை, 1990–91.

35. பொதுக் கணக்குக் குழுவின் ஐம்பத்திரெண்டாவது அறிக்கை. 1990–91.

36. பொதுக் கணக்குக் குழுவின் ஐம்பத்தி மூன்றாவது அறிக்கை, 1990–91.

37. பொதுக் கணக்குக் குழுவின் ஐம்பத்தி நான்காவது அறிக்கை, 1990–91.

38. பொதுக் கணக்குக் குழுவின் ஐம்பத்தைந்தாவது அறிக்கை, 1990–91.

39. பொதுக் கணக்குக் குழுவின் ஐம்பத்தி ஆறாவது க்கை, 1990–91.

40. பொதுக் கணக்குக் குழுவின் ஐம்பத்தி ஏழாவது அறிக்கை, 1990–91.

41. பொதுக் கணக்குக் குழுவின் ஐம்பத்தி எட்டாவது அறிக்கை, 1990–91.

42. பொதுக் கணக்குக் குழுவின் ஐம்பத்தி ஒன்பதாவது அறிக்கை, 1990–91.

43. பொது நிறுவனங்கள் குழுவின் ஐம்பத்தைந்தாவது அறிக்கை, 1990–91.

44. பொது நிறுவனங்கள் குழுவின் ஐம்பத்தி ஆறாவது அறிக்கை. 1990–91.

144898

D

V211,31'N91

N91.37.2